உ

சிவமயம்.

ஸ்காந்த புராணத்திலடங்கிய

திருவண்டுதுறை என்று வழங்கும்

பிரமரபுரீசக்ஷேத்திர மான்மியம்.

இஃது

க்ஷேத்திரபாலபுரம் காணேசமததுரந்தரரானகாணபத

ஸாம்பசிவ சாஸ்திரியளால் வடமொழியிலிருந்து

மொழி பெயர்க்கப்பட்டு

திருவண்டுதுறை கோயில் திருப்பணி


சுப்பராயரவர்களால்

பிரசுரப்படுத்தியது.

Printed at the '*Brahmananda*' *Press*, Tiruvadi.

1913.

இதின் விலை அணா 12.



உ

சிவமயம்.

திருவண்டுதுறை க்ஷேத்திர மான்மியம்.

விநாயகர் துதி.

தமதிடமடியில் வீற்றிருக்குஞ் சக்தியாகிய வல்லபையின் ஸ்தனத்தில் வைக்கப்பட்ட துதிக்கையை யுடையவராயும், விக்கினமாகிய யானைக்குச் சிங்கமாயும் விளங்கும் விக்கினராஜ மூர்த்தியை பஜிக்கின்றேன்.

துவாபரயுகாந்தியத்தில் உத்தம ஸாதனங்களை யுடைய சௌனகாதி முனிவர்கள் நைமிசவனத்திற் கலியின் பிரவேசமில்லையென்பதை முந்தித் தாங்கள் பிர்மாவின் முகமா யறிந்துகொண்டு பாபரூபியான கலியின் பயத்தினாற் றங்கள் முனிதர்மப்பிரஸித்தியின் நிமித்தங் கர்மஜ்ஞான ஸித்தியின்பொருட்டந்நைமிசவனத்தையடைந்து அதில் வஸித்து வந்தார்கள். மேலு மெப்பொழுதும் புராணசிரவணமானது கலிதோஷத்தை விலக்கக்கூடிய புண்யமென்று பிர்மாவினாற் சொல்லப்பட்டிருப்பதா லதற்காகப் பிரயத்தன முள்ளவர்களாயு மிருந்தார்கள். ஒரு ஸமயத்தில் ஸகல புராணங்களையுமறிந்தவரு மதைப் பிறருக்குபதேசிப்பதில் மிகுந்த ஸமர்த்தருமான ரோமஹர்ஷ

ணமென்னுஞ் சூதமாமுனிவர் சௌனகாதி முனீசுவரர்களைத் தரிசனம்பண்ணவேண்டுமென் றந்நைமிசம்வந் தந்நைமிசாரண்யத்தின் சோபையைப்பார்த்துக் கலிதோஷ ரஹிதமாயிருக்குமிம்மஹாரண்யமானது மிகவுந் தன்யமானதென்று மிகுந்த வாச்சரியத்தையடைந்தார். அவ்விடத்தில் நன்றாய் மலர்ந்த தாமரைமலர்போன்ற முகங்களையுடையவர்களாயும், நித்திய நைமித்திகங்களாகிய கர்மங்களையனுஷ்டிப்பவர்களாயுந் தங்கள் வர்ணாச்சிரம தர்மங்களைச் செய்வதி லாதரவுள்ளவர்களாயும், பிரும்ம யஜ்ஞுந் தேவயஜ்ஞும் பூதயஜ்ஞும் பிதிர்யஜ்ஞும் மனுஷ்ய யஜ்ஞுமென்றைந்துவித யஜ்ஞுங்களையும், வேதாத்யயனங்களையுஞ்செய்கின்றவர்களாயும், பிர்மதேஜஸ்ஸா லக்கினியைப்போல் ஜ்வலிக்கின்றவர்களாயும், அஸ்தமனமற்ற ஸூர்யன்போல் விளங்குகின்றவர்களாயும், யோகிகளாயும், வேதார்த்தங்களை வ்யவஹரிப்பவர்களாயும், ஸகல ஜந்துக்களையும் பவஸாகரத்தினின்று கரையேற்றுவிக்கின்றவர்களாயுமிருக்குஞ் சௌனகாதி முனிவர்களை யச்சூதமாமுனிவர் கண்டவ்விடம் வந்து முந்தி ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்துப் பரமாஹ்லாதமுள்ளவராய்ப் பக்தியுடன் தலைவணங்கி யம்முனிவர்கள் யாவரையும் நமஸ்கரித்துக் கை கூப்பி மதுரமான மொழியைப் பகர்வதானார். சூதர்:- ஓ முனிவர்களே! ஸர்வாசுபங்களை விலக்கக்கூடியதாயுந் தேவர்களால் விரும்பப்பட்டதாயுமிருக்குமுங்களுடைய பாதபத்மமானது ஜன்மாந்தரீய ஸுகிருத விசேஷத்தாலென்றால் காணப்பட்டபடியா லென்னுடைய வம்சம், பிதிர்க்கள் குலம், வயசு, வித்தை, விருதம், தபஸ், ஞானமாகிய யாவற்றுமிப்பொழுது தன்னியமாயின. எவர்களுடைய தர்சனத்தினுல் ஜந்துக்கள் கிருதகிருத்தியர்களாயாகின்றார்களோ வப்பேர்ப்பட்ட பிர்மவித்துக்களான பிராமணர்கள் பிர்மஸ்வரூபமானவர்களே. அப்பேர்ப்பட்ட வுங்களுடைய தெரிசனத்தினுல் நான் நிச்சயமாகக்கிருதார்த்தனுய்விட்டேன்; ஜனன மரணரூபமான ஸம்ஸார ஸாகரத்திலிருந்து முக்தியையு மடைந்துவிட்டேனென்று பக்தியுடன் சொல்லும் ஸூதமாமுனியைத் தபோதனர்களான வம்முனிவர்கள் பார்த்து ஓ புண்யவர்த்தனரான ஸூதமுனியே! நீர் ஸர்வோத்தமர்; உம்முடைய தரிசனத்தி

ளுல் நாங்கள் மிகுந்த ஸந்தோஷத்தை யடைந்தோ முட்காரு மென்று சொல்லி யாசனமளிக்க வச்சூதமாமுநிவ ரஞ்சலிஹ ஸ்தரா யம்முநிவர்களாலளிக்கப்பட்ட வாஸனத்தில் வீற்றிரு ந்தார். அப்பொழுதங்குள்ள முநிவர்களுக்குள் முக்கியராய் பிருகுவம்சத்திலுதித்தவரான சௌனகமாமுனிவ ரச்சூதரை ப்பார்த்திதனை விண்ணப்பஞ் செய்வாராயினர். ஸர்வஜ்ஞராயு மாசிரயித்தவர்களுக்குச்சுகத்தை யுண்டுபண்ணுகின்றவருமாகி ய ஓ சூதமாமுனிவரே! ஸாக்ஷாத்நாராயணுவதாரமாயும், நாராய ணஸ்வரூபியாயும், வேதபுராணங்களின் விபாகத்தைச்செய்தவ ராயுமிருக்கும் கிருஷ்ணதுவைபாயன முநிவரை, நீராசிரியித்த வரிடமிருந்து ஸர்வேதிஹாஸ புராணங்களையு மறிந்திருப்பதா ல் புண்யவர்த்தனரான நீர் ஸர்வஜ்ஞத்துவத்தைப் பெற்றிருக் கின்றீர்; நாங்களோ மிகுந்த பாபரூபமான கலியென்ற காலத் திடம் பயந்து பிரமதேவன் சாஸனத்தினல் நைமிசமென்ற விவ்வரண்யத்தையடைந்து வசிக்கின்றோம்; புராணவக்தாவா யும், புண்யவானுயும், புண்ணியத்தை விருத்தி செய்கின்றவரா யும், மஹா தேஜோவானுயுமிருக்கின்ற நீரெங்களுக்கு ஸத்கா லக்ஷேபம் நடப்பிவிக்கும்படியாய் வந்திருக்கின்றீர்; எந்தவிட த்தில் புராண கதாப்பிரசங்கமிருக்கின்றதோ அவ்விடத்திற் கலியணுகமாட்டான்; மஹத்தான புண்ணியத்தா லெங்களு க்கும்முடைய தரிசனங் கிடைத்தது; ஸத்துக்களுக்குச் சம்ச யத்தை நீர் நிவர்த்திசெய்து மயிர்க்கூச்சலை யுண்டுபண்ணுவதா லுமக்கு ரோமஹர்ஷணரென்ற பெயரேற்பட்டிருக்கின்றது; ஆகையால் தயவு செய்து புராணங்களை யெங்களுக்குச் சொ ல்லவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்துகொண்டார். இவ் விதம் சௌனகமுநிவரின் தர்மயுக்தமான வார்த்தையைக் கே ட்ட சூதமுனிவரானவரனுக்கிரஹகரரானவும்மால் நான் கிருத கிருத்யனானேனென்று ஸந்தோஷத்துடன் ஸம்பூர்ணமாய் நா நாவிததர்மசரித்திரங்களுடன் கூடினவைகளாயும், ஸர்வார்த் த ஸாதனங்களை யுண்டுபண்ணுகின்றவைகளாயும், ஸர்வ துக்க ங்களையும் நிவிருத்தி பண்ணுகின்றவைகளாயும், பிரும்மரூப ஸ்திதியைக் கொடுக்கின்றவைகளுமான புராணோப புராணங்க

ளேயு மிதிஹாஸங்களையும் சொல்லிவந்தார். தர்மார்த்த காம மோக்ஷங்களைக் கொடுப்பதால் புண்ணியரூபமான புராணேதிஹாஸங்களைக் கேட்டுச் சௌனகாதி முநிவர்கள் மிகுந்த ஸந்தோஷத்தை யடைந்தார்கள் இவ்விதம் பிரதிதினமுங் கேட்டானந்தத்தையடைந்து யுககாலத்தைக் கழித்து வந்தார்கள். புராணசிரவணத்தினால் பரமானந்தத்தையடைந்த வம்முநிவர்கள் ஸர்வேதிஹாஸ புராணங்களிலும் நாநாவித மதங்களைக் கேட்டுப் பிராந்தியடைந்து ஸர்வஸம்மதமானதின்னதென்று நிச்சயமடையாததா லதின்பொருட்டு சௌனகரானவர் ஸூதரைக் கேழ்க்கத் தொடங்கினர். ஓ ஸூதமுநிவரே! எம் வார்த்தையைக் கேளும்; நாங்களிது பெரிதிது பெரிதென்றும்மாற் சொல்லிய புராணங்களைக் கேட்டுப் பிராந்தர்களாய்விட்டோம். ஸர்வஸம்மதமான தின்னதென்று நிச்சயமெங்களுக்குண்டாகாததால் ஸர்வாபீஷ்டத்தைக் கொடுப்பதாயும் சீக்கிர ஸித்தியை யுண்டுபண்ணுவதாயு மெல்லோருக்கும் மான்னியமாயுமிருக்கும் க்ஷேத்திரத்தை யெங்களுக்குச்சொல்லவேண்டுமென வதற்கு வியாஸ சிஷ்யராயும் மஹாதேஜோவானுயுமிருக்குஞ் சூதமுநிவரானவர் ஓ சௌனகாதி முநிவர்களே! ஸகலமான ஸ்மிருதி புராணங்களால் கூறப்பட்டதாயும் சிரேஷ்டமாயும் சீக்கிரத்தில் ஸித்திப்பிரதமாயுங் கைலாஸத்திற்குச் சமானமுமான வோர் ஸ்தலத்தின் மகிமையை யுங்களுக்குச் சொல்லுகிறேன் கேளுங்களென்று சொல்லத்துவக்கினர்.

முதலாவது அத்தியாயம் முற்றிற்று.

இரண்டாமத்தியாயம்.

ஒருக்கால் பிரளயமுண்டாகி மூன்றுலோகமும் நாசமடைந்து ஜலமயமாயிருக்கையில், யோகசாயியாயும், நிராகாரராயும், குணாதீதராயும், நிராச்ரயராயும், சிதாநந்தகனராயும், ஸ்வயம்ஜ்யோதிரூபியாயும், ஜகன்மயராயும், யோகிகளுக்கு கம்யராயும், சுகம்யராயும் கம்யாகம்யரூபியாயுமிருக்கப்பட்ட பரமேசுவரரானவர் சுற்றிலும் பார்த்தார், என்னைக்காட்டிலும் வே

ரென்று மோரிடத்திலுமில்லை. ஏகாகியாயிருப்பது யுக்தமல்லாததால் நான் ஒருவனே அனந்தமாக வாகிறேனென்று நினைத்து முதலில் ஸத்வம் ரஜஸ் தமஸென்ற மூன்றுகுணங்களையும் படைத்தார். பிரகிருதியைக்காட்டிலும் பரராயும் மூன்றுகுணங்களுக்கு மீசுவரனுயுமிருக்கும் துரீயராகிய புருஷனென்ற சம்புவானவர் ஸத்வம் ரஜஸ் தமஸென்ற மூன்றுகுணங்களினால் விஷ்ணுபிரும்மா ருத்திரனென்றமூன்றுரூபத்தைத் தரித்தார். ரஜோகுணத்தினலுண்டான ரூபமானது பிர்மாவென்று கூறப்படும். அப்பிர்மனுக்கு வேதாகமபுராண தர்மசாஸ்திரம் முதலானவனேக வித்யைகளைப் பரமேசுவரனுபதேசித்தார். பரமனுலுலக சிருஷ்டித்தொழிலில் நியமிக்கப்பட்ட பிர்ம்தேவன் வித்யா கர்வத்தையடைந்து சிருஷ்டிக்கத்துவக்கினர். சிருஷ்டி சாமர்த்தியமற்றப் பிர்மதேவன் தன்மனதில் யோஜிப்பதானர். என்னுடைய ஆரம்பமும் பரமாத்துமாவின் ஆஞ்ஞையும் விருதாவாகவாய்விட்டதே, பரமாத்துமாவும் தன்னிச்சையா யந்தர்த்தியானமடைந்துவிட்டாரே, நானென்செய்வேன், எங்கேபோவேன் பரமாத்துமாவைப்பற்றி யென்ன சொல்லுவேனென்பதாகச் சிந்தாதுரராய் பரமாத்துமாவை ஸ்மரித்ததனல் ஸாவதானத்தையடைந்து, அப்பிரமேயராயுமனிர்வசனீயராயும் தேஜோரூபியுமான பரமேசுவரனைப்பிரார்த்தனை புரிவதானர். பிர்மா:— தங்களுடைய ஆஞ்ஞையினல் சராசரமான ஜகத்தை சிருஷ்டிசெய்ய துவக்கின நான் வேதசாஸ்திர வித்யாகணங்களால் அஜ்ஜகத்தை சிருஷ்டிசெய்ய சக்தியற்றவனுகவே யிருக்கின்றேனென்று பரமனை பிர்மன் பிரார்த்திக்க; அப்பிர்மன் வாக்கியத்தை பரமாத்மாவாகிய ஸதாசிவன் கேட்டுப்பிர்மனுக்குமுன் ஆவிர்ப்பவித்து ஸதாசிவமந்திரத்தை யுபதேசித்து ஸர்வசித்தியையுங் கொடுக்கக்கூடிய ஓம் மந்திரத்தால் நம் பிரசாதத்தையடைந்து பிறகு சிருஷ்டி செய்யென்று சொல்லி மறைந்தார். அதனற் பிர்மன் பரமானந்தத்தை அடைந்து நேத்திரங்களாலானந்த பாஷ்பங்களைப் பெருகவிட்டு ஸதாசிவத்தை யிடைவிடாமல் மனதில் தியானித்து இராப்பகலாய் மந்திரத்தை ஜபம்செய்துகொண்டு பன்னிரண்டு

வருஷகால முக்கிரமான தவத்திலிருந்தார். பிர்மன் செய்து வந்த தியானத்தினுலும் ஜபத்தினுலும் நாமகீர்த்தனத்தினுலுங் கருணைக்கிருப்பிடமாகிய பக்தவத்ஸலரான பரமேசுவரன் கிருபை கூர்ந்து அனேக சந்திரனுடைய பிரபைபோன்ற வெளுப்பு மாறலாதகரமும் அனேக சூரியன் போன்ற தேஜஸுள்ள வராய்ப் பிர்மனுக்குமுன் பிரஸன்னரானர். மூன்றுலோகமும் வியாபித்துங் கண்ணுற் பார்க்கமுடியாமலுமிருக்கின்ற அவ்வுக்கிரமான தேஜஸைப் பிர்மன் கொஞ்சம் பார்த்ததும் பயமடைந்து ஜபத்தை மறந்து சிந்தையடைந்து மிகுந்த மூர்ச்சையுமடைந்தார். க்ஷணத்தில் மறுபடியுமெழுந்து சதருத்திரீய மந்திரங்களாற் பரமனைத்துதித்தார். அத்துதியால் பரமன் சந்தோஷமடைந்து பிர்மனைப்பார்த்து ஒ பிர்மனே! எவரை நீரிரவுபகலுமாகதியானித்துப்பன்னிரண்டு வருஷமாகத்தவமிருந்தீரோ, எவராலுமக்கு மந்திரமளிக்கப்பட்டதோ, எவரை யோகாப்பியாஸத்தினல் யோகிகளான ஸனகாதிகள் பார்க்கின்றூர்களோ, எவரைக்காட்டிலும் யோகிகள்வேறென்றையும் பார்ப்பதுங் கேழ்ப்பதுமில்லையோ, எவருக்கு சுகத்தைக் கொடுப்பவர் என்று பெயரோ வப்பேர்ப்பட்டநானுமதுதவத்தால் ஸந்தோஷமடைந்துமக்கு வரமளிக்கும் பொருட்டு வந்திருக்கின்றேன். ஆகையால் நீர் சிந்தையடையவேண்டாமுமக்கிஷ்டமான வரத்தைக்கேட்டுக்கொள்ளுமென்று சொல்வதைக்கேட்ட பிர்மதேயன் தன்மனதின்படி யிஷ்டமான வரங்களனைத்தையுங் கேட்டுக்கொண்டார். பிறகு பிர்மனைப் பார்த்துப் பரமன் சொல்லுகிறுர். எனக்குப் பிதாவாகிய ஸதாசிவமூர்த்தியே! நீர் ஸந்தோஷமடைந்து வரமளிப்பதுண்மையானல் ஜகத்தினுடைய சிருஷ்டியிலத்புதமான ஸாமர்த்தியத்தையும், நிர்விக்கினமாய் ஸகலகார்ய சித்தியையுமும்முடைய பாதாரவிந்தங்களி லசஞ்சலமான பக்தியையுமளிக்க வேண்டுமென்று பிரார்த்திக்க வதைக்கேட்ட பரமேசுவரனே பிர்மதேவனே! யும்மால் பிரார்த்திக் கப்பட்ட யாவையுமவ்விதமாகவேயாகட்டும். நாநாவிதமான சிருஷ்டியிலத்புதமான ஸாமர்த்யமுமக்கு நம்முடைய பாதாரவிந்தத்தில சஞ்ச

லமான பக்தியுமுண்டாவதுடன் நம்பிரஸாதத்தால் நிர்விக்கின மாய் ஸகலகாரியமும் ஸித்திக்குமென்று வரமளித்தார். இவ் விதம் பரமேசுவரனிடம் வரம்பெற்ற பிர்மதேவர் லிங்கரூபி யான பரமேசுவரனை விதிப்படி பூஜை புறிய வதை புரமன் அன்புடன் யேற்று மஹாத்புதமான வோர் லிங்கத்தை பிர் மனுக் களித்து தாமதிலேயே மறைந்தார். பரமனிடம் லிங் கத்தைப் பெற்ற பிர்மதேவர் தம்மிடத்தை யடைந்து நிர்விக் கினமாய் தம் விருஷ்டியை நடத்திவந்தார். பிரமனுட னுத் பத்தியாய் தவம் புரிந்து வந்த விஷ்ணுவுக்கு முன் பரமன் பி ரஸன்னராய் ஸத்வஸ்வரூபியான விஷ்ணுவைப் பார்த்து ஓ விஷ்ணுவே? நீ ரனேகவிதமான பிரயத்னத்துட னுலகத்தைப் பாலனம் செய்யுமென் றருள் புரிந்து; தமோகுண ரூபியான ருத்திரனைக் கூப்பிட்டு நீ வுலகத்தின் ஸம்ஹாரத்தை நடத்தி வாருமென்றுஞ்ஞாபித்தார், இவ்வாறு பரமேசுவரனிடம் விரு ஷ்டி முதலிய தொழிலைப்பெற்ற மூவர்களுக்குள் தன் தொழி லான விருஷ்டியை செய்யத்துவக்கிய பிரும்மதேவன் தனது யோகமாயாசக்தியால் விஷ்ணுவிடம் பிரவேசித்து அவருள் ளொரு வருஷம் மறைந்திருந்து வருஷ முடிவிலவருடைய நாபிபத்மத்தால் வெளியில் வந்தார், விஷ்ணுவுக்குத் தாம்கொ டுத்திருந்த வரத்தின் நிமித்தம் பரமேசுவர புத்திரரான பிர்ம தேவன் விஷ்ணுவுக்குப் புத்திரனுகவானர். அவ்விஷ்ணுவின் நாபிபத்மத்தில் பிர்மதேவன் வீற்றிருந்து 'கௌரீசனுகிய பர மேசுவரனைத் தியானம் செய்துகொண்டிருக்கவப்பொழுது பிர் மனுடைய சரீரத்திலிருந்து மிகுதியான ஜலமுண்டா யவர் பார்த்திருக்கும்பொழுதே யெங்கும் பெருகிவிட்டது, அப்பொ ழுது பிர்ம்மாவானவர் பிராந்த மானஸராய் ஜலத்தில் மூழ்கி யங்குமிங்குந் தடுமாரி யலைந்து பரமேசுவரனை மனதில் நினைத்து ஓ பரமேசுவரா! வுமக்கு நமஸ்காரம் இப்பேர்ப்பட்ட வாபத்திலிருந்து ஜலத்தில் முழுகிப்போகுமென்னைக் காப்பாற் றுமென்றுப் பிரார்த்தித்தார். மஹேஸ்வரனுடைய ஸ்மரணத் தினல் மறுபடியும் நாபிபத்மத்தை யடைந்து பரமனளித்த மஹேசமந்திரத்தை ஜபித்து லிங்கத்தைப் பூஜித்து தியானத்தி

விருந்தார். அப்பொழுது பரமன் பிர்மனுடைய மனதிற் பிரஸன்னமாக வப்பரமனை பிர்மன் விதிப்படி மனதாற் பூஜித்துப சரிக்க வதைப்பரமனேற்றுக்கொண்டு மறைந்தார். பிதாமகன் பரமன் மறைந்ததுமவரை நமஸ்கரித்து வுலகத்தை சிருஷ்டிசெய்யவாரம்பித்தார்.

இரண்டாமத்தியாயம் முற்றிற்று.

மூன்றாவது அத்தியாயம்.

பிர்மதேவன் சிருஷ்டிசெய்ய வாரம்பித்தது மவருடைய சரீரத்திலிருந்து முதலிலவித்யை யென்பவள் வெளிப்பட்டாள். தானைகமே வைந்துவிதமாய்ப் பிரிந்த வவ்வவித்யயைப் பார்த்துப் பிர்மா துக்கமடைந்தார். உலகத்தில் தாரேஷணை வித்தேஷணை புத்திரேஷணை யென்ற ஈஷணைகளுக்குள் ளிருவிதங்களான காரணமாயும், மூன்றுலோகத்தையும் மோகம் செய்கின்றவளாயு மனந்தவிபவரூபிணியாயுமிருக்கும் பிராந்தி ரூபிணியாகிய வவித்தையானவள் சிவப்பு கருப்பு வெளுப்பென்பதாகிய நாநாச்சரியமயமாய் விளங்கினள். அவித்தியையால் மோகத்தையடைந்த ஜகத்தில் பிராந்தியுதமாயாய் விட்டது அவித்தையானவள் தமஸ், மோகம், மஹாமோகம், தாமிஸ்ர, மந்ததாமிஸ்ர மென்றைந்து விதமாயுலகில் வியாபித்திருந்தாள். அஞ்ஞானஸ்வரூபமான தமஸா லுலகம் மறைக்கப்பட்டு தேஹஸ்வார்த்தபரமாய் பிராந்த மனதுடையதாகவாய் விட்டது. மோகத்தினல் ஸகாமமான நாநாவித கர்மா சிருஷ்டிக்கப்பட்டபடியால் ஜகத்தானது சரீரஸுககரமான கர்மாவைச் செய்வதாகவாயிற்று. மஹாமோகத்தால் விவிதமானவிகர்மா சிருஷ்டிக்கப்பட்டதால் ஜகத்தானது தேஹத்தினுடைய போகத்தின் பொருட்டுப் பாபங்களைச் செய்கின்றது. ரோகதாரித்திரியாதி ரூபபலமானது தாமிஸ்ரத்தால் சிருஷ்டிக்கப்பட்டபடியால் ஜகத்துவியாதியால் பீடிக்கப்படலாயிற்று. அந்த தாமிஸ்ரத்தால் யாதனை ரூபமான நரகம் சிருஷ்டிக்கப்பட்டபடியாலுலகமானது ஸ்வகர்மதோஷத்தினல் யாதனையைப்புஜிப்ப

தாகவாயிற்று. இப்பேர்ப்பட்ட அவித்தையானவள் பரமேசுவரனை நினைத்து ஸ்வார்த்தபரையாகவானாள். பிர்மனவரை நினைத்து மறுபடியுஞ் சிருஷ்டிக்கத் துவக்கினர். அவருடைய சரீரத்திலிருந்து ஸனக ஸனந்தன ஸநதன ஸனத்குமாரரென்ற நால்வருண்டானர்கள். ஞானத்மகையான வித்யையானவள் அவர்களுக்கு மாதுருஸ்வரூபமாக விளங்கினாள். போதரூபிணியாயும் நிராகாரையாயும் பிர்மரூபிணியாயுமிருக்கப்பட்ட பராதேவியைப்பார்த்து பிர்மா மிகுந்த வானந்தத்தையடைந்தார். ஸனகர் ஸஹஜயோகதாரகராயும், ஸனந்தனர் ஸமயோக தாரகராயும், ஸனதனர் ஞானயோகதாரகராயும், ஸனத்குமாரர் கர்மயோகதாரகராயும் விளங்கினார்கள். அவர்களைப்பார்த்து பிர்மனானந்தித்துப் பரமேசுவரனை நினைந்து சிருஷ்டிசெய்யும்படி ஆஞ்ஞாபிக்க வவர்கள் யோகமயமான சிருஷ்டிகளைச் செய்தார்கள். அதைப் பார்த்துப் பிர்மன் ஸந்தோஷமடையாமல் யோகமார்க்க சிருஷ்டிபோதுமானது நிறுத்துங்களென்றுசொல்ல ஸனகாதிகளவராக்கினைப்படி நிறுத்திவிட்டார்கள். பிர்மஞ்ஞானரூபமான விருஷ்டியைப் பார்த்துப் பிர்மன் கோபிக்க, அவருடைய கோபத்திலிருந்து ருத்திரனவருக்குப் புத்திரனாக உண்டானர். பிர்மாவினிடமுண்டான குணி ருத்திரனவர் பிர்மாவினிடம் தனக்கு ஜன்மா வந்ததேயென்று ரோதனம்செய்தபடியாலவரை யேனழுகின்றாய் குழந்தாயென்று வேதனரைச் சமாதானஞ் செய்யவதற்கு பாலனான ருத்திரனென்பவனெனக்கு ஸ்தானம் பெயர் கிருத்திய மிவைகளை யேற்படுத்துமென்று பிதாவானப் பிர்மனைக் கேட்டார். அதற்குப் பிர்மன் ருததிரனைப் பார்த்து நீ பிறந்தவுடனழுதபடியா லுனக்கு ருத்திரனென்று பெயர். எனக்கு ஜயேஷ்டராயுண்டான மஹேசுவரரான நீரெனக்குக் கொடுத்த வரத்தினலிப்பொழுது சங்கரரூபத்தோடு எனக்குப் புத்திரனா யவதரித்து ஸர்வ சுகங்களுக் காதாரமான சிவனாய் விளங்குகின்றீர். பூமி ஜலம் தேஜஸ் வாயு ஆகாசம் சந்திர ஸூரிய னெஜமானராகிய யிவை யுமக்கு வாஸஸ்தானமாயிருக்கட்டும் நீ ரஷ்டமூர்த்தியுடனெங்கும் வியாபித்திருந்து யாவருக்கும் பலதாயகராகவிரும். உமக்கு வாம

தேவர்முதலிய பதினேரு நாமதேயங்கள் வேதங்களில் பிரஸித்தியாக யேற்படும். ஸதாசிவரை நீர் தியானம்செய்து ஜகத்தின் சிருஷ்டியைச் செய்யுமென்று சொன்னர். அதற்கு ருத்திரனும் பரமேசுவரனைத்தியானஞ்செய்து விவிதமானசரீரமுள்ளவர்களாயும் மரண ரகிதாளாயும் மிகுந்த தேஜஸ்ஸுமுள்ளவர்களாயிருக்கப்பட்டவனேக ருத்திரர்களை சிருஷ்டித்தார். அவர்களைப் பிர்மன் பார்த்து ருத்திரனைக்கூப்பிட்டு இப்பேர்ப்பட்டவர்களை இனி சிருஷ்டிக்க வேண்டாமென்றும் ஜனன மரணத்துடன் கூடியவர்களைச் சிருஷ்டியென்றும் சொல்ல வதற்கு ருத்திர னிப்பேர்ப்பட்டவர்களை நான் சிருஷ்டிக்கமாட்டேனென்றுசொல்லி நின்றுவிட்டார். அதனுலவருக்கு ஸ்தாணுவென்று பெயரேற்பட்டது. அவ்வுருத்திரமூர்த்தி யூர்த்துவரேதஸ்ஸாய் பரமேசுவரனைத் தியானித்து தபசிலேயே யிருந்துவிட்டார். பிறகு பிர்மதேவன் தன் முகத்திலிருந்து சாஸ்திரங்களுடன் வேதங்களையும் புராணங்களையும் சிருஷ்டிக்க வஞ்சலிபந்தம் செய்துகொண் டெதிர்நிற்கு மவைகளுக்குச் சிருஷ்டிசெய்யும்படி உத்திரவளித்தார். வேதசாஸ்திர புராணங்களும் பரமேசுவரனைத் தியானித்து நாநாவிதங்களான யஞ்ஞங்களை சிருஷ்டி செய்தன. அவைகளைப்பார்த் தப்பிர்மன் சந்தோஷமடைந்து தான் யாகம் செய்யத் துவக்கி புத்திரார்த்தமாய் விஷ்ணுவை ஸ்மரித்தார். விஷ்ணுவும் பிர்மாவுக்குப் புத்திரராய் சதுர்புஜத்துடன் யஞ்ஞத்திலிருந்துண்டா யஞ்சலிபந்தம் பண்ணிக்கொண்டுப் பிதாவாகிய பிர்மதேவனே! யெனக்கென்ன உத்தரவென்று கேட்க சிருஷ்டியைச் செய்யென்று பிர்மன் சொன்னர். அவ்விதமே யஞ்ஞரூபியான விஷ்ணுவானவர் கல்பகவிருக்ஷம்போல் நாநாவித பலனைக்கொடுக்கக்கூடிய அனேக யஞ்ஞங்களைச் சிருஷ்டித்தார். அதனுல் பிர்மன் மிகுந்தவானந்தமடைந்து தமது சரீரத்தில் நின்று மரீசி, பிருகு, அத்திரி, அங்கிரஸ், புலஸ்திய, புலக, கிருது, தக்ஷ, வசிஷ்ட, நாரதரென்னும் மஹாதேஜோவான்களாகிய பத்து புத்திரர்களை சிருஷ்டிசெய்து நாநாவிதமான பிரஜைகளை யுண்டுபண்ணுங்களென்று கட்டளை யிட்டார். அவர்களும் பிர்மன் கட்டளையை அங்கீகரித்து தபசுசெய்ய வனம் சென்ருர்கள், அவர்களு

க்குள் நாரதரானவர் பிதாவாகியப் பிர்மனைப்பார்த்து, பிரபஞ்ச வாழ்க்கையானது மாயாமயமாயும், பிர்மரூபமாயும், நசுவரமாயுமிருப்பதால் ஞாதாவாயிருப்பவன் மூடன்போலிதிற் சிரமப்படமாட்டானுதலால் நான் சிருஷ்டியைச் செய்யமாட்டேன், பரமேசுவரனைப் பஜிக்கிறேனென்று சொல்லவதற்குப் பிர்மன் நாநாவிதப் பிரஜைகளைப்படைத் தந்தியவயதில் பரமனைப் பஜிக்கலாமென்று மறுபடியும் புகன்ருர். அதற்கு நாரதர் துவக்கத்தில் மித்தியாரூபமான காரியத்தை யெதற்கு போதிக்கின்றீர், எவன் பிராந்தியுடன் பொய்யான விச்சிருஷ்டியை செய்வானென்று மறுதளித்துச்சொல்ல, வதற்கு பிர்மன் கோபங்கொண்டு நாரதரைப்பார்த்து நீ சூத்திரயோனியிற் பிறக்கக்கடவாயென்றும் பிறகு கந்தர்வனுய்ப் பிறந்தலோக ஸ்திரீபோக ரதனுயாகக்கடவாயென்று சாபங்கொடுத்தார். அதனுல் நாரதருங் கோபங்கொண்டு நீர் என்னை விருதாவாகச் சபித்தபடியா லுமக்குலகிற் பூஜையில்லாதவராக வாகக்கடவீரென்று பிதாவாகியப் பிர்மனைச் சபித்துப் பிர்மனின் சாபப்படி சூத்திரஜாதியிற் பிறந்து பரமசிவனுடைய கிருபையினுல் ஞானயுக்தனுயிருந்து சாபத்திலிருந்து விடுபட்டு மறுபடியும் பிர்ம புத்திரராகவானுர். பிறகு பிர்மதேவன் பிராமணர்களை தம்முகத்தினின்றும் க்ஷத்திரியர்களை புஜத்தினின்றும் வைச்யர்களைத் தொடையினின்றுஞ் சூத்திரர்களை பாதத்தினின்று மாண்பெண்களாக சிருஷ்டிசெய்தார். மீளவும் சிரத்திலிருந்து ஸன்னியாஸத்தையும் ஹிருதயத்திலிருந்து வானப்பிரஸ்தாச்சிரமத்தையும் நாபியிலிருந்து பிர்மசர்யாசிரமத்தையும் காலிலிருந்து கிரஹஸ்தாசிரமத்தையும் படைத்தார். வர்ணுசிரம விருஷ்டியால் பிர்மன் களித்து,மாரிலிருந்து தர்மத்தையும் முதுகிலிருந்ததர்மத்தையும் தர்மாதர்மப் பிரவர்த்தகர்களான தேவர்களையும் தானவர்களையும் கந்தர்வ யக்ஷ ராக்ஷஸ மானவ பக்ஷி மிருக ஸர்ப்பாதிகளையும் தமது சரீரத்தின்றுவேறு படைத்துக் கிருயைகளுடன் கூடியவர்களுக்குத் தமது சரீரத்தையும் கொடுத்தார். பிர்ம சரீரத்தினின்றுண்டான மகாதேஜோவான்களாகியவர்கள் விபவஹாரத்துடன் கூடியவராயினும் சரியானபடி விருத்தியடையவில்லை. அவர்களுடையமுக்

கியமான சிருஷ்டிப் பிரமாணத்தைச்சொல்லுகிறேன் ஸாவதானமாகக் கேளுங்களென்றுசொல்லி மறுபடியும் சூதபுராணிகர் சொல்லுகிறார்.

மூன்ருவது அத்தியாயம் முற்றிற்று.

நான்காம் அத்தியாயம்.

பிர்மாவின் முதல்சிருஷ்டி மகத்ஸர்க்கமென்றும், இரண்டாவதான தன்மாத்திர விருஷ்டி பூதஸர்க்கமென்றும், மூன்ருவதான இந்திரிய விருஷ்டி வைகாரிக மென்றுங் கூறப்படும். இவைகளுக்குப் புத்திபூர்வகமான பிராகிருத ஸர்க்கமென்று பெயர். நான்காவதான முக்கிய ஸர்க்கமானது ஸ்தாவரமென்றும், ஐந்தாவதான திர்யக் ஜந்துக்களின் விருஷ்டி திர்யக் ஸ்ரோதஸ்ஸென்றும், ஆருவதான தேவவிருஷ்டி யூர்த்வ ஸ்ரோதஸ்ஸென்றும், ஏழாவதான மனுஷ்ய விருஷ்டி யவாக் ஸ்ரோதஸ்ஸென்றும், எட்டாவதான பூதவிருஷ்டி பவுதிக ஸர்க்கமென்றும், ஒன்பதாவது கௌமார விருஷ்டியென்றுங் கூறப்படும். இவைகளில் முந்திய மூன்றும் பிராகிருதங்களென்றும், பிந்தியவாறும் விகிருதங்களென்று முறைக்கப்படும். புத்திபூர்வகமாய் ஸர்வஜந்துக்களும் பிரவர்த்திப்பதால் மூன்றும் பிராகிருதங்களெனப்படும். அவ்யக்த்தத்திலிருந்து மகத்தும், மகத்திலிருந் தஹங்காரமுண்டாவதாய் சுருதியிற்சொல்லப்பட்டதே பிர்மாவின் முதலாவது விருஷ்டி; அஹங்காரத்திலிருந்துண்டாவதாய் கூறப்பட்ட பூத விருஷ்டியே பிர்மாவி னிரண்டாவது விருஷ்டி; ஞானத்மகமான புத்தியின் பிரசாரத்துடன் கூடிக்கொண்டிருந்தாலுங்கூட விந்திரிய விருஷ்டி மூன்ருவதானதுதான். புத்திபூர்வங்களான இவைகளே சிரேஷ்டமானப் பிராகிருத விருஷ்டிகள். ஜலாதாரமயமாய் விளங்கப்பட்ட ஸ்தாவர விருஷ்டியே நான்காவது. அந்தரிக்ஷவாசிகளான ஜந்துக்களின் விருஷ்டி திர்யக்ஸ்ரோதஸ்ஸென்ற ஐந்தாவது. ஊர்த்வ ஸ்ரோதஸ்ஸென்ற தேவவிருஷ்டியே ஆருவது. பூமிவாஸிகளான மனித மிருகாதிகளுடைய விருஷ்டி யேழாவதான அவாக்ஸ்ரோதஸ்ஸெனப்படும். பூத

ப்ரேத பிசாச விருஷ்டியே எட்டாவதானது. ஒன்பதாவதான கௌமார விருஷ்டியே மானஸ விருஷ்டியென்று கூறப்படும். இவ்விதமாய் பிர்மா விருஷ்டிசெய்து தமது விருஷ்டிவிருத்தியடையாததைப் பார்த்துப் பரமேசுவரனுற் கொடுக்கப்பட்ட மஹாலிங்கத்தைப் பக்தியுடன் பூஜிக்க வதிலிருந்து பரமேசுவரனவர்முன் னுவிர்பவித்தார். பிர்மன் பரமனைத் துதித்து தன் விருஷ்டி விருத்தியடையாததை முறையிட்டு விருத்திபடையும்படி யனுக்கிரகம்புரிய வேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டார். பிரமனின் பிரார்த்தனையாற் சந்தோஷமடைந்த சிவபெருமான் தமதிடது பாகத்திலிருந்து ஜகத்ரூபிணியான சத்தியைப் பெண்ணுருவாக்கிய வம்மையுடன் தாம் கூடினவராக ஆனர். பிறகு பரமன் பிரமனை நோக்கி யுலகவிருத்தியின்பொருட்டு நானென் சத்தியுடன் கூடியிருக்கிறேன்; உமையுடன்கூடியிருக்கு மென்னைத் தியானஞ்செய்து நமதாக்ஞையால் ஸ்திரீபுருஷ ஸம்யோகரூபமான விருஷ்டியைச் செய்யென்று கட்டளையிட்டு லிங்கமத்தியில் மறைந்தார். பிறகு பிர்மன் மிகுந்த சந்தோஷமடைந்து பார்வதி பரமேசுவரர்களைத் தியானித்துப் பஞ்சாக்ஷரத்தை ஜபித்துத் தமது சரீரமிடது பார்சுவத்திலிருந்து பிரகிருதியான சதரூபியையும் வலது பார்சுவத்திலிருந்து புருஷனன ஸ்வாயம்புவ மனுவையும் விருஷ்டிசெய்தார். இந்த ஸ்வாயம்புவமனுவே க்ஷத்திரியதர்மமறிந்தவர்களுக்குள் முந்தினவரெனப்படுவார். அச்சதரூபி ஸ்வாயம்புக்கள் பிர்மனெதிரில் கைகூப்பிக்கொண்டு எங்களுக்கென்ன கட்டளையென்று கேழ்க்க வதற்குப் பிர்மன் ஸ்திரீபுருஷஸம்யோக ரூபமான வொப்பற்ற நாநாவித சிருஷ்டியைச் செய்யுங்களென்று கட்டளையிட வவர்களும் பிர்மனை வணங்கித்தவம்புரிய வனஞ்சென்றூர்கள். பிறகு பிர்மதேவனுடைய சாயையிலிருந்து கர்த்தமரென்ற முனிவருண்டாகப் பிர்மதேவனவரையும் விருஷ்டிசெய்யும்படி கட்டளையிட வவரும் வனம்புகுந்து தவம்புரிய வாரம்பித்தார். ஸ்வாயம்புவ மனுவானவர் சதரூபியிடம் மூன்று பெண்களையுண்டாக்கி யவர்களை தக்ஷன், கர்தமன், ருசி யென்ற மூவர்களுக்கும் கிரமமாய்க் கொடுத்தார். தக்ஷப்பிரஜாபதியானவர் கன்னிகைகளை யுண்டாக்கிப்

பிருகுமுதலியவர்களுக்குக் கொடுக்க; மரீசிக்கு க்யாதியிடம் காச்யபரென்ற பிரஜாபதி யுண்டானார். காச்யபரிடம் தேவர் முதலியவர்களுண்டானார்கள். மரீசிமுதலியவர்களிட மிருந்து ண்டான தேவர் முனிவர்கள் முதலியவர்களால் பிரும்மாண்டம் வியாபிக்கப்பட்டது. ஸ்வாயம்புவமனுவானவர் சதரூபியுடன் நாநாவித ரூபங்களைத்தரித்து மனித மிருக பக்ஷிமுதலிய யாவற்றையும் படைத்துத் தான் பூலோகத்தையும் பாலனஞ் செய்துவந்தார். ஸ்வாயம்புவ மனுவின் வம்சத்திலுதித்த ரிபுவென்ற மஹாயோகி தவத்தா லப்பரமனை யுவக்கச்செய் தவரிடஞ் சிதாவுபதேசம பெற்று சிவஞானமடைந்து ஜீவன்முக்தராக வானார். ஆதிவித்தரான சிவயோகியான வந்த ரிபுமுனிவர் ஸரஸ்வதிதேவியால் வீணாகானஞ் செய்யப்பட்டுள்ள பிர்மதேவனுடைய சபைக்குச் செல்ல வுடனே பிர்மன்முதலிய சபையிலுள்ள யாவரும் சரேலென்றெழுந்து பாத்தியார்க்கியாதிகளால் முனிவரைப் பூஜித்தார்கள். வித்துவரானப் பிர்மாவினால் விசேஷமாய் மானிக்கப்பட்டவ்விடம் வந்திருக்கும் வாகீசர் மாத்திரம் கானரஸத்தி லழுந்தியெழுந் துபசரியாமலிருப்பதைக் கண்ணுற்ற ரிபுயோகி வாகீசருடைய பூர்வீக கர்மாவினாலேவப்பட்டவராய்க்கொண்டு தேனில் மயங்கிக்கிடக்குந் தேனீயைப்போல் கானரஸத்தில் மயங்கியிருக்கும் நீ பிரமரமாகக் கடவாயென்று சபித்துவிட்டு ஸந்தோஷத்துடன் வைகுண்டஞ் சென்றார்.

நான்காம் அத்தியாயம் முற்றிற்று.

ஐந்தாம் அத்தியாயம்.

இவ்வண்ணம் ரிபுவின் சாபத்தை யடைந்த வாகீசரென்ற முனிவர் மிகுந்த பக்தியுடன் பாரதீரமணனான பிர்மனை நமஸ்கரித்து ஓ ஜகன்னாதா! வும்முடைய கிருபையை பூர்ணமாகப்பெற்ற வென்னை ரிபுயோகி சபித்துவிட்டாரே, அவருடைய சாபமென்னை யணுகாதவண்ண மனுக்கிரகம் புரியவேண்டுமென்று வந்தனம்புரிந்துப் பிரார்த்தித்துக்கொண்டார். இவ்வாகீசரை பிர்மன் கிருபையுடன் பார்த்துச் சிவயோகியான ஸித்தருடை

ய சாபத்தை நிவிருத்திசெய்ய நான் சக்தனல்ல; சிவபெருமா ணொருவரே யதில் சக்தராதலா லவரையே சரணமடையென்று பிர்மன் சொன்னூர். அதற்கு வாகீசர் ஓ பிதாமஹரே! யும்மா ல் முடியாத யிச்சாபத்தை யுமது நேத்திரத்திலுண்டான புத் திரனுகிய ருத்திர னெப்படி நிவிருத்திசெய்வாரென்று கேட்க வதற்குப் பிர்மன் சொல்லுகிறூர். இரண்டாம் பதார்த்தமில் லாத வொன்றுன பிர்யமானது மாயையான தமது சக்தியுடன் கூடி முக்குணங்களையுந்தரித் தீசுவரனென்ற ஸம்ஞையையடை ந்தது. அவ்வீசுவரனுடைய முக்குணங்களிலிருந் துண்டான வர்கள் பிர்ம, விஷ்ணு, ருத்திரர்கள்; சிவபெருமானுகிய வீசுவ ரனுலேயே சிருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரமென்ற மூன்று தொழி லையும் நடத்துமபடியவர்கள் நியமிக்கப்பட்டவர்கள்; ஓர் ஸமய த்தில் மத்ஸர கிரத்ஸர்களாய்த் தங்கள் தங்களுடைய சிரைஷ் டியத்தைப்பற்றி விவாதப்பட்டுத் தங்கள் யோகவைபவத்தைக் காண்பித்து ஒருவருக்கொருவர் வரமளித்துக்கொண்டார்கள்; ஜகத்காரணபூதரான விம்மூவரையு மாதிகாலத்திற் சிவபெரு மானே படைத்து மூன்று தொழிலையுமளித்தார். பிறகு மத் ஸர கிரஸ்தர்களான மூவர்களும தவத்தால் பரமேசுவரனைக் க ளிக்கச்செய்து தம் தம் மகிமையை விரும்பிப் பரமனருளால் ஓர் கல்பாந்திரத்தில் ருத்திரன் பிர்ம விஷ்ணுக்களையும், மற் ருேர் கல்பத்திற் பிர்மன் விஷ்ணு ருத்திரர்களையும், பின்னு மோர் கல்பத்திற் விஷ்ணு பிர்ம ருத்திரர்களையும் படைத்தார் கள். இவ்வித மவாந்திர கல்பங்களிற் பிர்ம விஷ்ணு ருத்திர ர்கள் பரஸ்பரஞ் செய்ததைவிரும்பி யொருவரிடமிருந் தொரு வ ருண்டாகின்ருர்கள். பிர்ம விஷ்ணு ருத்திரர்களுக்குப் பிதா வாகிய பரமேசுவரன், நாபிவரையில் பிர்மரூபத்தையும், கழு த்துவரையில் விஷ்ணுரூபத்தையும், சிரசில் ருத்திர ரூபத்தை யுமுடையவர். சரீரத்தில் சிரஸ் சிரேஷ்டமானதால் சிரோ பூ தரான ருத்திரர் மூவருக்குள் சிரேஷ்டராயு மவரைக்காட்டி லும் விஷ்ணுவும், விஷ்ணுவைக்காட்டிலும் நானும் குறைவா கக் கூறப்படுவோம். எங்கள் மூவருக்குங் காரணமான துரீய ரென்ற பார்வதீபதியான பசுபதி லோகானுக்ரகார்த்தம் கை லாஸகிரியில் வசிக்கின்ருர். அப்பேர்ப்பட்ட பரமேசுவரனை

யே வுன் சாப நிவர்த்தியின்பொருட்டுச் சரணமாக வடையக்க டவாமென்று பிர்மதேவன் பகன்றார். அதற்கு வாகீசர் மூவருக்கும் காரணமான பரமன் ஸ்திரீயுடனுங் கணங்களுடனும் எப்படி கைலாசபர்வதத்தில் வசிக்கக்கூடுமென்று கேட்கப் பிர்மன் சொல்லுகின்றார். முக்குணம் மும்மூர்த்தி மூன்றவஸ்தை ஐம்பூதமயமாய் லயோத்பத்தியுடன்கூடிய ஸகல வுலகங்களும் பரமாத்துமாவாகிய சிவபெருமானுக்குச் சரீரமென்றே கூறப்படும். ஜீவனானவன் சரீரம் முழுவதும் வியாபித்திருப்பது போற் பரமனுலகமெங்கும் வியாபித் திருக்கின்றார். ஜீவனுக்குச் சரீரத்திலுயிர்நிலையென்று சிலவிடங்கள் குறிப்பிட்டு கூறப்படுவதுபோலு லகத்திற் கைலாயம் முதலிய சில ஸ்தானங்கள் பரமனுக்குக் கூறப்பட்டிருக்கிறதுகள். துரீயமூர்த்தியான பரமேசுவரன் தனக்குச் சரீரமான வுலகத்தை யெப்படித் தமதிச்சையின்படி மாயையாற் சிருஷ்டிசெய்தாரோ வவ்விதமே யுமாவிசிஷ்ட மூர்த்தியைத் தமது மாயையாற் கிரகித்துக்கொள்ளுகின்றார். ஸ்ரீகண்டத்துவம், சந்திரமௌளித்துவம் திருநேத்திரத்துவம், கங்காதரத்துவ மென்பவைகள் பிர்மஸ்வரூபத்தைத் தெரிவிக்கு மடையாளங்கள். இந்த சின்னங்களுடன்கூடிய மூர்த்தியைத் தமதிச்சையான மாயையாற் கிரகித்துக்கொள்ளுகின்றார். பரஞ்சோதி ஸ்வரூபியா யுலகமெங்கும் வியாபகமாக விருக்கின்ற பரமேசுவர னந்தந்தக்காலத்தில் மூர்த்தியைக் கிரகித்துக்கொள்ளுகின்றார். குணமூர்த்திகளான பிர்மா விஸ்ணு ருத்திரனென்கிற நாங்க ளெப்பொழுதுஞ்சரீரத்துடன் கூடியிருக்கின்றோம். எங்களுக்குபாதியான குணங்கள் பிரகிருதியிடமிருந்து பிரிந்தபடியால் நாங்கள் பிராகிருதாளென்றும், பிரகிருதியைக்காட்டிலும் பரனான சிவ னப்பிராகிருதனென்றும் கூறப்படுகிறார். இவ்விதம் பிர்மனுடைய வசனத்தைக்கேட்ட வாகீசமுனிவர் மூர்த்தியையுடைய பரமன் சிரசில் சந்திரனை யெதற்காகத் தரிக்கின்றாரென்று கேட்கப் பிர்மன் சொல்லுகின்றார். சந்திர னமிர்தரூபியானதால் தானமிருதரூபியென்று சகலருக்குந் தெரிவிக்கும் பொருட் டமிர்தரூபியான சந்திரனைச் சிரசில் தரிக்கின்றார். அமிருதமென்றால் மரணரஹிதமென்றுதாத்பரியம். ஜீவர்களுடைய சரீரத்தில் கண்

டத்தில் வியவஹார ஜீவனும், சிரஸ்தானத்தில் மூளையில் கூடஸ்தனென்ற ஸாக்ஷியுமிருக்கின்றார்கள். அமிருதம் மோக்ஷமென்றும், விஷம் ஸம்ஸ்ருதியென்றுங் கூறப்படும். பரமன் புத்திஸ்தானமான சிரஸில் முக்திரூபமான வமிருதத்தையும், ஜீவஸ்தானமான கண்டத்தில் விஷத்தையும் தரித்திருக்கின்றார். சுத்த ஸத்வப் பிரதானையான மாயையே யவருக்குச் சரீரம். ஸத்துவம் வெளுப்பானதாற் சுவேதவர்ணமான சரீரத்தையுடையவராக விளங்குகின்றார், ஜனன மரண ரூபமான ஸம்ஸாரமே விஷமென்று கூறப்படும். அவ்விஷத்தை ஜீவஸ்தானமான கண்டத்தில் வைத்திருப்பதாலும் விஷம் நீலவர்ணமானதாலும், பரமன் நீலகண்டரென்று வேதங்களால் துதிக்கப்படுகின்றார். பிரபஞ்சம் முழுவது மிரண்டுநேத்திரங்களுடையவை, தான் பிரபஞ்சரூபியென்றும் பிரபஞ்சாதீதரென்றும் தெரிவிக்கும் பொருட்டு, பரமன்மூன்றுநேத்திரங்களையுடையவராக விளங்குகின்றார். பாஹ்யநேத்திரமானது ஸ்தூலபிரபஞ்சத்தையு மாந்தரமான மனக்கண்ணானது ஸூக்ஷ்மத்தையும் மூன்றாவதான ஞானக்கண்ணானது காரணபிரபஞ்சத்தையும் பார்க்கும். மூன்றுவித பிரபஞ்சத்திற்கும் ஸாக்ஷியாய் விளங்கப்பட்டவர் பரமேசுவரன். ரஸொவைஸ என்ற வேதவாக்கியத்தின்படி ரஸமென்பது பிர்மரூபம், ரஸமென்றப் பிருமம் ஜலத்தை யாசிரையித்திருக்கின்றது. சிகாக்கிரமென்ற துவாதசாந்தஸ்தானத்தில் கங்கையை தரித்திருப்பதால் ரஸரூபமான பிர்மத்தைக் கொடுப்பவரென்று, கங்காதரசின்னம் தெரிவிக்கின்றது. இப்பேர்ப்பட்ட வடயாளங்களையுடைய சரீரத்தைத் தரித்துக்கொண்டு பரமன் விளங்குகின்றாரென்று பிர்மதேவன் பகர்ந்தார்.

ஐந்தாமத்தியாயம் முற்றிற்று.

ஆரும் அத்தியாயம்.

ஓ சௌனகாதி முனிவர்களே! இவ்வாறு பரமன் மூர்த்தி சின்னங்களைக் கூறிவந்த பிர்மதேவனை வாகீசமுனி மீண்டும் வணக்கத்துடன் ஸர்வகாரணமூர்த்தியாகிய பரமேசுவரனை

யெவ்வித முபாஸிப்பதென்று வினவப் பிர்மதேவன் சொல்லு கின்றார். ஸோமாஸ்கந்தர், சந்திரசேகரர், நடராஜா, விருஷ பாரூடர், உமாஸஹாயர், நீலகண்டர், தெக்ஷிணாமூர்த்தி, ஏகபா தர், ஹரிஹரர், லிங்கோத்பவர், கங்காதரர், சக்கிரதாதா, கல் யாணசுந்தரர், ஸுகாஸனர், திருபுராந்தகர், விக்கினேசஜனக ரென்று பதினாறு மூர்த்தங்கள் வேதங்களிற் கூறப்பட்டிருக்கி ன்றன. இவைகளி லொருமூர்த்தியைத் தியானித்துச் சிவலி ங்கத்திற் பில்வம் முதலிய பத்திர புஷ்பங்களா லர்ச்சித்தலே முனிவர்களாலுபாஸனையென்று கூறப்படுமென்று பிர்மதேவன் சொல்லிவர இச்சோடசமூர்த்திகளின் ஸ்வரூபத்தை யுபதேசி க்கவேண்டுமென்று வாகீசமுனி பிரார்த்திக்கப் பிர்மனுபதேசி க்கலானர். ஓ வாகீசமுனியே! ஆதியில் நிர்மலமாயும் நிஷ்க ளமாயு மிரானின்ற பரப்பிர்மத்தினிடத்தில் நெருப்பிற் பிரகா சம்போற் சிற்சக்தியிருந்துகொண்டிருந்தது. அப்பிர்மத்தினி டத்திலிருந்து முக்குணங்களின் ஸமரஸபாவத்தையுடைய மூ லப்பிருகிருதியென்ற மாயையைப் பின்னமாகச்செய்து தாம் மாயையுடன்கூடிய பிரும்மம், ஸர்வ சாக்ஷியென்ற ஸம்ஞை யையடைகின்றது. ஸாக்ஷியென்ற வப்பிரும்மத்திடம் வியாகி ருத மாயையுண்டாக வம்மாயையுடன்கூடி பரஞ்சோதிரூப த்துட னுலகமுழுவதுங் கண் முகம் கை காலுடைய வ்யரூப ரகிதராய் ஏகரூபமாய் விளங்குகின்றார். வ்யக்தரூபமில்லாத வ்யாகிருதரூபமே லிங்கமென்று கூறப்படும். அந்த லிங்கமா னது மூலத்திற் பிர்ம்மரூபமாயும், மத்தியில் விஷ்ணுரூபமாயு மக்கிரத்தில் ருத்திரரூபமாயும் விளங்கப்பட்டது. குணத்திர யமு மேகரூபமாய் விளங்கு மவ்வியாகிருதமென்ற மூலகாரண மே சிவலிங்கமென்று கூறப்படும். அந்தலிங்கமே எங்களா லெப்போது மர்ச்சிக்கப்பட்டு வருவது. ஸ்தூல ஸூக்ஷ்ம ஸ மமென் றிந்தவுலகமாதல் லிங்கத்தினின்றே யுண்டாயிற்று. ஸிருஷ்டியின் துவக்கத்திற் பரமேசுவர னேகபாதமூர்த்தியுட டன் லிங்கத்தினின்றுவிர்பவித்துத் தமதிடது பார்சுவத்திலிரு ந்து விஷ்ணுவையும், வலதுபார்சுவத்திலிருந்து பிர்மதேவனையு ப், நெற்றிக்கண்ணிலிருந்து காலாக்கினி ருத்திரனையும் படை

த்தார். இம்மூர்த்தமே ஏகபாத மூர்த்தமென்று கூறப்படும். இம்மூவருக்கும் சிருஷ்டிமுதலிய தொழில்களை யளிக்கும்பொருட்டுச் சிவபெருமான் தமது இடதுபார்சுவத்திலிருந்து பராசக்தியைப் பின்னமாகப்படைத்தார். அவ்வம்மன் சிருஷ்டிசக்தியான ஸாவித்திரியைப் படைத்துப் பிர்மனுக்கும், ஸம்பத்துரூபிணியாண மஹாலக்ஷ்மியைப் படைத்து விஷ்ணுவுக்கும், ஸம்ஹார சக்தியான துர்க்கையைப்படைத்து ருத்திரனுக்குங் கொடுத்துதவ வவர்கள் அச்சக்திகளால் தங்கள் தங்கள் தொழிற்களை நடத்திவர சக்தர்களாகவானார்கள். முச்சத்திக்குங் காரணமான பராசக்தியுடன்கூடிய விம்மூர்த்தியே உமாஸஹாயமூர்த்தியென்று வேதாதிகளில் துதிக்கப்படுகின்றது. பரமனால் சிருஷ்டியில் நியமிக்கப்பட்ட பிர்மன் விக்கினத்தினால் மோகத்தையடைந்து சிருஷ்டியைச்செய்யச் சக்தியற்றவனானபடியால் மூவரும் தொழிலற்றுச் சிவபெருமானைக் குறித்துத் தவத்திலிருக்கப் பரமனவர்களுக்குமுன் பிரஸன்னராகத் தங்களுக்குண்டான விக்கினத்தையும் தங்களுக்கு நிர்விக்கினமாய்த் தங்கள் தொழில்கள் நடந்துவரும்படி யனுக்கிரகம் புரியவேண்டுமென்றும் பிரார்த்தித்தார்கள். அவர்களின் பிரார்த்தனையைக் கேட்ட சிவபெருமான் சற்று தியானத்திலிருந்து தம்முடைய ஸ்வரூபத்தையே தாமனுஸந்தித்து அம்பிகையையும் பார்த்தார். உடனே சிவ சக்திகளுடைய சரீரத்திலிருந்தோர் ஜோதியுண்டாய் கஜமுகம் முதலிய வடையாளங்களுள்ளதாய் வ்யக்தமானவுருவத்துடன் விளங்கிற்று. அப்பொழுது சிவபெருமான் மும்மூர்த்திகளையும் பார்த்து நமது புத்திரரான இம்மூர்த்தி ஸகல விக்கினங்களையும் நிவர்த்திசெய்து ஸித்தி புத்திகளைக் கொடுக்கும். நம்மாத்ம ஸ்வரூபமான இவ்விக்கின நாசனமூர்த்தியானது ஸகல கர்மாவிலும் ஸகலராலும் பூஜிக்கத்தகுந்தது. ஆகையால் இம்மூர்த்தியை நீங்கள் பூஜித்து நிர்விக்கினமா யுங்கள் தொழிலை நடத்திவாருங்களென்று பரமனருள் புரிந்து அம்பாளுடன் மறைந்தார். மும்மூர்த்திகளும் விக்கினராஜமூர்த்தியைப் பூஜித்தவரருளாற்றங்கள் தொழில்களை நிர்விக்கினமாய் நடத்திவந்தார்களென்று சொ

ல்லிவரும் பிர்மனை வாகீசமுநி வணங்கிப் பரமேசுவரன் விக்கினநிவிருத்திசெய்ய கஜமுகமான மூர்த்தியைத் தரித்துக்கொள்ளுவானேனென்றுகேட்கப்பிர்மன் சொல்லுகின்றார். முக்குணமைம்பூதமயமான வுலகம் நாசமுடையதாதலால் நராத்மகமென்றும், நாசமில்லாத சிவம் கஜாத்மகமென்றுங்கூறப்படும். உலகம் சக்திரூபமென்றும் துரீயமான சிவம் பிர்மரூபமென்றும் வேதங்களிற் கூறப்படுவதாற் சிவசக்தியபேதரான சிவசக்தி புத்திரர் நர கஜாபேதைகாகிருதியுடையவராய் கஜமுகராகவானார். மேலும் ஜகத்ஸமூஹமானது கணமென்றுரைக்கப்படும். ஜகத்ரூபியாயு மதற்கீசரூபியாயுமிருப்பதால் கணேசரென்றும் கஜானனமூர்த்திக்கு நாமதேயமுள்ளது. இவ்விக்கினேசமூர்த்தியை ஈன்ற பரமனுடைய மூர்த்திக்கு விக்கினேசஜனகரென்று பெயர். பிர்மன்:— ஓ வாகீசமுநியே! என்னாற் படைக்கப்பட்ட ஸ்திரீ புருஷரூபமான பிரஜைகள் விஷயேச்சையின்றி யிருக்க என்னாற் பிரார்த்திக்கப்பட்ட பரமேசுவரன் பாதிசரீரத்தி லம்மனைத்தரித்தர்த்தநாரீசுவரராயினர். அதனால் ஸ்திரீபுருஷர்கள் பரஸ்பராநுராகமுடையவர்களாய் மைதுனபாவத்தாலுலகம் விருத்தியடைந்து வந்தது. இந்த மூர்த்திக்கு அர்த்தநாரீசமூர்த்தியென்று பெயர். பர்வதராஜன் புத்திரியான பார்வதியைக் கலியாணஞ்செய்துகொண்ட மூர்த்தத்திற்குக் கல்லியாணசுந்தரரென்று பெயர். தர்மரூபியான விருஷபத்திற் கனுக்கிரகம்புரிந்து அதை வாகனமாக வேற்படுத்திக்கொண்ட மூர்த்தமே விருஷபாரூடமூர்த்தமென்று துதிக்கப்படும். தேவதைகளுடைய பிரார்த்தனையாற்றமது வீர்யத்தினிடமாகப் பார்வதியினிடத்திற் குமரவேலனை யுண்டுபண்ணி கௌரீஸ்கந்தருடன் கூடியிருக்கும் மூர்த்தத்திற்கு ஸோமாஸ்கந்தரென்று பெயர். ஆத்துமானந்தத்தாற் கைலையில் நடனஞ்செய்யும் மூர்த்தத்தை நடராஜரென் றுரைப்பார்கள். லோகாக்ஷணத்தின்பொருட்டு விஷ்ணுவுக்குச் சக்கிரத்தை யளித்த மூர்த்தத்திற்குச் சக்கிரதானமூர்த்தமென்று பெயர். பிர்ம விஷ்ணுக்களுடைய கலகத்திற் பரஞ்சோதிரூபமா யாவிர்பவித்த மூர்த்தம் லிங்கோத்பவமென் றுரைக்கப்படும். திரிபு

ரத்தை யெரித்த மூர்த்தம் திரிபுராரியென்று பெயர். கங்கையைத்தரித்திருப்பது கங்காதரமூர்த்தமென்றும், விஷ்ணுவுக்குப்பாதிசரீரமளித்தது ஹரிஹரமூர்த்தமென்றும், சுகாதிகளுக்கு மஹாவாக்கிய ரஹஸ்யார்த்தங்களை யுபதேசித்தது தக்ஷிணாமூர்த்திமூர்த்தமென்றும், கைலையிற் கௌரீ கணேச ஸ்கந்தருடன் வீற்றிருப்பது ஸுகாஸனமூர்த்தமென்று முறைக்கப்படுகிறது. இப்பேர்ப்பட்ட மூர்த்தங்களின் மகிமை ஸங்கிரகமா யுரைக்கப்பட்டதென்று பிர்மன் வாகீசருக்குரைத்தார்.

ஆருவதத்தியாயம் முற்றிற்று

ஏழாவதத்தியாயம்.

இவ்வாறு பரமேசுவரருடைய மகிமையைக்கேட்ட வாகீச மாமுநி நான் எவ்விடத்திற்றவம் புரிவதென்று கேட்கப்பிர்மதேவன் சொல்லுகின்றார். தண்டகாரண்ணியத்தில் மதுவனமென்ற க்ஷேத்திரம் பஜிப்பவர்களுக்கு மதுவானதினிப்பாகவிருப்பதுபோல் இனிமையைக் கொடுப்பதாக விருக்கின்றது. அவ்விடத்திற் சிவேச்சையாலுண்டான ஸ்வாயம்புவலிங்கம் விளங்குகின்றது. அவ்விடஞ்சென்றந்த ஸ்வாயம்புவலிங்கத்தைப்பூஜித்துன் னிஷ்டஸித்தியை யடையென்றுப் பிர்மதேவன் சொல்லவதற்கு வாகீசமுநி ஓ ஸர்வஞ்ஞனாகிய பிர்மதேவனே! மதுவனமென்ற அந்த க்ஷேத்திரம் எவ்விடத்திலிருக்கிறது, யாருக்கனுக்கிரகம்புரிய வம்மஹாலிங்கமாவிற்பவித்தது, எதற்காக பரமேசுவரன் பூமியிலிருப்பவராகவானார், அவ்விடத்திலெவர்கள் பரமேசுவரனைப் பூஜித்திஷ்ட சித்தியையடைந்தார்கள்.? அக்ஷேத்திரத்தின் மாஹாத்மியத்தை விவரித்துரைத்தருளவேண்டுமென்று வினயத்துடன் கேட்கப் பிர்மதேவர் சொல்லுகின்றார். பரமேசுவரனுடைய க்ஷேத்திரம் மூன்றுவிதம். பிர்மலோகத்தி னூர்த்துவ பாகத்திலுள்ளது மஹாகைலாஸமென்றுஞ் சிவலோகமென்றுங் கூறப்படும். ஆதிசேஷனுடைய வாசஸ்தலமான பாதாளத்திற் காலாக்கிருத்திரபவனமென்றும், பூமியின் மேருபர்வதத்தின் கொடுமுடியிற் கைலையென்ற க்ஷேத்திரமும் பரமனுக்குரியவை. பூலோ

கத்திற் கர்மபிரசித்தியின்பொருட்டுப் புண்ணியபூமியான பாரதவர்ஷத்தில் மேருவிலுள்ள கைலைக்குச் சமதியான வனேக மஹாக்ஷேத்திரங்கள் பரமேசுவரனாற் சிருஷ்டிக்கப்பட்டன. ஸர்வரூபமாயிருப்பவன் பிரகிருதி. புருஷனாத்மரூபமா யிருப்பவர், பிரகிருதிபுருஷாளுடைய ஸம்யோகபாவத்தால் க்ஷேத்திர ராஜமென்று கூறப்படும். மனுஷ்யர்களுக்கபேத சிவயோகத்தா லடையக்கூடியது. இதுதான் பூமிகதமான க்ஷேத்திரமென்பது. கைலாஸகிரியில் வசிக்கும பரமேசுவரன் தமது மாயா சக்தியால் ஜனங்களுக்குப் புருஷார்த்தங்களைச் சுலபமாய்கொடுக்கும்பொருட் டனேக க்ஷேத்திரங்களைப்படைத்தார். காசி முதலிய க்ஷேத்திரங்கள் பரமேசுவரனைக்குறித்துத் தவம்புரிய அவைகளுடைய தவத்தினாற்பரமன் சந்தோஷமடைந்து நூறு வருஷங்களுக்குப் பிறகு அவைகளுக்குமுன் பிரசன்னமாய் காசிமுதலிய க்ஷேத்திரங்களே! உங்களுக்கிஷ்டமானதைக்கேளுங்கள் கொடுக்கிறேனென்றுரைக்க வவைகள் பரமனைவணங்கி ஓ பரமேசுவரா! நீரெங்களுக்குச்சந்தோஷமாய் வரன்கொடுப்பதுண்மையானா லும்முடைய பாதாரவிந்தத்தி லுறுதியான பக்தியையும், நாங்கள் சிருஷ்டிக்கப்பட்ட காரியத்தையும், உங்களை யிடைவிடாமற்பூஜிக்கக் கைலையில்வஸதியும், சிவஞ்ஞானத்தையு மருள்புரிய வேண்டுமென்று வேண்டிக்கொண்டன. இவ்வாறு க்ஷேத்திரங்களுடைய பிரார்த்தனையைக் கேட்ட பரமன் கருணைகூர்ந்து நீங்கள் நம்முடைய வரப்பிரஸாதத்தாற் பூமியிற் சேவிப்பவர்களுக்குத் தர்மார்த்த காம மோக்ஷங்களைக்கொடுக்கச் சக்தியுள்ளவர்களா யுங்களிற் சிலர் தர்மங்களையும், சிலரர்த்தங்களையும், சிலர் காமங்களையும், சிலர் மோக்ஷங்களையும், சிலர் மரணத்தினாலேயே முக்தியையும், சிலர் கிரமமுக்தியையுங் கொடுக்கின்றவர்களாய் பூமியில் வசிக்கக்கடவீர்கள். நீங்கள் கேட்டுக்கொண்ட மற்ற வரங்களுமுங்களுக்குக்கொடுத்தோமென்று சொல்லி யவைகளுக்குத் தனித்தனியாய் பெயருமிட்டுச் சிவபெருமான் மறைந்தார். சிவபெருமானாற் சிருஷ்டிக்கப்பட்ட சிவக்ஷேத்திரங்கள் ஏழுகோடிக்குள் பாரதவர்ஷத்தில் வசிக்கும்படி நியமிக்கப்பட்டவை ஆயிரத்தெட்டு க்ஷே

த்திரங்களும், பாரதவர்ஷத்திலோர்பாகமான தெண்டகாரண்யத்திலுமிருக்கின்றனவென்று பிர்மன் சொல்லவதற்கு வாகீசன் பிர்மனைபபார்த்து ஓ ஸர்வஞ்ஞராகிய பிர்மதேவரே! ஸகல க்ஷேத்திரங்களும் வசிக்கும்படியான வவ்வளவு சிலாக்கியமாகத்தண்டகாரண்ணிய மெப்படியாயிற்று அதனையு மருள்புரிந்தருளவேண்டுமென்று வேண்டிக்கொள்ளப் பிர்மன் பகரலுற்றூர். உலகில் மனிதர் செய்யும் சுபாசுப கர்மங்களுடையவனுபவமே யாவருக்குந் தெண்டமென்றுரைக்கப்படும். சூன்னிய வாசகமே அரண்யமாகும். தண்டங்களுக்கு நாசகரமாயும் பிர்மபூயபதத்தைக் கொடுப்பதானது தண்டகாரண்ணியம். அதண்டாளான ரிபுமுதலிய யோகிகளுக்கு ஹிதகரரான பரமேசுவரன் பிர்மபூயபதவியை பக்தஜனங்களுக் கருள்புரியவேண்டுமென்றே தண்டகாரண்ணியத்தில் வசிக்கலானர். பிர்மதேவனுற் சிருஷ்டிக்கப்பட்ட அரண்யங்களுக்குள் தண்டகாரண்ணியம் பரமேசுவரனிடத்திற் பக்தியுள்ளதாய்ப் பரமனைப் பிரார்த்தித்துப் பரமன் கிருபையையடையும்பொருட்டு பஞ்சாக்ஷரத்தைப் பெற்று வேதாவி னுத்திரவின்படி பரமனைக்குறித்துத் தவம்புரிய, தேவவருஷத்திற் பதினயிரம்வருஷம் சென்றபிறகு பரமனருள்சுரந்து அதற்குமுன் தெரிசனங்கொடுத்தார். அதனால் தண்டகாரண்ணியங் களிகூர்ந்து வணங்கித் துதித்தென் சரீரத்தில் தாங்கள் அம்பாளுடனும் கணங்களுடனும் நிரந்தரவாசஞ் செய்யவேண்டுமென்று வேண்டிக்கொள்ள வதற்குப் பரமன் களிகூர்ந்து ஏ தண்டகாரண்ணியமே! உன் பிரார்த்தனைப்படியே யுன்னிடத்திலிருந்து பக்தானுக்கிரஹம் புரிகின்றேமென்று வரனளித்து மரைந்தார். ஆகையால் ஓ வாகீச முநியே! பரமேசுவரனுடைய வரப்பிரஸாதத்தால் சிவக்ஷேத்திரங்கள் யாவும் தண்டகாரண்ணித்திலிருக்கின்றன. தண்டகாரண்ணியவாசிகள் யாவரும் விசேஷமாய்ப் பஜிப்பவர்கள். தண்டகாரண்ணியம் முழுவதும் விசேஷமாய் சிவக்ஷேத்திரமயமானதே. ஸர்வாரண்ணியங்களினும் பரமன் வஸித்தபோதிலும் விசேஷமாய் தண்டகாரண்ணியத்திலேயே வஸிக்கின்றூர். ஆகையாற்றூன் தண்டகாரண்ணியத்திலுள்ள மது

வனமென்ற க்ஷேத்திரமானது புண்ணியமயமாயும ஸர்வ க்ஷே த்திரங்களிலுஞ் சிரேஷ்டமாயும் விளங்குகிறதென்று சொல்லு ம் பிர்மதேவனை வாகிசர் ஓ பிர்மதேவனே! க்ஷேத்திரங்களு க்குள் மதுவனமென்ற க்ஷேத்திர மெப்படிச் சிரேஷ்டமாயி ற்றதனையு முறைக்கவேண்டுமென்று கேட்கப் பிர்மன் சொல் லுகின்றார். ஸர்வபூதங்களுக்கு மாத்துமாவான பரமேசுவரன் மதுரூபியென்று வேதங்களில் வர்ணிக்கப்படுவதால் பூமியினு த்மாவாயிப்பவரும் மதுவென்றே வுரைக்கப்புடுவார். இந்த பூமியும் பூதங்களுக்கு மதுரூபியானதால் மதுக்ஷேத்திராத்ம யோகத்தினுல் மதுவனமென்ற க்ஷேத்திரமுண்டாயிற்று. த ண்டகாரண்ணியத்தின் மதுவனத்தின் மதுமயமான க்ஷேத்திர த்தின் மதுவை விரும்பிய மதுபானப்பிரியாளாயும் ஸம்ஸார ஸாகரத்திலிருந்து முக்தாளுமான சிரேஷ்டர்களாகிய முனிகள் பிர்மத்தை விரும்பி வஸிக்கின்றார்கள்.

ஏழாமத்தியாயம் முற்றிற்று.

எட்டாவதத்தியாயம்.

பூர்வத்தில் பிருங்கியென்று பிரசித்தராய் சகல ஸத்கு ணங்களும் பொருந்திய ஓர் முனிவர் ஏகநிஷ்டமார்க்கத்தைக்கை ப்பிடித்து சக்தி கணபதிகளை விலக்கிச் சிவத்தைமாத்திரம் பக் தியுடன் பூஜித்துவந்தார். பரமனவருக்குமுன் அர்த்தநாரீசுவ ர ரூபத்துடன் அவர் பூஜையிலிருக்கும் லிங்கத்திலேயே தரிச னங்கொடுக்க வதற்கு அம்முனிவர் சக்திரூபமான இடதுபாக த்தை விலக்கி வலப்புறத்திலேயே சகல வுபசாரங்களுடன் பூ ஜைசெய்து வண்டுரூபத்தைத்தரித்து அர்த்தநாரீசுவரத்தைத் துளைத்து சக்திரூபத்தை விலக்கி சிவரூபத்தை மாத்திரம் பிர தக்ஷணஞ் செய்தார். அதனுல் அம்மன் கோபித்துத் தான் சிவனைவிட்டுப்பிரிந்து முனிவனிடத்துள்ள சக்தியம்சங்களைக் கிரகித்துக்கொள்ள; முனிவர் எலும்புந்தோலுமாத்திரமுடைய வராய் நிற்கச்சக்தியற்றவராக வானர். பக்தவத்ஸலரான பர மன் கிருபைகூர்ந்து, நிற்கும்படியாய்த் தம் சித்சக்தியாலவரு க்கு வேறொரு கால் கொடுக்க; முனிவர் மூன்று காலுள்ளவரா

கவானுன். அப்பொழுதுபராசக்தி கோபித்து முனிவரைப் பார்த்து ஏ பிருங்கிமுனிவனே! சிவபெருமானுஞ் சக்தியாகிய வென்னுடன் கூடினுற்ருனே வுலகில் ஸர்வகாரிங்களிலும் பிரஜைகள் சக்தராகவாகின்ருர்கள் என்னுடைய சேர்மானமில்லாவிட்டால் நிர்க்குணராகத்தானே யிருப்பார். பூஜையுமுபாஸ்யோபாஸகத்துவமு மென்னையன்றிச் சங்கரரிடத்திற் கிடையாதே. அப்படிக்கிருக்க அர்த்தநாரீச மூர்த்தியில் வண்டுருவத்துடன் துளைத்தென்னைவிலக்கி நீ பிரதக்ஷிணம் செய்தபடியால் நீ வண்டாகவாகக் கிடவாயென்று சாபங்கொடுத்தாள். இவ்விதம் பராசக்தி சாபங்கொடுத்ததையும் பரமன் மௌனமாயிருப்பதையும் பார்த்த வம்முனிவன் அம்பிகையை நமஸ்கரித்து ஏ பரதேவதே ஏகாந்தபக்தி மார்க்கத்தி னுற்றங்களை பின்னமாய் நினைத்து அஞ்ஞானத்தினுலிவ்விதம் செய்தேனிக்குற்றத்தை மன்னித்துச்சாபத்தை விலக்கித் தமதம்சத்துடன் கூடியவனுயுமென்னைச் செய்யவேண்டுமென்று பலமுறையும் வந்தனை புரிந்து பிரார்த்தனை செய்ய வதற்கம்மன் கருணைகூர்ந்து ஓ முனிவனே! நீ விக்கினேசுவரரின் பூஜையையும் விட்டுவிட்டாய் அதினுலுனக்கு மதிவிப்ரமமுண்டாயிப்படி செய்து நமது சாபமேற்றுக்கொண்டு முக்காலுடையவனுய் வண்டுரூபத்தையடைந்தாய்; ஆகையால் விக்கினநிவிருத்தியின் பொருட்டு விக்கினராஜமூர்த்தியை சந்தோஷிக்கச்செய்துவா. நான்குயுகம் வண்டுரூபத்துடனிருந்து பிறகு சாபத்திலிருந்து விடுபட்டு வண்டுருவை விலக்கி முன்னுருவையடைந்து நமதம்சம் பெற்று முக்காலுடன் சிவகணங்களுக்கதிபதியாகி கைலையில் வஸிக்கக்கடவாய் என்றனுக்கிரகம் புரிந்து பரமனுடன் மறைந்தாள். பராசக்தியின் சாபத்தாற் பிருங்கிமுனிவன் வண்டுரூபமடைந்து ஸத்வஞானமுள்ளவனுய் தமதாசிரமத்திலிருந்து வெளிப்பட்டு தண்டகாவனங்களிலலைந்து திரிந்து தெய்வயோகத்தினுல் மதுவனத்தையடைந்து அவ்விடத்தில் விருப்புற்று வஸித்து வந்தான். பிரமரரூபத்தையடைந்த பிருங்கி முனிவனவ்வுருவோடு மதுப்பிரிய கணபதியையும் மதுவனேசுவரரென்ற பரமேசுவரனையும் பிரகதம்பாளென்ற பராசக்தியையும் பூஜைபுரிந்து லிங்கத்தின் பக்கத்திலிருந்து கொண்டு சிவநாமமந்திரத்

தை ஜபஞ்செய்து வந்தார். இவ்விதம் பராசக்தியின் கட்டளைப்படியோர் சதுர்யுகம் தவம்புரிந்தார். பிறகு கிருதயுகத்தில் பரமேசுவரன் பிரமரூபத்துடன் கூடிய பிருங்கியினிடம் கிருபையுற்று பராசக்தி கணபதியுடனுவிர்ப்பவிக்க பிருங்கிமாமுனிவன் களியுற்று கணபதியையும் சக்தியையும் பரமசிவத்தையும் கிரமமாய் பக்தியுடன் நமஸ்கரித்து பரமனை துதிப்பாராகினர். சிரஸிற் கங்கையையும் சந்திரனையுந்தரித்தவராயும் தன்விழியால் மன்மதனை யெரித்தவராயும் பர்வதராஜபுதல்வியோடுகூடின வராயுமிருக்குமிருதய கமலவாஸியான பிருங்கிலிங்கத்தை நமஸ்கரிக்கின்றேன். திக்பதிகளாகிய ஸுரேந்திரன் முதலியவர்களாற் பூஜிக்கப்பட்டதாயும் யானைத்தோலைப்போர்வையாக வுடையதாயும் ஜகன்மாதாவாகிய கௌரியின் முகாரவிந்தத்திற்கு வண்டுபோலிருக்கும் ஹிருதயகமலவாஸியான பிருங்கிலிங்கத்தை நமஸ்கரிக்கின்றேன். நான்கு மறைகளாலுமரியத்தகுந்தவராயும் பக்தாளுடைய ஹிருதயகமலத்தில் வஸிப்பவராயும் மகாவாக்கியார்த்தப்பொருளாயும் விஷ்ணுவுக்கனுக்கிரகம் புரிந்தவராயும் சிதானந்தரூபியாயும் ஹிருதயகமலவாஸியான பிருங்கிலிங்கத்தை நமஸ்கரிக்கின்றேன். கங்காநதியாற் பரிசுத்தம் செய்யப்பட்ட காசிகாபுரியின் மத்தியான விமுக்தமென்ற ஸ்தலத்தில் முக்திவீட்டையளிக்கும்படி விஷ்ணு பிர்மாதிகளால் ஸாம்ராஜ்யபதவியிலபிஷேகம் செய்யப்பட்ட ஹிருதயகமலவாஸியானப் பிருங்கிலிங்கத்தை நமஸ்கரிக்கின்றேன். பேரின்பவீட்டிற்கு விரோதிகளாகிய புத்திரமித்திர ஸம்பத்து ஸுகங்களை விட்டுப்போட்டு பக்தஜனங்களாற் சேவிக்கத்தகுந்த வராயும் ஜடையிற் கங்கையையும் சிரஸிற் சந்திரனையும் வாமாங்கத்திற் பர்வதராஜபுத்திரியையும் தரித்திருப்பவருமான ஹிருதயகமலவாஸியான பிருங்கிலிங்கத்தை நமஸ்கரிக்கின்றேன். மும்மூர்த்திரூபியாயும் முக்குணங்களுக்காதார பூதராயும் மஹேசன் முதலிய நாமங்களாற்றுதிக்கப்பட்டவராயும் நிர்விகல்பராயும் எப்பொழுதும் விசுவாதீதராயும் மாயையால் கிருகிக்கப்பட்ட சரீரத்தையுடையவராயுமிருக்கும் ஹிருதயகமல வாஸியான பிருங்கிலிங்கத்தைநமஸ்கரிக்கின்றேன். பக்தபுங்கவர்களான கந்தர்வர்களுடைய

கானத்தில்பிரியமுள்ளவராயும் பக்தாளைபவஸாகரத்திலிருந்து கரையேற்றும்பொருட்டானந்த நடனம் புரிகின்றவராயுமுபநி ஷத்துக்களாற் துதிக்கப்பட்டவராயும் தமதம்சத்தால் பக்தா னுக்கிரகத்தின்பொருட்டுமூர்த்தியை தரிப்பவருமானபிரமரலி ங்கத்தைநமஸ்கரிக்கின்றேன். நிருபாதி மாயாயுக்த்தராய்த்தம து மஹிமையிலிருப்பவராயு மீசுவரராயுங் குணாதீதராயுங்குண ங்களுடைய பேதத்திற்குக் காரணபூதராயும் தமதிச்சையால் ஜகத்தி னுத்பத்திலயாதிகளை நடத்துவராயும்மூவர்முதலியதே வர்களாற் பூஜிக்கப்பட்டவராயு மிருக்கும் பிரமரலிங்கத்தை ந மஸ்கரிக்கின்றேன். இவ்விதமாய் வண்டுருபத்தையுடைய பிரு ங்கிமாமுனிவரால் துதிக்கப்பட்ட மதுவனேசுவரரான சிவபெ ருமான் ஸந்தோஷமடைந்து பிருங்கியைப்பார்த்து ஓ பிருங்கி முனியே! உன்னால் பிருங்கரூப மடையப்பட்டதால் நீ பிருங்கி யென்று பெயருடையவனாக என்னுடைய சரீரத்திலிடது பா கம் சக்திரூபமென்று வேதங்களில் முறையிட்டிருக்க வதில் பேதத்தை யடைந்து சாஸ்திரத்தை யவலம்பித்து என் பூஜை செய்தபடியாற் சக்தி கோபத்திற்குள்ளாய் பிருங்கி ரூபத்தை யடைந்தாய். விக்கினத்தை நிவிருத்திசெய்ய கஜமுக மூர்த் தியும் நம்மாலே கிருகிக்கப்பட்டிருக்கின்றது. அதுபோலிஷ் டங்களைக்கொடுக்க பஞ்சவக்திர மூர்த்தியும் நம்மாலேயே தரி க்கப்பட்டிருக்கின்றது. அரிஷ்ட நிரஸனத்தின்பொருட்டு வி க்கினேசமூர்த்தியை முந்திபூஜிக்கவேண்டும். அவ்விதம் நீ செ ய்யாததால் விக்கினத்தால் நீ பீடிக்கப்பட்டாய். இப்பொழு து அம்மூர்த்தியை விதிப்படிபூஜித்தபடியால் நிர்விக்கினமாய் ந மது கிருபையை யடைய பாத்திரபூதனாக விருக்கின்றாய். ஆ கையாலிப்பொழுது மாயாளுடன் ஸந்தோஷமடைந் திருக்கின் றேன். உனக்கிஷ்டமானதைக்கேள்கொடுக்கின்றோ மென்று சொல்வதைக்கேட்ட பிருங்கிமுனி யானந்தித்துப் பலதடவை நமஸ்கரித்து பிரார்த்திக்கின்றார். மாதாபிதாக்களான உங்க ளுடைய பாதாரவிந்தங்களிற் சலனமற்ற பக்தியையும் பார்சு வத்தில் வாஸத்தையும் கொடுக்கவேண்டும். இப்பேர்ப்பட்ட மோஹமொருக்காலுமினியென்னை யனுகாதவண்ணமனுக்கிர ஹம்புரியவேண்டும்.மதுவனமென்ற யிந்தக்ஷேத்திரத்தில் பிர

மாரூபமுடைய வென்றுற்பஜிக்கப்பட்ட படியால் தாங்கள் பிரமரேசுவரரென்ற பெயருடனும் அம்பாள்பிரமராளகை யென்ற பெயருடனுமுமதுபுதல்வராகிய விக்கினேசுவரர் மதாமோதகணேசரென்ற பெயருடனும் பிரக்கியாதியுடன் வஸிக்கவேண்டும். மதுரூபியாயும் பிரமராசிரமமாயுமிருக்கப்பட்ட மதுவனமென்ற யிந்தக்ஷேத்திரம் ஸாவ க்ஷேத்திரங்களுக்கும் சிரேஷ்டமாய் பிரமரபுரி யென்ற பெயருடன் விளங்க வேண்டும். பிரமராளகையென்ற பராசக்தியானவள் துவம்பதார்த்தரூபியானவள். பிராமரீசரான ஸதாசிவராகிய நீர் தத்பதார்த்தரூபமானவர். உங்களிருவருடைய அபேதரூபியான மதாமோத கணேசாவிபதார்த்த ரூபமாய் விளங்கப்பட்டவர். ஆகையா லிந்தக்ஷேத்திரம் மஹாவாக்கிய ரூபமானது. இந்த க்ஷேத்திரத்தில் ஜனித்தாலும் வஸிப்பதாலும் ஸ்மரித்தாலும் மரித்தாலும் தெர்சனம் செய்வதாலும் மனிதர்களுக்கு முக்தியளித்தல் வேண்டும். இந்த க்ஷேத்திரத்திற் றருமமர்த்தம் காமம் மோக்ஷம் கைவல்ய மென்ற பதவிகளை கொடுத்தல் வேண்டுமென்று பிரார்த்தித்த பிருங்கிமுனியைப் பார்த்துப் பரமன் சந்தோஷமடைந்து ஓ பிருங்கிமுனியே! உன்னல் பிரார்த்திக்கப்பட்ட யாவும் அப்படியேயாகட்டும், இந்த க்ஷேத்திரமானது நான்கு யுகங்களிலும் பிரமபுரியென்றும், மதுவனமென்றும் பிரசித்தமான பெயரையடையட்டும். இந்த க்ஷேத்திரத்தில் பிரமரேசுவரரென்றும், பிரமரபுரீசரென்றும், மதுவனேசுவரரென்றும் பிரசித்தமான பெயருடன் நான் வஸிக்கின்றேன். நம்முடைய சக்தியானவள் பிரஹதம்பா முதலிய பெயர்களால் பிரசித்தியடையட்டும். நம்முடைய புத்திரரானவர் மதாமோத கணபதியென்றும், அபீஷ்டவரதரென்றும் பிரசித்தியான பெயருடன் விளங்கட்டும். இந்தலிங்கத்தில் நமதம்சத்துடன் நான் வசிக்கின்றேன். நீயுமுன்அம்சத்தினுற் பிரமரரூபத்துடன் எனதுசமீபத்திலும் திவ்யமானதேஜோரூபத்துடன் நமது கணங்களுக்கு அதிபதியாகி நந்தியைப்போற் கைலேயில் நமது பார்சுவத்திலேயே வஸித்துக்கொண்டிருவென்று வரங்களைக் கொடுத்து சாம்பவரூபத்தையடைந்த பிருங்கியுடன் தமது கணங்கள் புடைசூழ கௌரீ விநாயக ஸஹிதராய்ப் பரமேசுவர

ன் கைலாஸத்திற் கெழுந்தருளினர். பிரமபுரி யென்னும் க்ஷேத்திரத்தில் லிங்கமத்தியி லெப்பொழுதும் பரமன் ஸாந்நித்தியமாயிருக்கின்றார். பிரமரேசுவருடையவும் பிரமபுரி க்ஷேத்திரத்தின் தத்துவத்தைவிளக்கும் புண்ணியபிரதமபான பிருங்கிமுநிவனுடையவும் சரித்திரரூபமான இவ்வியாக்கியானத்தை விதிப்படி கேழ்ப்பவரும் கேழ்க்கச்செய்பவரும் படிப்பவரும் இவ்வுலகில் ஸகலபோகங்களையு மனுபவித்து அந்தியத்திற் பேரின்ப வீடாகிய சிவபதவியை யடைவாகள்.

எட்டாமத்தியாயம் முற்றிற்று.

ஒன்பதாவது அத்தியாயம்.

பிரமபுரியென்ற இந்த க்ஷேத்திரத்திற் பரமேசுவரனை யாராதித்து தேவர்கள் என்னென்ன வித்தியை விசேஷமாயடைந்திருக்கின்றார்களோ அதை எனக்குக் கிரமமாய்சொல்லவேண்டுமென்று வாகீசர் கேழ்க்க வதற்குப் பிர்மதேவன் சொல்லுகிறார். ஸ்வாயம்புவ மனுவின் புத்திரனாகிய உத்தானபாதனென்ற வரசன் மத்தியதேசத்திற் றருமநீதிப்படி யரசுபுரிந்து வந்தார். அவருக்கு ஸுநீதியென்றும் ஸுருசியென்றுமிரண்டு மனைவியார்களிருந்தார்கள். ஸுநீதிக்கு துருவனென்றும் ஸுருசிக்குஉத்தமனென்றும் பிள்ளைகளுதித்தார்கள். அரசன் ஸுருசியென்ற இளையாளுடைய வசப்பட்டு மோஹாகிராந்தனாய் மூத்தாளான ஸுநீதியை மனதால்கூட நினைக்காமலிருந்துவிட்டான். ஓர் ஸமயத்தில் மூத்தாளுடைய புத்திரனான துருவகுமாரன் அரசனுடைய சமீபஞ்சென்று பிதாவின் மடியின்மீதேற விருப்பமுற்றவனாய் அரசனெதிரில் நின்றான். ஸுருசியென்ற இளைய தாயாரால் துஷ்டபாவமான அவமானத்தையடைந்த துருவகுமாரன் கோபத்துடன் வனஞ்செல்ல மார்க்கத்தில் நாரதமுநியைக்கண்டு அவரை வணங்கினன். தர்மதாரகனான துருவனுடைய விருத்தாந்தத்தை நாரதமுநியறிந்து விஷ்ணுவினுடைய துவாதசாக்ஷர மந்திரத்தை யுபதேசித்துச் சென்றார். துருவன் நாரதரை நமஸ்கரித்து விடைபெற்று மதுரையென்னும் க்ஷேத்திரம் சென்று விஷ்ணுவைத்தி

யானித்துத் தவத்திலிருந்தான். அத்துருவனுடைய தவத்தால் அருகுவந்து விஷ்ணு பிரஸன்னராய் அகண்ட பூமண்டலாதிபத்தியமும் அந்தியத்தில் துருவமான விஷ்ணுபதவியாகிய சுவர்க்கத்தையுமளித்தார். துருவன் ஹரியினனுக்கிரகத்தைப்பெற்று அரண்மனை வந்து மாதா பிதாக்களை வந்தனம் புரிந்தான். விஷ்ணு தேஜஸ்ஸால் ஜ்வலிக்கும் புத்திரனாகிய துருவனை யரசன் விசேஷமாய் மானித்துக் காலத்தில் தன்னிராஜ்யத்தை யவனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்வித்து அவன் வனஞ்சென்று தவம்புரிய பரமனுடைய ஸாயுஜ்யத்தை யடைந்தான். துருவனும் மநுநீதிப்படி ராஜ்யஞ்செய்துவந்தான். ஒருக்கால் நாரதமுனி துருவனுடைய ஸதஸுக்குவர துருவனெதிர்கொண்டாசனமளித்து விதிப்படி பூஜித்து அஞ்சலிபந்தஞ் செய்துகொண்டுநிற்க அவனைப்பார்த்து திவ்ய ஞானத்துடன் கூடிய நாரதமுனிவர் தம்சிஷ்யனாகிய பக்தியுள்ள துருவனைப் பார்த்துச் சொல்லுகின்றார். பகவத்பக்த சிகாமணியாகிய துருவமஹாராஜனே! நானிப்பொழுது வைகுண்டத்திலிருந்து விஷ்ணுவாலும்மிட மனுப்பட்டு வந்தேன். பூமியில் பிர்மமயமான பிரமபுரியென்ற வோர் க்ஷேத்திரமிருக்கின்றது. நீ யவ்விடஞ்சென்று பராசக்தியுடன் கூடிய பரமசிவனை யர்ச்சனை செய். அதனாலுனக்கு நம்மால் கொடுக்கப்பட்ட துருவபதம் அக்ஷயமாயிருக்கும். இல்லாதவரையில் விக்கினத்தால் பீடிக்கப்படுவாய். நீ விநாயகருடைய ஏகாக்ஷர மந்திரத்தையும் பரமசிவனுடைய பஞ்சாக்ஷரத்தையும் பெற்று ஜபமும் செய்யவேண்டும். இதனால் தினகல்பத்தில் துருவமண்டலம் நாசமடையும் பொழுது நீ சாந்தியடைந்து பிர்மத்தினிடத்தில் பிர்மபூதனுவாய். இல்லாதவரையில் யோகசாந்தியடையமாட்டாய் என்றிவ்விதஞ்சொல்லச்சொல்லி கிருஷ்ணபகவான்என்னையனுப்பினரென்று நாரதர் சொல்லிக் கணபதியின் ஏகாக்ஷரமந்திரத்தையும் பரமேசுவாருடைய பஞ்சாக்ஷர மந்திரத்தையுமுபதேசித்துத்தனது மனோகதிப்படி சென்றார். துருவமஹாராஜனும் விஷ்ணுவால் நாரதமுனிமுகமாய் ஆக்கியாபிக்கப்பட்ட பிரகாரம் மதுவனமென்ற க்ஷேத்திரம் வந்து பக்தியுடன் விநாயகமூர்

த்தியையும் பிரமரபுரீசுவரரையும் பிரமராளகையம்மனையும் விதிப்படி பூஜைசெய்து நாரதரா லுபதேசிக்கப்பட்ட மந்திரங்களையும் நியமமா யொருவருஷம் ஜபஞ்செய்துவந்தார். அதினால் பரமன் ஸந்தோஷமடைந்து துருவனுக்குத் தெரிசனங்கொடுத்து விஷ்ணுவால் கொடுக்கப்பட்ட வரனைப் பூர்ணமாயும் சாசுவதமாயுமிருக்க வரனளித்து லிங்கமத்தியில் திரோபவமானார். இவ்வாறு பரமேசுவரனுடைய வரப்பிரசாதம் பெற்ற துருவமஹாராஜன் மிகவும் பெரியதாயுஞ் சிலாக்கியமாயும் பிரமபுரீசுவரருக்கு ஆலயமும், ஸ்வர்ணஸ்தூபிகளால் விளங்கப்பட்ட விமானங்களும் நிர்மாணஞ் செய்வித்து விதிப்படி பூஜைசெய்து தமது பட்டணம்வந்து ராஜ்யபரிபாலனஞ் செய்துவந்தான். பிறகு தேஹாந்தத்தில் ஸ்வர்க்கலோகஞ்சென்று துருவஸ்தானதிபதியாய் ஜ்யோதிச்சக்கிர பிரணேதாவாகவானான். அவ்விடமிருந்து சிவபக்திபண்ணிக்கொண்டுவந்து துருவமண்டலலயத்திற் கைலாஸத்தை யடைந்தான். ஓ வாகீசமுநியே! மதுவனமென்ற க்ஷேத்திரத்தில் துருவனாலேயே ஆலயநிர்மாணமும் பட்டணநிர்மாணமும் செய்யப்பட்டுப் பூஜையின் நிமித்தம் வேதபாரகாளான பிராமணரும் ஸ்தாபிக்கப்பட்டார்கள். அதுமுதல் மதுவனத்திற்குப் பிரமரபுரமென்ற பெயர் பிரஸித்தமாயிற்று. பிரமரபுரத்தை நிர்மாணஞ்செய்த துருவனது சரித்திரத்தைக் கேட்பவனும் படிப்பவனும் புக்தி முக்திகளையடைவான்.

ஒன்பதாமத்தியாயம் முற்றிற்று.

பத்தாவதத்தியாயம்.

துருவனுடைய வம்சத்திலுதித்த அங்கவனென்ற வரசன் மநுநீதிப்படிப் பிரஜைகளைப் பிதாவைப்போல் பாலனஞ் செய்துவந்தான். மிருத்தியுவின் புத்திரியாகிய ஸ்திரீயினிடத்தி லவ்வரசனுக்கு வேனனென்ற ஓர் புதல்வனுண்டானான். குரூரஸ்பாவமுள்ள அப்புதல்வனை நன்மார்க்கத்தில் கொண்டுவர அரசனெவ்வளவு பிரயாஸைப்பட்டும் பிரயோஜனமற்றுப் போனதால் ராஜ்யத்தைவிட்டு அரசன் துக்கத்துடன் காட்டு

க்குச் சென்றான். பிறகு ராஜ்யத்திற்கு அரசனில்லாமல் பிரஜைகள் திருடர்களாற் பீடிக்கப்பட்டுப் பிராமணர்களைச் சரணமடைந்தார்கள். அப்பொழுது பிராமணர்களும் அங்கபுத்திரனாகிய வவ்வேனனையே வரசனாகப் பட்டாபிஷேகஞ் செய்தார்கள். அவ்வேனனும் திருடர்களை யுத்தத்திற்கொன்று உலகம் நடுங்கும்படியாய் நயமின்றிக் கொடுங்கோலால் அரசுபுரிந்து வந்தான் அதனால் வர்ணாசிரமதர்ம நிராதாளானப் பிரஜைகள் மிகுந்த கஷ்டப்பட்டு மிகுந்த துக்கத்தையடைந்து மஹரிஷிகளைச் சரணமடைந்தார்கள். மஹரிஷிக ளவ்வரசனிடம்வந்து கொடுங்கோலை நிறுத்தி மநுதர்மப்படி யரசுபுரியும்படி போதிக்க வதற்கவ்வேனன் ஓ முநிகளே! யுங்களுக்கு விருத்தியையுண்டாக்கி யோகக்ஷேமங்களை நடாத்திவரும நானுங்களுக்குப் பூஜ்யனாகையால் நீங்களும் நம்மையே பூஜிக்கவேண்டுமென்று சொல்ல வதற்கு முநிகள் கோபித்துப் பிர்மதேஜஸாலவனை வதஞ்செய்துவிட்டார்கள். பிறகு அரசன் வேண்டும் நிமித்தம் முதலில் வேனனுடைய இடதுதுடையைக்கடைந்தார்கள். அதிலிருந்து குள்ளமான சரீரமும், கறுப்பு வர்ணமும், மீசை தாடியுடனும், குரூரஸ்வபாவமுடைய ஒருவனுண்டானானவுடன் பிராமணர்களவனை யுட்காரும்படி நிஷீதவென்று சொன்னபடியால் அவன் நிஷாதனானான். காட்டிலுள்ள நிஷாதர்களென்ற வேடர்களுக்கதிபதியா யிருக்கும்படி பட்டங்கட்டியவனைக் காட்டிற்கு அனுப்பிவிட்டார்கள். மறுபடியும் முநிவர்கள் அவ்வேனனுடைய வலதுபாகத்தைக் கடைய வதிலிருந்து நல்ல ஸ்வரூபத்துடன் ஸ்திரீபுருஷர்கள் தம்பதிகளாய் ஜனித்தார்கள். விஷ்ணுவின் கலாம்சத்துடன் கூடிய வவர்கள் பிராமணர்களை நமஸ்கரிக்கப் பிராமணர்க ளவர்களை யவ்விராச்சியத்திற் பட்டாபிஷேகஞ்செய்தார்கள். அவ்வரசன் பிருதுவென்ற பெயருடன் உலகத்திற் பிரசித்தியடைந்து மநுநீதிப்படி ராஜ்யபரிபாலனஞ் செய்துவந்தான். க்ஷத்திரிய தர்மப்படி வர்ணாசிரமதர்மங்கள் செழிக்கும்படி பாலனஞ்செய்து வந்தபடியால் ஜனங்கள் மிகசுகத்துடன் ஆநந்தித்திருந்தார்கள். இவ்விதம் சொற்பகாலஞ் சென்றபிறகு ஜனங்களன்ன

மின்றி பசியால் பீடிக்கப்பட் டரசனிடஞ்சென்று உன் பிதாவாகிய வேனனுற் செய்யப்பட்ட துஷ்கிருத்யத்தாற் பூமாதேவி ஒஷதிகளைத்தன்னிடம் மறைத்துக்கொண்டாள். நீ ஸன்மார்க்கஸ்தனுயிருந்தும் மறுமடியு மவைகளைக்கொடுக்கச்சக்தியற்றவளாயிருக்கின்றுள். அதனுல் நாங்களாகாரமின்றி மிகுந்த துக்கத்தை யடைகின்ரேமென்று சொன்னுர்கள். ஜனங்களுடைய வார்த்தையைக் கேட்ட வரசன் மிகுந்த துயரடைந்து நாரதருடைய வார்த்தையின்பேரில் மதுவனமென்ற க்ஷேத்திரம்வந்து மோதாமோத கெணபதியையும் பிரகதம்பாளையும் பிரமரபுரீசுவரரையும் முறைப்படி பூஜித்துத் தவத்திலிருந்தான். அவ்வரசனுடைய தவத்தாற்பிரமரபுரீசர் மகிழ்ந்தவனுக்குத் தெரிசனமளித் தவனைப்பார்த் தரசனே! உன் தகப்பனுடைய பாபச்செய்கையாற் பூமி ஒஷதிகளைத் தன் கெர்ப்பத்தி லடக்கிக்கொண்டாள். அவளிப்பொழு தவைகளைக் கொடுக்கச் சக்தியற்றவளாயிருப்பதால் நீ பூமியை மேடுபள்ளமின்றிச் சமமாகச்செய்து பூமியைப் பசுவாக்கிச் சுபாவமென்பதைக் கன்றுகச்செய்து ஸகலருக்குமாஹாரமான ஒஷதிகளைப் பால்ரூபமாய் நமதனுக்கிரகத்தினுற் கறந்துகொள்ளென்றதற்குவேண்டிய சக்தி பலம் வீரியம் அஸ்திர சஸ்திர முதலியவைகளைக்கொடுத்துப் பிரமரபுரீச லிங்கத்திற் பரமன் மறைந்தருளினர். பரமசிவத்தின் பாதாரவிந்தத்தில் நிரந்தர பக்தியையுடைய வவ்வரசன் வில்லின் கோடியாற் பூமியை மேடு பள்ளமின்றி ஸமதியாய்ச்செய்து புர கிராமாதிகளை யேற்படுத்தினுன். அதுமுதற்றுன் பூமியில் புர கிராமாதிகள் யேற்பட்டது. பூமியைத் தனக்குப் புத்திரியாக வவ்வரச னேற்படுத்திக்கொண்டபடியால் பூமிக்குப் பிருதிவீ யென்ற பெயருண்டாயிற்று. பிருதுவென்ற வவ்வரசன் மநுவைக் கன்றுகச்செய்து ஷட்ரஸத்துடன்கூடிய அன்னமயமான பாலைத்தானே பூமியினிடமாகக் கறந்தான். பிறகு மூன்றுலோகத்திலுள்ளவர்களுந் தங்கள் தங்களுலகத்திற் குசிதமான வன்னத்தைக் கறந்தார்கள். பிரஹஸ்பதி பிர்மாவைக்கன்றுகச்செய்து வேதரூபமான ரஸத்தையும், காலாக்னி ருத்திரர் மஹாருத்திரரை

க்கன்றாகச்செய்து ஹாஜீவனத்தையும், யஜமானன் விஷ்ணு வைக் கன்றாகச்செய்து யஞ்ஞாதாரமான க்ஷீரத்தையும், துரு வன் சூரியனைக் கன்றாகச்செய்து கர்மாதாரமான ரஸத்தையும், சேஷனைக் கன்றாகச்செய்து வாசுகிஸர்ப்பங்களுடைய வன்ன த்தையும், சிவனைக் கன்றாகச்செய்து நந்திகேசுவரர் தத்துவ ஞானத்தையும் பூமியினிடமாகக் கறந்துகொண்டார்கள். இ வ்விதம் உலகிலுள்ள தேவர் முதலிய யாவரும் தங்கள் தங்க ளுக்கு வேண்டிய வன்னங்களை பிருதுவின் ஸஹாயத்தாற் பூ மியினிடமாகப் பெற்றுக்கொண்டார்கள். பிருதுசக்கிரவர்த் தியானவர் பூமியைப்பூஜித்துப் புத்திரியைப்போல் பாலனஞ் செய்துவந்தார். இவ்விதம் பிருதுராஜ னன்னத்தினல் ஸகல ரையுஞ் சந்தோஷப்படுத்தி யனேக யாகங்களையும் செய்து நூறு அசுவமேத யாகங்களால் தேவர்களையும் மிகுந்த தக்ஷி ணைகளால் பிராமணர்களையும் சந்தோஷப்படுத்தினன். அவ் வரசனுடைய யாகத்திற்குச் சகல தேவர்களும் முநிவர்களும் ஸ்வயமாகவே வந்தார்கள். அரசன் பிரஜைகளுக்கு நீதியை ப்போதித்துத் தானும் நீதிப்படிப் பிரஜைகளைப் பாலனஞ்செ துவந்தான். யோகசாஸ்திரத்தையறிந்த வவ்வரசன் யோகமா ர்க்கத்தினற்பரமேசுவரனைப் பூஜித்து யோகிகளுக்குங்கிட்டா த சிவஸாயுஜ்ய பதவியை யடைந்தான். பிருதுசக்கிரவர்த்தி க்கனுக்கிரஹம் புரிந்த லீலையைப்படிப்பவருங் கேட்பவரும் திவ்வியான்ன ஸுக போகங்களை யனுபவித்துத் தேஹாந்தத் திற் சிவஸாயுஜ்யத்தையடைவார்கள்.

பத்தாமத்தியாயம் முற்றிற்று

பதினேரும் அத்தியாயம்.

சூரியவம்சத்திலுதித்த ஹரிச்சந்திரனென்னும் அரச ன் தன் தேவியான சந்திரமதியுடனும் சத்தியகீர்த்தியென்ற மந்திரியுடனும் அயோத்திமா நகரிலரசாண்டுவந்தான். நாச ரகிதமான பிரம்மமே ஸத்தியமானதென்று கேட்டறிந்து ஸத்தி யபரனும் ஸத்தியத்தைப் பாலனஞ் செய்யும்பொருட்டுத் துரீ யப் பிரம்மம் பரமேசுவரனேயென்று வஸிஷ்டர்முகமாயறிந்து

பிரமரேசமென்னு மித்தலத்திற்கு வந்தான். மோதாமோத ரென்னும் விநாயகரையும் பிரமராளகையென்னு மம்பிகையையும் பிரமரேசரென்னுஞ் சிவபெருமானையும் பூஜித்துத் தவத்தாற் பரமனைக் களிக்கச்செய்தான். பரமன் களிகூர்ந்தவ்வரசன் முன்னுவீர்ப்புவிக்க வரசனனந்தமடைந்து வந்தனைவழிபாடுகள்செய்து வேதாகமங்களாற் றுதிசெய்தான். பிறகு பரமனைநோக்கி யெனது குருவாகிய வஷிஷ்டமாமுனியும்மை ஸத்யரூபப் பிர்மமென் றுரைத்திருக்கின்ருர். ஆகையாலுமது தத்துவஞானத்தை யெனக் குபதேசிக்கவேண்டுமென்று பிருர்த்தித்தான். அதற்கும் பசுபதியான பரமனவ் வரசனுக்குத் தமது திருக்கண்ணேக்கலால் ஞானதீக்ஷை செய்வித்துத் தாம் தக்ஷிணமூர்த்தியாயுட்கார்ந்துகொண்டு சிவஞானத்தையுபதேசிக்கலானுர். ஓ அரிச்சந்திர மகாராசனே! ஸாவதானமாய்க் கேளும். இவ்வுலகின் சிருஷ்டிக்குமுன் ஸத்திய சித்கனமான பிர்மமொன்றே யிருந்தது உலகநிர்மாண ஸாமர்த்திய புத்திரூபிணியான தம் சக்தியை யடைந்து ஸாக்ஷியென்ற ஸம்ஞையை யடைந்தது. அப்பிர்மத்தின் ஸான்னித்திய விசேஷத்தால் ஸத்தா ஸ்பூர்த்தியையடைந்த திருகுண ஸமரஸபாவத்தையுடைய மூலப்பிரகிருதியென்ற சக்தியானது சுத்தஸத்துவ பிரதான மாயையாகவாயிற்று. மேகாகாசம்போல் மாயையிற் ருேன்றிய பிர்மபிம்பமே ஈசுவரனென்ற பதியாகவாயிற்று. மலினஸத்துவமாகவான மாயையிற் ஜலாகாசம்போற் ருேன்றிய பிர்மபிம்பமே பசுவென்னுஞ் ஜீவனுகவாயிற்று. தமோகுண பிரதானையாகவான மாயையே ஜடப்பிரகிருதியென்றும் பாசமென்றுங் கூறப்படுவள். பாசத்திற்குப் பிரதானமென்றும் பசுவுக்கு க்ஷேத்திரஞ்ஞனென்றும் பதிக்குக் குணேசரென்றும் சுவேதாசுவதரோபநிஷத் கூறும். இவ்விதமொன்ருன பிர்மமே தம் பிரகிருதியின் சேர்க்கையால் மூன்ருக விளங்குகின்ருர். இவைகளிற் குணேசரென்ற நாமே யேகனனபதி. தூலரூபமான வவித்தை யந்தக்கரணத்தின் சேர்க்கையாலனேகமாகவானபடியாற் சீவனுமனந்தமாகவானுன். ஆணவம், கன்மம், அசுத்தமாயை சுத்தமாயையென்ற வின்னுன்கும் மாயைக்கே

பெயர். பாசமனிர்தமவித்தையென்றும் பெயருண்டு. இவைகளிற் பதிக்கொருவருமறிவிக்காமற்றானே யறிகின்ற குணமுமனேகமாகிய பசுவுக்குப் பிறரறிவித்தா லறிகின்ற குணமும், பிறருக்கறிவிக்கமாட்டாதகுணமுமாம். ஆணவமலத்திற் கான்மா வேண்டுங்காரியத்தை மறைத்தல், வேண்டாத காரியத்தில் விருப்பங்கொடுத்தல், புண்யபாவமாகிய கன்மமலத்திற்கு மசுத்தசுத்தமாகிய மாயாமலத்திற் கு மான்மா வாணவத்தைப் பொருந்தினு லாணவத்திலழுத்துவித்தல், மதியைப்பொருந்தினற் பதியிலழுத்துவித்தல் முதலியவை குணமாம். இவ்வாறு பொருளும் வியாபகம் வியாப்பியம் வியாப்தியென மூவகையாயிருக்கும். இவற்றுள் வியாபகமாவது நிறைந்திருத்தல்; வியாப்தியாவது ஸமநிறையாயிருத்தல்; வியாப்பியமாவது அடங்கியிருத்தல்; அஃதெவ்வாறெனில்:— ஸமுத்திரம் வியாபகமாவதுபோல் பதி. நாம் அச்சமுத்திரத்திற் றண்ணீர் வியாப்தி அதுபோல் நம்மிடத்தி லான்மா; அத்தண்ணீரிலுப்பு வியாப்பிய மதுபோ லான்மாக்களிடத்தில் மலம் முதலியவைகள்; இப்படி யிவ்வாறுபொருளு மொன்றிலொன்று கலந்தடங்கியிருப்பதாயினும் அவையனுதி நித்தியமாயு மெங்கும் வியாபகமாயுமிருக்கின்றன. அனுற்பதிதானனுதிநித்தியம், மற்றைய பசு முதலியவைகளெவ்வாறனுதி நித்தியமாமென்னில்:— சூரியனுள்ளபோதே கண்ணும் கண்ணைமறைத்தவிருளு மனுதிநித்தியமேயாம். அவைவைகளெங்கும் வியாபகமாயிருக்கின்றன வென்பதெவ்வாறெனில்:— எண்ணிறந்த கண்களுக்கோராதித்தியனிருந்தறிவித்தற்போல வெல்லாபுவனங்களிலுமிருக்கின்ற வெண்ணிறந்த வான்மாக்களுக்கும் நாமொருவனிருந் தறிவித்தலாலும் கண்ணனது சூரியமண்டலம் முதலிய மண்டலங்களிலும் போக்குவரத்தில்லாமற் சகலகாரியங்களையுமறிவதுபோல வான்மாவானது ஸகலபுவனங்களிலும்போக்குவரத்தில்லாமற் சகல காரியங்களையுமறிதலாலும், இருளொன்றெல்லாக் கண்களையும்மறைத்தற்போலவாணவ மலமொன்றெண்ணிறந்த வான்மாக்களை மறைத்தலாலும், பலதான்னியங்க ளந்தந்தவூரிலிக்கின்றோர்களுக் கங்கங்கே புசிப்பாயிருத்தற்போல பல கன்மங்களந்தந்த புவனங்களிலிருக்கின்ற வான்மாக்களுக் கங்கங்கே பு

சிப்பாயிருத்தலாலும், குயவனுனவன் பல பாண்டங்களை யந்த ந்தவூரிலிருக்கின்றோர்களுக் கங்கங்கே படைப்பதுபோல வசுத்தாசுத்த மாயையானது பல தனுகரணாதிகளை யந்தந்த புவனங்களிலிருக்கின்ற வான்மாக்களுக்கங்கங்கே படைத்தலாலும், அவ்வாறு பொருட்களும் வியாப்பியமென்றே சொல்லப்பட்டன. இப்படி வியாபகமாயிருக்கின்ற வாறுபொருட்களு மொன்றோடொன் றெவ்வாறு ஸம்மந்தப்பட்டனவெனில்:— அனுதியிலான்மாக்க ளாணவமலத்திற் கிடந்தார்கள். அவ்வாணவமலமான்மாக்களுக்குக் கன்மத்திலே விருப்பைக்கொடுத்தது. இந்தச்செய்தியை நாமறிந்திரக்கத்தினலே வான்மாக்களது விருப்பத்திற்கேற்ற மாயாகருவிகளைக்கொடுத்து அவைகளிடமாகக் கன்மங்களைப் புசிப்பிப்போம். அநாதியிற் சகலலோகங்களுமுண்டாகின்ற முறைமையிவ்வாறாம். அநாதியிலான்மாக்களாணவமலத்திற் கிடந்தாகளென்றுலவர்களிடத்தி லாணவமலத்தை நாம கூட்டிவைத்ததோவது தானேவந்து பொருந்திற்றோவெனில்:— நாம் நிர்மலனுகிய ஸர்வானுக்கிரகனுனதாலே நாம் கூட்டிவைத்ததன்று. ஆணவமலஞ் சடமாதலாற் றனே வந்து பொருந்தமாட்டாது. ஆனுலான்மாக்களே வாணவமலத்தைப் பிடித்தனரென்றறிக. ஆனுலாணவமல மான்மாக்களுக் கியற்கையோ செயற்கையோவெனில், இயற்கையானுற் பாலுக்கு வெண்மையுங் கரிக்குக் கருமையுமொருக்காலும விட்டு நீங்காததுபோல வான்மாக்களுக் காணவமல மொருக்காலும் விட்டு நீங்காது. சையற்கையானுல் வெள்ளைவஸ்திரத்திலழுக்கேறுவதுபோல முக்தியிலும்வந்து பொருந்தும். ஆதலாவிரண்டுமன்று. நெல்லுக்குமியுஞ் செம்புக்குக்களிம்பும் கடல்நீருக்குப்பும்போல வான்மாக்களுக்காணவமல மனுதி ஸம்யோகமென்று சொல்லப்படும். ஆன்மாக்களுக்குக் கன்மத்திலுண்டாகிய விருப்பம் நாங்குடுத்த விருப்பமோ? வான்மாக்களுக்குண்டாகிய விருப்பமோவெனில்:— நாம்கொடுத்தவிருப்பமானு லேன் பாவத்தைச்செய்தீர்களென்று நரகத்திலிட்டுத் தண்டிக்கவேண்டியதில்லை. ஆன்மாக்களுக்குண்டான விருப்பமானுல் புண்ணியங்களிருக்கப் பாவங்களைச் செய்யமாட்டார்கள்.

ஆதலாலாணவமலமே வான்மாக்களுக்குக்கர்மத்தில் விருப்பை க்கொடுத்தது. விருப்பத்தைக்கொடுத்த வாணவமலமு மான் மாக்களுக்குக் கன்மத்தை யறிந்தெடுத்துக் கொடுக்கமாட்டா து. விரும்பியவான்மாக்களுங் கன்மத்தை யறிந்தெடுத்துக் கொண்டு புசிக்கமாட்டார்கள். இந்தச்செய்தியை நாமறிந்தி ரக்கத்தினாலே வவ்வான்மாக்கள் கன்மத்துக்கேற்ற தேகத்தை க்கொடுத்ததனிடமாகக் கன்மத்தைககூட்டிப் புசிப்பிப்போம். அஃதெவ்வாறெனில்; குழைந்தைக்குப் பாலின்கண் ணுண்டான விருப்பம் மாதா கொடுத்த விருப்பமோ குழந்தைக்குண்டான விருப்பமோவெனில், தாய் கொடுத்த விருப்பமானாலவள் கொ டுக்கும்போதெல்லாம் பாலையருந்தல் வேண்டும், குழந்தைக் குண்டாகிய விருப்பமானால் மாந்தங்கொண்ட வேளையிலு மரு ந்தல்வேண்டும். இவ்விரண்டுமின்மையால் பசியே குழந்தைக்கு ப்பாலின்கண் விருப்பத்தைக்கொடுத்தது. விருப்பத்தைக்கொ டுத்தபசியும் பாலையறிந்தெடுத்துக் கொடுக்கமாட்டாது. விரும் பிய குழந்தையும் பாலையறிந்தெடுத்துக் குடிக்கமாட்டாது. வி ரும்பப்பட்டபாலுங் குழந்தை வாயில்வந்து புகமாட்டாது. இ ந்தச்செய்தியைத் தாயானவளறிந்து இரக்கத்தினாலேபாலையெ டுத்துப் பாலடையில்விட்டுக் குழந்தைவாயிலே விட்டுப்புகட்டு வள். இதிற் குழந்தையைப்போலு மான்மா; பசியைப்போலு மாணவமலம் பாலைப்போலுங்கன்மமலம்; தாயைப்போலும் நா ம்; பாலடையைப்போலுந் தனுவெனவறிக. ஆணவமலஞ் சட மாயிருத்தலாலதற்குச் செய்கையுண்டோவெனில்:—விஷம், பா ஷாணம், தீ, நீர், காற்று முதலிய ஜடங்கட்குச்செய்கையுண்டா னாற்போலவதற்குஞ் செய்கையுண்டு. அதனால் நாமாத்துமாக் களுக்குத்தனுக்களைப் படைக்குமிடத்து நமது நினைவின்படி ப டைப்போமோ? வான்மாக்களின்நினைவின்படி படைப்போமோ வெனில்; ஒரே வடிவன்றிப் பலவடிவங்களாய்ப் படைத்தலால் ஆன்மாக்களின் நினைவின்படியே படைப்போம். அஃதெவ்வா றெனில்; குலாலன் பாண்டங்களைப் படைக்குமிடத்துத்தனது நினைவின்படி செய்வானோ, பிறர் நினைவின்படி செய்வானோவெ னில்; தனது நினைவின்படி செய்வானாயின் ஒரேவடிவாக செய்

தல்வேண்டும், அவ்வாறின்றிப்பலவடிவங்களாய் செய்தலாலே பிறர்சினைவின்படியே செய்தல் வேண்டும். இவற்றுட் குலாலனைப்போலும் நாம். மண்ணைப்போலும் மாயை, பாண்டத்தைப் போலுந் தனு, பிறரைப்போலு மான்மாக்களெனவறிக.

பதினோராம் அத்தியாயம் முற்றும்.

பனிரேண்டாம் அத்தியாயம்.

ஆன்மாக்களெங்கும் வியாபகராயிருக்க, எவ்வாறு சரீரத்தைப்பற்றுவாரெனில்:— படிகமலையான தெந்தப்பக்கத்தில் வர்ணத்தைக்கொடுத்தாலும் பற்றிக்கொள்வதுபோல வெல்லாப்புவனங்களிலும் வியாபகராயிருக்கின்ற வான்மாக்கள் நாமெந்தப் புவனத்திற் சரீரத்தைக்கொடுத்தாலும் பற்றிக்கொள்வர். அஃதெவ்வாறெனில்:— படிகமலையொன்று, படிகமலைக்கொளியொன்று, படிகவொளிக்குப் பற்றும் குணமொன்று, வர்ணமொன்று, வர்ணத்தைப்பற்றுவிக்கிறவனென்று ஆகவாறுவகைப்படும். இவ்வாறுட் படிகமலையைப் போலுமான்மா, படிகமலைக்கொளிபோலு மான்மபோதம், படிகவொளிக்குப்பற்றுங் குணம்போல வான்மபோதத்திற் கறியுங்குணம், படிகவொளிக்குப் பற்றுத்தொழிலைப்போலு மான்மபோதத்திற்கறியுந்தொழில், வர்ணத்தைப்போலும் மாயாகருவி, வர்ணத்தைப்பற்றுவிக்கின்றவன்போலும் நாமென வறிக. ஆன்மாக்களுக்கறியுங்குணமிருத்தலினாலே யவர்களை யெவ்வாறு மலம் மறைக்குமெனில்; சந்திர சூரியர்களை இராகு கேதுக்கள் மறைத்தல்போலும், நெருப்பை நீர் மறைப்பதுபோலுமான்மாக்களை யாணவவிருள் மறைக்கும்; இம் மறைப்பவர்களின் கன்மத்தால் வந்தது. ஆன்மாக்களவயமின்றி சிரவயவராயிருக்க வக்கன்மமெவ்வாறு வந்ததெனில், நாம் சிரவயவரென்பதை மறந்த வயவரெனுங் கருத்தாலக்கன்மம் வந்தது. அக்கன்மத்தால் மாயையுண்டாயிற்று. அம்மாயையாற் றனுகரணபுவனபோகாதிகளுண்டாயின. நாமக்கன்மங்களை யான்மாக்களுக்குப் புசிப்புக்குமிடத்தெவ்வண்ணமாயிருந்துப் புசிப்பிப்போமெனில்; இச்சாஞான கிரியாரூபனுயிருந்துப் புசிப்பிப்போம்

அஃதெவ்வாறெனில்; ஆன்மாக்களை முக்தியிற் சேர்க்கவேண்டுமென்பதேயிச்சை. ஆன்மாக்களிச்சித்தக் கன்மங்களையறிவதே ஞானம். ஆன்மாக்களுக்குக் கன்மங்களையூட்டி யுறக்கித் தொலைப்பதேக்கிரியை யென்றறிக. ஆனாலான்மாக்கட் கர்மங்களைப் புசிக்குமிடத் தெவ்வாறிருந்து புசிப்பரெனில்; இச்சாஞான கிரியாசொரூபராயிருந்தே புசிப்பர். அஃதெவ்வாறெனில்; பண்டபதார்த்தங்களிற்சென்று பற்றுதலே இச்சை, அவைகளைப் பகுத்தாராய்தலேஞானம், ஸர்வத்தையுந்தனதென்றழுந்துதலே கிரியையெனவறிக. ஸ்தூலகன்மம், ஸூக்ஷுமகன்மம், அதிஸூக்ஷுமகன்மமென வாத்துமாக்களுடைய கன்மம் மூவகையாயிருக்கும். இவற்றுள் வினைகட்கெல்லாந்தூலகன்மமென்றும், அவ்வினைக்குப்பின்பலனாக வரும் புண்யபாவங்களுக்கு சூக்ஷும கன்மமென்றும், இப்புண்யபாவங்களுக்குப் பின்பலனாகவருகின்ற வின்பதுன்பங்களுக்கு அதிஸூக்ஷும கன்மமென்றும்பெயர். இம்மூன்று மாகாம்யம், ஸஞ்சிதம் பிராரப்தமென மூவகையாயிருக்கும். அஃதெவ்வாறெனில்; இருவினைகளாகாம்யமாகவும், இருவினைப்பயனாகிய புண்யபாவங்கட்குப் பலனாகவருகின்ற வின்பதுன்பங்கள் பிராரத்துவமாகவுமிருக்கின்றன. இவற்றுட் பயிரிடுவதுபோலுமிருவினைகள். அப்பயிராலுண்டான பலனைக்களஞ்சியத்திற்கட்டி வைப்பதுபோலும் புண்ணியபாவங்கள். அக்கட்டிவைத்ததிற் சிறுகச்சிறுக வெடுத்துண்பதுபோலு மின்பதுன்பங்களை யான்மாக்களனுவித்தலெனவறிக. இக்கன்மங்களான்மாக்கள் நினைத்தவண்ணம் பலன்பட்டுவருவ துண்டோவெனில், ஒருவன் முன்னேபனையுண்டாக்கி, பின்னர்கத்திரிநட்டுப் பிறகு கீரைப்பயிரிட்டாலிவற்றுள் கீரைப் பதினைந்து நாளுக்குட் புசிப்பாகும். கத்திரி இரண்டு மாதத்திற்குள்ளே பலனாகிவரும். பனைப் பதினைந்து வருஷத்திற்குப்பின் பக்குவப்பட்டு வரும். இதுபோலான்மாக்கள் முன்பார்ஜித கன்மம் முன்பலன்பட்டுவராமல் வெகுஜனனத்திற்குப்பின் பலன்பட்டுவருதலும் பின்பார்ஜித கன்மமுடனே பலன்பட்டுவருதலுமாம். கன்மமான்மாக்களுக்குப் புசிப்பாகிவருங் காலத்தெவ்வாறு வரு

மெனில்; ஆதிதெய்வீக மாதிபவுதிக மாத்தியாத்துமிகமென மூவித தாபத்திரயங்களால் வரும். இவற்றுட்டெய்வத்தால் வருகின்றவின்பதுன்பங்கட்கு ஆதிதெய்விகமென்று மான்மாக்களால் வருகின்ற வின்பதுன்பங்கட்கு ஆத்யாத்மிகமென்றும், பூதத்தால் வருகின்ற வின்பதுன்பங்கட்குப் பவுதீகமென்றும் பெயர். ஆனல், மேல்கூறிய கன்மங்களெவ்வாறொழியுமெனில்; ஒருவன் பயிரிட்டவாயிரக்கலநெல்லைக் கண்டபின்பு, களஞ்சியத்திலே ஐனூறுகலநெல்லைக்கட்டி முன்னூறுகலநெல்லை யுணவுக்காகவைத்து, இருநூறுகலநெல்லை வயலில்விதைத்திருக்க, இவற்றுட்களஞ்சியத்திற் கட்டய நெற் றீப்பட்டு வெந்தது. உண்ணவைத்த நெல்லுண்டு சிலவழிந்தது. விதைத்தநெல் மழையின்றிக்காய்ந்தது. இதுபோல வான்மாக்களுக்குபக்குவம் வந்தகாலத்திலே ஸஞ்சித கன்மமானது ஞானசாரியனுடைய திருவருண்ணோக்கால் வெந்துபோய்விடும். பிராரத்தக்கன்மமானதெடுத்த தேகத்திற்குப் புசித்துத்தொலையும். ஆகாம்யமானது நமது நிர்மல ஞானத்தால் மேலைக்கு வராமல் நீங்கிப்போய்விடும். பத்தான்மாக்களிடத்திற் பாலுக்குள் நெய்போலவும், முக்தான்மாக்களிடத்திற் றயிருள் வெண்ணெபோலவும் நாமிருப்போம். ஒருமரத்திலடிதொட்டு நுனிவரையி லந்தரசமு மக்கினியுங் கூடியிருப்பதுபோல நாமுமான்மாக்களைக் கூடியிருப்போம். ஆன்மாக்கள் நரகத்திற் றுன்பமனுபவிக்கும்போது ஜீவர்களைவிட்டு நீங்காத நமக்குமத்துன்பமுண்டோவெனில்; ஆதித்திய னொளிபடிகவொளியிற்கலந்து நின்று வர்ணங்களைப்பற்றுவித்துந்தான் பற்றாதவாறுபோல்வு மொருவனனுபவிக்கின்ற துன்பமவன் வயிற்றிலிருக்குங்கிருமிகட்கில்லாததுபோலவும் நமக்கொருநாளுமில்லை. கேவலம், சகளம் சுத்தமென மூன்றவஸ்தை யான்மாக்கட்குண்டு. இம்மூன்றுங் காரணகாரியமென விருவகைப்படும். இவற்றுட் காரணகேவலமாவது அனுதியிலான்மாக்களறிவு கெடாமலாணவமலத்தி லழுந்திக்கிடத்தல். அஃதெவ்வாறெனில்; கண்ணிராக்காலத்திருளிலே யொளிகெடாமல் விழித்திருத்தற்போலும், காரியகேவலமாவது நெற்றி, கண்டம், ஹிருதயம், நாபி, மூலமென்னு மைந்திடத்தினும் ஜாக்கிரம் ஸொ

ப்பனம், சுஷுப்தி, துரீயம், துரீயாதீதம், என்னுங்கீழவஸ்தை ஐந்தையுமடைதல். காரணஸகளமாவது அநாதிகேவலத்திலே யழுந்திக்கிடந்த வான்மாக்கள் மாயாகருவியினாலே அக்கேவலம் நீங்கி ஸுகதுக்கங்களையறிதல். அஃதெவ்வாறெனின்; இராக்காலத்திருளிலே யழுந்திக்கிடந்த கண்ணானது விளக்கினாலே இருள்நீங்கிப் பதார்த்தங்களைக் காணுதல் போலும். காரியஸகளமாவது லலாடஸ்தானத்திற்றொனே துரீயாதீதம் முதல் ஜாக்கிரமீறாயுள்ள மத்தியாவஸ்தை ஐந்தையுமடைதல். காரணசுத்தமாவது, அநாதிகேவலத்திலும் ஸகளத்திலு மழுந்திக்கிடந்த வான்மாக்களருள் தெரிசனத்தினால் அவைகளைவிட்டு நீங்கிப்பிர்மானந்தத்தை யனுபவித்தல். அஃதெவ்வாறெனில்; இராக்காலத்திருளோடும் விளக்கோடுங் கூடியிருந்த கண்ணானது கதிருதயஞ்செய்த விடத்தவைகளை விட்டு நீங்கி யவ்வாதித்தியனைக் கண்டுகொண்டிருத்தற்போலும். காரியசுத்தமாவது, நிர்மலஜாக்கிரம்முதல் நிர்மல துரீயாதீதமீறாயுள்ள மேலான அவஸ்தை ஐந்தையுமடைதலெனவறிக. நாம் செய்கின்ற பஞ்சகிருத்தியங்க ளிவ்வான்மாக்களுக்கோ சரீரங்களுக்கோவெனில்; ஆன்மாக்கள் நித்தியராதலாற் சிருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்கூடாது. சரீரம் ஜடமதலாற் றிரோபவமனுக்கிரகங்கூடாது. இனி யச்சரீரங்கள் முத்தொழிற் படுமிடத்து அதிலான்மாக்களழுந்துவதினாலும், ஆன்மாக்களுடைய விரண்டு தொழிற்சரீரங்கட்கில்லாமையாலும் பஞ்சகிருத்தியங் களுமான்மாக்கட்கேயாம். இவ்வான்மாக்கட்கு மாயாகருவிகளைப் படைத்து அறிவையுண்டாக்குவதே சிருஷ்டி. அவர்கட்கு மாயாகருவிகளை நிறுத்தி யறிவை நிலைபெறச் செய்வதேஸ்திதி. அவர்கட்கு மாயாகருவிகளை யொடுக்கியறிவைப்போக்குவதே ஸம்ஹாரம். அவர்களுக்கறியுந்தொழில் நீங்குமிடத்துள்ள வறியாமையே திரோபவம். அவர்களின்பதுன்பங்களைப் புசித்துப் புண்யபாவங்களைக் கழித்தலே வனுக்கிரகமெனவறிக. ஆன்மாக்கள் மாயாகருவிகளைப்பற்றி யறிந்திருத்தலேபிறப்பு. அம்மாயாகருவிகளை நீங்கி யறியாதிருத்தலே யிறப்பு. ஆயாஸமுற்றிருத்தலே நரகம். அனாயாஸமுற்றிருத்தலே மோக்ஷமெனவறிக. ஓ அரிச்சந்திரமகாராஜனே!

உன்னைப்போலொத்த பக்குவனானவனுக்கு நாமே ஞானசாரியனாகவெழுந்தருளி ஞானோபதேசஞ்செய்து முக்தியிற்சேர்ப்போம். நீ நமது திவ்யஞானானுபவத்தால், துவைத பாவனையற்று சுபமாயிருக்கக்கடவாயென்று திருவாய்மலர்ந்து தமதுதிருவுருவைக்கரந்தருளினார். இப்பாலரிச்சந்திரனுந்திவ்ய ஞானத்தைப் பெற்றுப் பரமசிவத்தின் பிரீதியின்பொருட்டு ருத்திர பாசுபதமென்றவோர் யாகத்தைச் செய்யக்கருதி பரமசிவத்தைநினைக்கப் பரமசிவனவன் கருத்தையுணர்ந்து தமதுஜடாகலாபத்திலிருந்து கங்கையைப் பூமியில்விட, வக்கங்கையுமரிச்சந்திரநதியென்னும் பெயருடன் பிரவஹித்தது. அந்நதீ தீரத்தில் வேதியர்களுடன் பிர்ம்மணஸ்பதியாகம் ருத்திர பாசுபதம் முதலியவைகளைச் செய்து கணபதி சிவஞ்சக்திமுதலிய தேவர்களையும் பிராம்மணர்களையும் ஸந்தோஷப்படுத்தினான். யாகத்தினாற் றிருப்தி யடைந்தபரமன் கருணையுடனரிச் சந்திரனைப் பார்த்துக்குழந்தா யரிச்சந்திரனே! நமதாக்கினையால் மூன்று லோகங்களிலும் ஸத்தியவானென்கிற கியாதியை யடைந்தரசர்களை ஜயித்து ராஜஸூயமென்ற வேள்வியைப்புரிந்து தினகல்பம் முழுவது மிந்திரனுடனர்த்தாஸனத்தில் வீற்றிருந்து ஸுரேசனுக்குச் சமதியான போகங்களை யனுபவித்துப் பிறகு நமது பதவியை யடைவாய். நமது ஜடாபாரத்திலுள்ள கங்கை யுமாதேவியினிடமிருந்துண்டான மூலப்பிரகிருதியாகிய நமதுசக்தியே. உன்னிமித்தம் நம்மாற் பூமியில் விடப்பட்டுன்பெயருடன் விளங்கும் நதியில்ஸ்நானம் முதலியவைகளைச் செய்பவர்கள் கங்கையிற்செய்வதைக் காட்டிலும் நூறுமடங்கதிக மடைவார்களென்று வரமளித்துமறைந்தார். அரிச்சந்திரராஜனுந் தன்னரசாக்ஷிக்குசென்று மனுநீதிப்படியரசு புரிந்துவந்தான். சத்தியத்திற் கரிச்சந்திரனென்றுலகத்தோர் சொல்லிக்கொள்ளும்படியான கியாதியையடைந்து தினகல்பம் முழுவது மிந்திரனுடனிருந்து சுவர்க்கபோகமனுபவித்துக் கல்பமுடிவில் முக்தியையடைந்தான். அரிச்சந்திரனுக்கு ஞானோபதேசஞ்செய்த தக்ஷிணாமூர்த்தியுருவத்துடனுமவனுக்காகவே கங்கையைப்பூமிதனில் விடுத்தகங்காதரமூர்

த்தியுடனும் பிரமமேசர் விளங்கி வருகின்றார். மாகமாதம் கிருஷ்ணபக்ஷம் பிரதமைதிதியும் பூரகக்ஷத்திரமுங் கூடியதினத்திற்கங்கையை யரிச்சந்திரன்நிமித்தம் பரமன் பூமியில்விட்டபடியா லத்தினத்திலும் மற்ற தினங்களிலும் ஹரிச்சந்திர நதியில் ஸ்நாநம் செய்கின்றவர்களுடைய பலனைச்சொல்ல, ஓ வாகீசமுநியே! நான் சக்தனல்ல. அதின் பலனைப்பரமனொருவரே யறியார். அரிச்சந்திரனுக்குப் பரமனனுக்கிரகம்புரிந்த விந்த லீலையைப்படிப்பவர்களுங்கேட்பவர்களு மவ்வரிச்சந்திரனுக்கு ஸமமாகச்சுகத்தை யனுபவித்து மோக்ஷத்தையுமடைவார்கள்.

பனிரண்டாமத்தியாயம் முற்றிற்று.

பதின்மூன்றாவது அத்தியாயம்.

அரிச்சந்திரன் வம்சத்திலுதித்த முசுகுந்தனென்னுமரசன் சுவர்க்கத்திலிந்திரனாற் பூஜிக்கப்பட்டத் தியாகராஜமூர்த்தியைப் பரமனருளாலடைந்து கமலாலயமென்னும் க்ஷேத்திரத்திற் பிரதிஷ்டைசெய்து, தமது குமாரரிலொருவனை யங்கிருந்தரசாக்ஷிசெய்துவரும்படி யேற்படுத்தித்தான் சிவபதவியையடைந்தான். அம்முசுகுந்த சக்கிரவர்த்தியின் வம்சத்திலுதித்தத் தியாகசோழனென்ற வரசன் றியாகேச பக்திமானும்ப் புத்திஸாகரனென்ற மந்திரியுட னக்கமலாலயத்தைப்பரிபாலனஞ்செய்துவந்தான். மகனில்லாதவரச மந்திரிகள் பரமனையும் பராசக்தியையும் பிராம்மண ஸந்தர்ப்பணையாலும் ஸேவனாதிசளாலும் பஜித்துவந்தார்கள். சிவசக்திகளின் கிருபையாலரசன் மனைவியாகிய ஹல்லவதியும் மந்திரியின்றேவியான வுத்பலாட்சியும் கர்ப்பவதிகளானார்கள். ஓர் தினமரசனும் மந்திரியும் ஸபைதனில் வீற்றிருக்கையில் மந்திரியரசனைநோக்கி யரசனே தெய்வானுகூலத்தாலுமக்குப் புதல்வனு மெனக்குப்புத்திரியுமுண்டானாலுமது மைந்தனுக்கென் குமாரியைக்கொடுக்கவேண்டுமென்று மெனக்குப்புதல்வனு முமக்குப்புதல்வியு முண்டானலெமது குமாரனுக்குமது குமாரியை விவாஹஞ்செய்துகொள்ளவேண்டுமென்று மவாவுள்ளவனயிருக்கின்றேன். இதைத்தாங்களங்கீகரித்துப் பூர்த்திசெய்யவேண்டுமென்று வே

ண்ட வரசனம்மாதிரியே யாகட்டுமென் றங்கீகரித்து வாக்களித்தனன். தெய்வயோகத்தாலரசன் மனைவி மீனுருவையுடைய புத்திரனையும் மந்திரியின் மனைவிகோடிலக்குமிக்குச் சமதியான ஓர் புதல்வியையு மீன்ருர்கள். அரசன் றந்தேவியுடன் மிகுந்த துக்கமடைந்து புத்திரனுகிய மீனைக்கிரமப்படி பாதுகாத்துவந்தான். மந்திரியானந்தமடைந்து தன்மகளுக்குக் கமலையென்றே பெயரிட்டு நாளொருமேனியும் பொழுதொருவண்ணமாக வளர்த்துவந்தான். பிறகு காலக்கிரமத்தில் மந்திரிக்கிரண்டு புத்திரிகளு மோர் புத்திரனுமுண்டானுர்கள். அரசன்றன்னந்தப் புரத்திற் கிணறேற்படுத்தியதிலும் நிலத்திலும் மீன்புதல்வன் வசிக்கும்படி வளர்த்துவந்தான் இப்படிப் பதினன்கு வருஷஞ்சென்ற பிறகோர் நாளரசன்றன் தேவியுடனும் மீனராஜ குமாரனுடனு மந்தப்புறத்தில் வீற்றிருக்கையில் மந்திரிசென்று வந்தனைபுரிந்தரசனைப் பார்த்துச் சொல்லுகின்ருன். எமதரசனே! நம்மிருவருக்கும் நடந்தவார்த்தையின்படி யுமக்குப்புத்திரனு மெனக்குப் புத்திரியும் ஜனித்திருந்தாலுமுமது புத்திரன் மனிதரூபமில்லாமல் மீன்ரூபமாயிருப்பதாலென் குமாரியைப் பாண்டியராஜன் குமாரனுக்கும், மற்றவிளையகுமாரிகளைச் சேரகேரளவிராஜகுமாரர்களுக்கும் கொடுப்பதாய் நிச்சயித்து முகூர்த்தமுமேற்படுத்தியிருக்கின்றேன். அவ்விதம் நடத்தும்படி யனுமதிகொடுக்க வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்துகொண்டான். இதைக்கேட்டிருந்த மீனராஜ குமாரன் மந்திரியைநோக்கி ஓ மந்திரியே! நானுமரசன் வீர்யத்திற்குராஜஸ்திரீ யினிடத்திலாணுருவாய்ஜனித்தவன்ருனே, பெண்ணல்லவே, இப்படிக்கிருக்க வுங்களுககேற்பட்ட வாக்கைத் தவிர்த்து வேறுவிதமாய் நீர் முடிவுசெய்வதற்குக் காரணமென்னவென்று கேட்டான். மந்திரி நீ மனுஷ்ய ரூபத்தையடையாமல் மீனுருவாய் ஜனித்ததனுலே தானென்ருன். மீனராஜன் ஓ மந்திரியே! நீங்கள் முந்திப்பேசிக்கொள்ளும் போதாண்பெண்ணென்ற வார்த்தை தவிர வேறுவித பேச்சில்லையே யென்ருன். மந்திரி திகைக்க மீனராஜன் ஓ மந்திரியே! ஸத்தியந்தவருமலுமது மூத்தகுமாரியை யெனக்கு விவாகஞ்செய்துகொடுத்து ஸத்தியவானுக வாகுமென்றுரைத்தான். ம

ந்திரியும் விஜாதி ஸம்பந்தமான விந்த விஷயத்திலென் குமாரி யைக்கேட்டுப் பதிற்றெரிவிக்கிறேனென் றரண்மனை சென்று தன்மனையாளுடனிருக்குந் தன் மூத்தகுமாரியினிட மரசனுக் குந்தனக்கும் நடந்த வார்த்தையையும் மீனராஜன் சொன்ன வார்த்தையையுஞ் சொன்னான். இதைக்கேட்ட மந்திரியின் புதல்வியாலோசனைசெய்து பிதாவைப்பார்த்து மீனராஜனாவது வேறரச குமாரராவது தெய்வலோகத்திலுள்ள சிந்தாமணி ர த்தினத்தை யெனக்குக்கொண்டுவந்து கொடுப்பாராகிலவருக் கு நான் மாலையிடுவே னிதுதானெனது தீர்மானமென்றுசொ ன்னாள். புத்திரியின் கருத்தையறிந்த மந்திரி யரசனரண்ம னைசென்று புத்திரியின் நிச்சியவார்த்தையையுஞ்சொல்லி யிவ் விஷயத்திற்காகத் தானொரு வருஷம் விவாககாலத்தை நிறுத் திவைப்பதாயுஞ் சொல்லித்தன்னரண்மனை சென்றான். மீன ராஜனும் பெற்றோர்களிடத்தில் விடைபெற்று தவத்தின்பொ ருட்டுப் பூர்வபுண்யத்தாற் பிரமரேசமடைந்தான். அங்கு சி வபுத்திரராகிய மீனநாதரென்னும் சிவயோகியைக்கண்டு வந்த னைவழிபாடுகட்செய்து தன் விருத்தாந்தத்தைச் சொல்லி யரு ள்புரியவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டான். அவனை மீனநாதர் கருணையுடன்பார்த்துப் பஞ்சாக்ஷரத்தை யுபதேசித் துத்தமது நோக்கப்படிச்சென்றார். மீனராஜ னம்மந்திரத்தை ஜபித்துப் பரமனைக்களிக்கச் செய்தான். பரமன் கிருபையுற் று மீனராஜனுக்குத்தரிசனமளிக்க மீனராஜன்வந்தனஞ்செய்து துதிக்கின்றான். தயாநிதியாகிய மகாதேவா! யோகிகளுக்குங் கிடைக்கவொண்ணாத வுமது தரிசனம் மீனாகியவெனக்குக் கி டைக்கப்பெற்றேன். திரியக் ஜன்மாவைக்காட்டிலும் வேறு நரகமில்லை. இந்த நரகத்திலிருந்தென்னைக் காப்பாற்றவேண் டும். இவ்விதமவன் பிரார்த்தனையாற் கருணையுற்ற சிவபெரு மான் கோடிமன்மதாகிருதியான மானிட வடிவத்தையும் கு ணம், குலம், ரூபம், தனம், வித்தை, ஸம்பத்து, விவேகமென் ற வஷ்டபாக்கியங்களையு மளிக்கத்தேவேந்திரன் சிவாக்ஞை யாற் சிந்தாமணியையவன் கையிற்கொடுத்தான். விஷ்ணு ச க்கிராயுதத்தை யளித்தார். விநாயகர் பிராகிருத சிந்தாம

ணியை யவன்கழுத்திலணிந்தார். நினைத்தபடி மீன்ரூபத்தையும் இத்திவ்ய மானிட ரூபத்தைத் தரிக்குஞ்சக்தியுமுமையவள் கொடுத்தாள். பரமன் மத்ஸ்யராஜனைப்பார்த்து நீ சென்ற ஜன்மத்தில் மாருதியின் மைந்தனாகிய மத்ஸ்ய வல்லபன். நீ செய்துவந்த ராமபக்தியாலிப்பொழுது நம் கிருபையை யடைந்தாய். உன் கழுத்திலணியப்பட்ட சிந்தாமணியால் நினைத்த யாவற்றையும் பெறலாம். சக்கரத்தாற் சத்துருக்களைவென்று திவ்யசக்தியுள்ளவனாய் ஸார்வபௌமனாயிருந்து நமது பக்தியை யிடைவிடாமற்செய்வாய். அதனால் புக்தியையுந் தேகாந்தத்தில் முக்தியையுமடைவாய். நீ யநேக யாகங்களாற் பிராம்மணர்களையுந் தேவர்களையும் திருப்திசெய்வாய். மிகுந்த கியாதிமானாயு மிருப்பாயென்றனுக்கிரகம் புரிந்து பிரமரபுரீசர் மறைந்தார். திவ்யரூபத்தை யடைந்த அம்மத்ஸ்யராஜகுமாரன் மோதாமோத விநாயகரையும் பிரமராளகையையும் பிரமரபுரீசரையும்பூஜித்து ஜபம் முதலியவைகளைக் கிரமமாய்ச்செய்து பிராம்மணர்களையும் தானாதிகளாற் சந்தோஷிப்பித்துத் தனது பட்டணம்வந்து சேர்ந்தான்.

அத்தியாயம் பதின்மூன்று முற்றும்.

பதினான்காவது அத்தியாயம்.

ஓ வாகீச முநியே! இவ்விதம் பிரமரேசரின் கிருபையாலத்புத வைபவத்தைப்பெற்ற மீனராஜகுமாரன் மீன்ரூபத்தையெடுத்து தேவேந்திரனளித்த சிந்தாமணியை வாயிற்கவ்விக்கொண்டு தனதரண்மனைசென்று பெற்றோர்களை வணங்கித் தகப்பனிடத்திற் சிந்தாமணியைக் கொடுத்தான். அதையரசன் பார்த்தாச்சரியமடைந்து ராஜஸபைசென் றநேகர்களுடைய ஸன்னிதியில் மந்திரியின் கையிற்கொடுத் திதையுன்மகளிடம் கொடுக்கும்படி யென்மகன் சொல்லிக் கொடுத்தா னென்று சொன்னான். மந்திரியந்தப்புரஞ்சென் றதைத்தன் மகள் கமலையின் கையிற் கொடுத்தான். அரசன் புதல்வனான மீனராஜகுமாரனாற் கொண்டுவந்து கொடுக்கப்பட்ட விரத்தினத்தைப் பார்த்து தெய்வலோகத்துச் சிந்தாமணிதானென்று நிச்சயித்

துக்கன் பெற்றோர்களைப்பார்த்து இவ்விரத்தினத்தைக் கொண்டுவந்து கொடுத்தவன் மீனுமல்ல. மனிதனுமல்ல. ஆனாலிவரொருதிவ்யபுருஷன். ஏதோவொருகாரணத்தைப் பற்றியிந்தரூபத்துடனிருக்கின்றார். சுவல்பகாலத்தில் பிரகடனப்பட்டுத் தனதுருவுடன் விளங்குவாரென்பதிலையமில்லை. ஆகையாலிவ்விரத்தினத்தைக்கொண்டுவந்த மீனராஜ குமாரனுக்கென்னை விவாகஞ் செய்து கொடுக்க ளென்று வினயத்துடன் சொன்னாள். மந்திரியுந் தன்மூத்தகுமாரியை மீனராஜனுக்கும் மற்றிரண்டு பெண்களையுஞ் சேரகேரள ராஜகுமாரர்களுக்கும் பாணிக்கிரகணஞ் செய்துகொடுத்தான். கமலையானவளரசனரண்மனையிற் றன்புருஷனை மீனராஜனுடன் வஸித்துவந்தாள். இராத்திரியிலும் மீனராஜன் பக்கத்திலேயே சயனித்துக்கொள்வாள். மற்றிரண்டு பெண்களுந் தங்கள் புருஷர்களோடு களித்துக்கமலாலயத்திலேயே யிருந்துவந்தார்கள். மீனராஜன் றன்கழுத்திலுள்ள திவ்ய சிந்தாமணியா லொருவருமறியாமற் போஜனாதிகளைச் செய்துவந்தான். இவ்வாறாகவிருக்கப்பாண்டியன் மைந்தன் றனக்கு நிச்சயித்திருந்த பெண்ணையரசன் குமாரனாகிய மீனராஜனுக்கு மந்திரி கொடுத்துவிட்டானென்று கேள்விப்பட்டான். அரசனுடைய நிர்ப்பந்தத்தால் மந்திரி கொடுத்திருக்க வேண்டுமென்று நிச்சயித்தவ்வரசன் பேரிற் கோபங்கொண்டு ஓர் அக்ஷோஹிணி சைன்யத்துடன் கமலாலயம்வந்து யுத்தபறை சாற்றுவித்தான். பாண்டியன் படையெடுத்து வந்திருப்பதைத் தியாகசோழனறிந்து திடுக்கிட்டு மந்திரியிடஞ்சென்று ஓ மந்திரியே! உன் புத்திரியினிடம் விருப்புற்ற பாண்டியன் படையெடுத்து வந்திருக்கின்றான், நானோ வயதுசென்ற கிழவன், என் குமாரனோ மீனுருவையுடையவன், சூரர்களாகியநீயும் உன்மருமக்கள்மாருந்தான் யுத்தஞ் செய்தெனக்கு ஜயமளிக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டான். அரசன் வார்த்தையைக் கேட்டிருந்த மந்திரியின் மருமக்கள்மாரரசனைப் பார்த்து அரசனே! நீர் பயப்படவேண்டாம் பாண்டியனைப்போலவே நாங்களுந் தேசாதிபதிகள்தான், யுத்தத்திலவனைவென்றுமது நாட்டைக்காப்பாற்றிக்கொடுக்கின்றோ

மென்று சொன்னார்கள். அரசன் மிகக்களித்துத் தனத ரண்மனை சென்றான். மந்திரியின் மருமக்களாகிய சேர கேரள வரசன் மைந்தர்கள் தியாகசோழனுடைய அல்பசைன்னியங்க ளுடன் யுத்தபூமிசென்று பாண்டியனுடைய சைன்னியப்பெரு க்கைக் கண்டு பயந்து மயங்கித்திகைத்து நின்றார்கள். பாண் டியன் வரவையறிந்த மீனராஜன் வனஞ்சென்று திவ்யரூபந்த ரித்து சிந்தாமணியாற்றிவ்ய வஸ்திராலங்காரமுண்டுபண்ணி கி ரீடாதிகளையணிந்து சக்கிராயுதத்தைக் கையிலேந்தி திவ்ய புர வியேறி யுத்தகளஞ்சென்றான். அங்குதியங்கி நிற்கும் மந்தி ரியின் மருமக்கள்மாரைப்பார்த்து யுத்தத்திற்கு வந்த நீங்கள் மயங்கி நிற்கக்காரணமென்னவென்று கேட்டான். அவர்கள் சக்கிராயுதமேந்தி நிற்குமிவனை நாராயணனென்றே நினைத்து வந்தனை வழிபாடுகள்செய்து அஞ்சலியஸ்தராய் ஓ வாஸுதே வா! பாண்டவஸஹாயா! திரௌபதி மானரக்ஷகா! சத்துருவாகி ய இப்பாண்டியன் மிகுந்த சேனையுடன் வந்திருக்கின்றான். எ ங்களுடைய ஸைன்னியம் மிக்க அல்பமாயிருப்பதாற் றிகைத் திருக்கின்றோம். எங்களை யிவ்வாபத்துக் காலத்திற் கார் க்கும்பொருட்டே கருணாநிதியாகிய தாங்கள் வந்திருக்கின்றீ ர்கள். சத்துருவை ஜெயித்தெங்களுக்கு ஜெயமளிக்கவேண்டு மென்று வேண்டிக்கொண்டார்கள். அப்பொழுதரசனும் வி ஷ்ணுவைப்போலவே நடித்துங்கள் பக்தியா லிவ்வாபத்துக்கா லத்தி லுதவிசெய்ய நாம் வந்தோம். சத்துருஸைன்னியத்தை ஓர் நொடியில் வதைத்துப் பாண்டியனைக் கட்டிக்கொண்டு வந் துங்கள் கையிலொப்புவிக்கின்றோம். இங்கேதானே யிருங்க ளென்று சொல்லிவிட்டுப் பாண்டியன் சைன்னியத்திற்புகுந்து ஓர் அக்ஷோஹிணி சைன்னியங்களையுஞ் சக்கரத்தால் வதை த்துப் பாண்டியனையுங் கட்டிக்கொண்டு வந்தவர்களிடமொப்பு வித்துக் காடுசென்று மீனுருவைத்தரித் தரண்மனை சென்றான். அப்பொழுதவன் மனைவி இன்னேர மெங்கே சென்றீரென்று கேட்க, பாண்டியனுடைய யுத்தத்திற்குச் சென்று அவன் சை ன்னியங்களைக்கொன் றவனையுங்கட்டி ஜயங்கொண்டுவந்தேன், எனக்கு ஸ்நாநம்பண்ண வெந்நீர்போட்டு ஸ்நாநஅரையில் வை

த்துப்போட்டு வந்துவிடு, பிறகவ்வறையில் நீ செல்லவேண்டா மென்று சொன்னான். கமலையவ்வாறாகவே செய்து தெரிவித்தாள். மத்ஸ்யராஜ னறையிற்சென்று மீனுருவைவிலக்கித் தன்னுருவுடன் ஸ்நாநஞ் செய்துகொண்டிருந்தான். அப்பொழுதவன் றேவி மீனெவ்வாறாக ஸ்நாநஞ்செய்கிறது பார்ப்போமென்றெண்ணிக் கதவண்டை சென்று கதவின்றுவாரத்தாற் பார்த்தாள். கோடிஸூரியனுக்குச்சமதியான காந்தியும், கோடி சந்திரனுக்குச்சமதியான குளுமையும்பொருந்தி கோடிமன்மதசுந்திரனும் விளங்குந்தன் பதியைப்பார்த் தானந்தித்து மாமியார் மாமனாரிடஞ்சென் றழைத்துவந்து காட்டி யவர்களுடன் கதவுக்குவெளியில் வீற்றிருந்தாள். அரசகுமாரன் ஸ்நாநஞ்செய்து மீனுருவுடன் வெளியில்வந்து பெற்றோர்களைக் கண்டு வணங்கி யிப்பொழுதிங்கேவரக் காரணமேதென்று வினவினன். அரசன் மகனைப்பார்த்து என் கண்மணியே! இப்பேர்ப்பட்ட ரூபத்தையுடைய நீ இதைவிட்டு மீனுருவுடனேனிருக்கின்றாயென்று கேட்க, இராஜகுமாரன்றன் றேவியாலேயே வெளிப்படுத்தப்பட்டோமென்று நினைத்துத் தேவியின் ஸத்துவசோதனையின்பொருட் டிருக்கிறேனென்றான். அதற்கரசன் கமலை நளாகினிக் கொப்பானவள், இனி நீ மீனுருவைவிட்டு ச்சுவரூபத்துடனிருந்து மாதுசிரோன்மணியான கமலையையு மெங்களையும் மந்திரிமுதலியோரையுங் களிக்கச்செய்யவேண்டு மென்று சொல்லப், பரமனாற்றனக்களிக்கப்பட்ட திவ்யரூபத்தைத்தரித்து விளங்கினான். வெகுகாலமாய் துக்கித்திருந்த பெற்றோர்கள் புத்திரனைஆலிங்கனம்பண்ணி யுச்சிமுகந்து பேரானந்தக்கடலில் முழுகிவிட்டார்கள். சிந்தாமணியுடன் விளங்கும் மார்பும், திவ்ய கந்தவஸ்திராபரணமுமுடையவனும் கோடிமன்மதாகிருதியாய் விளங்கும் புருஷனைக் கமலைகண்டு மூவுலகிலுந் தேவ முநி மானிடர்களிலுந் தான் மிக்க பாக்கியசாலியென்றானந்தித்தாள். யுத்தகளத்தில் நடத்திய விசேஷங்களைப்பெற்றோர்களுக்கு மீனராசன் விசதமாய்ச்சொன்னான். அரசன் மிகவுஞ்சந்தோஷித்துப் புத்திரனுடன் வெகுநேரம்பேசிக்கொண்டிருந்துவிட்டு மிகக்களிப்புடன் கொலுமண்டபஞ்செ

ன்றான். இராசகுமாரனு முண்டு தாம்பூலந்தரித்து மனையாளை ஆலிங்கனஞ்செய்து ஸப்ரகூடமஞ்சத்தில் யுத்தசிரமந்தீர சயனித்துக்கொண்டான். அவன் மனைவியான கமலை கால்பிடித்துக்கொண்டிருந்தாள். இவ்விதமரசகுமாரன் மீனுருவைவிலக்கி நிஜரூபத்துடனிருந்தபடியால் அவன் மனைவியும் பெற்றோர்களும் பேரானந்தக் கடலில் மூழ்கியிருந்தார்கள்.

பதிநான்காம் அத்தியாயம் முற்றிற்று.

பதினைந்தாம் அத்யாயம்.

மந்திரியின் மாப்பிள்ளைகளாகிய சேர கேரள இராஜகுமாரர்கள் பாண்டியராஜ குமாரனைக்கட்டிக்கொண்டு ஜெயத்துடன் ராஜஸபைவந்து தாங்கள் பாண்டியராஜனை செயித்துக்கட்டிக்கொண்டு வந்ததாகச்சொன்னார்கள். மந்திரி சந்தோஷத்துடனரசனைப்பார்த்து நமது மாப்பிள்ளைகளா லுமது ராச்சியத்துடன் நீர் இரக்ஷிக்கப்பட்டீர், இல்லாதவரையி லுமது சைன்னியங்களை வதைத்துமது நாட்டுப்பெண்ணுட னிராக்சியத்தையுமபஹரித்துக்கொள்வானென்று சொன்னான். அரசனும் புன்னகைசெய்துகொண்டு மந்திரியின் மாப்பிள்ளைகளையும் பாண்டியனையும் மரியாதையுடனுபசரித்தான். பாண்டியனரசனை மெச்சியவன் குணத்திற்குப் புகழ்ந்து விடைபெற்றுத்தன்னாடு சென்றான். மந்திரிமாப்பிள்ளைகள் வெகுமதிபெற்றுத் தங்களரண்மனை சென்றார்கள். மீனராஜகுமாரனும் மகிழ்ச்சியுட னொருமாதம்வரையிற்றன்னரண்மனையிலிருந்து பெற்றோரையும் மனையாளையுஞ் சந்தோஷப்படுத்திவந்தான். பிறகோர் சமையத்திற் பிதாவை வணங்கித் தேசாடனஞ்செய் துலக விசேஷங்களைப்பார்த்துவந்து பிறகு இராச்சியபாரத்தை வகிக்க விரும்புகின்றேனென்று சொல்லிப் பெற்றோர்களிடத்திலும் மனையாளிடத்திலும் விடைபெற்றுத் தேசயாத்திரை புறப்பட்டான். அநேக நாடு காடு மலைவனம் வனாந்தரங்களிற் சஞ்சாரஞ்செய்துகொண்டு விந்தியமலைச்சாரலை யடைந்தான். அவ்விடத்திலிரதகஜதுரகபதாதிகளுட னரசர்கள் கல்லாய்ச் சமைந்திருப்பதைக்கண்டு பிரமித்ததன் காரணத்தைத் தெரிந்துகொள்ள

வக்காட்டிலலைந்து திரிந்தான். தெய்வகதியா யவ்விடம்வந்த நாரதரைக்கண்டு வணங்கித் தான் கண்ட வதிசயத்தின் காரணத்தையுரைக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். நாரதர் அரசனைப்பார்த்துச் சொல்லுகின்றார். ஓ அரசனே! இம்மலையிலுள்ள பட்டணத்திற் சாபாஸுரனென்றொருவனிருக்கிறான். அவன் பிரமனைக்குறித்துச் தவஞ்செய்து ஸகலரையுந் தான் சபிக்கவும் பிறர் சாபந்தன்னிடத்திற் பயன்படாமலிருக்கவும் வரன்கேட்கவதற்குப்பிர்மன் விநாயகரின்வஸ்திராபரணங்களையுடையவர்களைத்தவிர மற்றவர்களை சபிக்கவும் பிறர் சாப பயமில்லாமலிருக்கவும் வரமளித்து மறைந்தார். அதினல் மூன்று லோகங்களையும் ஜயித்த ஸுரஸார்வபவுமனு யிருந்தாண்டு வருகிறன். இவனமரகண்டத்தினரசனுகிய வீரவர்மன் குமாரியான இரத்நகாந்தியைக்கண்டு மோகித்துத்தன் மாயையாலவளை யபகரித்துக்கொண்டு வந்திம்மலையில் வைத்துப் பணிவிடைகளுக்குத் தேவமாதர்களையு மேற்படுத்தி யிராக்கதர்களைக் காவலாகவும் வைத்திருக்கின்றன். இதைப்பெண்ணின் தகப்பன் கேழ்விப்பட்டுப் பாரதவருஷசக்கிரவர்த்தியுந் தனக்கு மைத்துனனுமான ஹஸ்தினபுரம் சைன்னியத்துடன் இம்மலைவந்து யுத்தத்திற் காரம்பிக்க அஸுரன் நீ பார்த்தபடி யாவரையுங் கல்லாகச் சபித்துவிட்டான். பிறகப்பெண்ணிடஞ் சென்று தன்னை விவாகம் பண்ணிக்கொள்ளச் சொல்ல வப்பெண்டனக்குப் பன்னிரண்டு வருஷத்திற்கு நோன்பென்றும் முடிந்தவுடன் செய்துகொள்ளுகிறேனென்றுஞ் சொல்லி ஸமாதானப்படுத்தித்தனக்குச் சிறை மீக்ஷி செய்விக்கவேண்டுமென்று அம்பிகையைப் பிரார்த்தித்து வந்தனள். இன்னுமவள் விரதமுடிய மாதமொன்றிருக்கிறதென்று மதற்குட் டனக்கு மீக்ஷி ஏற்படாதவரையிலவள் கட்டாயம் பிராணனைத்தான் விட்டுவிடுவாளென்றும் சொல்லிவிட்டுப் பொன்னுலகேகினர். மீனருஜன்றன்கழுத்திலுள்ள திவ்ய சிந்தாமணியாலே யவ்வனத்திலோராண்மனை ஸகலராஜபோகங்களுட னேற்படுத்தி யதிலுண்டு களித்திருந்தான். இராத்திரி ஸப்ரகூடமஞ்சத்திற் சயனித்துக்கொண்டிருக்கும்பொழுது இரத்தினகாந்தி யிவ்விடம் வரவேண்டுமென்று இரத்தினத்தைத்தொட்டு நினைத்தான். அந்த

க்ஷணமேயவ ளவ்விடம்வந்தவன் படுக்கையின் பக்கத்தில் வீற்றிருந்தாள். அவுணனரண்மனையில் வீற்றிருந்த தான் திடீரென்று இவ்விடம் வந்திருப்பதால் வியப்புற்று மீனராஜனை நோக்கி கோடிமன்மதாகிருதியையுடைய சுந்திரபுருஷரே! குருவருஷத்துச் சக்கிரவர்த்தியாகிய வீரவர்மன் புதல்வியாகிய நான் அசுரனுலபகரிக்கப்பட்டவனுலேயே ஏற்படுத்தப்பட்ட விடுதியிலிருந்து திடீரென்றிவ்விடம் யாரா லெவ்விதம் வரவழைப்பட்டேன் தாங்களார்? இதையெனக்குச்சொல்லி யானந்திக்கச்செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டாள். அதற்கரசன் தான் கமலாலய வரசன் குமாரன், தேசவிசேஷங்களைப்பாக்க வேண்டுமென்று ஸஞ்சாரஞ்செய்துகொண்டு இவ்விடம்வந்துனது தகப்பன் முதலியவர்கள் சிலையாயிருப்பதைப் பார்த்துங்கள் விருத்தாந்தத்தையுங்கேட்டுன்னபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டவுணனை ஜெயித்துன் பிதாமுதலியவரை யெழுப்பக்கருதி யுன்னை வரவழைக்தேனென்று சொன்னுன். இதைக்கேட்ட விரத்தினகாந்தி மிகுந்த களிப்புற்று மிகுந்த வணக்கத்துடனென்னை வரவழைத்ததைக் கொண்டே யுங்கட்சக்தியையும் பார்வையினுலேயே ரூபமுந்தெரிந்திருக்கின்றது. இந்த தாஸ ஜனந்தங்கள் பாதத்திலற்பிக்கப்பட்டிருக்கின்றது. உங்களிஷ்டப்படி யென்றவன் பாதத்தில்விழுந்து கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டாள். இராஜகுமாரனுமவளையெடுத்துப் பெண்ணே! நீ பயப்படவேண்டாம். அசுரனை ஜெயித்துன் தகப்பன் முதலியோரை யெழுப்பி யுன்மாமன் கிரகத்திலேயேயுன்னைவிவாகஞ்செய்துகொள்ளுகின்றேன். நீ நிர்ப்பயமாயிவ்விடத்திலேயேயிருவென்று சொல்லியவளைக் களிக்கச்செய்தான். பிறகிராசகுமாரன் கன்னிகையுடன் புசித்து சயனித்து நித்திரைசெய்தான். காலையிலெழுந்து நித்தியவிதிகளை முடித்துண்டுச் சிந்தாமணியைத்தொட்டு விநாயகரை நினைத்தான். உடனே இலக்ஷம் கை கால் முகங்களுடன் வந்து அரசனைப்பார்த்து அரசனே! நானவுணனுடைய பயமற்றவன், விநாயகருடைய வேலைக்காரன், இவ்விடமிருந்து இரத்தினகாந்தியைக் காவற்செய்கின்றேன், நீ கவலையற்றவுணன் புரஞ்சென்று சக்கிரத்தினு லவுணவீர

ர்களை வென்று தானவன் குமாரனைக்கைப்பிடியாய்ப் பிடித்து க்கொள், அதினாலவன் பயந்துனக்கு வசியனுவான், அவனைக் கொண்டு கல்லாய்ச் சமைந்தவர்களை யெழுப்பச்செய்துன்னிஷ்டப்படி யவனையிருக்கும்படி செய்து வந்துசேரென்று சொன்னான். இராஜகுமாரனும் லக்ஷவீரனைக் காவலாகவைத்துவிட்டு தானவனுடைய புரஞ்சென்றான்.

பதினைந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

பதினாறும் அத்தியாயம்.

அவுணராஜனுடைய கோட்டைக் காவல்க்காரரான வீரர்களை வதைத்துக்கொண்டு கிரமமாயொன்பதாவது கோட்டைக்குட் புகுந்தான். இதைக்கேழ்வியுற்ற சாபாசுரன் இராஜகுமாரனிருக்குமிடம் வந்து தன் சைன்னியங்கள் நாசமடைந்திருப்பதைக்கண்டு மிகுந்த கோபங்கொண் டிராசகுமாரனை நோக்கிக் கல்லாகக்கடவாயென்று சபித்தான். அதைக்கேட்டவரசகுமாரன் அவுணனை நோக்கி அடா வீரமற்றமூடா! பிரமரேசரின் கிருபையைப்பெற்ற வென்னைக் கேவலம் பிர்மனுடைய வரத்தைமாத்திரம்பெற்ற வுன்சாபமென்ன செய்யக்கூடும்? அல்பனாகியவுன் சாபமென்னைப் பீடிக்கமாட்டாது. உனக்கு வீரியமிருந்தா லென்னுடன் சண்டைசெய்யடா, இல்லாதவரையில் பிராமணஹிம்ஸகனாகிய வுன்னை ஸபரிவாரத்துடன் கொன்றுவிட்டுச் செல்லுகிறேனென்று சொல்லி அவன் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அவன் சைன்னியங்களைச் சக்கிரத்தால் வதைத்தான். அவுணன்றன் சாபமரசகுமாரனிடத்திற் பயன்படாமையைக்கண்டு பயந்து மந்திரிமுதலியவர்களைச் சண்டை செய்யும்படி கட்டளையிட்டுத் தானந்தப்புரஞ்சென்று சிந்தைக் கடலிலாழ்ந்திருந்தான். அப்பொழுது தூதர்கள்சென்று அவ்வரசகுமாரனாலேயே சேனாதிபதிமுதலியவர்கள் நாசமடைந்தார்கள், நீரிப்பொழுதே அவனைச்சரணமடையாவிட்டால் பாக்கியிருப்பவருடன் நீரும் மரணமடைவது நிச்சயமென்று நடுக்கத்துடன் கூறினார்கள். அப்பொழுததைக் கேட்டுக்கொண்டிருந்த வவுணராஜகுமாரன்றன் பிதாவைவணங்கி விடைபெற்ற

ரசகுமாரனுடன் யுத்தத்திற்குச்சென்றான். நாநாவித சஸ்தி ராஸ்திரங்களா லரசகுமாரனுடன் போர்புரிந்தான். அரசகு மாரன் விளையாட்டா யவன்விடுத்த சஸ்திராஸ்திரங்களைக் கண் டித்தவனையும் மூர்ச்சிக்கச்செய்து பாசத்தினாற்கட்டிக் குதிரை யின் பின்புறத்தெற்றொங்கவிட்டுப் பாக்கி சைன்னியங்களையும் வதைசெய்தான். அவுணராஜன்றன் குமாரன் பிடிபட்டதைக் கேள்வியுற் றரசகுமாரனிடம்வந்து வணங்கி யரசகுமாரனே! என் பட்டணத்திலுள்ள இரத்னகாந்தியை யுமதுவசமொப்பு வித்துவிடுகின்றேன, என் பிராணனுக்குச் சமதியான மைந்த னைமாத்திரம் விட்டுவிடவேண்டுமென்று வேண்டிக்கொண்டா ன். அதற்கரசகுமாரன் நீ சபித்தவரசர்முதலியவர்களை யெழு ப்பிவிட்டா லுன்மைந்தனை விட்டுவிடுகிறேனென்றான். அதை க்கேட்டவவுணன் அவ்விதமேயெழுப்பிவிட ராஜகுமாரனு மவ ன குமாரனைவிட்டுவிட்டான். அவுணனைப்பார்த் தின்னமு மு னக்குப் பிழைத்திருக்கவேண்டுமானால் நம் கட்டளைக்குக் கீழ் ப்பட டரசாக்ஷிசெய்யவேண்டியது, இல்லாதவரையி லுன்னை வதஞ்செய்வேனென்றான். அவுணராஜனதற்குடன்பட வினி நீ யொருவரையுஞ் சபிக்கக்கூடாதென்றும், மனிதரையொரு விதமாயும் ஹிம்சை செய்யக்கூடாதென்றுங் கட்டளையிட வ சுர ராஜனதை யங்கிகரித்து வணங்கியுபசரித்து நிற்க, இராஜ குமாரனவனுக் கபயங்கொடுத் தவனிடம் விடைபெற்றுக் கல் லாயிருந்தவரிருக்குமிடம் வந்தான். சாபத்திலிருந்து நீங்கிய வீரவர்மன் முதலியவர்கள் மத்ஸ்யராஜனைக்கண்டு பயப்பட வ ரசகுமாரனவர்களை நோக்கி நீங்கள் பயப்படவேண்டாம், உங் களைச்சபித்த தானவனைவென்று சாபத்திலிருந்து விடுவித்தவ ன் நானே; இதற்குச் சமீபத்திலேயே அரசகுமாரத்தியாகிய இரத்னகாந்தி சுகமாயிருக்கின்றாள்; என்னுடன் வாருங்களவ ளைப் பார்க்கலாமென்றழைத்துக்கொண்டு தன்னரண்மனைக்கு வந்தான். வீரவர்மராஜனவ்விடத்திற் றன் புதல்வியைக் கண் டானந்தமுற்றுத் தன்புதல்வியை யாலிங்கனஞ்செய் துச்சிமுக ந்து தன் புதல்வியா லரசகுமாரன் சரித்திரத்தைக் கேழ்வியுற் று மிக்கக்களிப்புட னிராஜபுத்திரனை யாலிங்கனஞ்செய்து புக ழ்ந்தான். பிறகு யாவருடனும் ஹஸ்தினபுரஞ்சென்று விதி

ப்படி தன்புதல்வியை மத்ஸ்யராஜகுமாரனுக்கு விவாஹஞ்செய்துகொடுத்து யாவரிடத்திலும் விடைபெற்றுத் தன்னரசாக்ஷி சென்று சுகமாயிருந்தான். மீனராஜனுந் தன் மனைவியாளுடன் பாக்கிதேசங்களையுஞ் சுற்றிப்பார்த்துக்கொண்டு தன்னிராஜ்யஞ்சென்றான். தியாகசோழனுந் தனதரசாக்ஷியைப் புத்திரனிடமொப்புவித்துத் தான் மோக்ஷவிருப்புள்ளவனாய்ச் சிவபக்திசெய்துவந்தான். மீனராஜனும் ஸப்தத்தீவுகளையுஞ் செயித்து ஸார்வபௌமனாய்த் தன் மனைவிகளுட னனேக யாகங்களைச்செய்து தெய்வப்பிராமணர்களைச் சந்தோஷிப்பித்துத் தானும் சுகமாயிருந்தான். இவ்விதம் இலக்ஷவருஷம் பூமியைப் பரிபாலனஞ்செய்துவந்து தன் புத்திரர்களாகிய தியாகவர்மன் வல்மீகவர்மனென்பவர்களிடத்தி லரசாக்ஷியை யொப்புவித்துப்பெற்றோர் மனையாள்களுடன் பிரமரேசமென்னும் க்ஷேத்திரஞ்சென்று ஜப பூஜை ஸேவனங்களாற் கணபதி யம்பிகையுடன் பிரமரேசுவரரை ஸந்தோஷிக்கச்செய்தான். அவ்விராஜகுமாரனுக்குமுன் பிரமரேசுவரர் பரிவாரத்துடன் பிரஸன்னராய் மாதா, பிதா, பாரியைகளுடன் விமானத்திலேற்றுவித்துக்கைலாஸபவனமழைத்துச் சென்றார். மீனராஜன் சிவ பார்சுவத்திலும், பிதா குமரர் பார்சுவத்திலும், தாய், மனைவிகள் பராசக்தி பக்கலிலும் வசித்துவந்தார்கள். ஓ வாகீசமுனிவே! திரியக்யோனியில் ஜனித்த மீனராஜன் இப்பிரமரேசருடைய கிருபையால் தேவர்களுக்குங் கிடைக்காத பேற்றைப் பெற்றிருக்கின்றானென்றால் உம்போலியவர்கட்குச் சொல்லவும் வேண்டுமோ! வாகீசமுனிவேயென்று பிர்மதேவருரைத்தார். பிரமரேசரின் லீலாமான்மியமான மீனராஜனுடைய விச்சரித்திரத்தைப்படிப்பவர்களுங் கேட்பவர்களும் ஸகலபோக பாக்கியங்களையுமனுபவித்துக் கைவல்லிய பதவியையு மடைவார்களென்று ஸூதபுராணிகர் நைமிசாரண்யவாசிகளுக்குச்சொல்லிவந்தார்.

பதினாறும் அத்தியாயம் முற்றிற்று.

பதினேழாம் அத்தியாயம்.

பிர்மன் வாகீசமுனிவை நோக்கிச் சொல்லுகின்றார்.

வைகுண்டவாசியாகிய விஷ்ணுவுந்தானொருஉத்தமபுதல்வனைய டையவேண்டுமென்று கருதிச் சிவபிரானையாராதித்துவந்தார். சிவபெருமான் விஷ்ணுவுக்குப் பிரஸன்னமாய் மூன்றுலோகத் தையும் ஜெயிக்குஞ் சக்தியையும் அழகுக்குத் திருஷ்டாந்தமா யுலகத்தோர் சொல்லிக்கொள்ளும்படியான அழகும்வாய்ந்த புதல்வனை யடைவாயென்று வரமளித்தார். அப்பொழுதம்பி கை விஷ்ணுவை நோக்கி யென்னை விலக்கிச் சிவனைமாத்திரம் நீ பூஜித்தபடியாற் சிவனாற்கொடுக்கப்பட்ட மைந்தன் அச்சிவ னுடைய நேத்திரத்தினாலேயே நாசமடையட்டுமென்று சபித் தாள். சிவபெருமானும் மௌனமாயிருந்து கௌரியுடன் மறை ந்துபோனார். விஷ்ணுவுமின்னது செய்வதென்று தோன்றாம ல் மயங்கித்திகைத்தனர். தெய்வகதியாயவ்விடம் வந்த துர் வாசமுனியைக்கண்டுபசரித்து தனக்குச் சம்பவித்ததை யுரை த்தனர். துர்வாஸமுனியும் விஷ்ணுவை நோக்கி விக்கினராஜ ரைப்பூஜியாமற் சிவார்ச்சனைமாத்திரம் நீர் செய்தபடியால் விக் கினமுண்டாயிற்று. ஆகையால் விக்கிநராஜரை முதலிற்பூஜி த்து கௌரீஸ்கந்தருடன் சிவனைப்பூஜியும். திரிலோகஜெயிதா வான சுந்தரரூபமுள்ள புத்திரனையடைவீரென்று சொன்னார். விஷ்ணு முனிவனைப்பார்த்து முனிசிரேஷ்டரான அத்திரி புத்திர ரே! நீர் சிவதத்துவங்களை நன்றாயறிந்தவர். மூவருக்கும் பிதா வாகிய சிவபெருமானைக்காட்டிலு மவர் புத்திரராகிய விநாயக க்கடவுளெப்படி முந்திப் பூஜிக்கத்தக்கவராவர். சிவபெருமா னாற் கொடுக்கப்பட்ட வரத்தை யவர் தேவியாகிய வுமை யெப் படிப் பேதித்துவிட்டாள். இவைகளை யெனக்குச் சொல்ல வேண்டுமென்று கேட்க முனிவரருள்செய்கிறார். ஜாக்கிரம், ஸ்வ ப்னம், சுஷுப்தி, துரீயம், துரீயாதீதமென்னு மைவித அவஸ் தையைக்கடந்து நிற்பதே நிற்குணமென்ற கேவலபிர்மம். இது சாந்தி மாயையுடன்கூடி சாக்ஷியென்ற ஸம்ஞையையடை ந்தது. இது ஜகத்ரூபமற்று வாஸனையுடன்கூடி ஐந்தாவது ஸ்திதியில் நிற்பது. இப்பரமாத்துமாவினிடத்தில் மாயைத் திருகுண ஸமரஸபாவமுள்ள வளாயிருக்கின்றாள். இச் சாந்தி மாயையின் ஸம்யோகமுள்ளவராயிருந்தாலும் ஸா

க்ஷியானவர் நிர்லேபராயும் தாமரையிலையிற்பட்டஜலபிந்துவை ப்போல் மாயாஸம்பந்த மற்றவராயுமிருக்கின்றார். ஸாக்ஷியி ன் வீக்ஷண்யத்திலிப்பிந்து மாயை சுத்த ஸத்துவப்பிரதானே யானாள். அவளிடத்திலுண்டான பிர்மபிரதிபிம்பமே யவ்யா கிருதனென்றும் ஜகத்தின் நான்காவது பாதமயரென்று முரை க்கப்படுவர். மலின ஸத்துவாவஸ்தையிலுண்டான பிரதிபிம்ப மேஜீவனென்றுரைக்கப்படும். பிறகு வியாகிருத ஜகத்சிருஷ்டி யின் நிமித்தம் தமப்பிரதானையாகவானாள். பிர்மாபாஸமயரா ன ஸமஷ்டியே ஈசுவரனென்றும் பதியென்றும் குணேசரென் றுமுரைக்கப்படுவர். அவித்தியாகதனான ஜீவனே பசுவென் றும் ஜடரூபிணியான மாயையே பாசமென்றுமுரைக்கப்படும். பசுக்களான ஜீவர்களுக்குப் போகத்தைக்கொடுக்க வீசுவரன் திருகுண ஸ்வரூபமான ஸ்தூல ஸூக்ஷ்ம காரணப் பிரபஞ்ச ங்களைப் பஞ்சபூதகங்களாற் படைத்தார். அவ்விசுவரனே ர ஜோகுணத்தாற் பிரயனென்றும், ஸத்துவகுணத்தால் விஷ்ணு வென்றும் தமோகுணத்தால் ருத்திரனென்றும் கூறப்படுவர். திருகுணஹங்கிருதியால் சூரியனென்றும், திருகுணக்கிரியை யாற் சக்தியென்றும், வியாகிருதப் பிரபஞ்சத்தில் வர்ணிக்கப் படுவர். ஜீவனந்தக்கரணபேதத்தால் அனந்தமாகவுமுரைக்க ப்படுவன். பத்தனான ஜீவன் வியஷ்டியென்றும், நித்திய முக் தனான விசுவரன் ஸமஷ்டியென்றும், ஸமஸ்டி வியஷ்டி ரகிதரா ன ஸாக்ஷி பஞ்சமஸ்திதியிலுள்ள பிர்மமே துர்யாதீதமென்று ங் கூறப்படும். ஸாக்ஷி பஞ்சமஸ்திதியிலும் ஈசன் துரீயஸ்திதி யிலுமிருப்பவர்கள். ஜாக்ரம், ஸ்வப்னம், சுஷுப்தி துரீயமெ ன்று நான்கு பாதத்துடன் விளங்கும் மாயையே அஸத்ரூபி ணியென்றும் பஞ்சமஸ்திதிரூபிணியானவளே ஸத்பாவமுடை யவளென்றும் கூறப்படுவள். எவ்விதம் சூரிய ஸன்னதியிலி ருளிராதோ அவ்விதம் ஸத்பிர்மஸன்னதியிலஸத்மாயை நசித் துவிடும். விசுவமண்டலம் ஸதஸத்பாவத்துடன் கூடினது. விசுவரூபியான காலபுருஷனும் ஸதஸத்யோகரூபியா யிருப்ப வன். அஸத்பாவரூபியான காலனே விக்கினனென்றும் கர் மாக்களுடைய பிரதிபந்தியென்றும் கூறப்படுவன். விருத்தி

யாரூடமான ஸாக்ஷி சைதன்யமே விக்னராஜரென்றுரைக்கப்படும். தியான பூஜாதிகளாலந்தக்கரண விர்த்தியிலாரூடமாவார். துரீயரான பார்வதீபதியைக்காட்டிலும் பஞ்சமஸ்திதியிலுள்ள விக்கினராஜர் பூஜ்யர்தானே. ஸமஷ்டி ரூபியான பரமேசருடைய புத்திவிர்த்தியிலிருந் துலகில் மூர்த்தியுக்தராயாவிர்ப்பவித்தபடியால் சிவபுத்திரரென்றுரைக்கப்படுவார். பிரதிபந்தநாசத்தின் பொருட்டுச் சிவனுமவ்விக்கினராஜமூர்த்தியைப் பூஜிக்கவேண்டியதுதான். பிர்மாபாஸரூபமான துரீயப்பிர்மமைந்துவிதப் பிர்ஞ்ஞையுடன் கூடினது. மத்தியில் மூன்றுவிதப் பிரஞ்ஞையுடன் கூடினது வியாவஹாரேசுவரனென்றும், வாமபாகப் பிரஞ்ஞாரூபமானது சக்தியென்றுந் தக்ஷிணபாகப்பிரஞ்ஞாரூபமானது காலமென்றுரைக்கப்படும். இவைகளில் மத்தியிலுள்ளப் பிரஞ்ஞாரூபமான வியவஹாரேசுவரனே சிவபெருமானென் றுரைக்கப்படுவர். சிவனுஞ்சக்தியும் ஸமானமானவர்களே. சிவனுஞ்சக்தியுடன் கூடினுற்றுன் ஸர்வகாரியங்களிலும் ஸமர்த்தராகின்றுர். சிவனுஞ்சக்தியுடன் கூடாதவரையில் நிரர்த்தகரே. ஆகையாற்றுன் சக்தியாகிய பார்வதியும்மைச் சபித்தனள். நீர் விக்கினராஜரை முதலிற் பூஜித்து கௌரீஸ்கந்தருடன் கூடிய சிவபெருமானை ஸந்தோஷப்படுத்தும். உமக்கும் புத்திரனுண்டாவான் என்று சொல்லித் தூர்வாஸமுனிவர் தமதிருப்பிடஞ்சென்றுர். அவ்விதமே விஷ்ணுவும் விநாயகரை முதலிற் பூஜித்து ஸோமாஸ்கந்தராகிய சிவபெருமானையும் பூஜித்தார். அதினுற் பராசக்திஸந்தோஷமடைந்து சிவஸ்கந்தர்களுடன் தரிசனங்கொடுத்து விஷ்ணுவைப்பார்த்துச் சிவனுலுமது புத்திரன் தகிக்கப்பட்டாலும் பிறகு நானவனைப் பிழைக்கச்செய்கின்றேன். அவனெனதருளாலரூபவானுயும் சௌரியமுள்ளவனுயும் ஸர்வப்பிராணிகளுடைய ஹிருதயத்திலிருப்பவனுயுமிருந்து சிவன் முதலிய யாவரையுஞ் ஜயிப்பானெனவனுக்கிரகம் புரிந்து மறைந்தனள். விஷ்ணுவும் மன்மதனைப் புத்திரனுகவடைந்தார். அவனுமம்பாள் சாபப்படி சிவனுற் றகிக்கப்பட சக்தியுமவனைப் பிழைக்கச்செய்து முன்போல் யாவற்றையு மளித்தாள். மன்

மதனுஞ் சிவனுக்குத் தான்செய்த வபராதத்தை விலக்கிக் கொள்ளும்பொருட்டு விஷ்ணுவினுக்கிணைப்படி மதுவனமென்ற திவ்யக்ஷேத்திரம்வந்து விநாயகரைப்பூஜித்து லிங்கமத்தியில் ஸோமாஸ்கந்த மூர்த்தியைப் பாவித்துப் பூஜைசெய்து சக்திபஞ்சாக்ஷர மந்திரத்தை ஜபித்துவந்தான். இவ்விதந்தன் மனையாளுடன் மூன்று வருஷந்தவம்புரியவே பரமன் களிகூர்ந்து ஸோமாஸ்கந்தமூர்த்தியாய் லிங்கத்திலிருந்தாவிர்ப்பவித்தார். மன்மதன் நமஸ்கரித்து துதித்தான். செய்தகுற்றத்தை மன்னிக்கும்படி பிரார்த்தித்துக்கொண்டான். பரமன் மன்னித்தோமென்றனுக்கிரகம் புரிந்தார். அம்மன் தனதுலகமாகிய மணித்தீவிலும் விநாயகர் தமது சிந்தாமணித் தீவிலுமிருப்பிடமளித்தார்கள். பரமன் மன்மதனுக்குவேண்டிய மற்ற வரங்களுமளித்து மூலலிங்கத்தில் மறைந்தார். தனக்கனுக்கிரகம்புரிந்த பங்குனிமாதம் பௌர்ணிமை யுத்திர நக்ஷத்திரத்தில் தங்கத்தினல் ஸோமாஸ்கந்த மூர்த்தியைச்செய்து பிரதிஷ்டைபண்ணிப்பூஜித்துத் தமதிருப்பிடம் சென்றான். ஸோமாஸ்கந்தரூபியான பிரமரேசரினிந்த லீலையைப்படிப்பவர்களும் கேட்பவர்களு முத்தமமான புத்திரர்களையடைவார்கள்.

பதினேழாம் அத்தியாயம் முற்றும்.

பதினெட்டாவதத்தியாயம்.

மீனராஜன் புதல்வனுகிய தியாகவர்மன் தனக்குப்பாகமாய்க்கிடைத்த பூபாகத்திற்குள் பிரமரபுரிக்கொரு யோஜனை தூரம் மேற்கே மன்னர்குடி யென்றூர் பட்டணமியற்றி யதிலிருந்தரசாண்டு வந்தான். அவ்வரசன் தனக்கு வம்சவிருத்திகரமான ஸந்ததியிலலாததாற் றன்தேவியான பிரஹன்னயகியுடன் பிரமரபுரிசென்று விநாயகரையும் பிரமராளகையையும் பிரமரேசரையும் பூஜித்து ஸோமாஸ்கந்த மூர்த்தியின் ஸன்னிதியிலிருந்துகொண்டு தியாகேசமூர்த்தியைத் தியானித்து மாயாலக்ஷுமி மன்மதர்களின் பீஜங்களைப் பஞ்சாக்ஷர மந்திரத்தினிருபார்சுவத்திலும் சேர்த்துத் தியாகபஞ்சாக்ஷரத்தை

மனையாளுடன் ஜபித்துவந்தான். ஐந்துலக்ஷம் புரச்சரண வி திப்படி யோர்மாதத்தில் செய்துமுடித்தான். ஸோமாஸ்கந்த ரூபியான பிரமரேசர் ஸந்தோஷமடைந் தரசன்முன்பாவிர்ப்ப விக்க வரசன் ருத்திர நமகத்தால் நமஸ்கரித்து அதர்வசீர்ஷம ந்திரத்தாற் றுதித்தான். பரமனரசனைநோக்கி குழந்தாய மீன ராஜன் புதல்வனே! யுனக்குவேண்டிய வரங்களைக்கேட்டுக்கொ ள் கொடுக்கின்றோமென்று சொல்லவரசன் மகிழ்ந்துமது பா தபத்மத்தில் நிரந்தபக்தியையுமது பக்தியுள்ள வம்சவிருத்தி காரகனனவோர் புதல்வனையுமளிப்பதுடன் என் வம்சத்திலு தித்தவர்களுக்குக் குலதேவதையாயுமிருந்து பாதுகார்த்தருள வேண்டுமென்று வரன் கேட்டுக்கொண்டான். பிரமரேசுவர ருமவ்வாறே வரமளித்து லிங்கத்தில் மறைந்தார். அரசன் க ளிப்புற்று பிரமரேசரைப்பூஜித்துத் தனது பட்டணஞ்சென்று ன். விமலனருளாலரசன் மனைவி கர்ப்பந்தரித்துப்பத்தாவது மாதத்தில் ரூபகுணசௌந்தர்யமுள்ள புதல்வனைப்பெற்றாள். அரசன் மகிழ்ந்து தானதர்மங்கள்செய்து ஸ்கந்தவர்மாவென் று பெயரிட்டு நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமா க வளர்த்துவந்தான். ஐந்தாவது வயதில் வித்தியாப்பியாஸ மும் பதினோராம்வயதிலுபநயனமும் செய்வித்துத் தனுர்வித்தி யாப்பியாஸமும் செய்வித்தான். ஒரு நாள் விதர்ப்ப தேசத்த ரசன் மந்திரியாகிய புத்திஸாகரன் கொலுச்சபைக்குவர அரச னும் மரியாதைசெய் துபசரித்தான். வந்த மந்திரி யரசனை நோக்கித் தியாகவர்மசோழமகாராஜனே! எங்களரசனாகிய வீ மமகாராஜன்றன் புதல்வியாகிய ருக்மாங்கிக்குச் சமதியான ரூ பமுள்ள வரசகுமாரனுக்குத் தன் புதல்வியைக் கொடுக்கவே ண்டுமென்றுகருதி யப்பேர்ப்பட்ட வரனை நிச்சயித்துவரும்ப டி யென்னையனுப்பினர். நானுமநேக தேசம் நாடு கிராமங்கட்கு ச்சென்றுமது ஸபைக்கு வந்தபொழுதுமது குமாரனைக் கண் டு அப்பெண்ணுக்குச்சமதியான புருஷனென்று நிச்சயித்துக் கொண்டேன். அவ்விஷயத்திலுமதபிப்பிராயத்தைத் தெரிவி க்கவேண்டுமென்றுகேட்டான். அதற்கரசன் ஓ புத்திஸாகர மந்திரியே! பீமராஜனோர் தேசாதிபதி, நானோ ஒருதேசத்தில்

விந்தசோழதேசத்திலொருபாகத்திற்கதிபதி. என் குமாரனு க்கவர் புதல்வியைக்கொடுக்க வவர் எப்படி ஸம்மதிப்பாரென் ருன். அதற்குப்புத்திஸாகரன் ஓ! தியாகவர்மனே! எங்களர சனிராச்சியத்தை விரும்பவில்லை. பெண்ணுக்குச் சமதியான ரூபமுள்ள க்ஷத்திரிய குமாரனைத்தான் விரும்புகின்ருர். ஆக லானுமது புத்திரனுக்குப் பெண்ணைக் கொடுப்பதிற் றடையி ல்லையென்று சொன்னன். அரசனும் மிகக்களித்துப் பிராம ணர்களைவரவழைத்து முகூர்த்தம் பார்க்கச்சொல்லிக் குறிப்பி ட்டுத் தாம்பூலங்கொடுத்துங்கள் பத்திரிகையின்பேரில் முகூர் த்தத்திற்குவந்துசேருகிரோமென்று சொன்னன். மந்திரியும் விடைபெற்றுச்சென்று தன்னரசனிடம் நடந்தவற்றைச் சொ ன்னன். பீமராஜனும் முகூர்த்தத்திற்கு வேண்டியவைகளைச் சித்தப்படுத்தி ராஜர்களுக்கு மணவோலையனுப்பித் தியாகசோ ழனுக்குச்சுபதிரவியங்களுடன் முகூர்த்தப்பத்திரிகையு மனுப் பினன். தியாகசோழனும் தன் குமாரனுக்கு யாத்திராதான ம்முதலியதுஞ்செய்வித்து மந்திரிமுதலியவர்களுடன் பிரயா ண ஸன்னத்தனுயிருந்தான். அப்பொழுது பரமதுஷ்டனுன கி ராதவரசன் யுத்தத்திற்குவந்து பட்டணத்தைத் தகைந்துகொ ள்ளவே தியாகசோழனென்றுந் தோன்ருமற் றிகைத்தான். மந்திரிபரசனைப்பார்த்து அரசனே! கவலைப்படவேண்டாம், நம் ஸேனுபதிபுதல்வனேடு ராஜகுமாரனைக் கலியாணத்திற்குப்போ கச்சொல்லுவோம், அவனங்கு சென்றிவ்விடத்திய விருத்தா ந்தத்தைத் தெரியப்படுத்தி முகூர்த்தத்தை நடத்திக்கொள்ள ட்டும், நாம் மெது சேனையுடன் அந்த வேடராஜனேடு யுத்தஞ் செய்து ஜெயம்பெற்றுப் பிறகு சென்று நமதிஷ்டப்படி பிறகு விஸ்தாரமாய் நடத்திக்கொள்வோமென்று சொன்னன். அரச னுமதற்குச்சம்மதித்துப் பிள்ளையை வேண்டியசிலவுக்குங்கொ டுத்து வஸ்திராபரணங்களா லலங்கரித்து சேனுபதிபுதல்வனு டன் கூட்டியனுப்பினன்.

பதினெட்டாவது அத்தியாயம் முற்றும்.

பத்தோன்பதாவது அத்தியாயம்.

இராஜகுமாரனுக்கு மித்திரனும் ஐந்துவயதுக்கு முதிர்ந்தவனுமான வீரசூரனென்ற ஸேனாபதி குமாரன் தனக்குசிதமான வஸ்திராலங்காரங்களுடன் குதிரையேறிப் பின்றொடர்ந்துவர ராஜகுமாரனும் மாப்பிள்ளைக் கோலத்துக்குரிய வஸ்திராலங்காரங்களுடன் பிதாவின் கட்டளைப்படி விதர்ப்பதேசத்தைக்குறித்துச் சென்றான். விதர்ப்பதேசத்திற் கொருயோஜனை தூரத்திற்கிப்பால் ஸரோ விருக்ஷங்களுடன் கூடியவோர் வனத்திலிறங்கி யிருவரும் மரத்தடியில் வஸ்திராபரணாயுதங்களைக் கழற்றிவைத்துவிட்டுக் குதிரைகளையும் மேயவிட்டு ஸ்நாநத்திற்குச்சென்றார்கள். சேனாதிபதியின் மைந்தன் சீக்கிரத்தில் தன்னுடைய நித்தியகர்மங்களை முடித்துப் பலங்களைப்புசித்து மரத்தடிவந்து நிருபகுமாரனின் வஸ்திராபரணங்களைத் தானணிந்துகொண்டு இருவராயுதங்களையுந்தான் கையிலேந்திக்கெட்டவெண்ணத்துடன் தன் குதிரையைத் தூரத்திலோட்டிவிட்டு மரத்தடியில் வீற்றிருந்தான். இராஜகுமாரன் ஸ்நாநஞ்செய் தனுஷ்டானம் முடித்துப்பலங்களைப்புசித்து மரத்தடிவந்து தன் வஸ்திராபரணாயுதங்களைத் தரித்திருக்குஞ் சேனாதிபதியைக் கொடுக்கும்படி கேட்டான். அதற்கு துஷ்டனரசனைப்பார்த்து அடா வேலைக்காரா! நானே ராஜகுமாரன் வைதர்ப்பியை நானே மணந்துகொள்ளப் போகின்றேன், நீ சேவகனுடைய நிலையிலேயே யிருக்கவேண்டும், தவறினாலென் கத்திக்கிரையாக்கிவிடுவேனென்று கொர்ச்சித்துச்சொன்னான். அரசகுமாரன் நிராயுதனாயிருந்ததா லம்மூர்க்கனிடமிருந்திப்பொழுது தப்பித்துக்கொள்ளும்பொருட்டு அவன் கட்டளையை யங்கீகரித்துக்கொண்டான். சேனாபதி யரசகுமாரன் குதிரையி லரசகுமாரன்போலவும், அரசகுமாரன் வேலைக்காரனைப்போற் கால்நடையாகவும் விதர்ப்பதேசஞ் சென்றார்கள். அரசகுமாரன் வரவைக் கேள்விப்பட்டு விதர்ப்பராஜன் மந்திரிமுதலியவருடன்னெதிர்சென் றழைத்துவந்து ராஜகுமாரனாக நினைத்திருக்கும் சேனாதிபதியை சம்மந்திகளுக்காக வமைத்திருக்கும் ஜாகையில்விட்டு மரியாதை செய்தார்கள். போ

லி ராஜகுமாரன் அரசன் வரமுடியாமலிருக்குங் காரணத்தை யுஞ்சொன்னான். வேலைக்காரனாயிருக்கும் ஸ்கந்தவர்மன் குதிரையைக்கட்டி வேலைக்காரன்விடுதியிற்றான் தங்கியிருந்தான் மறுநாள் விவாகத்தின்பொருட்டுப் பூர்வாங்கமான காரியங்கள் நடந்துகொண்டிருக்கையிற் குதிரைக்காரர்கள் பில்லுக்காக காடு சென்றார்கள். அவர்களுட னரசகுமாரனுஞ் சென்றான். அரசகுமாரன் தன்னுடைய விருத்தாந்தத்தை நினைத்து மனம்வருந்தித் தன் குலதேவதையாகிய பிரமரபுரீசரைத் துதிக்கலானான். தேவதேவனாயும், பிரமரமென்ற அல்ப ஜந்துவுக்கனுக்கிரகம் புரிந்தவராயும், மூவரையின்றவராயும், உபநிடதங்களாற்றுதிக்கப்பட்டவராயும், பக்தர்களின் நிமித்தம் ஸகுணரூபத்தைத் தரிப்பவராயும், சந்திரனைப்போன்ற வர்ணமுடையவராயும், கற்பகத்தருவைப்போல் விரும்பினவற்றையளிப்பவராயும் ஸத்தியானந்த ரூபராயும், பசுபதியாயும், ஸர்வாபீஷ்டத்தையுமளிப்பவருமான பிரமரபுரீசரைப் பஜிக்கின்றேன். ஆதியந்தமற்றவராயும், அம்பிகாபதியாயும், கைலையில் வீற்றிருப்பவராயும், நந்தி விஷ்ணு முதலியவரால் ஸேவிக்கப்பட்ட பாதபத்மத்தை யுடையவராயும், விருஷபவாஹனராயும், நாசமற்றவராயும், முப்புரத்தை யெறித்தவராயும், முநிகளாற்றுதிக்கப்பட்டவராயுமிருக்கும் பிரமரபுரீசரைப் பஜிக்கின்றேன். உமது கிருபையாலுண்டாய் உமது பாதாரவிந்தத்தையே எப்பொழுதுஞ்சிந்தித்துக்கொண்டு, சூரியகிரணத்தால்வதங்கித் துன்பக்கடலிலாழ்ந்து கிடக்குமென்னை ஸர்வாந்தர்யாமியாகிய நீர் காப்பாற்றவேண்டும். தமது பக்தனாகிய வரசகுமாரன்றுதியால் பிரமரபுரீசர் கிருபைசுரந்து அரசகுமாரன்முன்னாவிர்பவிக்க வரசகுமாரனானந்தக்கடலில் மூழ்கியிருக்கக் கௌரீஸ்கந்தருடன்கூடிய பரமன் மிகக்களிப்புடன் அன்பனே! நீ பயப்படவேண்டாம். இடும்பனென்ற விப்பூதமுன்னிஷ்டம் முடியும்வரையினு முன்பக்கத்திலேயே யிருப்பான். உன் கட்டளையைச் சிரசால் வஹித்து முடித்துக்கொடுப்பான். இவனைக் கொண் டுனக்காகவேண்டிய காரியங்களையும் முடித்துக்கொள்ளென்று பிரீதியுடனனுக்கிரகம் புரிந்து மறைந்தருளினர்.

பூதராஜனு மரசகுமாரனை நோக்கி யிப்பொழுது நானுனக்குச் செய்யவேண்டியதென்னவென்று கேட்கப் பில்லுக்கட்டைக் குதிரைலாயங்கொண்டுவரும்படி கட்டளையிட்டுத் தன்ஜாகைக்குச்சென்றான். அதுவுமவ்விதஞ்செய்து மறைந்துவிட்டது. அன்று விவாஹகாலத்தில் சேனாதிபதி பிராமண ஸ்திரீயைக்கொண்டு மாங்கல்யதாரணமும் பிராமணர்களைக்கொண்டு மந்திரகிரியைகளையுஞ்செய்வித்தான். இராத்திரி நிஷேககாலத்தில் படுக்கையறையில் பக்கத்துக் கதவுகளைத் தாழ்ப்பாளிட அரசகுமாரிக்குக் கட்டளையிட்டான். அவளோர் தாழ்ப்பாளைத்தொட அப்பொழுதரசகுமாரன் பூதத்தை நினைக்க அதின் மகிமையா லரசகுமாரியின்கை தாழ்ப்பாளி லொட்டிக்கொண்டது. அரசகுமாரனவள் கையைப்பிடித்திழுக்க இருவர் கையும் ஒட்டிக் கொண்டது. அதைக்கண்ணுற்ற மணப்பெண்ணின் தாய் தன் பெண்கையைப்பிடித்திழுக்க அவள் கையுமொட்டிக்கொண்டது. அதைப்பார்த்தவரசன் தன் தேவிகையைப் பற்றியிழுக்க அவன் கையும் பற்றிக்கொண்டது. இவ்விதமாய் ஒருவர்கையை யொருவர் பற்றியிழுக்க அவ்விடத்திலுள்ள யாவரு மொட்டிக்கொண்டார்கள். அப்பொழுது வெளிப்பக்கத்திலிதில் ஸம்மந்தப்படாமல் மாப்பிள்ளையின் வேலைக்காரன் மாத்திரம் நிற்பதைக்கண்ணுற்ற மந்திரி யவனை யுற்றுநோக்கினான். தான் முன்பார்த்தத் தியாகவர்மன் புதல்வனாகிய ஸ்கந்தவர்மனிவனாகு னென்று மிவன்யாரோ ஒருவன் மோசடியாய் மாப்பிள்ளைக் கோலங்கொண்ட வனென்றும் மனதில் நிச்சயித்து கையிற்கத்தியை யுருவிக்கொண்டு மாப்பிள்ளை வேஷக்காரனைப்பார்த்து, அடா துஷ்டா உன்னாலேயே யிவ்விடமுள்ள யாவருமொட்டிகொள்ளும்படி நேர்ந்தது. தியாகசோழன் மைந்தனை மோசஞ்செய்து மாப்பிள்ளைக் கோலங்கொண்டவனல்லவா! நீ இராஜகுமாரனல்லவென்பது நிச்சியம். நீ வேலைக்காரனென்று சொன்னவனே தியாகசோழன் மைந்தனென்று நான் நிச்சியமாய் தெரிந்துகொண்டேன். அவனுடைய கிங்கரனாகிய நீ யவனை மோசஞ்செய்து கிங்கரனாகவாக்கிக்கொண்டாயல்லவா? உன்னிடத்திலிவ்வகை மோசமாய்ச் சிக்கிக்கொண்

ட வரசகுமாரன் தன் வல்லமையைச்செய்கையினற் காண்பி வித்தான். துன்மார்க்கனாகிய நீயிப்பொழுதுண்மையைச் சொன்னல் பிழைப்பாய் இல்லாதவரையி லென்கத்திக்கு யிரையாக்குவேனென்று கடுங்கோபத்துட னதட்டிச் சொன்னன். வீரசூரன் பயந்து நடந்தவைகளையுண்மையாயுரைத்தான். அதைக்கேட்ட வரசன் முதலியோர் வியப்புற்று மனவருத்தமுற்றார்கள். மந்திரிமிகுந்த வெட்கத்துடனரசகுமாரனை வரவழைத்து வணங்கி யரசகுமாரனே! நான் மூடத்தனமாய்ச் செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். உடனேயாவரும் விடுதலையடைந்தார்கள். மந்திரியானந்த மடைந் தரசகுமாரனைக் கட்டித்தழுவியவனை ஸமாதானஞ்செய்தான். பீமராஜன் மனமகிழ்ச்சிகொண்டு விதிப்படித்தன் மகளையவனுக்கு விவாகஞ்செய்துகொடுத்தான். இராஜகுமாரன் றன் தேவியுடன் கலந்து ஸுகித்திருந்தான். இராஜகுமாரியுந்தன் கணவன் ரூபபவுருஷத்தைக் கண்டானந்தக் கடலில் மூழ்கினள். இடும்பனரசகுமாரன் கட்டளைப்படி மன்னார்குடி சென்று சத்துருவாக வந்து யுத்தஞ்செய்யும் வேடராஜனை ஸைன்யங்களுடன் வதைத்தரசனை நோக்கி யிவ்விடம் நடந்தவை யாவையுஞ்சொல்லித் தன்னிருப்பிடஞ்சென்றான். தியாகசோழன் மிக்கக்களித்து மந்திரிமுதலியவருடன் விதர்ப்பதேசஞ்சென் றவ்வரசனு லுபசரிக்கப்பட்டுப் புதல்வனைக் கட்டியணைத்து விதிப்படியொருமாதம் விவாஹமகோத்ஸவம் நடத்திப்பார்த்து மிக்கக்களிப்புற்றான். பிறகு குமாரன் நாட்டுப்பெண்ணுடன் தன்னரசாக்ஷிசென்று மிகுந்தமகிச்சியுட னரசாண்டுவந்தான். ஸ்கந்தவர்மனுந் தன் மனையாளுடன் சுகித்திருந்தான்.

பத்தோன்பதாவது அத்தியாயம் முற்றும்.

இருபதாவது அத்தியாயம்.

கேளும் வாகீசமுனியே! ஒருநாள் ஸ்கந்தவர்மன்றன் பிதாவை வணங்கி யநுமதி பெற்றுத் தேசாந்திரம் சென்றாங்காங்குள்ள விசேஷங்களைப் பார்த்து வர விருப்புற்றுத்தன் மனை

யாளுடன் விதர்ப்பதேசஞ்சென் றங்கு சிலநாள் தங்கியிருந்தான். பிறகு மனையாள் முதலியவரிடம் விடைபெற்று வடக்குத்திக்கு நோக்கிச்சென்று விந்திய பர்வதச்சாரலிலுள்ளபெருங்காட்டிற் புகுந்து வெளிப்பட வழிதெரியாமற் றிகைத்தலைந்து திரிந்தான். தெய்வகதியாலோர் விநாயகராலயமும் தன் பக்கத்திலுத்தியானவனங்களும் அவ்வனங்களின் மத்தியிற் சுவர்ண காந்தினுலிரத்தினக் கற்களாலமைக்கப் பட்டிருப்பதையுங் கண்டு பேராநந்தமடைந்து அவ்விடத்திற் றங்கினுன். அங்குள்ள குளத்தில் ஸ்நாநஞ்செய்து நித்தியவிதிகளை முடித்துப் புஷ்பங்களால் விநாயகரைப் பூஜித்துப்பழங்களை நிவேதனஞ்செய்து இருபத்தெட்டட்சரமுள்ள மந்திரத்தை விசேஷமாய் ஜபித்து நிவேதித்தப் பலங்களைப் புஜித்தங்கேயே தங்கியிருந்தான். மறுநாளிரவில் நித்திரை பிடிக்காமலே லெழுந்து தோட்டத்தி லுலாவிக்கொண்டு குளக்கரை வந்தான். அவ்விடத்திலிறம்பை முதலிய தேவமாதர்கள்வந்துஆடைகளை கழற்றி வைத்து விட்டு ஜலக்கிரீடை செய்துகொண்டிருந்தார்கள். அதைக்கண்டரசகுமாரன் மோகித்து விநாயகக்கடவுளை நினைத்து மேனகையினுடையை யெடுத்துக் கொண்டாலயத்தைநோக்கி விரைந் தோடினுன். ஓர் புருஷனுடை தூக்கிக்கொண்டோடுவதைக் கண்ணுற்ற மாதர்கள் கரையேறித் தங்களாடையை யுடுத்திக்கொள்ள வாடையற்றமேனகை நாநாவித சிரிங்கார வார்த்தையைச் சொல்லிக்கொண்டு பின்றொடர்ந்து சென்றுள். அரசகுமார னுலயத்துக்குட்புகுந்து கதவை சாற்றிக்கொண்டான். அங்குசென்ற மேனகைக் கதவின் துவாரத்தாலுள்ளிருக்கும் புருஷனழகைக்கண்டு மோகித்து நல்லவார்த்தைகளாற் றன்னுடையைக் கொடுக்கும்படி வேண்டிக்கொண்டாள். அரசகுமாரனென்னுயுட்பரியந்த மெனக்கு மனையாளாயிருக்கிறேனென்று இவ்விநாயகரின்பேரில் பிரமாணஞ்செய்து கொடுத்தாலாடையைக் கொடுப்பேனென்று சொன்னுன். விநாயகருடைய மாயையாலக்கன்னிகை மோகித்தங்கீகரித் தவ்விதமேபிரமாணஞ்செய்து கொடுத்தாள். அரசன்கதவைக் கொஞ்சந்திறந்து புடவையைக் கொடுத்தவளுடுத்திக்

கொண்டபிறகு வெளியேவந்தான். தேவகுமாரி யவனை யாலிங்கனம் பண்ணி முத்தமிட்டுக்கொண்டரசனே! இவ்வளவழகு வாய்ந்த நீரே வலுவில் வந்து என்னையடைந்ததெனது ஜன்மாந்திரஸுக்ருதமே. நானுமது மனைவியென்பதிலையமில்லை. நானிப்பொழுதென் தோழிகளுடன் தெய்வலோகஞ்சென்று பின்னுமோர் ஜாமத்திற்குள்ளிவ்விடம் வந்து சேருகின்றேன். அனுமதி கொடுமென்றுகேட்டனுமதிபெற்றுக்கொண்டு தோழிகளிடத்திலவனைச் சபித்து வந்தேனென்றவர்களுடன் தெய்வலோகஞ்சென்றாள். பிறகு திவ்யாபரண கந்தபுஷ்பான்னங்களுட னிவ்விடம்வந் தரசனுடைய சரித்திரத்தையும் கேட்டானந்தித்துதான் கொண்டுவந்தவைகளை யவனுக்களித்து இருவருமுண்டு தாம்பூலந்தரித்து மனது உவந்து ரதிக்கிரீடை நடத்திப்பேரின்ப முற்றிருந்தார்கள். விடியற்காலத்திற் றன் மோதிரத்தை யரசன் கையிலளித்தரசனே! நானுமதிடம் வரவேண்டுமென்று நீர் நினைக்கும்பொழுதிதனையுமது மார்பில்வைத்து என்னை நினைப்பீரேயானால் நானுமதிடம் வந்து சேர்வேனென்று சொல்லிவிடைபெற்றுப் பொன்னுலகுசென்றாள். அரசகுமாரன் போஜனம்வேண்டும்பொழுதும் சயனகாலத்திலுமவளை நினைப்பான். அந்தந்த காலங்களில் வந்து பசியைத் தணிப்பதுட னிராத்திரியில் சயனித்திருந்து காலையிற் செல்லுவாள். ஒருநாளோர் முனிவனரசகுமாரனிடம் வந்தவனுலுபசரிக்கப்பட்டவன் சரித்திரத்தையும் விசாரித்தறிந்தவனைப்பார்த்தரசனே! என்பிராணனுக்கொப்பானவோர் பிர்மதண்டமென் தபோமகிமையால் சம்பாதிக்கப்பட்டு என்னிடமிருக்கின்றது. யாவருக்குஞ் சாபங்கொடுக்கவும் நீக்கவும் ஸர்வாபீஷ்ட ஸித்தியைக்கொடுக்கவும் ஸர்வசத்துருக்களையு மொருநொடியில் வெல்லவும் கொல்லவும் சக்தியுள்ளது. அதை ஸமந்திரப் பிரயோகத்துடனுமக்களிக்கின்றேனுமது மோதிரத்தை மாத்திரமெனக்குக் கொடுமென்றுகேட்டான். அதற்கரசன் மோதிரத்தை யுமதிஷ்டப்படிக் கொடுக்கின்றேன். அத்தேவகன்னிகை யுமக்குடன்படாதவரையிலவளையுடன் படுத்தவென்னால்முடியாது. தண்டத்தைப் பிறகு கேட்டாலும்

கொடுக்கமாட்டேன். ஸம்மதியானல் தண்டத்தைக்கொடுத்துவிட்டு மோதிரத்தை வாங்கிக்கொள்ளுமென்றான். அதைக் கேட்ட முனிவனும் விநாயகர்மாயையால் மயங்கித்தண்டத்தைக் கொடுத்து விட்டு மோதிரத்தை வாங்கிச்சென்றான். அன்றுபகலிற் போஜனமில்லாத வரசகுமாரன் காய்கிழங்குகளைப் புசித்திருந்தான். தேவகன்னிகையு மரசகுமாரன் தன்னை நினையாததைப்பற்றிக் கவலையுற்றிருந்தாள். அந்திவேளையில் முனிவன் குளித்து மூழ்கி யலங்கரித்துக்கொண்டு மாரில் மோதிரத்தை வைத்துத் தேவகன்னிகையை நினைத்தான். மேனகை யவ்விடஞ்சென்று முனிவனைப்பார்த்து என்கணவனை மோசஞ்செய்து மோதிரத்தை யபகரித்துக்கொண்டதினல் குரூபியான வுனக்கு நானுடன்படுவேனே. ஒருக்காலும் மாட்டேன்; என் மோதிரத்தைக் கொடுத்துவிட்டு என் கணவனிடம் செல்லுகிறேனென்றாள். முனிவன் பெண்ணே என்னுயிர்க்குயிரான பிர்மதெண்டத்தைக்கொடுத் திம்மோதிரத்தை வாங்கி வந்தேன். ஒரு ராத்திரி மாத்திரமெனக் கிணங்கியிருந்து காலையிலுன்மோதிரத்தை வாங்கிச் செல்லென்று சொல்ல அவளுடன்படாததாற் கோபித்துச் சபிக்க வாரம்பித்தான். அதற்குள்ளவள் தன்கணவிடஞ்சென்றாள். முனிவன் கல்லாகக்கடவாயென்று சபித்தான். இவள்ச்சாபத்தாற் கணவன்னெதிர்சென்றதும் கல்லானாள். அரசகுமாரனதைப்பார்த்து வியப்புற்றுபிர்மதண்டத்தால் முனிவன் சாபத்தை விலக்கினன். மேனகைத் தன்னுருவைப்பெற்றுக் கணவனைகட்டியணைத்துமுத்தமிட்டுமுனிவன் நடவடிக்கையைச் சொன்னாள். அரசகுமாரன் கோபித்து பிர்மதண்டத்தால் முனிவனை நமனுலகேற்றி மோதிரத்தை வரவழைத்து மேனகையுடன் சுகித்திருந்தான். மற்றொரு நாள் வேறொருமுனிவ னவ்விடம் வந்தரசன் சரித்திரத்தை விசாரித்தறிந் தரசனைநோக்கி யரசனே என்னிடமோர்குளிகையிருக்கின்றது. அது நினைத்தவிடத்திற் க்ஷணத்திற் கொண்டுபோய்ச் சேர்க்கும். நினைத்த வுருவைக்கொடுக்கும். பிறர்கண்ணுக்குப் புலப்படாமற் றன்னுருவை மறைக்கும். இம்மூன்று வித சக்தியையுடைய இதையுமக்குக்கொடுக்கின்

றேன். உம்முடைய மோதிரத்தை யொருதினம் மாத்திரமெனக்குக் கொடுவென்றுகேட்டு மோதிரத்தை வாங்கிசென்றான். பிறகாசகுமார னம்முனிவனை தண்டத்தால் நமனுலகனுப்பி மோதிரத்தைப் பெற்றுக்கொண்டான். மற்றோர் ஸமயத்திலோர் முனிவன் வந்து நினைத்தவஸ்திரான்ன பூஷண திரவியங்களைக் கொடுக்கும் சோழிப்பையைக்கொடுக்க அதைப் பெற்றவனையும் நமனுலகனுப்பினான். மற்றொருசமயம் வேறொருமுனிவன் வந்திறந்தவரைப் பிழைக்கச்செய்யும் பிரம்பென்னிடமிருக்கிறதென்று மதைக்கொடுக்கின்றேன், மோதிரத்தைக்கொடுவென்று பிரம்பைக்கொடுத்து மோதிரத்தை வாங்கிச்செல்ல இம்முனிவரையு அந்தகனூருக்கு விருந்திட்டு மோதிரத்தைப்பெற்றுக்கொண்டான். பிறகு நான்குமுனிவர்களின் சரீரத்தை வரவழைத்துப் பிரம்பினால் பிழைக்கச்செய்துயிர் பெற்றெழுந்த முனிவர்களை வணங்கி யுபசரித்துங்களருந்தவத்தாற் சம்பாதித்தபொருளே யுங்களுக்கு விக்கினமாய் முடிந்தது. அப்பொருள்களெனக்களிக்கப்பட்ட படியாலினி விக்கினம் வரமாட்டாது. இனி நீங்கள் தவத்துக்குச் செல்லுங்களென்றுரைத்தான். முனிகள் மகிழ்ந்தாசீர்வதித்துத் தங்களிடஞ் சென்றார்கள். அரசகுமாரனுந் தேவகன்னிகையுட னவ்விடத்திற் சுகித்திருந்தான்.

இருபதாம் அத்தியாயம் முற்றும்.

இருபத்தோன்றுவது அத்தியாயம்.

பிறகாசகுமாரன் விநாயகக்கடவுளைப் பணிந்து ஓ விநாயகக்கடவுளே! யுமது கிருபையால்கிடைத்தற்கரிய தேவகன்னிகையையும் தண்டம் குளிகை சோழிபிரம்புகளையு முமது கிருபையால்பெற்றேன். இன்னுமநேக இராஜ்யங்களைப் பார்த்துவிட்டென்னாசாக்ஷி செல்லவிரும்புகின்றேன். என்னை யெப்பொழுதும் பக்கத்துணையாகயிருந்து காப்பாற்ற வேண்டுமென்றுபிரார்த்தித்தவ்விடமிருந்து புறப்பட்டுவெகுதேசங்களைக்குளிகையின் பிறபாவத்தாற் சென்று பார்த்துக்கொண்டு ஹிரண்ய வ

ருஷமென்ற பூபாகஞ்சென்றான். அவ்விடத்தில் பெருவியாதிக்கொண்டவனைப்போ லுருவெடுத்துப் பிச்சைக்காரன்போல் பிச்சைவாங்குகின்ற வியாஜத்தாலவ்விடத்திய விசேஷங்களைத் தெரிந்துகொண்டான். அப்பட்டணவரக்கர்களிராத்திரி வந்து ஜனங்களைப் பிடுங்கித் தின்னபடியா லரசனவர்களை ஜயிக்கமாட்டாமல் தினம் பத்துமனிதர்களும் முன்னூறு மிருகங்களும் கொடுத்துவருவதா யிராசி செய்துகொண் டவ்விதம் கொடுத்துவந்தான். தன்னிராஜ்ஜியத்தில் மனிதர்களும் மிருகங்களும் நாளுக்குநாள் நசித்துவருவதாலரசன் துக்கமடைந்து இவ்வரக்கர்களைக் கொல்லுகின்றவர்களுக்குத் தன் புதல்வியான சுவர்ணாங்கியை விவாகஞ்செய்துகொடுத்துத் தன்னரசாட்சியில் பாதியைக்கொடுப்பதாய்த்தேசங்கள்தோறும் விளம்பரப்படுத்தியிருந்தான். அதைத்தெரிந்துகொண்ட குஷ்டரோகிபோன்றஸ்கந்தவர்மன் அத்தேசவரசன் சபைசென்றுவணங்கியரசனே! நான்பாரதவருஷத்திற் க்ஷத்திரியவம்சத்திற்பிறந்து தனுர்வித்தையைக்கசடறக் கற்றவன். ஆனாலுமென் பூர்வவினையாலிக்கொடிய ரோகமுற்றிருக்கின்றேன். உம்முடைய விளம்பரத்தைக்கேழ்வியுற்றுமதுசத்துருக்களை வதைத்துமது விசுவாஸத்தைப்பெற இவ்விடம் வந்தேன். தீர்க்காலோசனை செய்தனுமதிகொடுமென்றுசொன்னான். அதற்கரசன் நகைக்க மந்திரிசொல்லுகிறான். இவருக்குயுத்தத்திற்குச்செல்லவனுமதி கொடும். அரக்கரிவரைக் கொன்றால் ரோகசரீரத்தைவிட்டு வீரசொர்க்க மடைகின்றார். இவரரக்கர்களைக் கொன்றால் நம்மெல்லோருக்குஞ் சுகமுண்டாகின்றது. ரோகிக்குப் பெண்ணைக் கொடுக்கவேண்டியிருக்குமேயென்று நினைக்காமல் ஜனங்களின் நன்மையைக்கருதிக் கொடுக்கவேண்டுமென்றுசொன்னான். அரசனவ்வாறே யனுமதிகொடுக்க ஸ்கந்தவர்மன் குளிகையா லரக்கரிருப்பிடஞ்சென்று அவர்களைநோக்கி யடாவரக்கர்களே யுங்களைக்கொல்ல ஹேமாங்கராஜனனுப்ப வந்தேன். நீங்களென் கட்டளைப்படி நடந்தாலுங்களை உயிருடன் விடுகிறேன். இல்லாத வரையில் நமனுலகனுப்புவேனென்று

சொன்னான். அரக்கர்கள் கோபித்து யுத்தத்திற்காரம்பித்தார்கள். ஸ்கந்தவர்மன் பிர்மதண்டத்தால் யாவரையுமொரு நொடியில் வதைத்தும் பிறகுபிரமுகாளாய்வந்த வாயிர மரக்கரசிரேஷ்டர்களையும் ஒ க்ஷோஹிணிருக்ஷஸ ஸைன்யங்களையும் நமனுலகனுப்பி யொரு முஹூர்த்தத்தி லரசன்சபை சென்றான். அரசனே! நின்சத்துருக்களாகிய வரக்கர்களை யவர்கள் ஸேனைகளுடன் வதஞ்செய்து ஜயங்கொண்டு வந்தேன். நீர் மந்திரியுடன்சென்று பார்த்துமது வாக்கைப்பாலனஞ் செய்யுமென்றான். இதிலரசன் நம்பிக்கையற்று மந்திரியுடனுங் குஷ்டியுடனுஞ்சென்று துஷ்டர்களும் பலவான்களுமான வரக்கர்கள் யாவரும் ஸைன்னியங்களுடன் மாண்டுகிடப்பதைப்பார்த்து விபப்படைந்து மந்திரி ஸ்கந்தவர்மாக்களுடன் தன் ஸபை வந்து சேர்ந்தான். குஷ்டியை மிகுந்த மரியாதை யுடனுபசரித்து ஸபையோரைப் பார்த்துச் சொல்லுகின்றான். இவ்வீரனொருவனாலேயே அரக்கர்கள் யாவரும் மடிந்தார்கள். இவர் தனுர்வித்தையி லர்ச்சுனனுக்கு ஸமானரென்றும் மூன்றுலோகத்தையும் ஜயிக்கவல்லவரென்றும் நிச்சிபமாயுரைக்கக்கூடும். இவர் க்ஷத்திரியஜாதி தானென்பதிலும் ஸந்தேகமில்லை. ஆனாலிந்த கொடிய ரோகத்தால் பாகியஹீனரா யிருக்கின்றார். ஆயினுமென்வாக்கியப்படி நான்நடந்து விடுகிறேனென்று தன் குமாரியான ஸ்வர்ணாங்கியையுந் தன்னரசாட்சியிற் பாதியையுங் கொடுத்தான். ஸ்கந்தவர்மாவுந் தன் மனையாளுடனரசனரண்மனையிலேயே வஸித்து வந்தான். ஹேமவர்ம ராஜனுக்கைந்து புத்திரிகளுமோர் புதல்வனுமுண்டு. புத்திரிகள் நால்வரும் ஸ்வர்ணாங்கிக்கு மூத்தவர்கள். புத்திரன் சிருவன். மற்றநான்குபெண்களின் புருஷர்களுமிவ்விடமரசனரண்மனையிலேயே மனையாட்களுடன் வஸித்து வந்தார்கள். அவர்கள் தங்கள் ரூபத்தாலும் பதிகளின் ரூபத்தாலுங் கர்வங்கொண்டுயர்ந்த வித்தி பத்மினிஜாதி ஸ்திரீயான ஹேமாங்கியைக் குஷ்டியின் மனையாளென்று பரிஹாஸஞ்செய்தார்கள். இவ்விதமடிக்கடி யிவர்கள் சொல்லிவரவே ஹேமாங்கி வருத்தமடைந்தவர்களைப்பார்த்துச் சொல்லுகின்றாள். உங்கள் புருஷர்களால்

தலையெடுத்துப் பார்க்க முடியாதவரக்கர்களை என்னுயகனொரு நொடியில் வதைத்தார். மேலுமவர் தர்மவான், குணவான், வித்துவான், வாசாலகர், ஸர்வஜனமித்திரன், பாதிராஜ்யத்திற்கரசர். ஏதோகாரணவிசேஷத்தால் தன்னுருவை மறைத்திந்த ரூபத்தைக் காட்டியிருக்கின்றார். சுபாவத்தில் மன்மதஸுந்தரரென்பதிலையமில்லை. கொஞ்சக்காலத்தில் தன்சுயரூபத்தையு மெடுத்துக் கொள்வாரென்று சொல்லித் தன்னிருப்பிடஞ் சென்றாள். மகாபதிவிரதையான இப்பெண் தன் தகப்பன் புருஷர்களுடைய வனுமதியின்பேரில் கோட்டைக்கு வெளிப்புறத்திலுள்ள வரண்மனையிற் றன்கணவனோடு வஸித்துவந்தாள். ஸ்கந்தவர்மன் தன்மனையாளை யின்னுஞ்சோதிக்கக் கருதி யோர்நாளவளைப்பார்த்துப் பெண்ணே இப்பட்டணத்தில் மிகுந்த ரூபமுடைய வோர் தாஸியிருக்கின்றாள். அவளையனுபவிக்க விருப்பமுடையவனாயிருக்கின்றேன். உன்னாபரணத்தை நீ கொடுத்தாயேயானா லவளிடஞ்சென்று அவைகளைக்கொடுத் தென்னிஷ்டத்தைப் பூர்த்திசெய்து கொண்டு வருகிறேனென்றான். அதைக்கேட்டப் பதிவிரதை யுடனே கழற்றிக்கொடுத்தனள். அதை எடுத்துக்கொண்டு குஷ்டரோகிதாஸி வீடுசென்று தாய்க்கிழவியைப் பார்த்து இன்றிரவினுன்மகளெனக்கு இன்பங்கொடுப்பாளாகில் இந்நகைகளைக் கொடுத்துவிடுகிறேனென்று நகைகளைக்காண்புவித்தனன். அதற்குத்தாய்க் கிழவி மகளுன்னுடன் ஸம்பாஷித்து சுகிக்கச் செய்வாளேதவிர சரீரஸம்மந்தப்படமாட்டாளென்று சொல்லவதற்குக்குஷ்டி நீ யவளைக் கூப்பிடென்று சொன்னான். தாய்க்கிழவி மகளைக் கூப்பிட்டு நகைகளைக் காண்புவித்திந்த நாயகன் குஷ்டரோகமுடையவனாயிருந்தும் உன் ஸம்போகத்தை விரும்புகின்றான். நான் ஸம்பாஷிப்பாளேதவிர சேரமாட்டாளென்றுசொன்னேன். அவனுன்னைக் கூப்பிடச்சொன்னதாற் கூப்பிட்டேன். உன்னிஷ்டப்படிச் செய்யென்று சொன்னாள். குஷ்டி அந்நகைகளை யவள் கையிற்கொடுக்கவவளதை நன்றாயப்பார்த்து வியப்படைந்து, ஓ மகானுபாவா! இந்நகைகளரசகுமாரியாகிய ஹேமாங்கியினுடையவை. நீர் இந்நகைகளைக் கொண்டுவந்தபடியாலவள் நாயகனென்று தோன்றுகின்றது.

நீருமது பராக்கிரமத்தாற் கொடியவரக்கர்களைக் கொன்றவர். உம்மாலேயே இத்தேசத்திலுள்ள நாங்களெல்லோருமுயிருடன் சுகித்திருக்கின்றோம். மூன்றுலோகத்தையு மொருநொடியில் ஜயிக்க நீர் சக்தியுள்ளவரன்றோ. நான் ஹேமாங்கியின் நகைகளைவிரும்பமாட்டேன். ஆனாலும்மும்முடைய பாதஸேவையைத்தான் விரும்புகின்றேன். இதுவரையிலுமநேகருடன் ஸம்பாஷணஞ்செய்து பொருளபகரித்தேனே யொழிய வொருவருடனும் சரீர சம்பந்தப்பட்டதில்லை. இன்று தங்களைத்தானெனக்கு சரீர சுகங்கொடுக்கும் நாயகனைவரித்தேன். இனியிவ்வுலகில் வேறொருவரையுங் கனவிலேயும் நினைக்கமாட்டேனென்று சொல்லி அவன்பாதத்தில் விழுந்து கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டாள். பிறகு சிருங்கார சேஷ்டைகளாலவனை சந்தோஷப்படுத்தினாள். குஷ்டியுமவள் குணங்களுக்கு மெச்சி இராத்திரி அங்கிருந்து விடிந்ததுந் தன்னரண்மனைசென்று தாஸியின் நடவடிக்கைகளைச் சொல்லி நகைகளையுங் கொடுத்தான். இஃதிப்படியிருக்க அரசன் மருமக்கள்மார் நால்வரும் வேட்டைக்குச் செல்வதைக்கேழ்வியுற்ற ஸ்கந்தவர்மன் தானுங் காடுசென்று தன்னுருவைத்தரித்து யோகதண்டத்தின் மகிமையா லோரரண்மனை யிபற்றியதில் காட்டிலுள்ள மிருகங்களை யடைக்கச்செய்து மத்தியில் திவ்ய ஸிம்மாஸனத்தில் மேனகையுடன் வீற்றிருந்தான். எவ்வுன ரூபத்தால் கர்வித்த மருமக்கள் நால்வரும் காடுசென்று மிருகங்களகப்படாம லிவ்வரண்மனை வந்திதில் மிருகங்களைப் பார்த்துட்புகுந்தார்கள். அவர்களைப்பிரமதண்டங்கண்டு பிடித்திழுத்து ஸ்கந்தவர்மாவின்முன் கொண்டுபோய்விட்டது. அவர்களுமிவரைப் பார்வதியுடன் வீற்றிருக்கும் பரமசிவமென்று நினைத்துப்பயந்து சரணகதியடைந்தார்கள். அவர்களைப்பார்த்தவர் நம்முடைய அனுமதியன்றி நீங்களிவ்வரண்மனைக்குட் பிரவேசித்ததினால் சிக்ஷிக்கத்தக்கவர்களாயினீர்கள் என்றுசொல்லி சிரோமுண்டனஞ் செய்வித்துக் கணையாழிதரித்திருக்கும் விரல்களையுங்கண்டித்துத் துரத்திவிடச்செய்தான். பிறகு ஸ்கந்தவர்மா மேனகையையனுப்பிவிட்டு பழைய குஷ்டிரூபத்துடன் தன்னரண்மனைசென்றான். இதற்குப்பத்துதினம் சென்றபிறகு சிலநாடகக்காரர்

கள் வந்தரசனனுமதிபெற்று இரவில் நாடகமாடத்துவக்கினு ர்கள். துக்கத்தையடைந்திருக்கும் தன் குமாரியான ஸ்வர்ணு ங்கியை யழைத்துக்கொண்டுபோய்க் காட்டவேண்டு மென்று வனுடனரசன் தேவிவந்து குஷ்டியினனுமதியின் பேரிலழைத் துச் சென்றுள். பிறகு ஸ்கந்தவர்மாவுந் தன்னுருவத்துடன் திவ்ய வஸ்திராபரண கந்தங்களைத் தரித்து திவ்யப்புறவியிலா ரோகணித்து நாடகசாலை சென்றுன். அரசன் முதலியோர்க ண்டு தேவராஜனென்று மதித்தாஸனமளித்து மரியாதை செ ய்தார்கள். அரசன் மருமக்களும் முந்திவனத்திற் கண்டவரெ ன்று பயந்து வந்தனைவழிபாடுகள் செய்து தங்கள்தங்களாஸன த்திலவர் கட்டளையின்பேரில் வீற்றிருந்தார்கள்.

இருபத்தோராமத்தியாயம் முற்றும்.

இருபத்திரண்டாவதத்தியாயம்.

நாடகம் முடிவதற்குமுன் ஸ்கந்தவர்மா தன்னரண்மனை சென்று பழையவுருவத்துட னிருந்தான். போகையிலவன் பாதுகையிலொன்று கீழேவிழுந்துவிட்டது. அது அவன்மனை விகையிலகப்பட அவளதை யெடுத்துத்தன் தாயினிடம் கொ டுத்துவிட்டுத் தன்னரண்மனை சென்றுள். மறுதினமுமிதேமா திரியாகவே யாவும் நடந்தன. இன்றுதினமும் கீழே விழுந்த பாதக்கொறட்டை ஹேமாங்கியெடுத்துத் தாயினிடங்கொடுத் தம்மா இரண்டு தினமாய் நாடகத்திற்கு வந்து பிதா முதலிய வராற் பூஜிக்கப்படுந் திவ்யபுருஷனுடைய பாதுகைகளிவைக ள். அவரேறிவந்த புறவிகளின் பாதவடிகளென் னரண்மனை வாசலிலிருக்கின்றன. ஆகையாலத் திவ்யபுருஷ னென்னுயக னென்றே தோன்றுகிறதென்று சொல்லிவிட்டுத் தன்னரண்ம னை சென்றுள். மூன்றுந்தினமும் ஸ்வர்ணங்கியைத் தாயுடன் நாடகஞ்செல்வதாக புருஷனிடம் சொல்லிவிட்டுத் தாயுடன் மறைவில் மறைந்திருந்தாள். பிறகு ஸ்கந்தவர்மன் தன்னுரு வை யெடுத்துத் திவ்ய வஸ்திராபரண கந்தயுக்தனுய்த் திவ்ய புறவியேறவாரம்பித்தான். இதை ஹேமாங்கித்தன் தாய்க்குக் காண்புவித்துத் தாயையனுப்பிவிட்டவனிடஞ்சென்று காலில் விழுந்து காலைப்பிடித்துக்கொண்டுரோதனத்துடன் என் நாதா

இப்பேர்ப்பட்ட பதியை யடைந்தும் ரோகியாய்ப் பார்க்கின்ற நான் நிர்பாக்கியசாலியான மகாபாபி. ஏதோ ஜன்மாந்திரத்தி லுள்ள புண்ய விசேஷத்தாலிப்பொழுது சுயரூபத்துடன் பார்க்கப்பெற்றேனென்று பரிதபித்தனள். புத்திசாலித்தனமாய்த் தன்னைத் தன் மனையாள் கண்டுபிடித்ததற்காக ஸ்கந்தவர்மன் சந்தோஷப்பட்டு வெகு பிரீதியுடனாலிங்கனஞ்செய்து தன் பிதாம்பரத்தாலவள் கண்ணீரைத் துடைத்துத் தன் குதிரையிற் றூக்கிவைத்துக்கொண்டு நாடகசாலைச் சென்றனன். இன்றித்திவ்ய புருஷன்றன் குமாரியுடன் வந்ததாலரசன் சங்கையுற்றுக் கேட்கபயந்திருந்தான். மற்றுமுள்ள அரசன் புத்திரிகளும் மருமக்கள்மார்களும் ஹேமாங்கி குஷ்டியாகிய தன் கணவனைக் கைவிட்டு இத்திவ்ய புருஷனைக் கிரகித்துக்கொண்டனளென்றவளை நிந்தித்து ரகஸ்யத்திற் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுதவ்விடம் வந்த ஹேமாங்கியின் தாய்த்தன் நாயகனை அரசனிடத்தில் ஹேமாங்கி யரண்மனையில் நடந்த விசேஷத்தையும் குஷ்டியே இத்திவ்ய புருஷனென்றும் ஸந்தேகமறச் சொன்னள். அரசனனந்தமடைந்து மகளுடன் கூடிய மருமகனை மரியாதையுடன் விசேஷமாயுபசரித்து ரத்தினத்துடன் கூடிய சுவர்ணமும் சுவர்ணத்துடன் கூடிய விரத்தினமும் பிரகாசிப்பதுபோலிப்பொழுது நீங்களிருவரும் கூடியிருக்கிறதென்று சொல்லி யிப்பொழுதுசான் நான் கிருதார்த்தனுகவானேன் எனக்கிடு மூவுலகினு மொருவருமில்லை. என் குழந்தை ஹேமாங்கிக்கீடான பாகியசாலிகளு மில்லையென்று மகிழ்ந்து யாவருடனுந் தன்னரண்மனை சென்றான். விதிப்படி ஹேமாங்கியை ஸ்கந்தவர்மனுக்கு விவாகஞ்செய்து கொடுத்தான். ஸ்கந்தவர்மாவுமவ்விடமிருந்து தன் மனையாள் முதலியவரைக்களிக்கச்செய்து வந்தான். மற்ற மருமக்கள்மாருங் காட்டில் தங்களுக்கு சிக்ஷை விதித்தவனிவன்றானென்று லச்சையுடன் பயந்து மிருந்தார்கள். ஸ்கந்தவர்மனவர்களை முன்போலவேசெய்து யாவர்களிடத்திலும் விடைபெற்றுத் தாவியையும் மனையாளுடனழைத்துக்கொண்டு விதர்ப்பதேசஞ்சென்றங்கு சிலநாள் தங்கியிருந்து வைதர்ப்பியையுமழைத்துக்கொண்டு தன்னாடுசென்று பெற்றோர்களை வணங்கி நடந்தவைகள் யாவையுஞ்

சொல்லி மேனகையையும் வரவழைத்து யாவருக்குங் காண்பு வித்தான். பிறகு மேனகை மாதத்தில் நான்கு தினம் தன்னி டம் வருகிறதென்றேற்பாடுசெய்துகொண்டு ஸப்தத்தீவையும் ஜயித்து ஸார்வபௌமனுயரசாண்டு வந்தான். தேவராஜாவின் வேண்டுகோளின் பேரிற் சென்றநேக தானவர்களை வதைத்திந் திரனுக்குதவிபுரிந்தான். பிறகநேக யாகங்களைச்செய்து தேவ ர்களையும் பிராமணர்களையுங் களிக்கச் செய்தான். வஸ்திரா பரணங்களாற் குடிபடைகளையும் மந்திரிமுதலிய உத்தியோக ஸ்தர்களையும் சந்தோஷப்படுத்தினான். மேனகையினிடத்திற் பரதனென்றும் ருக்குமாங்கியினிடத்தில் ருக்குமாங்கனென் றும் ஹேமாங்கியினிடத்தில் ஸத்யஜித்தென்றும் தாஸியினி டத்திற் குணவானென்றும் புத்திரர்களுண்டானார்கள். அவர்க ளுக்குத் தண்டம் முதலியவைகளையும் ராஜ்யத்தையும் பங்கிட் டுக்கொடுத்து மனையாட்களுடன் பிரமரபுரிசென்று யமாதிஸா தனங்களை அவலம்பித்துத் தவத்திலிருந்தான். பரமன் கருணை யுற்றுத் தரிசனமளிக்க ஸ்கந்தவர்மா வந்தனைபுரிந்து துதிப்ப தானான். பரிதிருசியமான யிவ்வுலகம் நித்தியாத்துவைதமான பிர்மமான உம்மைத்தவிர பின்னமானதல்லவென்று உபநிடத ங்களாற் றுதிக்கப்பட்டவும்மை நமஸ்கரிக்கின்றேன். ஒருவ னாகிய சூரியன் அநேக ஜலபாத்திரங்களிலநேகமாய்த் தோன் றுவதுபோல வந்தக்கரண ரூபத்தினு லநேகமாய்த் தோன்று மொருவனாகிய உமக்குநமஸ்காரம். பழுதையிற் பாம்பும் கிளிஞ் சலில் வெள்ளியும் மருபூமியிற்கானல்ஜலம்போலுமுள்ள மிவ் வுலகு எவரை யறிவதால் மித்தையாகவாகின்றதோ வப்பேர் ப்பட்ட உமக்கு நமஸ்காரம். எவர் ஜலத்திற்குளுமையு மக்கி னியிலுஷ்ணமும் சூரியசந்திரர்களில் தேஜஸூம் புஷ்பத்தில் மணமும் போலெங்கும் வியாபித்திருக்கின்றாரோ அப்பேர்ப்ப ட்ட உம்மை நமஸ்கரிக்கின்றேன். கண்ணில்லாமற் பார்க்கின் றவராயுங் காதில்லாமற் கேழ்க்கின்றவராயும் காலில்லாமல் நட க்கின்றவராயும் வாயில்லாமற் பேசுகின்றவராயுமிருக்கின்றவர் யாரோ அப்பேர்ப்பட்டஉம்மை நமஸ்கரிக்கின்றேன். எவரை வேதங்களும் தேவர்களும் யோகிகளுமுள்ளபடி அறியமாட்டா ர்களோ அப்பேர்ப்பட்ட உம்மை நமஸ்கரிக்கின்றேன். நீர் நாம

கோத்திர ஜன்மமற்றவராயிருந்தாலு முலகத்திற் கீசனாயிருந் து பக்தாளுக்கு புருஷார்த்தங்களை யளிக்கின்றீர். நீயொருவ ராயிருந்தாலு மும்மிடத்திலனேக முண்டாகின்றது. ஸர்வருப ரான உம்மை நமஸ்கரிக்கின்றேன். அரசன் துதியால் பரமான ந்தமடைந்து நீ உன் பாரியைகளுடன் ஓர் கல்பம் கைலாயத்தி லிருந்து பிறகு நமது ஸாயுஜ்பத்தை யடைவாயென்று வரமளி த்து விமானத்திலேற்றி நந்தி முதலிய கணங்கள் வாத்திய கோஷம் செய்ய கைலாயமழைத்துச்சென்றார். ஸ்கந்தவர்மனீ சன் ஸமீபத்திலுமவன் தேவிகளம்பாள் ஸமீபத்திலுமிருந்து பிர்மானந்தமனுபவித்து வந்தார்கள். ஸ்கந்தவர்மாவின் சரித் திரமான பிரமரேசரினிந்த லீலையைப் படிப்பவர்களுங் கேழ்ப் பவர்களும் ஸ்கந்தவர்மனைப்போல புக்தியையுமுக்தியையுமடை வார்கள்.

இருபத்திரண்டாவதத்தியாயம் முற்றும்.

இருபத்து மூன்றாவதத்தியாயம்.

வாகீசமுனிவன் பிரமனைநோக்கி ஓ பிதாமகனே! அநேக சரித்திரங்களுடன் பிரமரேசரின் மகிமையைச் சொன்னீர். அ ந்த க்ஷேத்திரத்திலுள்ள மூர்த்திகளுடையவும் தீர்த்தங்களு டையவும் மகிமையைச் சொல்லியருளவேண்டுமென்று கேட் க பிரமதேவன் சொல்லலுற்றார். ஓ வாகீசமுனியே! அக்ஷேத் திரத்தில் கணபதிஸ்கந்தர், அம்பிகை, தக்ஷிணாமூர்த்தி, சந்தி ரசேகரர், நடராஜர், கங்காதரர், ஸோமாஸ்கந்தர், பைரவர் எ ன்ற மூர்த்திகளும் ஹரிச்சந்திரநதி, மதுதீர்த்தமென்ற தீர்த்த ங்களும் பிரஸித்தியானவை. இவைகளில் முதலில் விநாயகரு டைய மகிமையைச் சொல்லுகின்றேன்; ஸாவதானமாய்க்கே ளும். சோழதேசத்தில் ஸோமதத்தனென்ற அரசன் யௌவன த்துடன் கூடிய இந்திரையென்ற மனையாளுட னரசாண்டு வரு கையில் அவன் மனைவி கர்ப்பமாகிப் பத்தாவது மாதத்திலோ ர் புதல்வனைப்பெற்றாள். அக்குழந்தை கூனலும் செவிடும் கை கால்முடமும் ஊமையும் பெருவியாதியுள்ளதுமாக இருந்ததா லரசன் மனைவி புலம்பியழ அரசன் சமாதானப்படுத்தி மணிம ந்திர ஔஷதங்களாற் சிகிச்சை செய்வித்துவந்தான். இவ்வித

ம் பன்னிரண்டு வருஷம்செய்துவந்தும் பிரயோஜனமில்லாமை யாலரசன் வெறுப்புற்றுத் தன் வேலைக்காரர்களை வரவழைத்து நீங்கள் நமது குமாரனை இம்மாம்ஸபிண்டத்தை இத்தேசமன்றி பாண்டியசோழ தேசங்களில் நிர்மானுஷ்யமான காட்டிற் போட்டுவிட்டுவந்து நமக்குச் சுபசமாசாரம் சொல்லவேண்டுமென உத்திரவளித்தான். அவர்கள் கையெடுத்துவந்து தெய்வீகமாயிந்த பிரமரேசம்வந்து விநாயகருடைய ஸன்னிதியில் போட்டுவிட்டுச் சென்றரசனுக்குமறிவித்தார்கள். குருடாயும் ஊமையாயும், முடமாயும், செவிடாயும், ரோகியாயுமுள்ள அக்குழந்தைப் பசியினாற் பீடிக்கப்பட்டு இந்தஸ்தானம் காடென்று புத்தியாலறிந்து ஸர்வத்திற்கும் மூலகாரணமான பொருளை மனதால் நினைத்து ஜகத்திற்கு மூலகாரணமாயும் ஸ்வதந்திரமாயும் பரமாத்துமாவாயுமிருக்கப்பட்டது எதுவோ அதற்கு நமஸ்காரமென்று துதித்தான். இருப்பத்தினான்கெழுத்துடன்கூடிய இம்மந்திரத்தையே தியானத்துடன் மூன்றுநாள் ஜபித்துவந்தான். பக்தபாலகராயும் சுவதந்திரமாயுமுள்ள விநாயகமூர்த்திக் கிருபையுற்றுப் பிராம்மண ரூபத்துடன் ஆவிர்ப்புவிக்க அவர் வீக்ஷண்யத்தால் பாலகன் சர்வதோஷங்களும் நீங்கி கோடிமன்மதனுக்குச் சமானமான ரூபத்தை அடைந்தான். உலகத்திற்கு மூலகாரணமானபொருள் தன்முன் பிராம்மணவடிவுடன் நிற்பதைக்கண்டுகளித்து நமஸ்கரித்தஞ்சலி செய்துகொண்டவர் கிருபையால் ஞானமுற்றுத் துதிப்பதானான். பரத்துக்கெல்லாம் பரமாயும் கிருபாநிதியாயும் தமதிச்சையால் கஜமுகத்துடன் பார்வதீபரமேசுவரர்களுக்குப் புத்திரராய் ஆவிர்புவித்தவராயும் யாவராலும் ஸர்வகர்மாதியிற் பூஜிக்கப்பட்டுச் சித்தியையளிப்பவராயு மிருக்கப்பட்ட கணேசமூர்த்தியை பஜிக்கின்றேன். புருஷார்த்தங்கள் நான்கையும் நான்குகைகளினால் அளிப்பவராயும் பாம்பாற்கட்டப்பட்ட வயிற்றிலநேககோடி பிர்மாண்டங்களையுடையவராயும் தமதுபாதங்களால் பக்தர்களினுபத்தை விலக்குகின்றவருமான சிவபுத்திரராயிருக்கும் கஜானன மூர்த்தியைப் பஜிக்கின்றேன். பலமுள்ள மூஷகத்தின் முதுகில் வீற்றிருப்பவராயும் கணஸார்வபௌமராயும் ஆசிரியித்தவர்களை இரக்ஷிப்பதிற் சிரேஷ்டராயும்

தம்பக்தர்களின் விக்கினத்தை நீக்கியருள்புரிகின்றவராயுமிருக்கும் விக்கினராஜரைப் பஜிக்கின்றேன். சூர்ப்பகர்ணராயும் குஹாக்கிரஜராயும் பெரிதான விக்கனங்களை விலக்குகின்றவராயும் வேதபுராணங்களாற் றுதிக்கப்பட்டவராயுமிருக்கும் கஜானன மூர்த்தியைப் பஜிக்கின்றேன். எவருடைய பாதஸ்மரணமானது விக்கினத்தை விலக்கி ஸித்தியைக்கொடுக்கின்றதோ; எவரை யிடைவிடாமல் புத்திசாலிகள் ஹிருதயகமலத்தில் பஜித்து நீக்கக்கூடாத கர்மகாலமயமான பந்தனத்திலிருந்து விடுபடுகின்றார்களோ அப்பேர்ப்பட்ட விக்கினராஜரைப் பஜிக்கின்றேன். தாமரைப்பூவாமக்ஷஸூத்திரம் புஸ்தகம் மாதளையங்குசம் சங்கம் பாசம் மோதகமாகிய இவைகளைக் கையிற்றரித்து கிரீடகுண்டலம் முதலிய பூஷணங்களுடனெவர் விளங்குகின்றாரோ அப்பேர்ப்பட்ட கஜானன மூர்த்தியைப் பஜிக்கின்றேன். பார்வதி பரமேசுவர் அனுராகத்தாலுண்டானவராயும் ஸ்வானுபூகமான சித்சுகமுடையவராயும் குஹருக்குமுந்தியுண்டானவருமான விநாயகமூர்த்தியைத்தவிர வேறொரு மூர்த்தியை நானாசிரயிக்கமாட்டேன். இவ்விதம் செய்யப்பட்ட அரசகுமாரன் ஸ்துதியால் விநாயகர் ஸந்தோஷமடைந்துப் பத்துக்கைகளும் அவைகளி லபயம் முதலியவைகளைத் தரித்தவராய் பிதாம்பரமுடையவராய் அநேக ஆபரணசோபிதராயத்தரிசனமளிக்க அவன் மறுபடியும் நமஸ்கரித்துமது பாதங்களில் பக்தியையுமுமது பக்தர்களில் ஒருவனாய் என்னையும்செய்து இவ்விடத்தில் அபீஷ்டவரதரென்னும் பெயருடனிருந்து எனக்கனுக்கிரகம் புரிந்த ஆனிமாத சுக்கில சதுர்த்தியிலும்மைப் பூஜிப்பவர்களினிஷ்டத்தைப் பூர்த்திசெய்யவேண்டுமென்றும் பிரார்த்தித்தான். விநாயகர் அவ்விதமே யாவுமளித்து ராஜகுமாரனைநோக்கி குழந்தாய் நீ நமது வீக்ஷண்யத்தால் மன்மதசுந்தரனாயும் ஸர்வ வித்தியாபாரங்கதனுமாய்விட்டாய்; நம்மங்குசமான இந்த ஆயுதத்தைக் கைப்பற்றி மூவர்முதலிய யாவரையும் ஜயிக்கச்சக்தனாவாய்; ஸார்வபவுமனாயிருந்தனேக சுகங்களையனுபவித்துத் தேகாந்தத்தில் நமதுலோகத்தையுமடைவாயென்று வரமளித்தங்குசத்தைக் கொடுத்து அங்குசதாரியென்று பெயரிட்டு மறைந்தார். இவ்விதம் வரம்பெற்றுப் பதினான்கு

வயதுடைய அங்குசதாரி அவ்விநாயகரை பக்தியுடனொருமாதம் பூஜித்துத்தன் நகரம்செல்ல விருப்புற்றுக் காட்டுக்குவெளியில் வர அவ்விடத்திலொரு திவ்ய புருஷனைக்கண்டுத் தாங்கள் யாரென்றுவினவ அப்புருஷன் பாலகனுடைய ரூபம் தேஜஸ் வீரியமிவைகளைப்பார்த்து வியப்படைந்து சொல்லுகின்றான். நான் தேவசில்பியான விசுவகர்மா. எனக்குமஞ்சு கோஷையினிடத்தில் வித்புல்லதை யென்றோர் பெண்பிறக்கச்சீராட்டி அன்பாய்அவளைவளர்த்துவந்தேன். அப்பெண்ணை துர்மதனென்ற அசுரனிந்திரன் சூரியன் முதலியவர்களுடன் என்னை ஜயித்து அவளைத்தூக்கித்தன் பட்டணம் சென்று எங்கேயோஒளித்து வைததுவிட்டான். நான் அவள்படும்கஷ்டத்தை நாரதராற்கேழ்விப்பட்டு திரஸ்கரிணி வித்தையை சூரியனிடம் அப்பியஸித்து யந்திரத்தாற் குதிரை செய்துசென்று அரக்கன்வீடுதோறும் தேடியகப்படாமல் என் பிராணனை விட்டுவிட நினைத்து நிர்மானுஷ்யமான இக்காடுவந்தேனென்றான். அதைக்கேட்ட அரசகுமாரன் நான் விநாயகருடைய அருளால் அங்குசாயுதம் பெற்றிருக்கின்றேன்; திரஸ்கரணிவித்தையுடனுமது யந்திரப் புரவியைக்கொடுத்தால் நான் சென்றவுணனை வதைத்துமது புத்திரியைக் கொண்டுவந்து கொடுக்கிறேனென்று சொன்னான். விசுவகர்மாவும் அதே மாதிரியாய்க் கொடுக்க அரச குமாரனவைகளைப்பெற்றுக்கொண்டு இதற்கைந்தாம் நாளிவ்விடம் வாரும் உமது புத்திரியை அழைத்துச் செல்லலாமென்று சொல்லி விடைபெற்று ஆகாயமார்க்கமாய்க் குதிரையின்பேரிற்சென்று கிரௌஞ்சத்தீவில் கிவுஞ்சமலையில் இறங்கி பழங்கிழங்குகளைப்புசித்து சாயங்காலையிற் குதிரையேறி திரஸ்கரணி வித்தையால் ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமல் அவுணனுடைய ரத்னகசிதமான பட்டணத்தில் பிரவேசித்தான். அவுணராஜனுடைய உத்தியானவனஞ்சென்று சாயரக்ஷை அநுஷ்டானங்களைமுடித்துத்தன் காரியம் நிறைவேறும்பொருட்டு விநாயகக்கடவுளைத் தியானஞ்செய்து கொண்டிருந்தான். இராத்திரி இரண்டாவது யாமத்தில் அன்னபட்சி முதலியவைகளை வேலைக்காரியின் தலையின்மேலேற்றிக்கொண்டு ஓர் அவுணனவ்விடம் பெரிய ஆலமரத்தடிவந்து ஓர் மந்திரத்தை யுச்சரிக்க

பூமிவெடித்தது. அதிலிருந்து ஓர் பெரியவிசித்திர பெட்டியை அவனெடுத்து மற்றோர் மந்திரத்தையுச்சரிக்க பெட்டிதிறந்து ஓர் அத்புதரூபமுள்ள கன்னிகை வெளிவந்து காலைமுதல் நடத்தவேண்டிய ஆவசிய காரியங்களையும் ஸ்நாநம் முதலியவைகளையும் செய்து போஜனம் உண்டு பெட்டிக்குச்சமீபமாய் வந்தவுடன் அவுணன் அப்பெண்ணைநோக்கி ஏ விதுல்லதையே! நானுன்பேரில் மோகங்கொண்டு உன்னைக்கொண்டுவந்துவைத்து மூன்று வருஷத்திற்குமேலாயிற்றே ? நானுன்னை விவாகசம்மந்தமாய்ப் பலமுறை கேட்டும் நீ ஹடாத்காரமாய் ஒருமொழி கூட கூறவில்லை. இன்னும் மூன்று தினத்திற்குள் சரியான மறுமொழி நீ கூறாதவரையில் கட்டாயம் உன்னை வதைசெய்துவிடுவேனென்று சொன்னான். அப்பெண் இதை லட்சியம் செய்யாமல் பெட்டிக்குள் சென்றாள். அவுணன் முன்போலவே பெட்டியை மந்திரத்தாற் பூட்டி பூமிக்குள்வைக்க பூமிமூடிக்கொண்டது. அவுணன் தன் அரண்மனைசென்றான். இவைகளைப்பார்த்திருந்த ராஜகுமாரன் அவுணன் செய்தபடி தான்செய்து பெட்டியைத்திறக்க அதிலிருந்த கன்னிகை இவனைப்பார்த்தாள்.

இருபத்து மூன்றாவது அத்தியாயம் முற்றும்.

இருபத்து நான்காவது அத்தியாயம்.

இவ்வாறு நடந்தவைகளைப் பார்த்திருந்த அரசகுமாரன் இவள்தான் துவஷ்டாவின் புத்திரியென்று நிச்சயித்து தைத்தியன் மந்திரங்களைத்தான் மனதில் வாங்கி அவன்செய்தபடிசெய்து பெட்டியைத்திறக்க அதிலிருந்தபெண் மன்மதசுந்தரனாகிய அரசகுமாரனைப்பார்த்து வியப்புற அரசகுமாரன் துவஷ்டாவின் வாக்கியத்தால் தன்வரலாற்றைச்சொன்னான். அப்பெண்ணும் இவன் வாக்கியத்தில் நம்பிக்கையுற்று இவன்கருத்துக்கிசைய அவள் சம்மதத்தின்பேரில் அரசகுமாரன் பெட்டியை முன்போல்வைத்துவிட்டு அவளுடன்சென்று முன் தங்கின மலையிலேயே இராத்திரி வெகுநேரம் அவளுடன் பேசியிருந்து பிறகு இருவரும் நித்திரைசெய்தார்கள். காலையில் அரசகுமாரன் அவுணன் மந்திரத்தால் இப்பெண்ணை மலைக்குள் வைத்துவிட்

டுத் தான் அவுணன்பட்டணஞ்சென்று தானவர்களை அங்குச த்தால் வதைத்தான். அவுணதூதர்கள் அவுணராஜனிடம் சென்று அசுரஸார்வபௌமா! பதினுன் குவயதுடைய ஓர் அரசகுமாரன் கோட்டைவாசல்வந்து நமது ஏழு அக்குரோணி ஸைன்யங்களையும் வதைத்துவிட்டானென்று சொல்லவேஅதைக்கேட்ட துர்மதாசுரன் ஆயிரம் வெள்ளம் ஸைன்யத்துடன் யுத்த களம்சென்று யுத்தத்திற்கு ஆரம்பித்தான். அரசகுமாரன் கோபங்கொண்டு அங்குசத்தைப் பிரயோகிக்க ஒரு முகூர்த்தத்திற் பாதிஸைன்யத்தைப்பக்ஷித்தது. இராஜகுமாரன் வீர்யத்தைக்கண்ட மந்திரி அவனைப்பார்த்து அரசகுமாரனே நீ எதற்காக இவ்விடம் வந்து எங்கள் ஸைன்யத்தை வதைக்கிருயென்று கேட்க அரசகுமாரன் நான் சேரராஜபுத்திரன். விசுவகர்மா உன்னால் அபகரிக்கப்பட்டத் தன் புத்திரியைக் கொண்டுவந்து கொடுக்கும்படிகேட்க நான் அவனுக்கு அவ்விதம்செய்கிறேனென்று வாக்களித்தபடியால் நான் வந்து கன்னிகையை அபகரித்துக்கொண்டேன். அவளாசையை துர்மதனெழித்து என் கட்டளைப்படி நடப்பானேயானல் நான்அவுணர்களை விட்டுப்போட்டு யென்னரசாட்சி செல்லுகின்றேன். இல்லாத வரையில் துர்முகன் முதலிய யாவரையும் கொன்றுசெல்லுகிறேனென்றுன். அதற்கு மந்திரி கன்னிகையை நீர் அபகரித்துக்கொண்டபடியால் அரசாட்சி செல்லாமலே என் அவுணர்களை வதைசெய்கிறீரென்று கேட்க அரசகுமாரன் கன்னிகையை இரக்ஷிக்கும்பொருட்டு அபகரித்துக்கொண்டேன். உங்களை ஜயிக்காதவரையில் திருடிக்கொண்டுபோனதாக ஆகுமல்லவாவென்றுன். அதற்கு மந்திரி ஸைன்யங்களின் ஓர் பாதியை நீர் ஓர் முகூர்த்தத்தில் வதைசெய்தபடியால் நாங்கள் உம்மாலே ஜயிக்கப்பட்டவர்களாக ஆனேமென்றுன். நானுங்களை ஜயித்ததற்கடையாளமாக என் ஜயசின்னம் இங்கு ஸ்தாபிக்கவேண்டியது. அதாவது தேவலோகத்திலிருந்து நீங்கள் கொண்டுவந்ததை நீங்கள் திருப்பிக்கொடுத்து மனிதஹிம்ஸையை விலக்கவேண்டியதென்றுன். அதைக்கேட்ட அவுணராஜன் அதை அங்கீகரித்து அவனுடன் ஸ்நேகம் பண்ணிக்கொண்டான். அரசகுமாரனும் அவனிடம் விடைபெற்று யந்திரப்புறவி

யேறி மலைபடிவந்து தேவகன்னிகையை வெளிப்படுத்தி அவ ளுடன் பிரமரேசம் வந்துசேர்ந்தான். இராஜகுமாரனுடைய ரூபம் பராக்கிரமம் இதுகளைக்கண்ட கன்னிகை அவனிடத்தி ல் விருப்புற்றவளாயினள். அரசகுமாரன் விசுவகர்மாவின் வர வை எதிர்பார்த்துக் கன்னிகையுடன் மோதாமோத விநாயக ரைப்பூஜைசெய்து கொண்டிருந்தான். அவுணராஜனும் அரச குமாரன் ஆக்கினைப்படி ஐராவதம் முதலியவைகளை விடுதலைசெ ய்து தேவலோகம்போகும்படி அனுமதிகொடுத்தான். அவை கள் தங்களை விடுதலைசெய்த அரசகுமாரனிடத்தில்விசுவாசமு ள்ளவைகளாய்ப் பிரமரேசஞ்சென்று அரசகுமாரனைநோக்கி நீ அவுணனிடமிருந்து எங்களை விடுதலைசெய்தபடியால் நீ நினை க்கும்போது நாங்கள் வந்து உதவிசெய்கின்றோமென்று சொ ல்லின. அரசகுமாரன் திவ்யரூபங்களுடைய அவைகளை நமஸ் கரித்து உங்களுக்குள் யார்யாருக்கு என்னசக்தியென்றுகேட் க ஐராவதம் சொல்லுகின்றது. நானும் மற்றஇவர்களும் க்ஷீர சமுத்திரத்திலுண்டானோம். எனக்குச்சமதியாக என் வம்சத் திலுதித்தவர் அநேகரிருக்கின்றார்கள். சுபகாலத்திலும் சத்து ருவுடன் யுத்தத்திலும் நான் இந்திரனுக்கு வாகனமாக யிருப் பேனென்றது. உச்சைசிரவஸும் அதேமாதிரியாகவே சொல்லி ற்று. நான் திவ்யான்னங்களையும் அதற்குவேண்டிய ஸாதனப தார்த்தங்களையும் படைப்பேன். கட்டிடங்களையும் அமைப்பே ன். சிந்தாமணி சொல்லுகின்றது. எனக்கும் அந்தசக்தியுண் டு. ஆனால் என்னாற் படைக்கப்பட்ட வைகளில் அந்தஅந்த காரியத்தை முடித்து மறைந்துபோய்விடும். ஆனால் ஸம்பத்து க்கள்மாத்திரம் ஸ்திரமாயிருக்கும். கல்பகத்தருசொல்லுகின் றது. எனக்குமந்தசக்தியுண்டு. ஆனால் புஷ்பம், கந்தம், படுக் கைமுதலியவைகளேநீடித்திருக்கும். மற்றவைகள் சங்கல்பித் தகாரியம் முடிந்தவுடன் மறைந்துவிடுமென்றது. ராஜகுமாரன் உங்கள் வைபவத்தைக்கேட்டுத் திருப்தியடைந்தேன். உங்க ளுடைய ஆக்ஞைப்படி சமயத்தில்வந்து உதவிசெய்யவேண்டு கிறேனென்றான். அவைகளும் அங்கீகரித்து ராஜபுத்திரனுக்கு அநுக்கிரகம்புரிந்து தேவலோகஞ்சென்றன. அவைகள் ராஜ புத்திரன் பிரபாவத்தை இந்திரனுக்குச்சொல்ல தேவராஜாகே

ட்டு மகிழ்ச்சியடைந்தார். விசுவகர்மா ராஜபுத்திரன் சொன்ன படிப்படிபிரமரபுரம்வந்தான். அவன் மனைவியையும் அவனையும்ராஜபுத்திரனும் அவன் குமாரியும் வந்தனஞ் செய்தார்கள். ராஜபுத்திரன் நடத்திய காரியத்தைச் சொல்லி உமது குமாரியையும் குதிரையையும் பெற்றுக் கொள்ளு மென்றான். அரசகுமாரன் வாக்கியத்தைக்கேட்ட விசுவகர்மா அவன் ரூபம் குணபராக்கிரமங்களுக்கு மகிழ்ந்து நீயேசூரன்; நீயேஜிதேந்திரியன். குதிரையை நீயே சொந்தமாய் யெடுத்துக்கொள். நான் தேவராஜாபட்டணத்துக்கு சமதியான ஓர் பட்டணம் நிர்மாணஞ்செய்து உனக்குக்கொடுத்து என் குமாரியை உனக்கு விவாஹம் செய்துகொடுக்க விரும்புகின்றேன் என்று சொல்லி ஆலிங்கனஞ்செய்து சுவர்க்கம் செல்லத் துவக்கினன். அப்பொழுது வித்யுல்லதை தகப்பனைப்பார்த்து நான்இராஜகுமானைவிட்டு சுவர்க்கம் வரமாட்டேன். நான்காந்தர்வவிவாஹஞ் செய்துகொண்டு அவனுடனிருக்கின்றேன். பிறகு உங்களிஷ்டப்படி விவாஹம்செய்துகொடுங்களென்றாள். அவனும்அவ்விதமே அனுமதிகொடுத்து மனையாளுடன் சுவர்க்கஞ் சென்றான்.

இருபத்து நான்காவது அத்தியாயம் முற்றும்.

இருபத்தைந்தாவது அத்தியாயம்.

அங்குசதாரியென்ற அரசகுமாரன் வித்யுல்லதையை விநாயகருடைய ஸன்னிதியில் காந்தர்வ விதிப்படி அவளைக்கிரகித்துக்கொண்டான். பிறகு அவ்விடத்திலேயே இரவில்வசிக்கக்கருத்துற்றபொழுது வித்யுல்லதையானவள் தன் நாயகனை நோக்கி நாதா யென்பிதாவினல் நான் சில்பவித்தையில் சிக்ஷிக்கப்பட்டிருக்கின்றேன். நான் நம்முடைய சயனத்தின்பொருட்டுத் திரவானுல் பிராசாதம் சயனம்முதலியவைகளைநிர்மாணம்செய்கிறேனென்றுசொன்னாள். அவனும் அனுமதிகொடுக்க அவளும் அவ்விதமே சிருஷ்டித்தாள். இருவரும் திவ்ய சயனத்தில் சயனித்துக்கொண்டார்கள். இவ்விதம் ஒருமாதம் அவ்விடத்திலேயே வஸித்து வந்தார்கள். அவர்களுடைய ஸ்மரணத்தினல் இரண்டு காலங்களிலும் காமதேனுசென்று போஜனமளித்தாள். கந்தபுஷ்பம்முதலியவைகளைக்கல்பகத்தருவளி

த்துவந்தது. ஒரு மாதத்திற்குப்பிறகு விநாயகரைப் பூஜித்துப் பிரார்த்தித்து யந்திர அசுவமேறி வடக்குநோக்கிச்சென்றார்கள். ஐராவதி நதிதீரம் சென்றபொழுது அரசகுமாரன் அவ்வனத்தைப்பார்த்து வியப்படைந்து தன் மனையாளைநோக்கிப் பெண்ணே நூறுயோஜனை தூரம் விஸ்தீர்ணமுள்ள இவ்வனத்தை நாடாக்கிப் பரிபாலனம் செய்ய விரும்புகிறேனென்று சொல்ல அவளும் சம்மதித்தாள். அரசகுமாரன் தானவராஜனை ஸ்மரிக்க அவன் தன்மந்திரி முதலியவர்களுடன்வர தன்கருத்தைச்சொல்லி உன் நூறுவெள்ளம் ஸைன்யங்களையும் ஒருமாதம் என்வசம் இருக்கச்சொல்லவேண்டுமென்றுகேட்க அவன் அவ்விதமே செய்து அனுமதிபெற்றுத் தன்னிருப்பிடஞ்சென்றான். பிறகு விசுவகர்மாவை நினைக்க அவ்விடம் வந்ததும் தன் கருத்தைச்சொன்னான். அதற்கு விசுவகர்மன் நூறுயோஜனையுள்ள இக்காட்டை சுவர்க்கலோகம் போலவும் மத்தியில் இந்திரபுரம்போலவும் சுற்றிலும் அக்கினி முதலியவர்களுடைய பட்டணம்போலவும் சிருஷ்டித்துக்கொடுக்கின்றேன். அதற்காக முதலில் காட்டைவெட்டிச் சுத்தம்பண்ணவேண்டியது. ஒன்பதுவிதமான லோகங்களும், ரத்தினங்களும், ஜ்யோதிச்சிலைகளும் வேண்டியது. அம்மலைகளைக் காண்பிவிக்கின்றேன். அவ்விடத்தில் விஷ்ணு சக்கிரமும் சிலதேவர்களும் காவலிருக்கின்றார்கள் என்றுசொன்னான். அதற்கு அரசகுமாரன் பாதி ஸேனைகளைக் காடுவெட்டும்படி ஏற்பாடுசெய்து பாக்கிஸேனைகளுடனும் விசுவகர்மாவுடனும் அம்மலைகள்சென்று விஷ்ணு சக்கிரத்தையும் தேவர்களையும் ஜயித்து மலைகளைப்பிளந்துக் கண்டங்களை அசுரர்கள் எடுத்துவரும்படி செய்தான். இவ்விதம் மேரு முதலிய முப்பத்தாறு மலைகளைச்சேதித்துக்கொண்டு வந்துசேர்த்தான். விசுவகர்மாவானவன் அவ்வனத்தை தேவலோகம்போலவும் மத்தியில்இந்திரலோகம்போலவும் சுதர்மாவைப்போல் சபையையும் மத்தியில் விநாயக ஆலயங்களையும் நிர்மாணஞ்செய்து இராஜா மந்திரி முதலிய யாவருக்கும் அவரவர்களுக்குத்தகுந்தபடி செய்து நந்தவனம்முதலிய உத்தியானவனங்களைப்போலொத்த உத்தியானவனங்களையும், நதீ, வாபீ, கூபதடாகங்களையும் நஞ்சை புஞ்சை சாகுபடிசெய்யக்கூடி

ய நிலங்களையும் அதற்குவெளியில் காடுகளையும் ஏற்படுத்தின ன். இப்பட்டணமானது மகாவீதி ஆயிரத்துடனும் லக்ஷமுப வீதிகளுடனும் விளங்கியது. நவரத்தினமயமான ஒன்பதுகோட்டைகளையும் அவ்விடங்களில் ஸேனைகள் வஸிக்கும் இடங்களையும் ஏற்பாடு செய்தான். இவ்விதம் நிர்மாணஞ்செய்து ராஜபுத்திரனிடத்தில் விக்ஞாபனம்செய்தான். அரசகுமாரன் விசுவகர்மாவைப்பார்த்து இதில் வஸிக்கத்தகுதியான ஜனங்கள் எவ்விடமிருக்கின்ருர்களென்று கேட்க விசுவகர்மாபுஷ்கரத்தீவில் பிராம்மணர்களும் சாகத்தீவில் க்ஷத்திரியர்களும் கிரவுஞ்சத்தீவில் வைசியர்களும் குசத்தீவில் சூத்திரர்களும் இவ்விதமே மிருகபட்சிகளுமிருக்கின்றனவென்று சொல்ல அரசகுமாரன் அவ்விதமே குடும்பங்களுடன் நான்குவர்ண ஜாதிகளையும் நூறு அக்ஷௌஹிணி ஸைன்யங்களையும் அசுரரால் வரவழைத்து அந்தஸ்துக்குத் தகுந்தபடி திரவியங்களுடன் வீடுகளையும் நிலங்களையும் விர்த்திகளையும் கல்பித்தான். மந்திரிமுதலிய அதிகாரிகளையும் ஏற்படுத்தி பிர்மதேசமென்று பெயரிட்டுத்தான் அரசனை பட்டாபிஷேகம் செய்துகொண்டான். அப்பொழுதே விசுவகர்மா தன் புதல்வியை விதிப்படி விவாகம்செய்துகொடுத்தான். விசுவகர்மாவும் தன் மனையாளோடு பெண்மாப்பிள்ளைகளிடத்தில் விடைபெற்றுத்தன்னிருப்பிடம்சென்ருன். ஐராவதம் முதலியவைகளை அரசகுமாரன் நினைக்க அவைகள் அவ்விதமேவந்து தங்கள் சரீரத்திலிருந்து தங்களைப்போலொத்த தம்பதிகளைச் சிருஷ்டித்துக் கொடுத்தன. சிந்தாமணி சிந்தாமணியையும் கல்பகவிருக்ஷம் கல்பக விருக்ஷத்தையும் சிருஷ்டித்துக் கொடுத்தன. அரசகுமாரன் அவைகளைத்தன் கோசத்தில்வைத்து ஆனந்தித்திருந்தான். இவ்விதம் அங்குசதாரியென்ற அரசகுமாரன் விநாயக மூர்த்தியின் கிருபையால் வித்யுல்லதையென்ற தன் மனைவியோடு சுவர்க்கபோகத்திற்குச் சமானமான போகத்தை அநுபவித்துவந்தான்.

இருபத்து ஐந்தாவது அத்தியாயம் முற்றும்.

இருபத்து ஆருவது அத்தியாயம்.

அங்குசதாரியின் கட்டளைப்படி திக்ஷணனென்றசேனபதி

மந்திரி குஹனென்ற சேனாதிபதியுடன் சென்று ஜம்பூத்வீபம் முழுவதும் ஜயித்துத்தங்கள் மூஷகத் துவஜத்தை ஸ்தாபித்து வருஷவாரி கட்டும்படி சகல அரசர்களையும் ஏற்பாடுசெய்து திரும்பிவந்து அரசனுக்குத் தெரிவித்தான். அங்குசதாரியும் தான் பிலட்சத்திவு முதலிய தீவாந்தரங்கள் சென்றுஅத்தீவு அரசர்களைஜயித்துக் கப்பம் கட்டும்படி திட்டப்படுத்தி வந்து ஸார்வபௌமனாய் அரசாண்டுவந்தான். சக்கிரவர்த்தியின் பிரியத்தை ஸம்பாதிக்கும்பொருட்டு அடிக்கடி அநேக அரசர்கள் வந்து பார்த்துப்போவார்கள். ஓர் சமயத்தில் சேர ராஜன் தன் மந்திரி முதலியவருடன் வந்து இந்த ராஜ்யத்தைப்பார்த்து சந்தோஷித்துச் சக்கரவர்த்தியின் சபைசென்றான். திஷணனென்ற மந்திரி வந்த அரசனுடைய தேசம் முதலியவைகளை விசாரித்துச் சக்கிரவர்த்திக்குத் தெரியப்படுத்தினான். அதைக்கேட்ட சக்கிரவர்த்தித் தன் தகப்பனென்று அறிந்து விதிப்படி நமஸ்கரித்து உபசரித்துத்தன் வரலாற்றைச்சொன்னான். தன் குமாரனே சக்கிரவர்த்தி யென்று அறிந்துகொண்ட சேரன் ஆலிங்கனஞ்செய்து பேரானந்தமுற்றுத் தன்னை மறந்தான். புத்திரனிடத்தில் ஒருமாதமிருந்து தன்னாடுசென்று சிறியதகப்பன் பிள்ளைக்குத்தன் அரசாக்ஷியைக்கொடுத்து மனையாளுடன் பிள்ளையிடம் வந்துசேர்ந்தான். அங்குசதாரி பெற்றோர்களை வணங்க அவர்கள் ஆசீர்வதித்துத் தாயார் புத்திரன் பெருமையைப்பார்த்து மகிழ்ச்சியடைய இருவரும் புத்திரனுடன் சுகமாயிருந்தார்கள். பிறகு அங்குசதாரிக்கு பிதிர்மாதுரு ஸமானமான குணரூபத்துடன் ஓர் புதல்வனுண்டானான். இவ்விதம் மாத்ரு பித்ரு புத்திர பார்யா பந்து ராஜ்ய ஸம்பத்துடன் தேவேந்திரனுக்கும் துர்லபமான போகங்களை அனுபவித்து வந்தான். ஓர் சமயத்தில் அங்குசதாரியின் சபைக்குக் கானேசராகிய கார்க்கிய முனிவர்வர அவருக்கு விதிப்படி வந்தனைவழிபாடுகள் செய்து அவர் ஆஸனத்தில் உட்கார்ந்தபின் அஞ்சலிசெய்துகொண்டு விண்ணப்பஞ் செய்வதானான். ஓ முனி சிரேஷ்டரே! மிகுந்த தோஷமுள்ளவனாய்ப் பெற்றோர்களாலேயேக் காட்டில்விடப்பட்ட நான் விநாயகபெருமானுடைய கிருபையால் உலகத்தில் சிரேஷ்டனாகவானேன். அப்பேர்ப்பட்ட

விநாயகபெருமானே நான் காணபவனும் உபாஸிக்கும் பொருட்டு அவருடைய ஸ்வரூபத்தைத்தாங்கள் கிருபைசெய்து எனக்கு உபதேசிக்கவேண்டுமென முனிவர் அவனைப்பார்த்து பக்தபுங்கவா! நான் உன்வைபவத்தை நாரதராற் கேழ்விப்பட்டு உன்னைப்பார்க்கும்பொருட்டே வந்தேன். ஸித்திபெற்ற காணபத சிரேஷ்டனாகிய உன்னைப் பார்த்து சந்தோஷமடைந்தேன். உனக்குச்சொல்லக்கூடாத ரஹஸ்யமொன்றுமில்லை. ஆகையால் நீ கேட்டதைச்சொல்லுகிறேன்; ஸாவதானமாய்க்கேள். பிர்மமென்றொன்று உண்டென்பதாய்ச் சாஸ்திர யுக்திப்பிரமாணங்களால் அறிகின்றவனே மனிதர்களுக்குள் ஆஸ்திகனெனப்படுவன். அவனுக்குத்தான் பாபபுண்யவிசாரம், தயை, சத்தியம், ஆசாரம், பிறர்பொருளை அபகரிக்காமை, பொறுமை, ருஜுவாயிருத்தல், பிறரை ஹிம்சை செய்யாதிருத்தல், பெற்றோர் முதலிய குருக்களைப்பேணுதல், மன்னுயிரைத் தன்னுயிரைப்போல் நினைத்தல், தேவவேதங்களில் நம்பிக்கை, ஆகிய இப்பத்து தர்மங்களும் சரீரமுடைய யாவருக்கும் பொதுவான தர்மங்கள். பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரனென்று நான்குவர்ணங்கள்; பிர்மசாரி, கிரஹஸ்தன், வானப்பிரஸ்தன், ஸன்னியாசி யென்ற நான்காசிரமங்கள் என்ற இந்த வியவஸ்தையையுடையவர்களே ஆரியர்களென்று கூறப்படுவர். இவ்வியவஸ்தை யற்றவர்களே அனாரியரெனப்படுவர். வேதங்களிற் கர்மகாண்டம் வர்ணாசிரம தர்மத்தையு முபாஸனாகாண்டம் மத தர்மத்தையும் ஞானகாண்டம்பிர்மஸ்வரூபத்தையும் சொல்லும். நான்சொன்ன மூன்றுவித தர்மத்தையுமுடையவனே மனிதர்களுக்குள் உத்தமனென்றும் இரண்டுடையவன் மத்திமனென்றும் ஒன்றையுடையவன் அதமனென்றும் ஒன்றுமில்லாதவன் மிருகத்திற்குச் சமானவனென்று முரைக்கப்படுவன். யோகதர்மங்களென்றுரைக்கப்படும் சாமான்ய தர்மங்களே மூன்றிலும் சிரேஷ்டமானது. வர்ணதர்மம் இரண்டாவதாயும் மததர்மம் மூன்றாவதாயும் கூறப்படும். சாமான்ய தர்மத்துடன் கூடியவர்ணதர்மமே வர்ணபலப்பிரதமாயும் இவ்விரண்டுடன் கூடிய மததர்மமே மதபலப்பிரதமாயுமாகும். சா

மான்ய வர்ணதர்மங்களின்றி மததர்மத்தை மாத்திரம் அனுஷ்டிப்பவன் பாஷண்டனெனப்படுவன். சாமான்ய தர்மத்துடன் மததர்மத்தையும் அனுஷ்டிப்பவனே தாந்திரீகனெனப்படுவன். இத்தாந்திரீகனும் வைதீகர்களால் நிந்திக்கப்படுகின்றவனே. சாமான்ய தர்மமின்றி மதவர்ணதர்மங்களையுடையவன் மிசிரமார்க்கி யெனப்படுவன். வர்ணசாமான்ய தர்மபரனே வைதிகர்களுள் யாராவது மதஸ்தனு யங்கீகரிக்கப்பட்டவன். கேவலசாமான்ய தர்மத்தைமாத்திரமுடையவன் ஆஸ்திகனுள் ஆர்யனெனப்படுவன். ஆகையால் மூன்றுவித தர்மத்துடன்கூடியதே வைதிகமாகும் அதையுனக்குச்சொல்லுகிறேன் கேள். இவ்வுலகத்திற்குள்ளும் புறமும் வியாபித்திருப்பதே பிர்மமென்றும் பிந்துப்பிரகிருதி யோகத்தினுல் சகுணம் சாக்ஷீ மாயோபகிதமென்ற நாமாக்களால் வியவகரிக்கப்படுமென்றும் வேதங்கள் கூறுகின்றன. அப்பிர்மமே சமஷ்டியென்றும் வியஷ்டியென்று மிருவகையாயிருக்கின்றது. முக்குணகார்யமான அநேககோடி பிர்மாண்டங்களுக்காதார பூதமானவரேஈசனென்றும் குணேசரென்று மயவாகிருதரென்றும் வர்ணிக்கப்படுகின்ருர். பிர்மன், விஷ்ணு, சக்தி, சிவன், சூரியனென்றஐந்து தேவதைகளுடைய சமஷ்டிரூபியானஅவரேஉலகில் நான்காவதுபாதமயராயும் முக்குணசிருஷ்டிக்காதாரபூதராயுமுறைக்கப்படுவர். ஸ்தூலஸூக்ஷ்ம காரணங்களுக்கபிமானிகளாய்ப் பின்னமான குணத்துடன்கூடி பஞ்சபூததேஹத்துடன்கூடி மகதஹங்காரம் முதலிய அஷ்டாவரணத்துடன்கூடி சமஷ்டி வியஷ்டி யென்ற பாவத்துடன் ஸ்தூலம் முதலிய மூன்றுவித சரீரங்களையுடைய மித்தியாபாவமுள்ள யாவும் இக்குணேசரிட மிருந்தேயுண்டாயின. பிரமன் முதலிய ஐந்து தேவர்களும் இக்குணேச பிர்மத்தின் வியஷ்டிகளாயும் காரணசரீரத்தாற் கட்டுப்பட்டவர்களாயும் கூறப்படுவர். அந்தக்கரணத்தாற் கட்டுண்டவர்கள் வியஷ்டிகளான ஜீவகோடிகள். காரணசரீரங்களான பஞ்சதேவர்களுந் தங்களிஷ்டப்படி ஸ்தூல ஸூக்ஷ்ம சரீரங்களை யெடுத்துக்கொள்ளுவார்கள். கல்பத்துவக்கத்தில் ஸூக்ஷ்ம சரீரத்துடன்கூடிய ஜீவர்கள் சுவாதீனமற்று கர்மபிரே

ரிதர்களா யுலகத்தில் கர்மானுஸாரமாய் ஸ்தூல சரீரத்தை அடைவார்கள். குணேசரொருவரே ஜீவேசுவரர்களுக்காத்துமாய்க்கூறப்படுவர். சமஷ்டி வியஷ்டியான ஜாக்ரஸ்தூலத்திற்குப் பிரமனும் சுவப்பினத்திற்கு விஷ்ணுவும் சுஷுப்திக்கு ருத்திரனும்அபிமானதேவர்கள். சக்திமூவஸ்தைமயியாயும் ஜகதாத்துமாவான ஸூரியனஹங்கிருதி ரூபியாயுமுறைக்கப்படுவர். பிர்மா ஸூக்ஷும சரீரத்துடன் ஸ்தூலாபிமானியாயும் விஷ்ணுகாரண சரீரத்துடன் ஸூக்ஷுமாபிமானியாயும் சக்தி ருத்திரஸூயர்கள் காரண சரீரத்துடனுமிருப்பவர்கள். ஆகையால் பஞ்சதேவர்களில் பிரமன்தவிர மற்றவர்கள் காரணசரீரத்துடனும் பிரமன்மாத்திரம் ஸூக்ஷும சரீரத்துடனு மிருப்பதால் பிரமனே ஹிரண்ய கர்ப்பனென்றும் முதலாவது சரீரியென்றும் வேதங்களில் வர்ணிக்கப்படுகின்ருர். ஹிரண்யகர்ப்பனை இப்பிரமனுலகசிருஷ்டியின்பொருட்டு சுத்தசத்துவமாயையின் ரஜோகுணத்தால் சரீரத்தை தரிக்கின்ருர். உலகரக்ஷணத்தின்பொருட்டு சுத்தசத்துவமாயையின் தமசின் சத்துவகுணத்தால் விஷ்ணுமூர்த்தியை தரிக்கின்ருர். இவ்விதமே ருத்திரனும் இம்மாயையின் சத்துவத்தின் தமோகுணத்தால் தாம் மூர்த்தியைத் தரிக்கின்ருர். சூரியனுனவர் இம்மாயையின் திருகுணங்களில் சத்துவசத்துவம் ரஜோரஜஸ்தமஸ்தமஸ் என்பவைகளை ஆசிரயித்து மூர்த்தியைத்தரிக்கின்ருர். சக்தியும் இதேமாதிரியாக இம்மாயையின் சத்துவத்தில் ரஜஸையும் ரஜஸில் தமஸையும் தமஸில் ரஜஸையுமாசிரயித்து மூர்த்தியைத் தரிக்கின்ருர். தங்கள்தங்கள் குணபரிணாமமான மூர்த்தியை அடைகின்ருர்கள். ஐந்தாவது ஸ்தீதி ரூபமான சாக்ஷியென்ற பிர்மத்திற்கு சுத்தசத்துவப்பிரதான மாயையே சரீரமாகக்கூறப்படும். அமூர்த்தமான பஞ்சம பிர்ம்மமானது துரீயையா சுத்தசத்துவமாயையால் லோக ரக்ஷார்த்தமாய்த் தமதிச்சையால் மூர்த்தியைத்தரித்துக்கொள்வார். பிரமன் ரஜோகுணப் பிரதானராயும் விஷ்ணுசத்துவ குணப்பிரதானராயும் ருத்திரர் தமோகுணப்பிரதானராயும் சக்தி சூரியர்கள் த்ரிகுண ஸங்கிர்

ளாயும் பஞ்சமஸ்திதியிலுள்ள பிர்மமான கணேசர் த்ரிகுண சாந்தியயராயுமிருக்கின்றார்கள்.

இருபத்தாராவது அத்தியாயம் முற்றும்.

இருபத்தேழாவதத்தியாயம்.

ஈசுவர ஸ்வரூபத்தைத் தெளிவாய்ச் சொல்லவேண்டுமென்று அங்குசதாரிகேட்க கார்க்கியமுனி சொல்லுகின்றார். விசித்திர ஜகந்நிர்மாண ஸாமர்த்திய புத்திரூபமாயையேத்ரிகுண சாந்திரூப மூலப்பிரகிருதி. இவள் நிர்க்குண பிர்மத்தை ஆசிரயத்திருப்பவள். பிரளயத்தில் த்ரிகுண சமரஸபாவத்தை அடைந்திருக்கின்றவள். ஜிளிஞ்சலில் வெள்ளியைப்போல் சிருஷ்டியில் பிரதக்பாவத்தை அடைந்தாள். தைவிப்பிரகிருதியால் மோகத்தை அடைந்த இவள் சத்துவப் பிரதானையாகவானாள். மூலப்பிரகிருதி தைவிப்பிரகிருதியை அடைந்திருப்பது பிர்மம். சுத்தசத்துவமாயையான சமஷ்டி அவித்தையிலுண்டான பிர்ம பிம்பமே அவிபாகிருதமெனப்படும். இதுஜலசூரியன் போலிருப்பது. சாந்திமாயையுடன் கூடினதே ஸாக்ஷியென்றும் மாயோபஹிதமென்றும் உரைக்கப்படும். சுத்தஸத்துவ மாயாபிரதிபிம்பமே வியாவகாரிக ஈசனெனப்படுவன். வியாவகாரிகஈசனை விக்னேசனே பாரமார்த்தேசனுடன் காரணேசனென்றுரைக்கப்படுவன். ஒன்பது பிரக்ஞையுடன்கூடின சுத்தஸத்துவமாயை ஐந்தும் பிர்மாபாவத்தை யுடையவரானர். ஸத்துவஸத்துவம் ஸத்துவ ரஜஸ் ஸத்துவதமஸ் ரஜஸ்ஸத்துவம் தமஸ்ஸத்துமென்பவைகளே. ரஜஸில் ரஜஸ் தமஸில் தமஸிதுகளுடன் கூடின ஸத்துவஸத்துவமான பிரக்ஞையிலுண்டானவனே காலரூபியான ஹிரண்யபுருஷனென்றும், ஸத்துவத்தில் தமஸ், ரஜஸில் ஸத்துவம், தமஸில் ஸத்துவம் என்ற மூன்று பிரக்ஞாபாவ பாகமே ஈசுவரனென்றும் ரஜஸில் தமஸ், தமஸில் ரஜஸிதுகளுடன் கூடின ஸத்துவ ரஜஸபாகமே சக்தியென்றும் கூறப்படும். ஈசுவரன் குலாலன்போலவும் சக்தி மிருத்தைப்போலவும் காலன் தண்டாதிகளைப் போலவுமுள்ள

ன. இவ்வீசுவரனே வியவஹாரதெசையில் பிர்மா விஷ்ணு ருத்திரனென மூன்றுவிதமாய்க் கூறப்படுவன். ஸிருஷ்டி ஆரம்பத்தில் மாயையானவள் தமப்பிரதானியாகவானுள். இப்பிரதானமே ஈசுவரனுக்குக் காரண தேஹமாயும் மஹத்ஸூக்ஷ்ம தேஹமாயும் அஹங்காரம் ஸ்தூலதேஹமாயு முரைக்கப்படும். அஹங்காரத்திலிருந்து வியஷ்டி தேகங்களுண்டாயின. அஹங்காரத்தின் ரஜோகுணத்தை ஆசிரயித்த இவ்விசனே பிர்மாவென்றும் ஸத்துவத்தை ஆசிரயித்து விஷ்ணுவென்றும் தமோகுணத்தை ஆசிரயித்து ருத்திரனென்றும் கூறப்படுவர். காலபுருஷன் தமோகுணத்தினுல் மண்டலரூபியாயும் ரஜோகுணத்தினுல் கிரகாதிபதியாயும் ஸத்துவகுணத்தினுல் மண்டலாந்தர்வர்த்தியாயுமானுன். சக்தியும் ரஜோகுணத்தினுல் பிர்மசக்தியாயும் ஸத்துவகுணத்தினுல் விஷ்ணுசக்தியாயும் தமோகுணத்தினுல் ருத்திரசக்தியாயுமானுள். மாயையின் ஒன்பது பிரக்ஞையில் ஐந்து பிரக்ஞை பிற்றேன்றிய பிர்மாபாஸமே பஞ்சதேவர்களாகக்கூறப்படும். ஸமஷ்டி வியஷ்டி ரூபியான சக்திகாலேச ஸமஷ்டியாகிய குணேசனே ஐந்தாவது நிலையான பிர்மத்திற்கு சரீரமாய்க்கூறப்படுவன். திருகுணமயமான பிரபஞ்சரூபியே த்வம் பதார்த்தமயனென்றும் துரீயனுகிய குணேசனே தத்பதார்த்தமயனென்று இரண்டின பேதமான பஞ்சமபிர்மமே அஸிபதார்த்தமயனென்று முரைக்கப்படுவர். த்வம் பதார்த்தமயனே நரனென்றும் தத்பதார்த்தமயனே கஜமென்றுமஸீமயனே கஜாநநரென்றும் கூறப்படுவர். பஞ்சதேவர்கள் ஈசுவரரென்றும் கணேசர் ஸர்வசாக்ஷி யென்று முரைக்கப்படுவர். அங்குசதாரி முனியைப்பார்த்து பிரமன்தவிர மற்ற நான்குதேவர்களும் பிர்மரூபிகளென்று கூறப்படுகின்றூர்களே அதெப்படியென முனிவர் உரைக்கின்றூர். வித்தியா வித்தியா ஸ்வாநந்த பிர்மவென்று நான்கு பாதங்களுள. இவைகளில் வித்தைமுதலிய மூன்றுபாதங்களுக்கு நான்குபாதங்களுள. பிர்மபாதத்திற்கு ஸம்யோகமயோகம் சாந்தியென மூன்றுபாதங்களுண்டு. ஸம்யோகத்தில் நான்குபாதங்களுளன. சக்திசூரிய விஷ்ணு சிவனென்பவைகளே. இவைகளின் ஸம்யோக

ரூபியான பஞ்சமபிர்மமே கணேசர். இவ்விதம் அவித்தியாபாதத்திற் குணரூபிகளாயும் வித்தியாபாதத்தில் நிற்குண ரூபிகளாயுமிருக்கின்றார்கள். பிர்மா மாத்திரம் வித்தியாபாதரூபிதான். சிவன்முதலிய நால்வருக்கும் பிர்மபாதத்தில் சம்பந்தமில்லை. ஆகையால்தான் பிர்மாவுக்கு மாத்திரம் வேதத்தில் பிர்மத்துவம் கூறப்படவில்லை. இவைகளின் லக்ஷணம் ஸமாதியாலறியவேண்டியது. வியவஹாரத்திற் கணேசர் வித்தியாபாதத்தினைந்தாவது நிலையிலுள்ளவராயும் சுதேச்சையான சரீரத்தையடைந்தபோது துரியராயு முரைக்கப்படுவர். வியவஹாரத்தில் சிவன்முதலியவர் குணரூபிகளாயும் பாரமார்த்தத்தில் துரீயராய் குணேசாபின்னமாயும் வர்ணிக்கப்படுவர். பிர்மாமுதலிய ஐந்து மூர்த்தியுடையவர் குணேசர். அந்தந்த காலங்களில் பக்தானுக்கிரகத்தின்பொருட்டு மூர்த்தியைத் தரிப்பவர்கணேசர். இவர் கஜமுகம்முதலிய பிர்மசின்னங்களுடைய மூர்த்தியைத்தரிப்பார். இவரே ஜீவேசுவரர்களுக்கு ஆத்மாவானபடியால் எல்லாக்காரியங்களிலும் முந்தி பூஜிக்கப்படுகின்றார்.

இருபத்தேழாவது அத்தியாயம் முற்றும்.

இருபத்தேட்டாவதத்தியாயம்.

அங்குசதாரி கணேசரின் உபாஸனையைச்சொல்லவேண்டுமென்று கேட்க கார்க்கியமுனி சொல்லுகின்றார். குரு, பரமகுரு, பராத்பரகுரு, பரமேஷ்டிகுரு, பரப்பிர்மகுருவென்ற ஐவரும் காணேச சமயாசாரிகள். இவர்களில் பரப்பிர்மகுருவென்ற குணேசரே கணகரென்ற பெயருடன் சிருஷ்டியாதியில் மற்ற நால்வருக்கும் குருவாகயிருந்து ஞானமிர்தம் மகாவாக்கியப் பிரஸ்தானம் முதலியகிரந்தங்களைச்செய்து மற்றவர்களுக்குமுபதேசித்தார். அவருடையஸித்தாந்தம் ஞானமிர்தகிரந்தத்தில் கூறப்பட்டிருக்கின்றது. புருஸுண்டிமுதலியவர்களுக்குக் குருவான முத்கலமுனிவர் காணேசஸமயாசாரியகளிலிரண்டாவதானவர். அவருடைய சிஷ்யர்களாகிய புருஸுண்டிமுதலியவநேகர் பிரதிகல்பங்களிலும் குருவாகவிருக்கின்றவர்கள். அவர்சிஷ்யராகிய ஸநகாதிகளுமவ்விதம் குருவாயிருப்

பவர்களே. இவ்விதம் பிருகுமுனியும் வியாஸரும் காணேச ஸ மயகுருவாயிருப்பவர்களே. இவர்களில் முத்கலஸித்தாந்தம் முத்கலபுராணத்திலும் ஸநகாதிகளின் ஸித்தாந்தம் பிராம்ம புராணத்திலும் வியாஸ ஸித்தாந்த மாக்கியான பஞ்சகமென்ற ஞானபாகவதத்திலும் பிருகு ஸித்தாந்தம் கணேச புராணத் திலும் ஸ்காந்த புராணம் பிர்மஸம்ஹிதையிலும் நால்வருடை ய ஸித்தாந்தங்களும் பிர்மாண்ட புராணத்திலும் சொல்லப்பட் டிருக்கின்றன. கணகஸித்தாந்தத்தில் பூமாபிர்மமும் முத்கல ருடைய ஸித்தாந்தத்தில் சாந்திபிர்மமும் பார்கவஸித்தாந்த த்தில் ஸம்யோகாநந்த பிர்மமும் யோகிகளுடைய ஸித்தாந்தத் தில் ஸாங்கியரூப நிர்க்குணபிர்மமும் வியாஸ ஸித்தாந்தத்தில் அஸிரூபபிர்மமும் கூறப்பட்டிருக்கின்றன. மற்ற ஸித்தாந்த ங்களில் பிந்துரூப பிர்மமும் கூறப்பட்டிருக்கின்றன. இவ்வை ந்துவித ஸித்தாந்தங்களையும் கணகர் முத்கலருடையதை ஒன் ருயும் மற்றவைகளை ஒன்ருயும் முனிவர் கூறுகின்ருர்கள். அ வித்யாபாதத்தினந்தாவது ஸ்திதியான வித்தியாபாதத்திலுள் ள கணேசருக்குக் கணுதிபரென்றும் இம்மூர்த்தியே பிந்துபி ர்மமென்ற பிரணவரூபியென்றும் வித்தியாபாதத்தினந்தாவது ஸ்திதியான ஸ்வாநந்தபாதத்திலுள்ள கணேசருக்கு கணநாத ரென்றும் இவரே நிர்க்குண பிர்மமென்றும் ஸ்வாநந்தபாதத் தினந்தாவது ஸ்திதியான பிர்மபாதத்திலுள்ள கணேசருக்கு கணக்கிரீடரென்றும் இவரே ஸ்வாநந்தேசரென்றும் சாந்திரூ பபிர்மமே கணேசரென்றும் கூறப்படும். கணகமுத்கலர்கள் கணேசரையும், பிருகுவியாஸர்கள் கணக்கிரீடரையும், யோகி கள் கணநாதரையும் வேறுசிலர் கணுதிபரையும் காரணமாய்க் கூறுகின்ருர்கள். ஆயினும் இம்மூர்த்திகளில் அவித்தியாபாத த்தினந்தாவது ஸ்திதியே சிந்தாமணித்துவீபமென்றும் அதி லுள்ள வக்கிரதுண்ட மூர்த்தியான கணுதிபரே வேதமார்க்கப் படிப்பாஹ்யாப்யந்தரக் கிரமமா யுபாஸிக்கத்தக்கவரென்றும் அவர் கிருபையாலேயே உபாஸகர்கள் தர்மார்த்தம் காமம் மோட்சம் பிர்மபூயமென்ற ஐந்துவிதஅர்த்தங்களையும் அடை வார்கள். ஜபம் பூஜனமேஉபாஸநமெனப்படும். காணபதோப

க்ஷேத்துக்களிற் கூறிய விதிப்படி ரக்தசந்தனனுலேபனத்துடன் ரக்தசந்தனத்தினுல் திலகமிட்டுக்கொள்வதே கணேச பிரியகரமானபுண்ட்ரம். சுவேதார்க்கமணிகளே காணேசாட்சம். காணேசாட்ச புண்ட்ரங்களைத்தரித்து காணேச தீக்ஷைபெற்று பட்சத்துவய சதுர்த்தி விருதானுஷ்டானத்துடன் ஸாங்கமாக அவர் ஜபத்தையும் பூஜையையும் செய்யவேண்டியது. கீலகம், ஹிருதயம் ஸஹஸ்ரநாமஸ்தோத்திரம், கவசம், ஸ்தவராஜம், வேதபாதஸ்தவம், பிர்ம்மணஸ்பதி ஸூக்தம், அதர்வசிர்ஷம், கீதை ஆகிய இவைகள் உபாஸனைக்கு முக்கியமான அங்கங்கள். காணேச தர்சனமாவது வேதாந்த தர்சனமாவது குருமுகமாய் அப்பிஸிக்கவேண்டியது. ஆக்கியான பஞ்சகமாவது முத்கலபுராணமாவது நிரந்தரம் பாராயணஞ்செய்யவேண்டியது. இவ்விதம் கணேச பக்தியைச்செய்கின்றவன் அதே ஜன்மத்தில் பிர்மசாயுஜ்யத்தை அடைவான். இவ்விதம் கார்க்கியமுனி யுபதேசித்துக் காணேச தர்சனவேதாந்த தர்சன மகாவாக்கிய தர்சன மென்பவைகளுக்குப் .பாஷ்யகர்த்தாவான கார்க்கிய முனிவர் தீக்ஷைசெய்து ஷடக்ஷரத்தை யுபதேசித்து விடைபெற்றுச்சென்றூர். அங்குசதாரியும் கார்க்கியமுனி அருளியபடித் தன்னரசாக்ஷியிலுள்ள சகல ஜனங்களுடனும் கணேச பக்தியைச்செய்துகொண்டு தன்னரசாக்ஷியையும் பாதுகார்த்துவந்தான். இவ்விதம் சிலகாலம் சென்றபிறகு கணேசமூர்த்திக்கிருபையுற்று அங்குசதாரி முதலியவர்களைத்தமதுலகமழைத்துவர விமானங்களை அனுப்பினர். அங்குசதாரிதான் மைந்தனிடத்தில் அரசாக்ஷியை ஒப்புவித்து நகரத்தில் வயோதிகளாய் பக்திசெய்துவந்த ஜனங்களுடனும் பாரியைபெற்றோர்களுடனும் விசித்திரமான விமானமேறி மற்றவிமானங்கள் புடைசூழ்ந்துவர நாநாவித வாத்தியங்கள் கோஷிக்க பிரணவரூபமான சிந்தாமணித்தீவை யடைந்தான். கணேசருடைய சமீபத்தில் அங்குசதாரியும் ஸித்தலட்சுமியின் சமீபத்தில் அவன் மனைபாளும் மற்றவர்களவர்களுடைய தியானத்திற்குத்தகுதியான இடங்களிலும் அமர்ந்து வஸித்து வந்தார்கள். ஏ! வாகீசமாமுனியே மோதாமோத விநாயகருடைய

மகிமையிப்பேர்ப்பட்டது. இந்த வங்குசதாரியின் சரித்திர ரூபமான மோதாமோத விநாயகரின் லீலையைப் படிப்பவருங் கேட்பவரும் ஸகல போக பாக்கியங்களேயுமனுபவித்து மோக்ஷத்தையுமடைவார்கள்.

இருபத்தேட்டாவது அத்தியாயம் முற்றும்.

இருபத்தோன்பதாவது அத்தியாயம்.

வாகீசமாமுனி பிர்மதேவனே நமஸ்கரித்து பிரமரான கையின் மகிமையைச்சொல்லவேண்டுமென்று வேண்ட பிரமன் சொல்லுகின்றூர். சம்பகாரண்யமென்ற பிரதேசத்தில் மன்னூர்குடியென்னும் பட்டணத்தில் விஷ்ணுசர்மாவென்றோரந்தணனிருந்தான். அவன் தரித்திரனுயுடுக்க வஸ்திரமற்று கந்தையுடுத்தி முட்டிவாங்கி ஜீவனம் செய்துவந்தான். அவனுக்கு தனக்கு ஸமதையான மனேயாளிடத்திலிரண்டு புத்திரிகளுமிரண்டு புத்திரர்களுமுண்டானூர்கள். இளேய பெண்ணனது குருடாயும் முடமாயுமிருந்தது. அதினலவ் வேதியன் ஐந்துவயதுவரையில் பார்த்தும் நல்லஸ்திதிக்கு வராமையால் மனவருத்தமடைந்து மதுகானனம் கொண்டுவந்தப்பெண்ணே யெறிந்துவிட்டுச்சென்றுன். மதுகானனத்திற் கிடக்குமப்பெண்பசியால் வருந்தியம்மா! அம்மா! வென்றுகூப்பிட்டாள். யெண்ணேபோன்ற மனதுடைய வுலகமாதாவான பிரமரான கையென்ற பராசக்தியப் பெண்ணின் தாயுருவுடன் அறுசுவையுண்டி பதார்த்தங்களேயேந்தியப்பெண்ணுக்குப்படைத்தனள். இதையுண்டதாலப்பெண்ணுக்குக் கண்கால்களுண்டாய்க்கோடிரதிகளுக்குச்சமதியான அழகையுமடைந்தாள். அவள் தன் தாயாகிய வம்பிகையைப்பார்த்து இதுவரையிற் கண்காலில்லாதவெனக் கவைகளுண்டாயின. இனி நான் பார்க்கவும் நடக்கவுங்கூடும். இவ்விடமென்னேக் கொண்டுவந்துவிட்டுப்போன அப்பா இன்னும் வரவில்லே. இனி நாமிருவரும் வீட்டுக்குப்போவோமென்று கூப்பிட்டாள். அம்பிகையப்பெண்ணேத்தன்னுலய மழைத்துவந்துவிட்டு விட்டு மறைந்து போயினள். தாயைக்காணுமலப்பெண் அம்மாம்மாவென்று பலமுறைக்கூப்பிட்டுக்கொண்டு கோவிலேச் சுத்திச் சுத்தி வந்தாள்.

இவ்விதம் நூறு பிரதக்ஷிணமும் பதினுயிரம் நாமஜெபமு மா யிற்று. உடனே யம்பிகையினருளால் திவ்ய ஞானமுண்டா யிற்று. அதினுற்றனக்கன்னமளித்தத்தாய் பராசக்தியென்று மவ்வன்னவைபவத்தாற்றன் தனக்குக்கண்கால்களுண்டாயின வென்று மறிந்துகொண்டனள். பிறகம்மன் ஸன்னிதியிலு ட்கார்ந்து அம்பாம்பாவென்னும் நாம மந்திரத்தை ஜபித்து வந்தாள். மத்தியான காலத்தில் வந்து முன்போலவப் பெண் ணுக்குப் போஜன மளித்தனள். திவ்ய ஞானத்தையுடைய வப்பெண் கைகூப்பிப் பிரார்த்திக்கின்றாள். ஸகல வுலகத்திற் குந்தாயாயிருந்தமுதளிக்கும் லோகமாதாவே, குரூபிணியெ ன்று பெற்றோர்களாலிக்காட்டி லெறியப்பட்ட வென்னிடத் திற்கிருபையுற்று வென்னை நல்ல ரூபிணியாய்ச்செய்த லோக மாதாவே எப்பொழுது மென்பசிகாலத்திலிவ்விதம் வந்தன்ன மளிக்கவேண்டும். இனி யெப்பொழுதும் நான் நினைக்கும் போது நீ வந்தென்னைக் காப்பாற்றவேண்டும். உன்பாதார விந்தத்திலெனக்கு நிரந்தர பக்தியை யளிக்கவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டாள். அம்பாள் கிருபையுடனவளைப் பார்த்துப் பெண்ணே ஸர்வலோக மணித்தீவிலிருக்குமென் பெண்ணுகிய பாலாம்பாளுக்கு ஸமதையானவள் நீ; உனக்கிவ் வுலகில் நினைத்தது ஸித்திக்கும் பொருட்டுன் கழுத்தில் சுவ ர்ண சித்திரத்துடன் விளங்குமிம்மணியைக் கழுத்திற்கட்டு கிறேன். இதினு லுனக்கிஷ்டமானதைப் பெற்றுக்கொள். தேகாந்தியத்தில் நமதுலகை யடைவாயென்றனுக்கிரகம் புரி ந்து மறைந்தனள். பிறர் கண்ணுக்குப் புலப்படாமலிருக்கு ம்படி யம்பாளணிந்த மணியையுடையவளாயு மம்பிகையாற் பிரீதியுடனுலிங்கனம் பண்ணப்பட்டவளுமான பாலையவ்விடமி ருந்து ஜபம் நமஸ்காரம் பூஜை முதலியவைகளாலம்பிகா பக்தி யைச்செய்துவந்தாள். அம்மணியால் பசிக்குந்தோறுமாகார த்தைப்பெற்றுப் புசித்துவந்தாள். இஃதிப்படியிருக்க; புண்ய புறத்தில் சிவதர்மனென்றோரந்தணன் ஸர்வவேத ரகஸ்யமறி ந்தவனுய்த்தன் தர்மங்களை நடத்திவருகிறவனு யிருந்தனன். அவனுக்கு மகா பதிவிரதையான ஸுசீலையென்ற மனைவியினி டத்தில் குணங்களு மரூபமுமமைந்த மாரசர்மாவென்னும்

புதல்வனுண்டானன். வஸ்திராபரணாதிகளாற்றங்கள் புத்திரனையலங்கரித்துப் பெற்றோர் போற்றிச் சீராட்டிவந்தார்கள். அக்குழந்தைக்கேழாவது வயதிற் றீர்த்தயாத்திரை செய்யக் கருதி யவ்வேதியன்றன் மனையாள் பிள்ளைகளுடனேக தீர்த்த க்ஷேத்திரங்களுக்குச்சென்று சம்பகாரண்யமடைந்தனன். அவ்விடத்திலோரந்தணன் வீட்டிலிரவிற்காகத் தங்கியிருந்தான். அன்றிரவிற்றிருடர்களவ்வீடுபுகுந்துவீட்டிற்கொள்ளையடித்து நகைகளுடன் விளங்கும் மாரசர்மனையுந் தூக்கிக்கொண்டு மதுவனஞ்சென்று விடிந்ததுமவன் நகைகளைக் கழற்றியவனையவ்விடம் விட்டுத்தண்டகாரண்யத்திலுள்ள தங்களிடஞ்சென்றார்கள். மாரசர்மனக்காட்டி லலைந்து திரிந்து தெய்வ யோகத்தாற்றேவாலயஞ்சென்று அவ்விடத்தில் ஸர்வாலங்காரபூஷிதையாய் மின்னற்கொடிபோல் விளங்கித்தியானத்திலிருக்குமோர் கன்னிகையைத்தன் பூர்வபுண்யத்தாற்கண்டவள் பக்கஞ்சென்றுட்கார்ந்தான். காலையிற்றியானத்திலுட்கார்ந்து முகூர்த்தம் நிஷ்டையிலிருந்து கண்விழித்துக்கொண்டவப்பெண் தன் பக்கத்திற் செம்பரத்தம்பூவர்ணமுமனேக மன்மதர்களுக்கு ஸமயதியானவழகும் வாய்ந்து துதிக்கையில்லாத விநாயகர் போல் விளங்கும் பாலகனைப்பார்த்துத் தாங்க ளாரையாவென்று வினவினள். அதற்கு மாரன் தன் விர்த்தம்யாவற்றையுமுண்மையாகவுரைத்தனன். அதற்கப் பெண் நீ என்னுடனிங்கம்பாள் ஸன்னிதியில் வஸித்துக்கொண்டிருவென்றும் நானுன்னையன்னபானாதிகளால் ஸம்ரக்ஷிக்கிறேனென்றும் சொல்லவதற்கவன் ஸம்மதித்தவளோடு வஸித்துவந்தான். அவனுக்கப்பெண் திவ்யான்னபூஷணங்கள் கொடுக்க வவனானந்தித்தப் பெண்ணினிடத்தி லதிக வாத்ஸல்யமுள்ளவனா யிருந்தான். பாலையானவள் மாரனுடன் பிரதிதினமும் விடியற் காலையிலெழுந்து ஸ்நான முதலியவை முடித்து வஸ்திராபரண கந்தங்களணிந்து பூஜாதிரவியத்துடன் றேவாலயஞ்சென்று பராசக்தியைப்பூஜித்து தாய் ரூபமாய்த்தியானித் தம்பாவென்ற நாமஜபஞ்செய்து வருவாள். பிறகு மூன்று பிரதிக்ஷிணஞ் செய்து வந்தனைகள்புரிந்து இரத்தினவைபவத்தாற் றிவ்யான்னமுண்டாக்கியம்பாளுக்கு நிவேதித்து மாரனுக்குப் பரிஷே

ணஞ்செய்து பிறகு தான்புசிப்பாள். பிறகு இருவரும் நாநா வித விளையாட்டுகள் விளையாடி மத்தியான காலத்திலும் புசிப்பார்கள். இவ்விதம் வஸிரத்தினத்தினற் றேவாலயப் பக்கத்தில் நிர்மாணஞ்செய்யப்பட்ட வரண்மனையிலிருந்து வஸித்து வந்தார்கள். ஸாயங்காலத்திற்காடுசென்று விளையாடி தேவாலயஞ்சென்று விதிப்படி யம்மனை தரிசித்து ராத்திரி யுண்டு திவ்ய சயனத்திற் படுத்து நித்திரைசெய்வார்கள். இரத்தின வைபவத்தாலுண்டான வேலைக்காரர்களரண்மனையிற் காவற் செய்து வருவார்கள். இப்படியவர்கள் வஸித்துவருகையில் பராசக்தியினுக்கினையா லவ்விடம் நாரதமாமுனி வந்து மாரனுக்குக் காசியபரென்னும் முனிவரா லுபனயனஞ் செய்வித்துத் தாமே வித்தைகளை யுபதேசித்துவந்தார். அறுபத்து நான்குதினங்களி லறுபத்துநான்கு வித்தைகளையு மூபதேசித்துத் தமதிருப்பிடஞ்சென்றார். பிறகொருவருஷம் சென்ற பிறகு பராசக்தியினுக்கினையா லநேக முனிவர்களுடன் நாரதர் வந்து இருவருக்கும் விதிப்படி விவாகஞ்செய்வித்து மந்திரோபதேசஞ்செய்து கிரகஸ்ததர்மத்தையும் பாதிவிர்த்திய தர்மத்தையுமுபதேசித்துக் கசியபர் முதலிய முனிவருடன் தமதிடஞ்சென்றார். இருவர்களும் கிரகஸ்த தர்மத்தைக் கைபிடித்து நடத்தி வருவதுடன் தேவிபக்தியுஞ் செய்துவந்தார்கள். பிரகிருவரும் எவ்வனமடைந்து தர்மசாஸ்திரோக்த காலங்களி லநுராகத்துடன் ரதிக்கிரீடைகள் நடத்திவந்தார்கள். இவ்விதமவ்விருவரும் பராசக்தியி னுக்கினைப்படி இரத்தின வைபவத்தாலுண்டான அரண்மையில் தாஸி தாஸ ஜனங்களுடன் கிரகஸ்ததர்ம முறைப்படி வஸித்து வந்தார்கள்.

இருபத்தோன்பதாவது அத்தியாயம் முற்றும்.

முப்பதாவது அத்தியாயம்.

ஒருநாளொரு வேலைக்காரன் வந்து மாரசர்மாவை வணங்கி யரண்மனையின் வெளிப்பக்கத்திலொரு அரசகுமாரன் மூர்ச்சித்துக்கிடக்கிறனென்றுசொல்லவவனைக்கொண்டுவரும்படி மாரவர்மாவுத்திரவளித்தான். வேலைக்காரன் அவ்வரசகுமா

ரனே யெடுத்து வந்திருவர்களுக்கும் முன்வைக்க தாவீஜன ங்களவனுக்கு சைத்தியோபசாரஞ்செய்து மூர்ச்சைதெளிவித் தார்கள். அரசகுமாரன் கண்விழித்தெதிரில் வீற்றிருக்கும் பிராமணோத்தமரைக்கண்டு நமஸ்கரித்துக் கைகூப்பிநின்றான். அப்பொழுது அப்பிராமணகுமாரர் அரசகுமாரனை நோக்கி, இ ராஜகுமாரா! நீ யார்? எவ்விடம்? இங்கு எதற்க்காக வந்தாய்? வெளிவாசலில் நீ மூர்ச்சித்துக் கிடக்கக் காரணமென்ன வெ ன்று கேட்டார். அரசகுமாரன் மறுபடியும் அவரைவணங்கி சொல்லலுற்றான். சுற்றிப்பார்த்து யோஜனை விஸ்தீரணமுள் ள திருநெல்வேலி யென்னும் பட்டணத்தில் பாண்டியவம்சத் திலுதித்த விந்தபாண்டிய னென்பவன் மதுராபுரி ராஜாவாகிய வீரபாண்டியனுக்கினைக்குள்பட்டு தன் ராஜ்யபரிபாலனஞ்செய் துவருகின்றார். அவருக்கு ரதியென்றந்தன் மனையாளிடத்தி ல்சாலிவாடியென்றோர் புதல்வனும் காந்திமதி யென்றோர் பெ ண்ணுமுதித்தார்கள். இதற்குமுந்தியே அக்ஞாதகுலகோத் திரனை னொருவயதுள்ள வோர்குழந்தை யவ்வரண்மனையில் யாராலேயோ கொண்டுவந்து வைக்கப்பட்டிருந்தது. அக்கு ழந்தையாகிய வென்னை யவ்வரசனு மவன்தேவியு மெடுத்துப் பிரத்தியும்னனென்றுபெயரிட்டுப் புத்திரனைப்போலவளர்த்து வந்தார்கள். பிறகு புத்திரனும் புத்திரியு முண்டானார்கள். அவ்வரசன் புத்திரனுடனெனக்கு பிரும்மணர் முகமாய் வே தம் முதலிய வித்தைகளையும் தனுர்வித்தையையும் அப்பியாஸ ஞ்செய்வித்தார்கள். நானவைகளிற் பூர்ணஞானத்தை யடை ந்தேன். அவர்புதல்வனோ அல்பக்ஞனா யிருந்தான். அதனா லரசனு மவன்மனைவியு மென்னிடத்தில் அதிகபிரீதியுள்ளவ ர்களாயிருந்தார்கள். அரசகுமாரிக்கு ஸங்கீதம் நாட்டியம் நீதி முதலியவைகளை நானே கற்பித்தேன். அவளதி சீக்கிரத்திற் கிரகித்துக் கொண்டதுமன்றி பூர்ண பாண்டியத்துவத்தையு ம டைந்தனள். நானிராஜபுத்திர னல்லவென்றும் மாதுர் பிதிர் ஹீனனுப் அரசனாலே வளர்க்கப்பட்டவ னென்று மிராச்சியத் தில்யாவரும் அறிந்துகொண்டார்கள். அரசகுமாரனு மரசபுத்

திரியுங்கூட அறிந்துகொண்டார்கள். பிறகு காலக்கிரமத்தில் அரசபுத்திரியுவதியானுள். அவள் நான் சூரனுயும்அழகுள்ள வனுயுமன்னிபனுயு மிருப்பதால் என்னிடத்தில் விருப்புள்ள வளாகவிருந்தாள். புத்திரியின் கருத்தையறிந்த தாயிதையர சனுக்குத் தெரிவிக்க வரசன்றன் மனையாளைநோக்கிப் பிரியே! பிரத்தியும்னன் குணவானுயும் சூரனுயும் வித்துவானுயும் ரூப வானுயும் புத்திமானுயுமிருந்தாலும் நமது வீட்டிலேயே வளர்க்கப்பட்டு ஸமஸ்காரமடைந்து வித்தியாப்பியாஸஞ்செய்விக்க ப்பட்டிருந்தாலுமவன் குலகோத்திரம் நமக்குத்தெரியாததால் நமது குமாரத்தியை யவனுக்குக் கொடுக்க யெனக்கிஷ்ட மில்லை யென்று சொன்னுன். அதைக்கேட்ட ராணி மவுனமா கவிருந்து விட்டாள். இஃதிப்படியிருக்க ஸ்ரீ வைகுண்டமெ ன்ற ஸொல்ப ருஜ்யாதிபதியாகிய துராஸதனென்பவன் திரு நெல்வேலி வந்து ராஜபுத்திரியின் குணரூப வித்தைகளைக் கேழ்விப்பட்டு அவளிடத்தில் விருப்புள்ளவனுகி கணனென் னும் மந்திரியினிடம் சென்று நானிதுவரை யென்னிஷ்டப்ப டிக் கன்னிகை கிடைக்காததால் விவாகமில்லாதவனுயிருக்கின் றேன். இவ்வரசகுமாரி யென்னிஷ்டப்படி ஸகலாம்சமும் பொருந்திருப்பதால் இவளிடத்தில் நான் விருப்புற்றிருக்கின் றேன். எவ்வித வுபாயத்தினுலாவதிவளை யெனக்கு விவாஹம் செய்விப்பாயேயானுல் பதினுயிரம் ரூமடங்கா மோஹரா வுன க்கினும் கொடுக்கிறேனென்று சொல்லியாயிரம் மோஹராக் கொடுத்து விடைப்பெற்று தன்னிருப்பிடஞ் சென்றுன். அ வ்விஷயத்தில் கணனும் சிரத்தையுள்ளவனுக விருந்தான். ஒரு ஸமயத்திலரசனம் மந்திரியை நோக்கி என் குமாரியுவதியா னதினுல் நமக்கு ஸமதியான வரசகுமாரன் வரனுகக்கிடைக்கா ததினுல் நீ தேசாந்தரஞ்சென்று வரன்தேடி நிச்சயித்து வா வென்றுசொல்லவதற் கம்மந்திரி ஸர்வகுணங்களும் பொருந்தி னவனுய் நம் பிரத்தியும்ன னிருக்கிறுனென்று சொன்னுன். அரசனவன் குலங்கோத்திரம் நமக்கு நன்றுய்த் தெரிந்தாலவ ன் சிலாக்கிய மானவன்தான். தெரியாததா லவனுக்குக்கொ

டுக்க இஷ்டமில்லை யென்றுசொன்னன். பிறகு மந்திரி வை குண்டபுற ருசாவாகிய தூராஸதனு மதுபுத்திரி யினிடத்தில் விருப்புற்றிருப்பதால் கட்டாயம் விவாகஞ்செய்து கொள்வா னென்று சொன்னன். அரசனதற்குப் பிரத்தியும்னன் சரித் திரமோ நமக்குத்தெரியவில்லை. தூராஸதனே நமக்குச்சமான மான க்ஷத்திரியகுலவரசன். ஆகையாலவன் படத்தை நமது புத்திரிக்குக் காண்பிவித் தவள் கருத்தை நமக்குத் தெரியப் படுத்தென்று சொன்னன். கணனுமவன் படத்தை யந்தப்புற ஞ்சென்று அரசனுக்கினையத்தெரிவித்து ராணியினிடங்கொடு த்தான். ருணியதைத்தன் மகளிடத்திற் கொடுக்க அத்துடன வளதைப்பார்த்து அம்மா இந்தப்படத்தின் லக்ஷணத்தாலிதற் குரியபுருஷன் மாதாவின் புதல்வனேதவிர பிதாவுக்கு ஜனித்த வனல்லன். ஆகையா லிப்பேர்ப்பட்டவரை நான் வரிக்கமாட் டேன்குணரூபவித்தைகளில்எனக்குச்சமதியானவர். பிர்மக்ஷத் திரியவைசியர்களுக்கு ளெவராயிருந்தாலும் நான் வரிப்பதிற் றடையில்லை. அதில்லாமல் சக்கிரவர்த்தியாக விருந்தாலும் நா ன் வரிக்கமாட்டேன். அவ்விஷயத்தில் நிர்பந்தஞ்செய்தால் பிராணனை விட்டுவிடுவேனென்று சொன்னள். இதைமந்திரி கேட்டு அரசனிடஞ்சென்று மகாருஜாவே! அரண்மனையிலிவ் விதம் நடந்தது பிரத்தியும்னனிடத்தி லுமது குமாரி கருத்து ற்றிருப்பதால் அவனிவ்விடமுள்ள வரையிலுமது குமாரியொ ருவரையும் வரிக்கமாட்டாளாகையால் அவனை யிவ்விடம் விட் டெங்கேயாவது போகச்செய்ய வேண்டுமென்றும் பிறகவள் தூராஸதனை வரிப்பாளென்றும் சொன்னன். அரசனதைக் கேட்டென்னைக் கூப்பிட்டுப் பிரியத்துடன் குழந்தாய்! உன்கு லகோத்திர மெங்களுக்குத் தெரியாததா லென்குமாரியை யு னக்குக் கொடுக்க யெனக்கு இஷ்டமில்லை. உன்னிடத்தில் விருப்புற்றவவள் நீ இவ்விடமிருக்கும் வரையில் வேறொருவ ரையுமடைய விரும்பமாட்டாள். ஆகையாலினி நீ வேறெந்த விராச்சியமாவது சென்றுன் ஜீவனத்தை ஸம்பாதித்துக்கொ ள்ளென்று சொன்னன். அதற்கு நான் மிகவும் ஸந்தோஷி

த்தந்தப்புறஞ் சென்று நிருபனுத்திரவைச் சொல்லியிப்படிப் போகும்படி வளர்த்த தாயாகிய ராணியை யனுமதி கேட்டேன் இதைக்கேட்டவரசன் தேவி மூர்ச்சையடைந்தாள். அப்பொழுது காந்திமதி என்னைப்பார்த்து மாரஸுந்தரா நீ கிருபைசெய்தெவ்வித வுபாயத்தினலாவதென்னை மனையாளாக வடையவேண்டியது. தவறினலுன் பாதாரவிந்தத்தைத் தியானித்து ஸத்தியமாய்ப்பிராணனை விட்டுவிடுவேனென்றாள். நானரசனுக்கினைச் செய்யக்கடமைப்பட்டவனென்று சொல்லிவிட்டடேனே மதுரைசென்று என் வீரபராக்கிரமத்தை யவ்வரசனிடம் தெரிவித்து ஜீவனம் ஸம்பாதித்தொருமாஸம் சுகமாகயங்கிருந்தேன். ஒருநாள் திருநெல்வேலியிருந் தவ்விடம் வந்தவென்வித்யாகுருவின் புதல்வனைக்கண்டேன். அவன் மிகுந்த துக்கத்துட னென்னைப்பார்த்து ஸ்நேகிதா காந்திமதியைத் துராஸதனுக்குக் குடுப்பதாய் நிச்சயித்து முகூர்த்தத்திற்கனைவரும் வந்திருக்கையில் சோபனத்தீவிலிருந்தோரவுண ராஜன் வந்து யாவரையும் ஜயித்து கலியாண வேஷத்துடன் கூடிய துராஸதனைப் பக்ஷித்துக் காந்திமதியைத் தூக்கிச்சென்றான். அதினலரசனும் ராணியுந்துக்க ஸாகரத்தில் முழுகி போசனமற்றிருக்கிறார்கள். அரசன் கொலுமண்டபத்திற்குக் கூட ஸரிவரப்போகிறதில்லை. பிரத்யும்னனிருந்தா லரக்கனை ஜயித்துவிடுவான். அவனைப் பாவிகட்டுரைத்துவிட்டார்களென்று சிலரரசனையும் சிலர் மந்திரியையும் சிலர் துராஸதனையும் நிந்திக்கின்றார்களென்று சொல்லிச்சென்றான். இதினல் நான் மிகவும் வருத்தமடைந்து துஷ்டனகிய வரக்கனைக் கொன்றுக் காந்திமதியைக் கொண்டுவந்து கொடுத்தரசனை ஸந்தோஷப் படுத்தவேண்டுமென்று கருதியதற்காக ஈசனனுக்கிரகத்தை யாவது பிராம்மணளனுக்கிரகத்தையாவது பெறவேண்டுமென்று தண்டகவனம்புகுந்து அலைந்து திரிகையில் தெய்வ யோகத்தாலிவ்வனம்புகுந்து பசிதாகத்தினல் வருந்தி வரண்மனை வாசலில் மூர்ச்சித்து விழுந்துவிட்டேன். பார்வதி பரமேசுவரான் போலிருக்கும் தம்பதிகளாகியவுங்களால் மூர்ச்சை

தெளிவிக்கப்பட்டேன். நீங்கள் கிருபைசெய் தென்காரியத்தையும் முடித்துக்கொடுக்கவேண்டுமென்று பிரார்த்திக்கின்றேனென்று சொன்னான்.

முப்பதாவது அத்தியாயம் முற்றும்.

முப்பத்தோன்றுவது அத்தியாயம்.

பிறகு பிரத்யும்னனவர்களாற் கொடுக்கப்பட்ட வன்னத்தைக் களைப்பாறி மகிழ்ச்சியுடனிருக்கையில் மாரசர்மா அவனைப்பார்த்துப் பிரத்தியும்ன நீ எனக்கு ஸமான வயதுள்ளவனுதலா லெனக்கு மித்திரனே யென்று தன் வரலாற்றையும் மனையாளின் வைபவத்தையும் சொன்னான். இதனால் பிரத்தியும்னன் வியப்படைந்தான். ஸமானமான ரூபம் குணமுடைய மூவரும் பரஸ்பரம் பிரீதியுள்ளவர்களா யிருந்தார்கள். மாரசர்மாவி னனுமதியினல் பாலைப் பராசக்தியைப் பிரத்தியும்னனுடைய காரியத்தின் பொருட்டு நினைக்க நாரத ரவ்விடம் வந்தார். மூவரும் வணங்கி யுபசரிக்க மாரனைப் பார்த்துச் சொல்லுகின்றார். புண்யபுறத்தின் அரசனே! இந்த பிரத்தியும்னனுடைய தகப்பன் அவன் யுத்தத்தில் சத்துருவால் மரணமடைய அவன் தேவியுமுடன்கட்டையேறி புருஷனுடன் சுவர்க்கஞ்சென்றாள். இராஜ்ய விருப்புள்ள இவன் சிறுதகப்ப னிப்பாலகனைக் கொல்லக் கருதியதினல் இவனை வளர்த்து வருந்தாதியிப்பாலகனை யெடுத்துக்கொண்டு தேசாந்திரம் புறப்பிட்டுத்தன் சகோதரியுள்ளத் திருநெல்வேலிவந்து குழந்தையை யரசனரண்மனையி லொருவரு மறியாமல் வைத்துப்போட்டுத்தன்ஸகோதரி வீட்டில் வசித்துவந்தாள். இவ்விதம் வளர்ந்து வந்த இவனரசகுமாரனே! உன்மனைவியின் கிருபையா லரக்கனை யென்று காந்திமதியைக் கொண்டுவந்து மனையாளாகவடைந்து ஸார்வபவுமனு யரசாக்ஷி செய்வா னென்பதில் ஸந்தேகமில்லை யென்றுசொல்லி விடைபெற்றுச் சென்றார். பிறகு மூவரும் மிகுந்த மகிழ்சியுட னிருக்கையில் மூன்றுவது தினம் பிரத்தியும்னனுக்கு ஜயமளிக்கக்கருதி பாலாம்பா ளம்பிகையைத்துதிக்க சக்தியினுக்கினையால் பத்திரகாளிவந்து காந்திமதியைக்கொண்டு வருகிறேனென்றுசொல்லி சோபனத்தீவு செ

ன்றாக்க வரசனையுமவன் ஸைன்யங்களையும் கொன்றுபக்ஷித்துவிட்டுக் காந்திமதியைத் தூக்கிக்கொண்டு தேவிபக்தியுடன் நவராத்திரிபூஜைசெய்து வருமவளை பாலையின் ஸமீபத்தில்விட்டுவிட்டுதன்னிருப்பிடஞ்சென்றாள். பிரத்தியும்னனையும் பிராம்மண தம்பதிகளையுங் காந்திமதி பார்த்து வணக்கத்துடன் நமஸ்கரித்தாள். பாலை யவளைப்பிரீதியுடனாலிங்கனஞ்செய்து என் ஸகோதரியே நீ என்னுடன் ஸுகமாய் வஸித்துக்கொண்டிரு பிரத்தியும்னன் க்ஷத்திரிய வம்சத்திலுதித்த ராஜ ராஜனென்பதாக மாரன் சரித்திரத்தையுந் தங்களுடைய சரித்திரத்தையு மவளுக்குச் சொன்னாள். அவள்தா னரக்கன் வீட்டிலபபாள் பக்தி செய்துகொண்டிருந்த விதத்தையும் சொன்னாள். இவ்விதம் நால்வரும் மிகுந்த களிப்புட னவ்விடத்தில் வஸித்துவந்தார்கள். ஒரு மதாஞ்சென்ற பிறகு பிராம்மண தம்பதிகளின் ஸ்மரணத்தினால் பத்திரகாளிப் பிரத்தியும்னனின் சிறிய தகப்பனைக்கட்டிக்கொண்டு வந்தவர்களுக்கு முன்புவிட்டு மறைந்துபோனாள். மாரசர்மா அவனை வேலைக்காரர்களாற் கட்டவிழ்க்கச்செய்து அவனைப் பார்த்துச் சிரித்தடா துர்மார்க்கா! மகாராஷ்டிரதேச பதியான வுன்தமயன் குமாரனை ராஜ்யநிமித்தம் கொல்ல வெத்தனித்த முழுமூடா. இவன்றானுன்தமயன் குமாரன். இப்பொழுதிவ்வீரனுடைய வசத்தில் நியகப்பட்டுக்கொண்டாய். இனி நீ எங்கேயாவது சென்றுன்காலத்தைக் கழியென்று சொல்லியவனைத் துரத்திவிட்டான். பிறகு பாலையின் ஸ்மரணத்தா லிரண்டு இரதங்களை தேவஸாரதிகள் கொண்டுவர பாலை தன் நாயகனுடனேரதத்திலும் மற்றொன்றிற்காந்திமதியும் பிரத்தியும்னனுமாகவேறிக்கொண்டார்கள். உடனே இரதங்கள் புண்யபுரம் வரவே பிரத்தியும்னன் யுத்தகோஷை செய்தான். மந்திரி முதலியவர்கள் ஸைன்யங்களுடன் யுத்தகளம் வர மாரசர்மா விர்த்த மந்திரியினிடம் பிரத்தியும்னன் சரித்திரத்தையும் தற்கால ராஜாவாகவிருந்த சிறிய தகப்பன் கதியையும் ஸவிஸ்தாரமாகச் சொன்னார். மந்திரி முதலியவர்களவரை நமஸ்கரித்து பிரத்தியும்னனை யரசனாகப் பட்டாபிஷேகஞ்

செய்தார்கள். பிரத்தியும்னனுடைய பிரார்த்தனையா லிரத்தினமயமான வரண்மனையில் பாலையுடன் மாரசர்மா வஸித்து வந்தார். மாரன் காந்திமதியை பாலாமாரர்களி னுக்கினையால் விதிப்படி மணந்து ஸப்த திவுங்களையும் ஜயித்து ஸார்வபவுமனுக வரசாண்டுவந்தான். பாலாமாரர்களை பார்வதி பரமேசுவரராகப் பாவித்து நிரந்தர பக்திசெய்துவந்தான். குருக்களுடைய வுத்திரவின்பேரிலரசர்கள் கொண்டுவந்து கொடுத்தக்கப்ப பணங்களை தன்னுட்டில் தர்மவிரயம் செய்துவந்தான். அன்னிய நாட்டிலிருந்தனேக ரின்னுட்டில்வந்து குடியேறி ஸுகமாய் வஸித்துவந்தார்கள். இஃதிப்படியிருக்கு மாரசர்மாவைப் பால்யத்திற் றிருடர் கொண்டுபோன பிறகவர்கள் மிகுந்த துக்கத்துடனநேக க்ஷேத்திரங்கள் சென்று பிறகு புண்யபுறம் வந்து தங்கள் வீட்டில் வஸித்துவந்தார்கள். இராஜாவின் குருவாயும், குணரூபமும், தர்மமுடையவரென்று மவருடைய மனைவி ஸாக்ஷாத் சக்திஸ்வரூபமென்றும் அவர்களுடைய கிருபையாற்றுனரச னரசுபெற்றுச் சக்கிரவர்த்தியாகவானுனென்றுமவர்களுடைய ஆக்கினைப்படியே அரசாண்டுவருகிறுனென்றுங் கேழ்வியுற்றுத்தன் புத்திரன் கதியைத்தெரிந்துகொள்ள விரும்பி யவ்வேதியன் மாரசர்மாவின் அரண்மனைசென்று காவற்காரன் அனுமதியின்பேரில் உட்சென்றுர். மாரசர்மாவும் பிராம்மணனை விதிப்படியுபசரிக்கத் தன் விர்த்தாந்தத்தைச்சொல்லித்தன் புத்திரன் ஸ்திதியைச்சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதைக்கேட்ட மாரசர்மா தன்பிதாவென்றறிந்து நமஸ்கரித்துத் தன் விருத்தாந்தத்தைச்சொன்னுன். பாலையின்மகிமையையுஞ்சொல்ல பாலைவந்து நமஸ்கரித்தாள். பிராம்மணன் குமாரனைக் கட்டித்தழுவி யாநந்த ஸமுத்திரத்தில் முழுகிக்கரையேற மாட்டாமலிருந்துவிட்டார். பிறகு மாரசர்மா வேலைக்காரிகளைக்கொண்டு தாயாரை வரவழைத்து நமஸ்கரித்துக் களிக்கச்செய்தார். தன் குமாரன் நாட்டுப் பெண்களுடைய சரித்திரத்தையும் மகிமையையும் பிராம்மணன் தன் ஸம்ஸாரத்திற்குச் சொன்னுர். அரசனுமிதைக்கேழ்விப்பட்டு மனையாளுடன்வந்து குருவின் பெற்

ரோர்களைப்பணிந் தாசுபெற்றான். இவ்விதம் மாரசர்மாவின் பெற்றோர்கள் பிள்ளையை யடைந்து பேரின்பக்கடலி லாழ்ந்து சுகித்திருந்தார்கள். நவராத்திரி காலங்களில் பாலை சுமங்கலஸ்திரீகளை விசேஷமாய்த் தன் வஸ்திராபரணங்களாலுபசரிப்பது வழக்கமாதலாலோர் நவராத்திரியில் தேசாந்தரத்திலிருந்தோரு பிராம்மணஸ்திரி தன்பெண்வயிற்றுப் பெண்ணுடன் பாலையினரண்மனைசெல்ல பாலையுமவளைத் தகுந்தபடி மரியாதைசெய்துபசரித்தாள். அப்பிராம்மணி பாலையின் ஸம்பத்தையும் சக்தியையும் பார்த்து அம்மணி! நான் சோளதேசத்தில் மன்னார்குடி யென்ற பட்டணத்திலிருந்து வந்தேன். எனக்குக் காலத்திற் புத்திர புத்திரிகளுண்டானார்கள். கடைசிப்பெண் குருடாயும் மொடமாரி மிருந்தபடியால் பதியதை யெங்கேயோ காட்டிலெறிந்துவிட்டார். இந்தப்பெண்ணின் தாயாரைக் கர்னடதேசத்தில் வித்துவானான வோரேழைப் பிராம்மணனுக்குக் கொடுத்தேன். நானுமென் பதியுடனிரண்டு புத்திரர்களுடனும் தரித்திரத்தினாற் கஷ்டப்பட்டுப்பெண்ணினிருப்பிடத்தில் வந்து வஸிக்கின்றோம். என்மாப்பிள்ளை தரித்திரனாக யிருந்தாலும் வித்வான். என் பிள்ளை வித்தையில் தெரித்திர மூடர்கள். ஆனாலும் குணவான்கள். கலியாணமின் றிருக்கின்றார்கள். அவர்களுக்கு நீ விவாகஞ்செய்வித்துக் குடும்பப் பிரதிஷ்டை செய்யவேண்டுமென்று வேண்டிக் கொண்டாள். இதைக்கேட்ட பாலை யிவள்தன் தாயாரென் றறிந்து எழுந்து மரியாதைசெய்துஅம்மணி நீ பல்லக்கேறி யென்வேலைக் காரர்களுடன் சென்று யாவரையுமிங்கழைத்துவா. அவர்களுக்குக் கலியாணம் செய்வித்து விருத்தியு மேற்படுத்துகிறேன். நீயுமுன் பதியுமென்னுடன் சுகமாயிருக்கவென்று சொன்னாள். அவளுமவ்வாறு சென்று யாவரையுமழைத்து வந்தனன்.

அத்தியாயம் முப்பத்தோன்று முற்றும்.

முப்பத்திரண்டாவது அத்தியாயம்.

பாலை தன்னிடம் வந்த பிதா முதலியவர்களை மரியாதையுடன் வரவழைத்துத் தன் விருத்தாந்தத்தை யவர்களுக்குஞ்

சொன்னாள். பெற்றோர்கள் கேட்டானந்தித்து அவளையாலிங் கனஞ்செய்துச்சி முகர்ந்து தங்களபராதத்தை மன்னிக்கும் படி பலதடவை வேண்டிக்கொண்டார்கள். அதற்குப் பாலை நீங்கள் செய்த காரியத்தாற்றா னிப்பேறப்பட்டமகிமை எனக்கு ண்டாயிற்று. நீங்கள் செய்ததபராதமல்ல நன்மைதானென்று சொன்னாள். பிறகு தன் ஸகோதரர்களுக்கு விவாகஞ்செய் வித்துத் தனித்தனி வீடுகளுங்கொடுத்து யாவருக்கும் சுகமா யிருக்கும்படி யரசன்மூலமாக விர்த்தியுமேற்படுத்திக்கொடுத் தாள். இவ்விதந் தங்கள் மாதாபிதாக்களையுமடைந்து பந்து வர்க்கத்துடன் மாரபாலைகள் சுகித்திருந்தார்கள். பிறகவர்க ளுக்குப் பிரமரேசனென்ற புதல்வனும் பிரமராளகையென்ற பெண்ணுமுண்டானார்கள். அதினாலவர் களித்துச் சீராட்டிப் பாதுகார்த்துவந்தார்கள். இதேமாதிரி யரசன் காந்திமதிகளு க்கும் திரியம்பகசுந்தராயென்று புத்திரனும் புத்திரிமுண்டா னார்கள். குருபுத்திரனும் ராஜபுத்திரனும் குருபுத்திரியும் ராஜபுத்திரியுமாகசிநேகமுற்று விளையாடிவந்தார்கள். ராஜபுத் திரனும் புத்திரியும் குருவீடுசென்று விளையாடி வீதிவழியாக வருகையில் வீதிமார்க்கமாகச் சென்ற க்ஷத்திரிய தம்பதி களில் ஸ்திரியானவள் சுந்தரியைப்பார்த்துந்தன் பெண்ணை நினைத்தழுது சுந்தரியிடம் வந்தவளைப்பிரீதியுட னணைத்துத் தழுவி முத்தமிட்டாள். அப்புருஷன் நெஞ்சில் துக்கம டைக்கக் கண்ணால் ஜலம் விட்டான். இதைப் பார்த்திருந்தஐ ந்துவயதுடைய குணவானான வரசகுமாரனவர்களைப் பார்த்து ஐயா! ஸார்வபவுமனா யின்னாட்டை யாண்டுவரும் பிரத்தியும்ன மகாராஜாவுக்குக் காந்திமதியென்ற மகாராணியினிடத்திற்பிற ந்தவர்கள் நாங்கள்; என்பெயர் திரியம்பகன் என்தங்கையான விவள்பெயர் சுந்தரி. எங்கள் சுந்தரிக்குச்சமானமான வுங்கள் பெண் காணாமலோ அல்லது இறந்தோபோ யிருக்கவேண்டுமென் றுங்கள் செய்கையினாற்றோன்றுகின்றது. நீங்கள்யார்; உங்க ளிருப்பிடமெங்கே? காணாமற்போயிருக்கும் பக்ஷத்திலெங்க ளையாவின் குருபத்தினி தன் சக்தியால் வரவழைத்துக் கொ டுப்பாள். ஆகையா லுண்மையைச் சொல்லுங்களென்று கேட்

டான். அக்குழந்தையின் வார்த்தையைக்கேட்டு புத்திக்கு
வியந்து பிரேமையுடனவனை யாலிங்கனஞ்செய்து முத்தமிட்
டுக்கொண்டார்கள். பிறகந்த மனிதன் தங்கள் விருத்தாந்த
த்தையதுவரையில் யாவற்றுஞ்சொன்னான். அதற்குப் பால
கனையா நீங்களிருந்தாலும் ஸரி யல்லது விடுசென்றாலும் ஸரி
அதிசீக்கிரத்திலுங்களை யழைக்க வேலைக்காரர்கள் வருவார்க
ளென்றுசொல்லித் தங்கையுடனரண்மனை சென்றான். அந்த
மனிதனும் பாலகனுடைய புத்திசாலித்தனத்தைப் புகழ்ந்து
கொண்டு தன்னிருப்பிடஞ்சென்றான். அப்பாலன் தாயிடஞ்
சென்று வணங்கி அம்மா குருபுத்திரனை பிரமரேசனுக்குத்
தாய்ப்பாட்டனுந் தகப்பன் பாட்டனுமிருந்தவனை விசேஷமா
ய்ச்சிராட்டி லாலனைசெய்கின்றார்களே. என்தகப்பன்பாட்டன்
பாட்டியிருவருமிறந்துவிட்டார்களென்றப்பா செய்கிற சிரார்த்
தங்களாற்றெரிகின்றது. உன் தாயாருந் தகப்பனாரு மிறக்கவி
ல்லையென்று தோன்றுகின்றதே. நான் பிறந்ததுமுதலிதுவரை
யிலுமவர்களிங்கே வரவில்லையே. ஆனால் நீ இங்கிவ்விதமிரு
ப்பதவர்களுக்குத் தெரியாதோ. ஆனால் நீ பிறந்தவிடத்தைத்
தான் சொல்லென்று கேட்டான். இவ்விதம் புத்திரன் கேட்
கவே மகாராணி கண்ணால் ஜலம் விட்டுக்கொண்டு என்
கண்ணே நான் பிறந்தது திருநெல்வேலி என் தகப்பன் விந்த
பாண்டியன் என்தாய் ரதிதேவி உன் தகப்பனாரு மெனனுடன்
கூடவளர்ந்தவர்தான். உன் தகப்பனாருக்கென்னைக்கொடுக்க
வென் தகப்பனிஷ்டப்படாமலவரை மதுரைக் கனுப்பிவிட்டு
ஸ்ரீவைகுண்ட ராஜனாகிய துராஸதனுக் கென்னைக்கொடுக்க
நிச்சயித்து முகூர்த்தமாரம்பிக்கையிலோரரக்கன் யாவரையும்
ஜயித்தென்னைத் தூக்கிப்போய்த்தன்னரண்மனையில் வைத்துக்
கொண்டான். உன்தகப்பனென்விர்த்தத்தைக்கேழ்விப்பட்டு
நம் குருபத்தினியினனுக்கிரகத்தா லரக்கனை ஜயித்துக்கொ
ண்டுவந்து காதரால் தன் விர்த்தாந்தத்தையு மறிந்திப்பட்ட
ணம் குருமார்களுடன் வந்திதைக்கைப்பற்றி யென்னையும்
மணந்து குருக்கள் கிருபையால் சக்கிரவர்த்தியாகி யரசாண்டு
வருகின்றார். நான்பர்த்தாவினிடத்திலுள்ள பிரீதியாலு முங்க

ளுடைய லாளனத்தினலும் பெற்றோர்களை மறந்து வஸித்து வருகின்றேனென்கண்மணியே யென்று சொன்னர். உடனே பாலன் தாயைவணங்கி வீதியில் நடந்தவற்றைச்சொல்லி யவர் களின் செய்கையாலும் பிரேமையாலும் மாதாமகர்களென்று நிச்சயித்தே பதில் சொல்லிவிட்டு உன் விர்த்தாந்தத்தையும் விசாரித்தேனென்றுசொன்னன். ராக்ஞீ உடனே வேலைக்காரர் களாலவர்களை வரவழைத்துப் பூஜித்து வந்தனஞ்செய்து தன் விர்த்தாந்தத்தையுஞ் சொன்னள். அவர்கள் மகளையாலிங்க னஞ்செய்துச்சிமுகந்து பேரானந்தமடைந்தார்கள். திரியம் பகபாலனுடைய புத்தி விசேஷத்தைப்பற்றி விசேஷமாய்ப் புகழ்ந்து கொண்டிருந்தார்கள். பிரத்தியும்ன ராஜனும் வந் தவர்களை வணங்கியுபசரித்து ராஜ்யம் நஷ்டமாய்ப்போனதை ப்பற்றிக் கவலைப்படவேண்டாமென்று ஸமாதானப்படுத்திக் துஷ்டனுகிய மதுராபுரியரசனை ஜயித்துத்துரத்தி யவனரசா க்ஷியையும் விந்தன் மைந்தனுக்குக்கொடுத்து ரதிவிந்தர்களைத் தன்னிடமே வைத்துக்கொண்டான். இவ்விதமாய்ப் பிரத்தி யும்ன ராஜன் தன்னை வளர்த்தவர்களும் மாமியும் மாமனரு மான ரதிவிந்தர்களுடன் புத்திர புத்திரீ பார்யை இஷ்டமித் திர குருபந்துக்களுடன் சுகமாய்ப் பதினயிரம் வருஷமரசா க்ஷிசெய்துவந்தான். பிறகு பிரத்யும்ன ராஜன் ராஜ்யத்தைப் புத்திரனிடமொப்புவித்து மோக்ஷவிருப்புற்று குருவினரண் மனைசென்றுட்கார்ந்து மோக்ஷோபாயம் சொல்லவேண்டுமெ ன்று வணக்கணத்துடன் கேட்க மாரசர்மா சொல்லத் துவக் கினர்.

அத்தியாயம் முப்பத்திரண்டு முற்றும்.

முப்பத்திமூன்றுவது அத்தியாயம்.

மாயையாற் கற்பிக்கப்பட்டுப் பிரமரூபமாய் விளங்கும் மித்யாரூபமான திவ்வுலகம். ஆயினும் தூங்குகிறவனுக்குத் தான் காணும் ஸ்வப்னமானது விழித்துக்கொள்ளும் வரையி லெப்படி ஸத்தியமாய் விளங்குகின்றதோ அப்படியே பிர்ம ஸாக்ஷாத்காரமான யோகசாந்தியை யடையும்வரையி லிவ்வுல

கம் ஸத்தியமானதே. அத்தியாரோபஸ்திதியை யாச்ரயித்து னக்கு மோக்ஷமார்க்கத்தையு முபதேசிக்கின்றேன். ஸாவதானமாய்க்கேள். அஸதேவமக்கிரஆஸீ தென்ற சுருதியின்படியுள்ளது சாக்தப்பிர்ம மெனப்படும். சாக்தப் பிர்மரூபிணியான பராசக்தி யுலகத்தைப் படைக்கும்பொருட்டு புருஷனென்றும் பிரகிருதியென்று மிருவகையாய்ப்பிரிந்தாள். நிர்க்குணனான புருஷன் தத்பதார்த்தப்பொருளாயும் ஸகுணரூபிணியான பிரகிருதித்வம் பதார்த்தப்பொருளாயும் கூறப்படுவர். அவ்விருவர்களாலேயே யவ்வியாகிருத ரூபமமான காரியம் படைக்கப்பட்டது. அவ்யாகிருத பிர்மத்தினிட மிருந்தே வியாகிருதமான இவ்வுலகுண்டாயிற்று. அவ்யாகிருதமான காரிய பிர்மமே வியாகிருதத்தில் கணபதி, சிவன், சக்தி, விஷ்ணு, ஸூரியன், பிரமனென்றறுவித மூர்த்தியுடன் விளங்குகின்றது. இவ்வறுவரில் சக்தியான அவிரூபிணியான சாக்தப் பிர்மத்தை பாவனைசெய்து ததாகாரத்தை யடைந்தாள். ஆகையாற்றான் வேதபுராணங்கள் சாக்த பிர்மத்திற்கும் சக்திக்கும் பேதமாய்க் கூறுகின்றன. இப்பேற்பட்ட சக்தியை யாராதித்தே சிவன் முதலியவர்கள் தங்கள் தங்கள் காரியங்களிற் சக்தியைப்பெற்றார்கள். புவனேசுவரியென்ற பராசக்தித் தன்னாத்மாவிலிருந்து மகாவித்தியையும் புத்தியிலிருந்து மகா வித்தியையும் படைத்துக் கணபதிக்குக் கொடுத்தாள். தன்னகங்காரத்திலிருந்து ஸாவித்திரியைப் படைத்து ஸூரியனுக்கும் சரீரத்தின் கூடத்திரயங்களிலிருந்து கவுரி லக்ஷ்மி சாரதைகளைப்படைத்து பிர்மவிஷ்ணு ருத்திரர்களுக்குங் கொடுத்தாள். சிருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களை பிர்ம விஷ்ணு ருத்திரர்களால் நடப்பிவித்துத் தன் பக்தர்களுக்கு புக்தி முக்திகளைக் கொடுத்து வருகின்றாள். ருத்திர சக்தியான பார்வதியும் பராசக்தியைத்தியானித்து ஸமாதிவைபவத்தால் தத்ரூபத்தையடைந்தாள். ஆகையாற்றான் பார்வதிக்கும் புவனேசுவரிக்கும் சாக்த பிர்மத்திற்கும் பேதமாய் சாஸ்திரங்கள் கூறுகின்றன. பார்வதி ஸகுண ரூபிணியாயும் புவனேசுவரீ வியாகிருதாவ்யாகிருத ரூபிணியாயும், அவிரூபி

ணியானவள் ஸகுணநிற்குண ரூபிணியாயும், ஸகுண நிற்குண காரணபூதையானவள் பிர்மரூபிணியாயும் கூறப்படுவள். அவித்தை ஸகுணரூபிணியென்றும் வித்தை நிற்குணரூபிணியென்றும் ஸகுண நிற்குணபேத மாயையானவள் ஸ்வானந்த ரூபிணியென்று முறைக்கப்படுவள். ஸ்வானந்தபிர்ம ரூபிணியே அஸிமயியென்றும் வித்தியாரூபிணியான சித்சக்தியே தத்பதமயியென்றும் பிரகிருதியானஅவித்தையே த்வம்பதரூபிணியென்றும் மணித்வீபநிவாஸினியான பராசக்தியே புக்திமுக்தியின்பொருட்டு உபாஸிக்கத்தக்கவளென்றும் சித்சக்திஞானத்தினுல்லபிக்கத்தகுந்தவளென்றும் ஸ்வானந்தரூபிணி ஸமாதியாலடையத் தகுந்தவளென்றும் கூறப்படுவள். முக்தியின்பொருட்டு மணித்வீபநிவாஸினியான புவனேசுவரியென்ற பிரமராளகையே நாம் உபாஸிக்கவேண்டியது என்று சொல்லிப் பராசக்தியின் ஏகாக்ஷர மந்திரத்தையுபதேசித்தார். இவ்விதம்பிரத்தியும்னனுபதேசம்பெற்று குருவையும் குரு பத்னியையும் நமஸ்கரித்து விடைபெற்றுத் தன்னரண்மனை சென்ருன். பிரதிதினமுந் தன்தேவியுடன் பராசக்தியைப் பூஜித்து மனுவையும் ஜபித்துவந்தான். அவர்களுக் கம்பாள் தரிசனமுங்கொடுத்து ஹிருதயத்திலும் விளங்கினுள். இவ்விதஞ் சிலகாலஞ்சென்றபிறகு பராசக்தி கருணையுற்று பாலை முதலியவர்களைத் தன்னிடமழைத்துவர விசித்திரமான விமானமனுப்பினுள். பாலைத் தன் நாயகனுடனும் பிரத்தியும்னன் தன் மனையாளுடனும் விமானத்திலேறி வாத்தியங்கள் கோஷிக்க மணித்தீபம் சென்ருர்கள். பாலை தன் நாயகனுடன் பராசக்தியின் ஸாயுஜ்யத்தையடைந்தாள். பிரத்தியும்னன் தன்மனையாளுடன் பராசக்தியின் ஸமீபத்திலேயே வஸித்துவந்தான். ஓ! வாகீசமுனியே இவ்விதம் பிரமராளகையின் மகிமையைச்சுருக்கமாயுரைத்தேன். பாலையின் சரித்திரமான பிரமராளகையின் இம்மான்மியத்தைப் படிப்பவர்களும் கேட்பவர்களுமிவ்விடத்தில் ஸகலபோகபாக்கியங்களை யுமனுபவித்துப் பரத்தில் முக்தியையுமடைவார்கள்.

முப்பத்து மூன்ருமத்தியாம் முற்றும்.

முப்பத்து நான்காவது அத்தியாயம்.

சிவமூர்த்தங்களில் ஸோமாஸ்கந்தர் கங்காதரர் தக்ஷிணாமூர்த்தியாகிய இவைகளின் வைபவம் சங்கிரகமாய்ச்சொன்னேன். நடராஜாவின் மகிமையைச் சொல்லுகிறேன்; ஸாவதானமாய்க் கேளும் வாகிசமுனியே யென்று சொல்லத்துவக்கினர். சூரியனிடமிருந்து சுக்கிலசாகையை யத்தியயனஞ்செய்த மாத்தியந்தின முனிவரின் புதல்வராகிய வியாக்கிரபாத முனிவர் நடராஜமூர்த்தியினிடத்தில் பக்தியுள்ளவராய்த் திருவெண்காட்டில் ஸகுணதாண்டவத்தையும் சிதம்பரத்தில் பதஞ்சலியுடன் நிற்குணதாண்டவத்தையும் பார்த்துச் சிதம்பரத்திலேயே வஸித்துவந்தார். அவருடைய புதல்வரான உபமன்யுமுனிவர் பால்யத்திலேயேசிவபிரஸாதத்தையடைந்து சைவசாரியராய்யோகிசிரேஷ்டராய் விளங்கினர். அவருக்கு புதல்வராய்த்தண்டகவனத்தில் வஸித்துவந்த ஸாங்கிருதி முனிவர் மன்னார்குடிக்குக் கீழ்புறத்திலுள்ள சுவாயம்புவ க்ஷேத்திரமான பிரமரேசத்தில்மோதாமோத விநாயகரையும் பிரமராளகையையும பிரமரேசுவரரையும் பார்த்துப் பிரீதியுடனதில் வஸித்து க்ஷேத்திர ஸன்யாஸியாய் யோகமார்க்கத்திலிருந்து பரமனைப் பஜித்துவந்தார். பதினாயிரம் வருஷஞ்சென்ற பிறகு பரமன் தரிசனமளிக்க முனிவன் நடனம்பார்க்க விருப்புற்றுநர்த்தனம் காண்பிவிக்கும்படி பிரார்த்தித்தான். பரமேசுவரர் பிரமராளகையை ஸிம்மாஸனத்தில் வைத்து நடனஞ்செய்தார். வேதங்கள் பக்கத்திலிருந்து துதித்தன. ஸரஸ்வதி தும்புரு நாரதர்கள் வீணையை வைத்துப் பாடினார்கள். விஷ்ணு பிர்மாக்கள் மிருதங்கதாள மடித்தார்கள். ஹாலாஹல சுந்தரர் விபூதிபாத்திரத்தைக் கையில்வைத்துக்கொண்டு பரமன் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தார். பானுகம்பன் முதலிய சிவகணங்கள் சங்கம் முதலிய வாத்தியங்கள் வாசித்தார்கள். இவ்விதம் பரமன்நடனம்புரிவதைஸாங்கிருதிமுனிவர்பார்த்துமிக்கக் களித்துப் பரமனைத்துதிப்பதானர். காரணங்களுக்குக் காரணமாயும் ஜகத்ரூபியாயும் ஹிதபிவாகரராயும் தம்பதாசிரயரை ரக்ஷிப்பவராயுமிருக்கும் தாண்டவேசரான சிவனின் பொரு

ட்டு நமஸ்காரம் செய்கின்றேன். மூக்குமுனையில் திருஷ்டியைவைத்து ஹிருதயத்தில் தீபம்போல பிரகாசிக்குமெவரை யதிகளான யோகிகள் தியானித்துத் துதிக்கின்றார்களோ அப்பேர்ப்பட்ட தாண்டவேசனாகிய சிவத்தின்பொருட்டு நமஸ்காரஞ்செய்கின்றேன். படைத்துக்காத்தழிப்பவராயும் வேதாந்தத்தாலறியக்கூடியவராயும் தபஸ்விகளுக்கு சீக்கிர மனுக்கிரகம் புரிபவருமான தாண்டவேசரர்கிய சிவத்தின்பொருட்டு நமஸ்காரம் செய்கின்றேன். ஓங்கார ரூபியாயும் முக்கண்ணுடையவராயும் யமம் முதலிய அஷ்டாங்க யோக வித்தியையளிப்பவராயும் விபூதியைப்போல் வெளுப்பு வர்ணமுடையவராயும் ஜடாதரராயுமிருக்கும் தாண்டவேசுவரராகிய சிவத்தின்பொருட்டு நமஸ்காரம் செய்கின்றேன். ஸம்ஸார பயத்தைவிலக்கும்பொருட்டுக் குருரூபியாயும் ஞானத்தையுபதேசிக்கும்பொருட்டு மங்களரூபியாயும் யமனைக்கொல்லும்பொருட்டு பிரளயகாலாக்கினி ரூபியாயும் விளங்கும் தாண்டவேசுவரராகிய சிவத்தின்பொருட்டு நமஸ்காரம்செய்கின்றேன். படைத்தலின்பொருட்டு பிரமரூபியாயும் பாலனத்தின் பொருட்டு விஷ்ணுரூபியாயும் ஸம்ஹாரத்தின்பொருட்டு ருத்திர ரூபியாயும பக்தானுக்கிரகத்தின்பொருட்டு ஸதாசிவரூபியாயும் விளங்கும் தாண்டவேசராகிய சிவத்தின்பொருட்டு நமஸ்காரம் செய்கின்றேன். விசுவத்தில் யாவராலும் வந்தியராயும் சந்திரகலாதரராயும்ஸர்வலோகாசிரதராயும்பாசாங்குச குடாரகபாலதாரியாயுமிருக்கும் தாண்டவேசராகிய சிவத்தின் பொருட்டு நமஸ்காரம் செய்கின்றேன். ஸர்வபிரியகரராயும் பினகபாணந்தரித்தவராயும் கௌரீப்பிரியராயும் ஸர்வலோகபாலகராயுமிருக்கும் தாண்டவேசராகிய சிவத்தின்பொருட்டு நமஸ்காரம்செய்கின்றேன். இவ்விதம் துதித்தடிக்கடி முனிவன் நமஸ்கரிக்க, பரமனாலிங்கனஞ்செய்து, வியாக்கிரபாதகுல சிகாமணியே உனக்கிஷ்டமான மற்றவரங்களையும்கேள்; கொடுக்கின்றோமென்றருள்புரிந்தார். அதற்கு முனிவன் பரமனே திருவெண்காடு முதலிய ஒன்பது தாண்டவ ஸ்தலங்களைச் சிரேஷ்ட

மாய் முனிவர்கள் கூறுகின்றார்கள். இது பத்தாவது ஸ்தல மாயுமிப்பொழுது செய்தநடனம் ஸாங்கிருதி நடனமென்றும் பிரஸித்தி யடையவேண்டும். இத்தலத்திலே ரூபியாயிருந்து பக்தாபீஷ்டத்தைக் கொடுத்து முக்தியளிக்கவேண்டும் என்று பிரார்த்தனை புரிந்தான். பரமன் அதையங்கீகரித்து அவ்விதம் வரமளித்துத் தாம் நடராஜமூர்த்தியாகவே யிருந்துவிட்டார். முனிவனும் தியானஸித்தியைப்பெற்று சிவப்பிரஸாதத்தால் விதேககைவல்ய முக்தியையடைந்தார். பிரமரேசராகிய பரமனும் நடராஜமூர்த்தியாகவிருந்து பக்தர்களுக்கு முக்தியை யளிக்கின்றார். ஆலங்குடிக்குச் சமீபமான பெரிய காட்டில் ஜனஹிம்ஸகனும் பஞ்சமகாபாதகங்களைச் செய்யுமோர் கிராதகனிருந்தான். அவனொருநாள் அம்மார்க்கமாய்ப் போகும் ததீசிமுனியைக்கண்டு கையில் கத்தியுடன் அம்முனியின் பக்கஞ்செல்ல அவன் கையிலிருந்த கத்தி கீழேவிழுந்தது. முனியின் வீக்ஷண்யத்தாலவனுக்கு வைராக்கியம்பிறந்து மூனியை வணங்கி கைகூப்பி ஓ கருணாநிதியாகிய முனிவரே! நான் ஜனித்ததுமுதல் ஜீவஹிம்ஸகனுயேற்பட் டநேக பிராம்மணரை வதைத்திருக்கின்றேன். இப்பேர்ப்பட்ட யெனக்குமது பார்வையால் வைராக்கியமுண்டாய்த் தனத்தின் பொருட்டு நான்செய்த பாதகங்களிலிருந்து பயமுமுண்டாயிற்று. உம்மை சரணாகதியடைந்தவென்னைக் காப்பாற்றவேண்டுமென் றநேக முறை வந்தனைகள்புரிந்தான். அவனைக்கிருபையுடன் முனிவன்பார்த்து அவன் சிரஸில் கைவைத்து ஸ்ரீ தாண்டவேசாய நம: வென்னும் நாம மந்திரத்தையுபதேசித்துக் கிராதகனே இத்தண்டகவனத்தில் சோளதேசத்தின் தென்பாகத்தில் பிரமரேசமென்ற ஓர் க்ஷேத்திர மிருக்கின்றது. நீ அவ்விடம் சென்று இம்மந்திரத்தைப் பகவான் தெரிசனம் கொடுக்கும் வரையிலும் ஜபித்துவாவென்று சொல்லி முனிவர்போய்விட்டார். அவ்வேடனுமந்த க்ஷேத்திரம்சென்று நிராஹாரனுய் நடராஜாவின் ஸன்னிதியிலிருந்து முனியுபதேசித்த மந்திரத்தை ஜபித்துவந்தான். அவன்பேரில் புத்துவிருக்ஷம் கொடிகள் முதலியவை உண்டாயின. இவ்விதமாயிரவருஷம் சென்ற

பிறகு நடராஜர் கிருபையுற்றுத் தரிசனமளிக்கச் சியாமளனென்றவேடன் திவ்யரூபம்பெற்றுப் பரமனை நமஸ்கரித்துக் கைகூப்பிப் பரமனை யவர்கிருபையாற்பெற்ற வாக்விபூதியாற்றுதிசெய்தான். வெளுப்பு வர்ணமும் ஜடையுமுடையவராயும் பார்வதீ பதியாயும் புருஷார்த்தங்களைக்கொடுப்பவராயுமிருக்குமென் பாபநிவாரகரை பஜிக்கின்றேன். யோகிகளுக்கு முபநிடதங்களுக்குமெட்டாதவராயும் மூவர் ரூபியாயும் பிரணதார்த்தி ஹரராயு மிருக்குமென் பாப நிவாரகரை பஜிக்கின்றேன். முனிகளின் ஹிருதயத்தில் நிரந்தரமாய் வஸிப்பவராயும் அநேக தேவகணங்களுக்கு ஈசனாயும் பிர்ம விஷ்ணு ருத்திர சக்தி ஸூரிய ரூபியாயுமிருக்குமென் பாப நிவாரகரை பஜிக்கின்றேன். எவருடைய பாதத்தை விஷ்ணுவும் சிரஸை பிரமனும் ஸ்வரூபத்தை வேதங்களும் பிரபுத்வத்தை யுமையும் தத்துவத்தைக் குகரும் அறியமுடியவில்லையோ அப்பேர்ப்பட்ட தத்துவமஸியாகிருதியையுடைய பிர்மத்தை யென் குருவின் வாக்கியத்தால் கண்டு நான் நமஸ்கரிக்கின்றேன். ஸகலவுலகங்களுக்கு ஈசனாயிருப்பதாலு மவிபத விஷயராயிருப்பதாலும் ஸ்வாநந்த மாயாதீசனாய் சுவாநந்த நிலையிலிருப்பவராயும் குணரகிதராயவித்தியாபாதகதராயும் மாயாபாத ஸம்மந்தப்பட்டுக் கஜமுக ஸ்கந்தபிதாவாயும் சுத்த ஸத்துவப் பிரதானமாயாயோகத்தாற்றுரீரிய நிலையிலிருப்பதாலும் ஸர்வக்ஷேமகரராய் சர்வசிரேஷ்டராய் விளங்கும் நடராஜமூர்த்தியை பஜிக்கின்றேன். இவ்விதம் அவன் ஸ்திதியைக் கேட்டப்பரமன் கிருபையுற்று பக்தபுங்கவனாகிய சியாமா நீபாபரஹிதனாய்விட்டாய். சியாமளனென்ற பெயருடன் நமது கணங்களுக் கதிபதியாயிருவென்றனுக்கிரகம் புரிந்தவனுடன் கைலாஸம் சென்றார். சியாமளனும் காணபத்தியத்தையடைந்து பரமன்பக்கத்தில் வஸித்துவருகின்றான். மாகமாஸம் சதுர்த்தசியில் சியாமன் முக்தியடைந்தபடியால் அன்று நடேசரை பூஜிப்பவர் நிச்சயமாய் மோக்ஷத்தை யடைவார்கள். நடராஜமூர்த்தியின் மகிமையைப் படிப்பவரும் கேட்ப்பவரும் சியாமளன்போல் பாபரகிதராய் முக்தியடைவார்கள்.

முப்பத்து நான்காவது அத்தியாயம் முற்றும்.

முப்பத்து ஐந்தாவது அத்தியாயம்.

ஹேஹயதேசத்தில் மாஹிஷ்மதிபுரியில் வரேணியன்வம்சத்திலுதித்த நீதிமானென்ற வரசன் குணவானும் சிவபக்தனும் பிராம்மண போஷகனும் தன்மனையாளாகிய காந்தியுடனரசாண்டு வந்தான். ஸந்ததியில்லாததால் அரசன் ஜயோதிஷ்யாளுடைய வாக்கியத்தின்பேரில் நூறுஸ்திரீகளை மணந்துகொண்டான். பிறகு மூத்தமனையாளிடத்திலேயே சந்திரகாந்திக்குச் சமதியான ரூபத்துடனோர் புதல்வனுண்டாக அவனுக்குப் பிராம்மண வாக்கியப்படி சந்திரமவுளி யென்றுபெயரிட்டன்புடன் வளர்த்துவந்தான். பாலகனும் சுக்கிலபட்சசந்திரன்போல் வளர்ந்துவருகையில் மூன்று வருஷத்திற்குப்பிறகு மற்ற நூறு ஸ்திரீகளும் தனித்தனி ஒவ்வொரு புதல்வரை யீன்றார்கள். அரசன் பேரானந்தமடைந்து பரமப் பிரீதியுடனவர்களை வளர்த்துவந்தான். தியாகசோழன் புதல்வியாகிய காந்தி யென்ற பட்டஸ்திரி தன் ஸகோதரன் விவாகத்தின்பொருட்டு பதிபுத்திராளுடன் கமலாலயம் சென்று வஸித்துவந்தாள். விவாஹம் முடிந்து கொஞ்சகாலம் சென்றபிறகு நீதிமானென்ற அரசன் தன் மைத்துனனை நோக்கி என் நூறுகுழந்தைகளையும் பாராமலிவ்விடமிருந்து விட்டேன்; ஆகையால் என்னரசாட்சி செல்ல அனுமதி கொடுமென்று கேட்கவதற்கு குஹசோழன் பட்டஸ்திரீயும் அவள் மைந்தனு மிங்கிருக்க போகஸ்திரி பிள்ளைகளின்பேரி லிவ்வளவு விருப்புற்றது என்ன காரணமோ வென்றான். அதற்கு நீதிமான் எல்லாப் பிள்ளைகளும் என்வயிற்றிற் பிறந்தவர்கள்தானே. ஆகையால்நூற்றோர் ஸ்திரீகளும் பிள்ளைகளும் எனக்கு ஸமானந்தான் வேற்றுமையில்லை. இப்படியிருக்க ஒரு பிள்ளையை மாத்திரம் பார்த்துக் கொண்டிருப்பதால் நானெப்படி திருப்தியடைவேனென்றான். அதற்குக் குஹசோழன் பட்டஸ்திரீயின்பிள்ளையே பிள்ளை. மற்றஸ்திரீகள் தாஸிக்குச்சமானமாயும் அவர்கள் பிள்ளைகளும் தாஸிபுத்திராளுக்குச் சமானமாயு மாவார்க ளென்று சொன்னான். இதனால் நீதிமான் கோபங்கொண்டு பட்டஸ்திரீயையு மவள் புத்திரனையு மங்கேயே விட்

டுவிட்டுத் தன்னரசாட்சி சென்றான். நீதிமான்றன் மனைவி யையும் புதல்வனையு மழைத்துவர பிறகு மனிதர் யனுப்பாததா ல் சந்திரமவுளி தாயுட னம்மான் வீட்டிலேயே வஸித்து வந் தான். அங்கேயே வித்தியாப்பியாஸமும் செய்து வந்தான். மாகமாஸத்தில் சியாமளன் முக்திதினத்தில் பிரமரேசத்தில் நடராஜாவை சேவிக்கக் கமலாலய வாஸிகள் யாவருஞ் சென் றார்கள். சந்திர மவுளியும் வாஹனாரூடராய் சென்று பரமே் சுவரரை ஸேவித்து அமாவாஸையில் ஹரிச்சந்திர கெங்கையில் ஸ்நாநம்பண்ணி பிரமரேசரை ஜனங்கள் பூஜிப்பதைப் பார்த் துத்தானும் பலபுஷ்பாதிகள் கொண்டுவந்து பக்தியுடன் பிரம ரேசரைப் பூஜித்துச் சந்திரமவுளி யென்று தன்பெயரிட்டு சந் திரமவுளீசாயநம: வென்று ஜபித்துவந்தான். இவ்விதம்அங்கே ஏகாங்கியாய்த் தங்கியிருந்தெட்டுநாள் ஜபித்து வரவே சந்திரம வுளீசராகிய பரமன் கிருபையுற்றம்பிகையுடன் தரிசனமளித் தவனை யாலிங்கனஞ் செய்து கொள்ளவே, சுத்தஸ்படிகஸங்கா சராய் மிருகபரசுவர அபயங்களைத்தரித்தவராய் விளங்குமீசனை நமஸ்கரித்துக் கரங்குவித்துத் துதிப்பதானான். சந்திரமவுளி யாற்செய்யப்பட்ட சந்திரமவுளி ஸ்தோத்திரத்தால் ஸந்தோஷ மடைந்த பகவான் அவனைப்பார்த்துக் குழந்தா யுனக்கிஷ்டமா னவரங்களைக் கேட்டுக்கொள் கொடுக்கிறே மென்றுசொல்ல சந்திரமவுளி நமஸ்கரித்து பகவன் நீரிந்த சந்திரமவுளீச ரூபத் துடனிந்த க்ஷேத்திரத்தி லெப்பொழுது மிருக்க வேண்டுமெ ன்றும் விசேஷமாயிந்த மூர்த்தியுத்ஸவம் நடத்த வேண்டுமெ ன்றும் எனக்கனுக்கிரகம் புரிந்த பூரநக்ஷத்திரத்தில் வருஷோ த்ஸவமும் உமக்குச் செய்யவேண்டும். இவ்விடத்தில் பக்தாளு க்குப் புருஷார்த்தங்களை யளிக்க வேண்டும். உமது பாதார விந்தத்தில் எனக்கு நிரந்தர பக்தி யிருக்கவேண்டு மென்றும் வேண்டிக்கொண்டான். இவ்வித மவன் பிரார்த்தனையை கேட் டபரமன்ஸந்தோஷித்தவ்வாறே யளித்து மன்மதனுக்குச் சம தியான ரூபமும் பல்குனனுக்குச் சமதியான பராக்கிரமமும் பீமனுக்குச் சமதியான தேகபலமும் பதினான்கு வித்தைகளை யு மளித்து ஸ்மரணத்தினால் தமது ஸான்யத்தியமு முண்டா

குமென்றும் வரங்களை யளித்து மறைந்தார். சந்திரமவுளிப் பரமனிடம் வரம்பெற்றுக் கமலாலயத்திற் றன்னிருப்பிடம் வந்து ஒரு வருஷம் வசித்து வந்தான். பரமனருளிய வரப்படி ரூபத்தையும் பலபராக்கிரமத்தையும் வித்தைகளையு மடைந்தான். அவனுடைய பதினான்காவது வயதில் தாயை வணங்கி பக்தியுடன் வினவலானான். அம்மா நாமிருவரும் என் அம்மான் வீட்டிலேயே யிருக்கின்றோமே. பிதாவைப் பார்க்கவிரும்புகின்றேன். நமது தேசமெங்கே? நாமேனிங்கிருக்கின்றோ மிதையெனக்குச் சொல்ல வேண்டுமென அதின் காரணத்தையும் தேசமுதலானவை களையும் தாயார் குமாரனுக்கு வியக்தமாய்ச் சொன்னாள். அதற்குக் குமாரன் அம்மா நானென்பிதாவிடஞ்சென் றின்னானென்று தெரிவிக்காமல் ஸேநாபதியாயிருந்து சக்கிரவர்த்தியா யவரைச் செய்தவர் பிரீதியைஸம்பாதித்துப் பிறகென் சரித்திரத்தைச் சொல்லியவரனுமதியின்பேரிலென்னை பிரகழைத்துப்போக விரும்புகிறேன் என்று சொல்லி தாயினிடத்திலும் அம்மானிடத்திலு மனுமதிபெற்று நானாவித வஸ்திராபரண மணிந்து மன்மதன்போல யுவதிஜனங்களை மோகப்படுத்துகிறவனாய்க் குதிரையேறி கையில் வில்லு கத்தி முதலிய ஆயுதங்களேந்தி மாகிஷ்மதியிலரசன் சபைக்குச்சென்றான். பிறகு குதிரையை விட்டிறங்கி யரசனை வணங்க அரசன் பிரீதியுடன் அவன் தேசம் முதலியவைகளை விசாரித்தான். அதற்கவன் தான் சோழதேசத்தரசன் ஸேனாபதியின் புதல்வன், உங்கள் கியாதியைக் கேட்டுங்களிடத்தில் ஸேனாபதியாக விருந்தென் பராக்கிரமத்தாற் சந்தோஷப்படுத்த வேண்டுமென்று கருதிவந்தேனென்று சொல்லித்தன் தனுர் வித்தையின் சாமர்த்தியத்தையும் காண்பிவித்தான். அரசனவன் ரூபம் குணம் முதலியவைகளைக் கண்டு அற்ப ஸேநாபதியாக அவனைச் செய்தான். இவ்விதம் ஸேநாபத்தியம் பெற்றவ்விடமிருந்து மூன்றுமாதத்திற்குள் சுற்றிலுமுள்ள அரசர்களை விளையாட்டாக ஜயித்துக் கப்பம் கட்டுகிறவர்களாச் செய்து ஜயித்து ஸம்பாதித்த திரவியங்களை யரசனிடம் கொடுத்துநடத்தியதையும் சொன்னான். அரசனவன் பராக்கிரமத்திற்கு ஸந்தோஷித்து மந்திரிகளுடனாலோசித்து ஸர்வஸேநாபதியாகச்

செய்தான். பிறகு பாரத வருஷத்திலுள்ள ஸகல தேசரா ஜாக்களையும் ஜயித்துக் கப்பம் வாங்கி இவ்விதம் வருஷந்தோ றும் கப்பம் கட்டவேண்டுமென்று மேற்பாடு செய்துதான் ஜயித்து வாங்கி நூறுகோடி ரிஷ்கத்துடன் காலக்ஷோஹிணி ஸேனாஸகிதனாய் ஆறுமாதத்திற் றிரும்பிவந்து அரசனை வணங் கித்தான் கொண்டுவந்த பொருளையும் கொடுத்தான். ஸேநா பதியான சந்திரமவுளியினாலரசர் யாவரும் வந்து ஹேஹயரா ஜனாகிய நீதிமானுக்குச் சக்கிரவர்த்தி பட்டாபிஷேகம் செய்வி த்தார்கள். பிறகவர்கள் சிலநாளங்கிருந்து விடைபெற்றுத்த ங்கள் தேசம் சென்றார்கள். பிறகரசன் ஸதஸிலுள்ள மந்தி ரிபுரோகிதர் முதலியவர்களைப் பார்த்துச் சொல்லுகின்றான். ஓ சபையோர்களே! இந்த சூரனொருவருஷத்திற்குமுன் நம் சபை வந்தபொழுது சொன்ன காரியத்தை சாதித்துப்போட்டான். இவன் வருவதற்குமுன் நானொரு தேசாதிபதியாயிருந்து இப் பொழுது சக்கிரவர்த்தியா யிருக்கின்றேன். தேசாதிபதியாயிரு க்கும்பொழுது என்னுடைய வருஷவரும்படி கோடிநிஷ்கம். இப்பொழுதோ நூறுகோடி நிஷ்கம். இவ்விதம் சந்திரமவு ளியினால் பிரீதியுடன் பிரத்தியுபகாரமின்றி செய்யப்பட்டிரு க்கின்றேன். ஆகையால் ஸர்வாதிபத்யத்தையும் அவனுக்கே கொடுத்துவிட்டு சக்கிரவர்த்தியென்ற பெயரோடுமாத்திரம் இருக்கவிரும்புகிறேன்; என்று சொல்லி ஸர்வாதிபத்தியத்தை க்கொடுத்தான். அதினால் மந்திரி ஸேனாபதி முதலிய யாவ ரும் சந்திரமவுளியி னாக்கினைக்குக் கட்டுப்பட்டவராகவானார் கள். அரசனுடைய மற்ற நூறு புதல்வர்களுமிவனாக்கினைக் குக் கட்டுப்பட்டவராகவாய் விட்டபடியா லவர்களுக்கு வித்தி யாப்பியாஸம் செய்வித்தான். இவ்வித மொருவருஷமாகவே அவன் தர்மப்பிரகாரம் நீதியாயரசாண்டுவந்ததால் மற்றுமுள்ள வரசர்களும் பிராம்மணர் முதலிய பிரஜைகளும் விசேஷமா ய்ச் சிலாகித்து வந்தார்கள். மந்திரி முதலிய உத்தியோகஸ் தர்களுக்கு ஸ்வாதீனம் கொஞ்சங்கூட அவன் கொடுக்காத தினாலவர்களுக்குத் தங்கள் சம்பளமின்றித் திருட்டுத்துரோ ஹம் முதலியவைகளா லொருகாசுகூட கிடைக்கவில்லை. ஆனா

லெப்பொழுது முள்ளதைக்காட்டிலும் சம்பளம் பத்துப்பங் கதிகப்படுத்தினன். ருஜுஸ்வபாவமுள்ளவர்கள் மிகுந்த ஸந்தோஷத்தை யடைந்தார்கள். துரோகம் திருட்டு முதலிய கெட்ட குணமுள்ளவர்களுக்கு மாத்திரம் திருப்தி யுண்டாகவில்லை. கோடியிலொருவர் அவனிடத்தில் துவேஷ முள்ளவர்களாயுமிருந்தார்கள்.

முப்பத்தைந்தாவது அத்தியாயம் முற்றும்.

முப்பத்தாறுவது அத்தியாயம்.

எப்பொழுதும் கபடியும் வஞ்சகனுமான துசிலனென்னும் மந்திரி தனக்கரசாக்ஷியில் சுவாதீனமில்லாததால் பொருமையுற்று சந்திரமவுளியை யரசாக்ஷியிலிருந்து விலக்கிவிட வேண்டுமென்று கருதியரசனிடம் சென்றரசனே சந்திரமவுளி யென்ற வீரனை நீர் நம்பக்கூடாது; அவன் ஸமயம்பார்த்தும்மை ராஜ்யத்தைவிட்டு விலக்கிவிடுவான் உமது புத்திரர்கள் ராஜபுத்திரராய்விடுவார்கள் என்று பலதரம் போதித்துவந்தான். அதற்கரசன் இனியிவ்விதம் நம்மிடம் நீ சொன்னால் சிரஸாக்கினை நேருமென்று கோபத்துடன் சொன்னன். பிறகத்துஷ்டன் நானவிதாபரண பழங்களா லரசகுமாரர்களை வசப்படுத்தியவர்களின் சிநேகத்தைச் சம்பாதித்தான். அரசகுமாரர்களுக்குப் பதினறு வயதானகாலத்தி லவர்களிடமரசனுக்குச் சொன்னபடி துசிலமந்திரி சொன்னன். அதிலரசகுமாரர்கள் விசுவாஸத்தை யடைந்தார்கள். ஓர் ஸமயத்தி லரசகுமாரர்கள் சந்திரமவுளியை யரசாக்ஷியிலிருந்து விலக்க உபயமெதுவென்று துசிலனை ரகஸ்யத்தில் விசாரித்தார்கள். அதற்கு துசிலன் நீங்கள் நான் கொடுக்கும் பணத்தை வாங்கிக்கொண்டு வேட்டைக்குப் போவதாய்ச் சொல்லிவிட்டு ஆறுமாதமிங்குவராமல் தேச சஞ்சாரம் செய்வீர்களேயாகில் அதற்குள் அரசனுக்கு நான் போதித்தவனிடத்தில் சங்கையை யுண்டு பண்ணி விடுகிறேன். பிறகரசனுங்களைக் கொண்டுவரும்படியவனையனுப்பிவிடுவார், அவன் உங்களைக்கண்டுபிடித்தழைத்து

வராமலில்விடம் வரமாட்டான். அவனிடமகப்படாம லிங்குவ ந்து உங்களிராஜ்யத்தைக்கொண்டுவிடுங்கள்; இதுதானுபாய மென்றுசொன்னன். அவர்களது நல்லஉபாயமென் றங்கீகரித் துச்சந்திரமவுளியினிடம் வேட்டைக்குச் செல்வதாய்ச் சொல் லியனுமதிபெற்றுப் பெருங்காடுசென்ருர்கள். பிறகேழு நாளா யுமவர்கள் திரும்பி வராததால் அரசன் துசீலனுடைய வாக்கிய த்தினல் மனங்கலங்கி சந்திரமவுளியைக் கூப்பிட்டென் குமா ர்களை நீ கொண்டுவந்து சேர்க்கவேண்டியது. இல்லாதவரை யில் நீயே ராஜ்யாபாரத்தின் பொருட்டென் குமாரர்களைக் கொன்றவனுய் நினைப்பேனென்று சொன்னன். அதைக்கே ட்ட சந்திரமவுளியரசனிடம் விடைபெற்றுக் குதிரையேறி வில்லு கத்தி கையிலேந்தி அனேக பட்டணங்கள் கிராமங்கள் சென்று தேடியகப்படாமல் காடுகளில் தேடிச்சென்ருன். ஓர் தினம் விந்தியபர்வதச்சாரலில் பெருங்காடுபுகுந்து தேடிப்போ கையில் நல்ல பதினைந்து நாழிகைக்கோரரக்கனுடைய ரகஸ்ய ஸ்தானம் போய்ச்சேர்ந்தான். அவ்விடத்திலோர் திவ்யமான அரண்மனையிலிருந்த மகாரூபகுணவதியான ஓர் கன்னிகை யவ்விடப்போகும் வீரனுன இவனைப்பார்த்து மிருதுவான தொ னியுடன் ஒ ராஜகுமாரா! இது என்னிமித்தம் நானுவிதபோக் கிய பதார்த்தங்களுடனே அவுணராஜனல் நிர்மாணஞ்செய்யப் பட்ட அரண்மனை இதற்கிரண்டு க்ரோசத்துக்கப்பாலவனுடை யபட்டணமிருக்கின்றது. இப்பொழுதவன் வேலைக்காரர்களுட னிவ்விடம் வருவான். இந்திரன் முதலியவர்களாலுமவனை ஜயி க்கமுடியாது. நரமாம்ஸமன்னியிலேயே ஆகாரம் புசியாத அவ ன் இப்பொழுது உம்மைக்கண்டாலுடனே பக்ஷித்துவிடுவான். உம்மைப்போ லநேகரைப் பக்ஷித்திருப்பதுமன்றி காராகிரகத் திற் சிலரை அடைத்தும் வைத்திருக்கின்ருன். மன்மதஸமா ந்தரனுகிய நீரிவ்விடம் வராமலெங்கேயாவது என் வேண்டுதே லுக்காக தப்பித்தோடிப்போ மென்றுசொன்னுள். இவ்வித மவள் வாக்கியத்தைக்கேட்ட வீரன் புன்சிரிப்புடன் அவ்வரண் மனையை நெருங்கினன். இதற்குள் ளிரண்டு வேலைக்காரர்க

ருடனவ்விடம் வந்த தானவன் மன்மதசுந்தரனன இவ்வரச குமாரனைக்கண்டு அவனைப் பிடித்துத்தின்ன ஆவல்கொண்டு அவனிடஞ்சென்றான். அவன் கருத்தை யறிந்துகொண்ட இராஜகுமாரன் தண்டத்தினுடன் கூடிய வலதுகையைத் துண்டித்தான். அதினாலவுணன் கோபங்கொண்டு கதயை யிடது கையி லேந்திவர அரசகுமாரனிடது கையுடன் தலையையும் சேதித்தான். உடனே முன்போலவே யாவுமுண்டாக அரச குமாரன் வியப்புற்றுச் சந்திரமவுளீசரை நினைக்க மல்லயுத்தத்தில் மதியுண்டாகி குதிரையை விட்டிறங்கி யவனைப்பிடித்திரண்டாய்க்கிழித்தெறிந்தான். மறுபடியும் அவுணன் முன்போலவேயாகி யரசகுமாரனைச்சிலாகித்து யுத்தத்திற்காரம்பிக்க வரசகுமாரனவனைப்பிடித்திரண்டாய்க்கிழித்துத் தலப்புமாத்திப் போட்டவன்பேரிற் றன்காலைவைத்தமுத்தி சந்திரமவுளீசரை நினைத்தான். அஸுரன் மாண்டுபோகவே வேலைக்காரர்கள் பட்டணம் சென்று தானவவீரப்படைகளை யழைத்துவர ராஜ குமாரன் வஜ்ராஸ்திரத்தால்யாவரையு மொருநொடியில் மாய்த்தான். அரசகுமாரனுடைய பராக்கிரமத்தைப்பார்த்திருந்த தேவகன்னிகை தன் ஸகிகளுடன் வெளியில் வந்தவனை வணங்கி யாலிங்கனம்பண்ணிக்கொண்டிருந்தவன்புடன் கைகூப்பிச்சொல்லுகின்றாள். புதனென்னுந்தேவனுக்கு கிருதாசியென்னும் தேவமாதுவினிடத்திற் பிறந்த தேவகன்னிகை நான்; என்னையென் தாயார் தேவலோகத்தில் வளர்த்து வந்தாள். வாகர்விதனென இந்ததுஷ்டதானவனிந்திரன் முதலியவர்களை ஜயித்து என்னையுமிந்திர ஸம்பத்துக்களையு மபகரித்துக்கொண்டுவந்து இவ்விடத்திற்கோசத்தில் சிந்தாமணியையும் உத்யானவனத்தில் கல்பகத்தருவையும், ஐராவதத்தை யானைக் கொட்டாரத்திலும் உச்சைசிரவஸைக் குதிரைக்கொட்டாரத்திலும் வைத்து என்னையிந்த வரண்மனையிலும் வைத்தான். நான் மூன்றுவருஷகாலமாய் விரதமென்கிற வியாஜத்தால் காலங்கழித்து தெய்வயோகத்தால் தாங்கள்வந்து அவுணனைக் கொன்று இவ்வாபத்திலிருந்தென்னை ரக்ஷித்தீர்கள். என் னியமப்படி தாங்கள் எனக்கு நாதனென்பது நிச்சயம், தாங்

கள் மனிதர்களாயிருந்தாலும் குணரூபங்களா லெனக்கு மேற்பட்டவர்களே. காந்தர்வ விதிப்படி என்னைக்கிரகித்துக் கொள்ளவேணடும். தங்கள் விர்த்தாந்தத்தையும் எனக்குண் மையாய்ச் சொல்லவேண்டும் என்று கேட்டாள். அவள் குணத்தின லரசகுமாரன் ஸந்தோஷித்து தன்விர்த்தாந்தத் தைச் சொல்லி அவளுடனரண்மனைக்குச் சென்றவளைவிதி ப்படிக்கிரகித்துக்கொண்டான். பிறகைராவதம் முதலியவை களை விடுவித்து நமஸ்கரித்துத் தானவன் தன்னால் வதம டைந்ததைச் சொல்லிதேவலோகம் போகும்படி கேட்டுக்கொ ண்டான். அதினலவைகள் ஸந்தோஷமடைந்து ஆபத்துக்கால த்தில் வந்துரக்ஷிக்கிறோமென்று வரன்கொடுத்து தேவலோக ஞ்சென்றன. தேவகன்னிகைகளில் இவள் ஸகிகள் இருவர் தவிரமற்றவர்களுந்தேவலோகஞ்சென்றார்கள். பிறகு மூன்று தினமவ்விடத்திலிருவருமதிகப்பிரீதியுடனிருந்தார்கள். பிறகு அரசகுமாரன்றன் ஸகோதரர்களைத் தேடிப்போக வேண்டுமெ ன்று சொல்வதைக் கேட்டிருந்த ஸகியானவள் பத்துப்பதி னைந்து நாளுக்குமுந்தி நூறு ராஜகுமாரர்களிவ்வழியாய்ப்போ னவர்களை அவுண வேலைக்காரர்கள் கண்டுபிடித்து வந்திதற்கு மேல்புறமுள்ள கட்டிடத்தில் காராக்கிரத்திலடைத்து விட்டா ர்களென்று சொன்னாள். அதைக்கேட்டவிவ்டஞ்சென்றவர் களைக் கண்டு போஜனாதிகள் கொடுத்துப் போஷித்துவந்தான். அவர்களுடைய ஸன்னிதியிலும் தன் விர்த்தாந்தத்தைச் சொ ன்னான். அல்பபுத்தியையுடைய ராஜகுமாரர்கள் ராஜபுத்திர னைத்தன் தமயனென்றறிந்து கொண்டார்கள்.

முப்பத்தாறுவது அத்தியாயம் முற்றும்.

முப்பத்தேழாவது அத்தியாயம்.

இங்கிப்படியிருக்க மாகிஷ்மதியிலோர் தூதனஅரசனிட த்திலோர் பத்திரிகையைக் கொண்டுவந்துக்கொடுக்க அரசன து சந்திரமவுளிக்கு வந்திருப்பதென்றறிந்து பெரிய மந்திரியி னிடம் பிரித்துவாசிக்கும்படி கொடுக்க மந்திரியதை வாசிக்க லானான். வருமாறு உன்விருத்தாந்தத்தைக் கேட்டு மிகவும்

ஸந்தோஷமடைந்தோம். இதுவரையிலுமுன் பிதாவுன்னைப் புத்திரனென்றறிந்துகொள்ளாதிருப்பது மிகவும் வியக்கத்தக்கதே. அறிந்து கொண்டால் மிகவும் ஸந்தோஷப்படுவார். உன் தாயாருன்னைப்பார்க்க விரும்புகின்றாள். நீ ஒருதடவை யவசியம் வந்துவிட்டுப் போகவேண்டும். உன்னைப்பிள்ளையென்றறியாமலேயுன்னிடத்தில் அரசன் ஸகலத்தையுமொப்புவித்தது மிகவுமாச்சரியமே. உன்னாலே ஸகல அரசர்களும் ஜயித்துச்சுவாதீனம் பண்ணப்பட்டது மிகவுமாச்சரியமானது. உங்கள் தாதாவுமுன்னைப்பார்க்க ஆசைப்படுவதால் அவசிய முன் முகத்தை வந்துகாட்டிப்போகவேண்டும். என்றிவ்விதம் பத்திரிகையைப்படித்தான். பத்திரிகையின் விஷயத்தைக் கேட்ட அரசன் சந்திரமவுளித்தன் மூத்தஸ்திரியின் குமாரனென்றறிந்து அவன் பராக்கிரமகுணங்களால் பேரானந்தமடைந்தவன் வரவையெதிர்பார்த்திருந்தான். சந்திரமவுளி யஸு ரனரண் மனையிலிருந்து பட்டணம் போகக் கருதி தன் ஸ்திரீயுடனுமவளிரண்டு ஸகிகளுடனும் நூறு ஸஹோதரர்களுடனும் வாகனாரூடராய்ப்புறப்பட்டு ராத்திரியிலோர் இடமிறங்கி போஜனாதிகள் செய்துகொண்டு நித்திரைசெய்தான். சந்திரமவுளி ஸ்திரீயுடனுமவள் ஸகிகளுடனுமசந்து நித்திரைசெய்கையில் துஷ்டபுத்தியுடைய ஹேஹஹபர்கள் கலந்து யோசனைசெய்து தூங்குகின்ற சந்திரமவுளியை யிரண்டாக வெட்டி யுடனே புறப்பட்டுத் தங்கள் தேசம் சென்றரண்மனையடைந்து பெற்றோர்களைப்பணிந்து சந்தோஷத்துடனிருந்தார்கள். அரசன் சந்திரமவுளியைக் கண்டீர்களோவென்று கேட்டதற்குக் காணவில்லையென்று சொல்லிவிட்டார்கள். அரசன் சந்திரமவுளியைத்தேடும் பொருட்டுக்காடு தேசங்கள்தோறும் தூதர்களையனுப்பினன். சந்திரமவுளியின் ஸ்திரீ காலையிலெழுந்து கணவனிரண்டாய் வெட்டுண்டுகிடப்பதையும் ஹேஹஹபர்களிராமற் போய்விட்டதையும்பார்த்து அவர்களே கெட்டவெண்ணத்துடன் புருஷனைத் தூக்கத்தில் வெட்டியிருக்க வேண்டுமென்று நினைத்துப் புலம்பியழுதாள். பிறகு ஸகிகளைக்கூப்பிட்டு நீங்கள் நடந்த விர்த்தாந்தங்கள் யாவையும் மாஹிஷ்மதியிலென் மாமனரிடம் சொல்லிவிட்டுத் தேவலோகம் செல்லுங்கள்,

நானென் புருஷன் ஜீவிக்க வுபாயம் செய்துபார்க்கின்றேன். முடியாதவரையி லுடன்கட்டையேறிவிடுகிறெனென்றுசொல்லியனுப்பினள். அவர்களுமவ்விதமே மாகிஷ்மதிசென்று நடந்தவைகளை அரசனிடம் சொல்லி ஆகாசமார்க்கமாய்த்தேவலோகஞ்சென்றார்கள். அரசன் தேவகன்னிகைகள் மூலமாய்த்தன் மூத்த குமாரன் சந்திரமவுளி மரணமடைந்ததைக் கேட்டு மரணமூர்ச்சையடைந்தான். மந்திரிகளிதைக்கேட்டவ்விடஞ்சென்றநேக நீதிநயவாக்கியங்களால் ஸமாதானப்படுத்தினார்கள். அரசனே சந்திரமவுளி குணவான், ரூபவான், வீரன், விஜயன் இப்பேர்ப்பட்டவனைத் துஷ்டத்தனமுள்ள உமது புத்திரர்களே கொன்றுவிட்டார்கள். இவ்வளவுதான் உமதுபாக்கியமென்று சொல்லிச்சிலர் ஸமாதானமாய்த் துக்க பரிஹாரஞ்செய்தார்கள். அரசன்றன் நூறு பிள்ளைகளையும் வரவழைத்து சவுக்கடி யடிக்கச்செய்தான். அவர்கள் அடிபொறுக்கமாட்டாமல் தாங்கள் நடத்திய துஷ்கிருத்தியங்களை ஒப்புக்கொண்டார்கள். அரசன் மிகுந்த துக்கத்துடனவர்களை நிந்தித்தரசாக்ஷியை மந்திரியினிடமொப்புவித்துச் சந்திரமவுளியை நினைத்து துக்கஸாகரத்தில் மூழ்கியிருந்தான். இஃதிப்படியிருக்கக் காட்டில் சந்திரமவுளியின் மனைவி யின்னதுசெய்வதென்றென்றுந்தோன்றாமல் அவன் தலையை உடலுடன் பொருந்தவைத்து மடியிற் றூக்கிவைத்துக்கொண்டு தன்னை நிந்தித் தவன் குணவீரியங்களைச் சொல்லிச்சொல்லிப் புலம்பியழுதுகொண்டிருந்தாள். சந்திரமவுளி யிறந்ததை தேவகன்னிகைகள்மூலமாய்க் கேழ்வியுற்ற காமதேனு அவ்விடம்வந்து உயரநின்று தன் பாலையவன்பேரிற் சொரிந்தது. அவ்வமுதத்தால் சந்திரமவுளி உயிர்பெற்றெழுந்து நடந்ததை மனையாள் முகமாய்க்கேட்டுக் காமதேனுவைப் பார்த்து நமஸ்கரித்தான். காமதேனு அவனையாலிங்கனஞ்செய்து குழந்தாய் உன் மிருதியைதேவகன்னிகையின்மூலமாய்க் கேழ்விப்பட்டு நீசெய்த வுபகாரத்திற்குப் பிரதிசெய்ய வந்துன்னைப் பிழைப்பித்தேன். இன்னுமுங்களிருவருடைய ஸ்மரணத்தினாலும் வேண்டும்பொழுது வந்துங்களிஷ்டத்தை பூர்த்தி செய்கின்றேன்; என்று சொல்லித் தனதிருப்பிடஞ் சென்றது. சந்திரமவுளி தன்

மனைவியின் புத்திகுணங்களால் மகிழ்ந்து அவளை யாலிங்கனஞ்செய்தவளுடனஸுரனரண்மனைசென்று நானுபோகங்களை யனுபவித்தவளுடன் சுகித்திருந்தான். தேவராஜனும் சந்திரமவுளியால் காமதேனு முதலியவைகள் ஸுரனிடமிருந்து விடுபட்டதை காமதேனு முகமாய்க்கேட்டுச் சந்தோஷித்தான். சந்திரமவுளி யிறந்துவிட்டானென்பதை பாஞ்ராசன் முதலிய அரசர்கள் யாவரும் கேழ்விப்பட்டொன்றுசேர்ந்து தங்கள் சைன்யங்களுடன் மாஹிஷ்மதிக்குவந்து பட்டணத்தை வளைந்துகொண்டு யுத்தபேரி யறைவித்தார்கள். இதைக்கேட்ட நீதிமானென்ற அரசன் துக்கித்து மந்திரிகளுடன் நூறு பிள்ளைகளையும் யுத்தத்திற்கனுப்பினான். வந்த அரசர்களிவர்களை ஜயித்துக்கட்டி கோலாகலத்துடன் பட்டணம் புகுந்தார்கள். அரசனிதைக்கேட்டும் தன்னரண்மனையிலேயே யிருந்துவிட்டான். மாஹிஷ்மதிக்கரசர்கள் யாவரும் யுத்தத்திற்குச்சென்றதை இச்சந்திரமவுளி கேழ்வியுற்று உச்சைசிரவஸை நினைத்தான். அது வந்தவுடன்றன்மனையாளை யாலிங்கனஞ்செய்து பெண்ணே இம்மார்க்கமாய்ச்சென்ற வேடராஜன் பேசிப்போனதை நான் கேழ்வுப்பட்டேன். ஒன்றுகூடி யுத்தத்திற்குச் சென்ற அவ்வரசர்களை ஜயிக்கவென் ஸகோதரர்களால் முடியாது. நானிறந்ததைக்கேழ்விப்பட்டவென் தகப்பனார் துக்சலாகரத்தில் மூழ்கிக்கிடப்பார்; ஆகையால் நான் சென்றவர்களை ஜெயித்தோர் ஜாமத்துக்குள் வந்துசேருகின்றேனென்றனுமதிபெற்று தெய்வப்புரவியேறி யவ்விடம் சென்று திவ்யாஸ்திரங்களாலவர்களை ஜயித்து விளையாட்டாகக் கட்டிப்போட்டுத் தன் ஸகோதரர்களையும் மந்திரிகளையும் விடுதலை செய்தான். அவ்வரசர்கள் சந்திரமவுளியைப்பார்த்து மகாஸாம் மகாராஜாவே! தாங்களிறந்துபோனதாகக் வதித்ராசர்கிட் கேழ்வியுற்று நாங்கள் யுத்தத்திற்கு வந்தோம் அக்குற்றத்தை மன்னித்தெங்களை யாண்டருளவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டார்கள். பிறகு சந்திரமவுளி யவர்களை விடுதலை செய்ய அவர்கள் வணங்கியவனிடம் விடைபெற்றுத் தங்கள் நாடுசென்றார்கள். சந்திரமவுளியின் ஸகோதரர்கள் அவனைப்

பார்த்துப் பயந்து லஜ்ஜையுடன் தலைகுனிந் தவனெதிரில் நின்றார்கள். மந்திரிகளவனை யாலிங்கனஞ்செய்து மகாராஜாவே! தாங்கள் இராஜகுமாரனென்றறியாமலே உம்முடைய நடவடிக்கையாலேயே உமதிடத்தில் நாங்கள் இரம்பவும் பிரியமுள்ளவர்களாகவேயிருந்தோம். இப்பொழு தும்மாலே சத்துருக்களிடமிருந்து விடுவிக்கப்பட்டோம். தன் மூத்தகுமாரனென்றும் மிருதமாய்ப்போனீரென்றும் அரசன் கேழ்விப்பட்டுத் துக்கக்கடலில் மூழ்கியிருக்கின்றார். தாங்களரண்மனை வந்து பிதாவை ஸந்தோஷப்படுத்தவேண்டுமென்று வேண்டிக்கொண்டார்கள். அதற்கரசகுமாரன் என் தகப்பனம்மான் வாக்கியத்தாற் கோபங்கொண்டென்னையும் தாயாரையும் அம்மான் வீட்டிலேயேவிட்டுவிட்டுத் தன் நூறு பிள்ளைகளிடத்தில் பிரேமைகொண்டு என்னையுமென் தாயாரையும் நினைக்காமலேயிருந்துவிட்டாராதலாலென் தாயாரையன்றி அவ்விடம்வர எனக்கிஷ்டமில்லையென்று சொல்லி நீங்கள் போங்கள் நான் என்னிருப்பிடம் செல்கிறேனென்று சொல்லித் தன்னிருப்பிடஞ் சென்றான். மந்திரி முதலியவர்களரண்மனைசென்று அரசனை வணங்கி நடந்தவைகளைச்சொன்னார்கள். அரசன் புத்திரன் உயிருடனிருப்பதைக் கேட்டமாத்திரத்தில் பேரானந்தமுற்றிருந்தான்.

முப்பத்தேழா மத்தியாம் முற்றும்.

முப்பத்து எட்டாவது அத்தியாயம்.

சந்திரமவுளி தன் மனையாளுடன் அவுணனரண்மனையில் சுகமாய் வஸித்துவருங்காலையில் கிருதாசியென்ற அப்ஸரஸ்ஸகிகளுடனங்கு மகளையும் மருமகனையும் பார்க்கும்பொருட்டு வந்தாள். தன் தாயைக்கண்டவப்பெண்ணெழுந்து வந்தனை வழிபாடுகள்செய்தாள். சந்திரமவுளியும் மாமியாரென்றறிந்து நமஸ்கரித்து மரியாதைசெய்தான். அவளுமிவ்வருவர்களையும் ஆசிர்வதித்து வஸ்திராபரணங்களைக் கொடுத்துச் சந்திரமவுளியைப்பார்த்து மன்மதஸுந்தரா நானுன்னைப் பார்க்கும்பொருட்டேவந்தேன். இரத்தினமும் சுவாணமும் பர

ஸ்பர சேர்க்கையாய் விளங்குவதுபோல் நீங்கள் விளங்குகின் றீர்கள். உனக்குவேண்டியதைக்கேள் கொடுக்கிறேனென்று சொல்ல நாங்கள் ஸ்மரிக்கும்பொழுது வந்து தரிசனம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். அவளுமவ்விதம் வரமளித்துச் சிலகாலம் பேசிக்கொண்டிருந்து விடைபெற்றுப் பொன்னுலகு சென்றாள். மற்றோர் ஸமயம் மயனென்னுமஸுரசில்பி அவ்விடம்வர அரசகுமாரன் தகுந்தபடியுபசரித்தான். மயன் அரசகுமாரனை நோக்கி அரசனே இந்தவரண்மனை நான் நிர்மாணம் செய்தது. இதற்கு ஸமீபமாயுள்ள பட்டணமும் நான் நிர்மாணம் செய்ததே. அப்பட்டணத்திலுள்ள அஸுரர்கள் உம்மால் வதமடைந்தவுடன் புத்திரஹீனர்கள் பதியுடன் உடன்கட்டையேறிவிட்டார்கள். புத்திரவதிகளும்மிடம் பயந்து பாதாளஞ்சென்றார்கள். தேவேந்திரன் பட்டணத்திற்கு ஸமதியான அப்பட்டணம் நானாவிதபோகபோக்கியமுள்ளதும் ஸுவர்ண ரத்தினங்களாற் செய்யப்பட்டுமுள்ளது. இப்பொழுது ஜன சூன்யமாயிருப்பதால் அதில் ஜனங்களைக் குடியேற்றி நீரரசாண்டுவாரும். இந்த அரண்மனையிலும் சுகமாய் இருக்கலாமென்று சொல்லி அப்பட்டணத்தையுங்கட்ட அரசகுமார னதைப்பார்த்தானந்திக்க மயன் விடைபெற்றுச்சென்றான். பிறகு சந்திரமவுளி ஜனங்களதில்வந்து குடியேறும்பொருட்டு அரசர்கள் யாவருக்கும் பத்திரிகையனுப்பச் சகல அரசருந் தங்கள் தங்கள் தேசங்களிலிருந்து உத்தமமான சாதுர்வர்ண ஜனங்களை யனுப்பினார்கள். ஒரு மாதத்திற்குள் அப்பட்டணம் ஜனங்களால் நிறைந்தது. சந்திரமவுளியவர்களுக்குத் தகுந்தபடி வீடு, நிலம், தனம் கொடுத்து விர்த்தியும் கல்பித்தான். அதற்கு ரத்னபுரியென்று பெயரிட்டுத்தானரசனாகி அரசாண்டு வந்தான். பிறகு ஐம்பத்தாறு தேசத்தரசர்களும் வந்தப்புரம் ரத்ன சுவர்ணமாய்ச் சோபிப்பதைப் பார்த்தாச்சரியப்பட்டுச் சந்திரமவுளிக்குச் சக்கிரவர்த்திப் பட்டாபிஷேகம் செய்வித்தார்கள். சந்திரமவுளியும் தன் தேவியுடன் அவ்வரசர்கள் கொண்டுவந்த கப்பத்தைப்

பெற்று அவர்களுக்கு மரியாதை செய்தனுப்பிவிட்டுத் தான் ஸார்வபவுமனுயரசாண்டுவந்தான். பிறகு தெய்வலோகப்புரவியேறி மனையாளுடன் கமலாலயஞ்சென்று தாய் முதலியவர்களை வணங்கி நடந்த விர்த்தாந்தங்களைச் சொல்லி ஆனந்தித்தொரு மாதமிருந்தான். பிறகு மாமன் முதலியவரிடம் விடைபெற்றுத் தாய் மனையாட்களுடன் இரத்நபுரம் வந்தரசாண்டு களித்திருந்தான். நீதிமானுகிய மாஹிஷ்மதி அரசன் தன் மூத்தகுமாரனைப் பார்க்கக்கருதிக் கமலாலயம் சென்று மைத்துனனு லுபசரிக்கப்பட்டு மிகுந்த நயத்துடனவனை என் குமாரனும் மனையாளுமெங்கிருக்கின்றூர்களென்பதை பழைய மனஸ்தாபத்தை மறந்துவிட்டுச் சொல்லவேண்டு மென்று வேண்டிக்கொண்டான். கமலேசன் அவ்வரசனுடன் இரத்னபுரஞ்சென்ருன். சந்திரமவுளி அவர்களை வணங்கி பூஜிக்க அரசனவனை ஆலிங்கனஞ்செய்து தன்னை நிந்தித்துக்கொண்டு மைத்துனனைச் சிலாகித்துக்கொண்டான். தன் மனையாளையும் ஸமாதானஞ் செய்தான். சந்திரமவுளி மிகவும் வியஸனமடைந்திருக்குந் தன் பிதாவைத்தன்னுடைய கிருத்தியங்களாற் சந்தோஷப்படுத்தினுன். அரசன் தன் தேவியுடனங்கேயே வஸித்துவந்தான். அம்மான்மாத்திரம் விடைபெற்றுத் தன்னரசாக்ஷி சென்ருன். சந்திரமவுளி ஜனங்களை நீதியாயரசாண்டுதன் ஸகோதரர்களுக்குத் தகப்பனரசாக்ஷியைக்கொடுத்து நீதியுடனரசாண்டுவரும்படிசெய்தான். பிறகு ஸப்த தீபங்களையும் ஜயித்து ராஜஸூய மச்வமேதம் முதலியவனேக யாகங்களைச்செய்து தேவர்களைச் சந்தோஷப்படுத்தினுன். பிரமரேசமென்ற க்ஷேத்திரம் சென்று ஈசான்ய திக்கில் ருத்திரபாசுபதமென்ற யாகம் செய்து பரமேசுவரரைச் சந்தோஷிக்கச் செய்தான். அவன் யாகஞ்செய்தயிடமே யக்ஞதீர்த்தமென்ற புஷ்கரணியாகவாய்விட்டது. பிறகு தன்னரசாக்ஷிசென்று பதினுயிரம் வருஷம் சுகமாயரசாண்டு நானுபோகங்களையனுபவித்து பிரஹத்ரதனென்னும் புத்திரனிடத்தில் அரசாக்ஷியையொப்புவித்து ப்ரியை பெற்றோர்களுடன் பிரமரேசஞ் சென்று பரமனைத்துதித்து சிவாக்கினையின்படி கைலாஸஞ்சென்ருன். இவன்

பரமன் ஸாருப்யத்தையுமிவன் மனைவிதேவி ஸாருப்யத்தையும் பெற்றார்கள். பெற்றோர்கள் ஸாமீப்யத்தை யடைந்தார்கள். சந்திரவளியின் சரித்திரத்தைப் படிப்பவர்களும் கேட்பவர்களும் இஷ்டமான ஸகல பாக்கியங்களையும் பெறுவார்கள்.

அத்தியாயம் முப்பத்தேட்டு முற்றும்.

முப்பத்தோன்பதாவது அத்தியாயம்.

வாகேசமாமுனிவர் பிரமனைப்பணிந்துப் பிரமபுரி க்ஷேத்திரத்திலுள்ள தீர்த்தங்களைச் சொல்லி யருளவேண்டுமென்று கேட்க பிரமன் சொல்லுகின்றார். க்ஷேத்திரம் பிர்மமயமானது தீர்த்தம் தீர்த்தமானது. ஸர்வமும் சிவரூபமாய் விளங்கப்பட்டது. விவிதமான தோற்றத்துடன் கூடிய யாவுமெப்படி ஐந்துவிதமா யிருக்கின்றனவோ அப்படியே நான்கு ஜகத்திலுள்ளது ஐந்தாவது பிர்மரூபமானது. ஸர்வ நதிகளுக்கும் உத்பத்திஸ்தானமாகிய கங்கை, யமுனை, ஸரஸ்வதியென்னும் நதிகள் த்ரிகுணரூபமானவைகள். சிவ ஜடையிலுத்பத்தியான ஹரிச்சந்திரநதி துரியரூபமானது. தான் துரிய நதியென்று தெரிவிக்கும்பொருட்டே பூமியையடைந்தது. இன்னுன்கின் ஸம்யோகரூபமான ஐந்தாவது பிர்மமே மகேசமாயையாற் றீர்த்தரூபமாய் மாகேச தீர்த்தமென்றுறைக்கப்படும். பூமியில் கைலாஸமயமான பிரமரேச க்ஷேத்திரமானதெப்பொழுது பிரமரேசரால் பிரகாசப்படுத்தப்பட்டதோ அப்பொழுது ஸ்நானம்பண்ண யத்தனித்து பூமியைப் பாகுவினாற் கல்லினர். அதில்பிர்மமயமான தீர்த்தமுண்டாக அதில் யாவும் செய்தார். இது உமாமாகேச குண்டமென்றுரைக்கப்படும். பிர்மமயமான இதையெப்படி தீர்த்தமென்றுரைப்பேன். துரீயமான ஹரிச்சந்திரநதி ஸ்நானத்தினால் முக்தியைக்கொடுக்கும். மூன்ருவதான கங்காநதி ஸ்நானத்தினாலேயே சுவர்க்கத்தைக்கொடுக்கும். இரண்டாவதான ஸரஸ்வதி நதி மூன்று தினத்தில் சுவர்க்கத்தைக்கொடுக்கும் ஸ்தூலரூபமான யமுனை எழுதினஸ்நானத்தினால் சுவர்க்கத்தைக்கொடுக்கும். இவைகளிலிருந்தனேக தீர்த்தங்களுண்டானபடியால் அவைகளை வர்ணிப்பது அஸாத்தி

ய்மானதால் சுருக்கமாய்ச்சொன்னேன். இதின் மகிமையைச் சொல்லுகிறேன் ஸாவதானமாய்க்கேள். கர்னாட தேசத்தில் விசுவனென்றோர் அரசன் பாபபராயணனாய் சுவதர்மத்தை விட்டு மதுமாம்ஸ பரஸ்திரீ லோலனாயிருந்தான். ஒருக்கால் மதுபானஞ்செய்து புத்திரியைக்கண்டு மோகித்துக் கதாக்கதர பலாத்காரமாய்ப் புணர்ந்தான். இப்பேர்ப்பட்ட அநேக பாதகங்களைச்செய்தவனிறந்து யமதூதர்களிழுத்துச் செல்லுகையில் பிரமரேச தீர்த்த ஆலயத்தின் விமானமவன் கண்ணிற்பட்டது. மாகேசதீர்த்த சம்மந்தமான காற்றவன்பேரில்பட்டது. அதினாலவன் பாபஹீனனாகவானான். யமலோகஞ்சென்ற பிறகு தர்மராஜாவினாக்கினையால் வைசியஜாதியில் வேததர்மனென்னும் பெயருடன் ஜனித்து ஸ்வதர்மபரனாயிருந்து பூர்வஸம்ஸ்காரத்தால் பிரமரேசமடைந்து அத்தீர்த்தத்தைப் பார்த்தமாத்திறத்தில் பூர்வஞானமடைந்தான். அவன் கையிலிருந்த சுவல்ப திரவியத்தை யபகரிக்கும்பொருட்டவனைப் பின்றொடர்ந்தவ்விடம் வந்ததிருடனை யவ்வவிடத்திலுள்ளோர் துரத்தவோடினார்கள். ஓடுகையிலந்தத்திருடன் மாகேச தீர்த்தத்தை பார்த்து ஸ்தலத்திற்கு வெளியில் சென்றிறந்துபோனான். மகேசகுண்ட தரிசனத்தினால் பாபரகிதனாகவான அவனை இந்திராதிதேவர்கள் சுவர்க்கம் கொண்டுபோய்விட்டார்கள். இத்தீர்த்தத்தின் மகிமையை உள்ளபடி சொல்ல நான் சக்தனல்ல. தீர்த்தமகிமையைச் சுருக்கமாய்ச்சொன்னேன். தேவாலயத்திற்கு ஈசான்யதிக்கில் ஸமீபமாயுள்ளது இத்தீர்த்தம். இத்தலத்தில் வந்து சிவபெருமானுடைய அருள்பெற்றவர்கள் யாவருமொவ்வவொருகுண்டம் தங்கள்பெயராலாக்கினார்கள். இந்த மாகேச குண்டமோ மற்றகுண்டங்களுடன் சேர்ந்தொரு ஸரஸாய்விட்டது. இவ்விதம் க்ஷேத்திர மூர்த்தித் தீர்த்த வைபவங்களை யுனக்குச் சொன்னேன். ஆகையால் வாகீச முனியே! நீ அந்த க்ஷேத்திரம் சென்று ஹரிச்சந்திர நதியிலும் ஸரஸிலும் விதிப்படி ஸ்நானஞ்செய்து கணேச சக்தி சிவபெருமான்முதலியவர்களைப் பூஜித்துச்சிவபெருமானை தபஸால் ஸந்தோஷிக்கச்செய்தால் முனிசாபமுக்தராவீரென்று பிர்மதேவன்சொன்னார். ஓ சவுனகாதி முனிவர்களே! அந்தவாகீசமாமு

னியும் முனிசாபத்தால் பிரமரூபத்தையடைந்து சோழதேசத்தில் தண்டகாவனத்திலுள்ள பிரமரேச க்ஷேத்திரஞ்சென்று பரமனைப்போற்றி முனிசாபத்திலிருந்து முக்தனுகவானன்.

அத்தியாயம் முப்பத்தொன்பது முற்றும்.

நாற்பதாவது அத்தியாயம்.

சவுனகாதி முனிகள் ஸூதரைப் பார்த்து ஓ ஸூதமுனிவரே! வாகீசமுனிவர் எவ்வித மந்தக்ஷேத்திரஞ் சென்று பூஜித்து சாபமுக்தராக வானதை விபரமாய்ச் சொல்லவேண்டுமென்று கேட்க சூதர் சொல்லுகின்றர். வாகீசமுனிவர் பிரமரூபத்தையடைந்து பிரமரேசஞ்சென்று பூர்வஞானமுள்ளவராய் ஹரிச்சந்திரநதியிலும் மகேசதீர்த்தத்திலும் ஸ்நானம் பண்ணி புஷ்பங்களிலிருந்து தேனைக் கொண்டுவந்து பரமனுக்கபிஷேகம் செய்து புஷ்பங்களாலர்ச்சித்து பஞ்சாக்ஷரமனுவைஜபித்து வந்தான். இவ்வித மாயிரம்வருஷம் செய்துவரவே பரமன் கருணை கூர்ந்ததனைப்பார்த்து பிரமரூபத்தையுடைய பக்தசிரேஷ்டனே! என்னைக்காட்டிலு மபின்னனுயென் லிங்கத்திலிருந்துகொண்டு பஞ்சாக்ஷரத்தை யுச்சரித்துக் கொண்டேயிரு. பிரளயத்தில் கைவல்யமுக்தியை யடைவாய் பிரமரூபத்தையுடைய உன்னுலேயும் பிருங்கியினுலேயும் பக்தாபீஷ்டத்தைக் கொடுக்கும் பிரமரேசனுக நானுனேன். இந்த க்ஷேத்திரமானது பிரமரபுரியென்று பிரஸித்தியுள்ளதாயுத்தமமாயுமாகும். இதில் தீர்த்தமும், க்ஷேத்திரமும், மூர்த்திகளும் மகிமைகளுள்ளதாகவே ஆகுமென் றனுக்கிரகம்புரிந்து பிரமரத்துடன் லிங்கமத்தியில் மறைந்தார். அந்தப்பிரமரமானதிப்பொழுதும் லிங்கத்தடியிலிருந்து பஞ்சாக்ஷரத்தை ஜபம் பண்ணிக்கொண்டிருக்கின்றது என்று ஸூதமுனிவர் நைமிசாரண்ய வாஸிகளுக்குச் சொன்னுர். சவுனகாதிமுனிகள் ஸூதரை நோக்கி ஓ ஸூதமுனிவரே! இந்த ஸ்தலமான்மியத்தின் சிரவணபலத்தைச் சொல்லியருளவேண்டுமென்று கேட்க ஸூதமுனிவர் சொல்லலுற்றுர். கேளுங்கள் முனிசுவரர்களே! பூர்வத்தில்கந்தர்வ நகரத்தில் மிருத்தியுஞ்சயனென்ற

மிகுந்த பராக்கிரமத்தையுடைய அஸுரன் சக்திபக்தியுள்ளவனாய் பத்திரகாளியை ஸந்தோஷிப்பித்து இந்திரன் முதலிய தேவர்களாற்றனக்கு மரணமின்மையையும் யுத்தத்தில் விஷ்ணுவை ஜயிக்கும் வல்லமையையும் பெற்றுக்கொண்டு தேவேந்திரன் முதலியவர்களை ஜயித்து மூவுலகாதிபதியாய் அரசாண்டுவந்தான். தைத்தியதானவ ராக்ஷஸர்கள் மேன்மையும் ஸாதுக்கள் தாழ்மையையும் பெற்றார்கள். அவ்வஸுரனுடைய பிரீதியின் பொருட்டுப் பத்மம் செங்கழுனீர் பூக்களுமமிர்தமயமான ஜலத்துடன் கூடியதுமான ஓர் ஸரஸையயன் சிருஷ்டித்ததின் மத்தியில் தாமரைத் தண்டில்மேலுள்ள தாமரைப்புஷ்பம்போலவோர் யோஜனை உயரமுள்ளதாக ஸுவர்ணஸ்தம்பமேற்படுத்திப் பத்மத்தின் தளமெட்டுகளைப்போலவும் பத்மகர்ணிகையிலும் விசித்திர ரத்தினகசிதமான அரண்மனைகளையும் நிர்மாணம் செய்துகொடுத்தான். ஓர் சமயம் நாரதமுனி அஸுரன் பட்டணம் செல்ல அஸுரனிந்தவரண்மனைகளை யவருக்குக் காண்பிவித்தான். அவ்வவுணனைப்பார்த்து நாரதர் சொல்லுகின்றார். தேவஜாதிகளிலுண்டான பத்மினி ஜாதி ஸ்திரீகளுக்கு எட்டுபேதமுண்டு. அவர்களுக்குள் ஸர்வ சிரேஷ்டமான முதல் ஜாதி ஸித்திபத்மினி யென்றும் இரண்டாவது புத்தி பத்மினியென்றும், மூன்றாவது சக்தி பத்மினியென்றும், நான்காவது பிரபா பத்மினியென்றும், ஐந்தாவது ராதா பத்மினியென்றும், ஆறாவது கௌரீ பத்மினியென்றும், ஏழாவது லக்ஷ்மீ பத்மினியென்றும், எட்டாவது ரதி பத்மினி யென்றும் கூறப்படும். இவைகளில் ரதி பத்மினி ஸ்திரீயானவள் சிருங்கார ரஸரூபிணியாயும் நீலோத்பல புஷ்பவாஸனையுமுடையவள். இலக்ஷ்மீபத்மினியானவள் தாமரைப் புஷ்பவாஸனையும் அஷ்டவித பாக்கியரூபிணியாயும் விஷயானந்தத்தை யுண்டுபண்ணுகின்றவளாயுமிருப்பாள். நீலோத்பலம், சொகுசூதம், மல்லிகை, பத்மம் என்னும் ஐவித கந்தமுடையவளாயும் பதினாறு பாக்கியரூபிணியாயும் விஷயானந்தத்தைக்கொடுப்பவளாயுமிருப்பவள் கௌரீபத்மினிஸ்திரீ. மந்தாரம், பாரிஜாதம், கல்பகம், ஸந்தானம், ஹரிசந்தன மென்றை

த்துவித புஷ்பவாஸனையுடையவளாய் சிருங்காரவிஷயானந்தத்தையுண்டாக்கி பதியின் மனசை அபகரிப்பவள் ராதாபத்மினி ஜாதியானவள். கீழே சொன்ன பத்துவித கந்தமுடையவளாய் தர்சனத்தினாலும் ஸ்பர்சத்தினாலும் ஆனந்தத்தைக் கொடுப்பவளாய் ஸர்வஸத்குணமும் பொருந்தியிருப்பவள் பிரபா பத்மினி ஜாதிஸ்திரீ. முன்சொன்ன பத்துவித புஷ்பத்தினுடையவும் எட்டுவித கந்தங்களுடையவும் வாஸனைகளுடன் பொருந்தி முற்கூறப்பட்ட ஸர்வசக்தியுடனும் கூடியவள் சக்திபத்மினி. உலகிலுள்ளோத்தமமான ஸர்வகந்தபுஷ்பங்களுடையவும் வாஸனைகள் பொருந்தி ஸர்வசக்தி ஸர்வகுணங்களுடனும் கூடியவள் புத்திபத்மினி. ஸர்வகந்தபுஷ்பவாஸனைகள் பொருந்தி க்ஷணத்துக்கு க்ஷணம் வேற்றுமையான கந்தங்களை வெளிப்படுத்துகிறவளாயும் ஸர்வோத்கிருஷ்ட சத்திருப குணமும் பொருந்தினவளாயுமிருப்பவளே ஸித்திபத்மினி. இப்பேர்ப்பட்ட கன்னிகைகளை இவ்வெட்டுத் தளங்களில் வைத்து நீகர்ணிகையிலிருந்தவர்களுடைய போகத்தையனுபவித்தலே இவ்வரண்மனைகளுக்குப் பிரயோஜனமென்று சொல்லி நாரதர் தமதிஷ்டப்படி சென்றார். உடனே அவுணன் நாரதர் சொன்னபடி பெண்களையுலகிற்றேடி ஏழுஜாதியான ஏழு கன்னிகைகளை ஸம்பாதித்தேழரண்மனைகளிலும் வைத்து எட்டாவதாயும் ஸர்வோத்கிருஷ்டமாயுமிருக்கும் ஸித்தி பத்மினி ஜாதி கன்னிகைக்காக விசாரித்துக்கொண்டிருந்தான். மற்றொரு ஸமயம்வந்த நாரதமுனிவரால் விதர்ப்பதேசத்தில் தமயந்தியின் ஸகோதரனான ருக்மாங்க ராஜாவின் குமாரியான மதுமதியென்பவள் ஸித்திபத்மினி ஜாதிஸ்திரீயென்றும் யௌவனமடைந்திருப்பவளென்றும் கேழ்விப்பட்டங்குசென்று அவள் பிதாவை ஜயித்தவளை யெடுத்துப்போய் பாக்கியிருந்த வரண்மனையில் வைத்தவளை விவாகத்திற் கனுமதியும் கேட்டான். அதற்கவளவுணனைப் பார்த்தெனக்கு ஸமதியான பதியையடையும்பொருட்டு நாரதர் வாக்கியத்தால் கௌரீ விரதமனுஷ்டித்துவருகின்றேன். அதுமுடிய இன்னுமாறுமாதமிருக்கின்றது. அது முடிந்ததும்மை வரிப்பதிற்றடையில்லை. நீரோ இந்திரன் முதலியவர்களால் ஜயிக்கமுடியாதவர். தேவயோக்கியமான

ஸகல வஸ்துக்களும் உமது கிரகத்திலிருக்கின்றன. ஆகையா லுமக்கு ஸமதியான புருஷனுலகிலில்லை. என் விருதவைப் பவத்தாற்றான் இப்பேர்ப்பட்ட புருஷனெனக்கு கிடைத்தீர். என் தகப்பனுரையும் ஜயித்து என்னை நீர் கொண்டுவந்துவிட்டீர். இனி நீர் சங்கைப்படவேண்டியதில்லை. ஆகையாலென் விரதத்தைப் பூர்த்திசெய்துவையும். நானுமக்கு சுவாதீனமாயிருக்கும்பொழுதே விருதம் முடியுமுன் நீர் பலாத்காரம் செய்வீரேயானல் நான் பிராணனை விட்டுவிடுவது நிச்சயமென்று சொன்னுள். அவுணனவள் வார்த்தையால் ஸந்தோஷித்து நல்லது உன்னிஷ்டப்படியே ஆறுமாதம் கழித்திவ்வேழு கன்னிகைகளுடனுன்னை மணந்துகொள்ளுகிறேனென்று சொல்லியவளுக்குத் தாஸீ ஜனங்களை ஏற்படுத்தித் தன் ரத்தினம் முதலியவைகளையும் விசேஷமாய்க் கொடுத்தான். அவளவ்விடமிருந்து பராசக்தியை பஜித்துவந்தாள். மற்றேழு கன்னிகைகளுமிவளிடம் வந்து ஸகோதரியே! உன்னுற்று னெங்களுக்கும் கதிமோக்ஷமுண்டாகுமென்று நாரதர் சொல்லியதா லுயிருடனிருக்கின்றோம். நீ என்னசெய்யப்போகிறுயென்று கேட்க அதற்கவள் நான் தேவியின் பாதத்தை நம்பியிருக்கின்றேன். ஆறுமாதத்திற்குள் அவளெனக்குக் கதிமோக்ஷமுண்டுபண்ணுவாள். அப்படியேற்படாதவரையிற் பிராணனை விட்டுவிடுவெதாகவே நிச்சயத்திருக்கிறேனென்று சொன்னுள். நீ செய்வது போல நாங்களும் செய்ய ஸித்தமாயிருக்கிறேமென்றுசொல்லி மற்ற கன்னிகைகள் தங்களிருப்பிடம் சென்றூர்கள். தியாக சோழனுடைய வம்சத்தில் தீரோத்தமகுணமுள்ளவனுய் வீர சூரரூபவானுயோர் அரசகுமாரன் மந்திரிகுமாரர்களோடு தனுர்வித்யாப்பியாஸம் செய்துவந்தான். அப்பொழுது விதர்ப்ப இராஜாவின் மந்திரி ஓர் பெண்படத்துடன் மன்னார்குடியில் அரசன் சபைசென்று படத்தையுங்காட்டி விருதாவளிப்பத்திரிகையையும் அரசனிடம் கொடுத்தான். அதையம்மந்திரி அரசனுக்கிணையாலிவ்விதம் படிக்கலானுன். எனக்கு ஸித்தி பத்மினி ஜாதியான மதுமதியென்ற பெண் ஜனித்து யௌவனமடைந்திருக்கையில் மிருத்தியுஞ்செயனென்ற அவுணனவளை,

அபகரித்துத் தன்னரண்மனையிற்கொண்டு வைத்துக்கொண்டான். என் பெண் ஆறுமாதத்திற்கு விருதமிருப்பதென்று சொல்லி அவனை மணக்காமலிருப்பதாய் நாரதமுனி சொல்லத் தெரிந்தது. எந்த வீரன் அவ்வவுணனை ஜயித்தென் பெண்ணைக்கொண்டுவருகிறானோ அவனுக்கவளை மணஞ்செய்துகொடுத்து என் இராஜ்யத்திற்பாதியுங் கொடுக்கின்றேன். இவ்விதம் மந்திரி படித்ததைக்கேட்டும் படத்தைப்பார்த்தும் யாவரும் வியப்புற்றார்கள். அரசகுமாரன் படத்தைப் பார்த்து மோகித்துத் தன் குருவை வணங்கித் தன் கருத்தைச்சொன்னான். அதற்கக்குரு இராஜகுமாரனே உங்களுக்கு குலதேவதைப்பிரமரேசுவரர்; அவருடைய மகாத்மியத்தை நீ விதிப்படி கேட்டாயேயானால் அவரனுக்கிரகத்தாலுன்னிஷ்ட ஸித்தி கைகூடுமென்று சொல்லியதை விதிப்படி ஒருமாதத்திற்சொன்னார். அநேக உபாக்கியானங்களுடன் கூடிய மான்மியத்தை அரசகுமாரன் கேட்டுப் பிரமரபுரிசென்று ஹரிச்சந்திர நதியில் ஸ்நானம்பண்ணி நித்தியவிதிகளை முடித்துக்கொண்டு ஸங்கவகாலத்தில் மகேசகுண்டத்தில் ஸ்நானம்பண்ணி கணபதி, அம்பாள், குருமூர்த்தி, நடேசர், சந்திரமவுளீசர், கங்காதரர்களை ஸேவித்து மஹாலிங்க ஸன்னிதியில் நமஸ்கரித்து ருத்திர மந்திரங்களாற் பிரமரேசரைத் துதித்தான். பரமன் ஸந்தோஷித்து கௌரீ, கணேசர், ஸ்கந்தர், நந்தி முதலியவர்களுடனும் பிர்ம, விஷ்ணு, ருத்திரர் முதலிய தேவர்களுடனும் காக்ஷிகொடுக்க அரசகுமாரன் வணக்கித் துதித்தான். பரமன் இஷ்டவரங்களைக்கேள் தருகிறோமென்று சொல்ல அரசகுமாரன்றன்னுத்தேசத்தை மறந்து ஆனந்தபரவசனாய் நர்த்தனம் பண்ணினான். அப்பொழுது விநாயகரவனுக்கு அஷ்ட ஸித்திகளையளித்தார். சக்தி ரூபம் முதலிய எட்டுபோக்கியங்களையளித்தாள். சுப்பிரமணியர் அஸுரவதத்தின்பொருட்டு வேலாயுதத்தைக் கொடுத்தார். திருலோகாதிபத்தியத்தைச் சிவபெருமானளித்தார். திவ்யப் புரவியுடன் கூடிய திவ்ய ரதமும் அம்பிறாத்தூணியில் பதினெட் டாயுதங்களையும் விஷ்ணு அளித்தார், பிரமன் ஸர்வவித்தைகளையு மளித்தார்

தேவராஜா ஸாரதியையும் பைரவர் கிங்கரனுகவோர் பூதத்தை யளித்தார்கள். இவ்விதம் பரமன் வரமளித்து ஸகல பரிவாரங்களுடன் ஸங்கமத்தியில் மறைந்தார். பிறகு பாலகுமாரன் களித்துத் தன் பட்டணம் சென்று குருவினிடத்தில் விருத்தாந்தத்தைச்சொல்லி பெற்றோர்களிடத்திலனுமதிபெற்று விதர்ப்ப தேசஞ்சென்றரசனை வணங்கி அவனனுமதிபெற்று திவ்ய ரதத்தோடு காந்தாரதேசஞ் சென்று ஸித்திப்பிரபாவத்தால் ஹம்ஸரூபந்தரித்து ஸாயங்காலவேளையில் மதுமதியின் முன் போய் நின்றான். ஹம்ஸத்தில் விருப்பமுள்ளவளதைப் பிடித்து பக்ஷயபோஜ்யாதிகள் கொடுத்து விளையாடிக் கூட்டிலடைத்து படுக்கைக்கு ஸமீபத்தில் கூட்டைக்கட்டிவிட்டு ஸப்ரகூடமஞ்சத்தில் நித்திரைசெய்தாள். அரசகுமாரன்றன் ரூபத்தை எடுத்து மஞ்சத்தினிடஞ் சென்றதை யசைத்தான். அவள் விழித்துக்கொண்டு கோடி மன்மதாகிருதியான அரசகுமாரனைப்பார்த்து விதிப்படிப் பூஜித்து அவன் விர்த்தாந்தத்தைக்கேட்டாள். அதற்கவன் தன்விர்த்தாந்தங்களைச்சொல்லி உன்னை விடுதலைசெய்யும்பொருட்டு வந்தேனென்றுஞ் சொன்னுன். உன் தகப்பனுடையவேண்டுகோளின்பேரிலுன் அபிப்பிராயத்தைத்தெரிந்துகொள்ளும் பொருட்டிவ்விதம் வந்தேனென்றான். அதற்கவள் தாங்கள் என் விருதப்பிரபாவத்தால் வந்தீர்கள். இந்த தாஸ ஜனம் தங்கள் பாதாரவிந்தத்தில் அர்ப்பணம் பண்ணப்பட்டது. தங்களிஷ்டப்படி செய்கிறதென்று சொன்னுள். அவளுடைய ரூபகுணத்தினுலரச குமாரன் ஸந்தோஷமடைந்து விடைபெற்றுச்சென்று காலையில் பட்டணப் பிராந்தம் யுத்தகோஷம் செய்தான். கோட்டைக் காவற்காரர் யுத்தம்செய்ய அவர்களை லீலையாகக்கொன்ருன். இதை மிருத்தியுஞ்செய அஸுரன் கேட்டுக்கோபித்து ஸகல ஸைன்யங்களுடன் யுத்தத்திற்கு வந்தான். அரசகுமாரனொரு முகூர்த்தத்தில் ஸகலஸைன்யங்களையும் வதைசெய்து வேலாயுதத்தால் தானவராஜனையும் கொன்ருன். முக்கியமந்திரியானவன் அரசனுடைய கட்டளையின்படி அஷ்டகன்னிகைகளைக்

கொண்டுவந்துகொடுக்க அவர்களை யழைத்துக்கொண்டு விதர்ப்பதேசஞ்சென்றான். விதர்ப்பராஜன் அஷ்டகன்னிகைகளையும் விதிப்படி தானே விவாஹம் செய்துகொடுத்தான். அவ்விடமிருந்து அஷ்ட கன்னிகைகளுடன்றன் அரசாக்ஷிவந்து நடந்த விசேஷங்களைப் பெற்றோர்களுக்கும் குருவுக்குஞ் சொன்னான். பிதா தன் இராஜ்யத்தைப்புத்திரனுக்கபிஷேகம் செய்வித்தான். அரசகுமாரன் ஸார்வபௌமனாகி அஷ்டகன்னிகைகளிருந்த அரண்மனையைப் பூகத்தினால் தன் பட்டணத்தில் வரவழைத்துக்கொண்டான். இவ்வித மக்கன்னிகைகளுடன் பதினாயிரம் வருஷம் அரசாக்ஷிசெய்து மனிதர்களுக்குக் கிடைக்கக்கூடாத போகங்களை யனுபவித்து மதுமதியின் புத்திரனான வீரனுக்குப் பட்டங்கட்டி கைலாஸஞ்சென்று காணபத்திபத்தைப் பெற்றான். எட்டுக்கன்னிகைகளும் பரமேசுவரனுக்குப் பீடசக்திகளாகவானார்கள். இவ்விதம் பிரமரேச மாஹாத்மியத்தைக் கேட்டப் பிரபாவத்தால் வாமதேவ ராஜன் துர்லபமான போகத்தையும் மோக்ஷத்தையுமடைந்தான். ஆகையால் ஏ முனீசுவரர்களே! நீங்களும் பிரமரேசஞ்சென்று பிரமரேசரை விதிப்படி பூஜித்து புருஷார்த்தங்களை யடையக்கடவீர்களென்று ஸூதபுராணிகர் நைமிசாரண்ய வாஸிகளாகிய சவுனகாதி முனிகளுக்கு இப்பிரமரேச மான்மியத்தைச் சொல்லியருளினர்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

பிரமரபுரீசர் ஸஹாயம்.

நாற்பதாவது அத்தியாயம்

முற்றிற்று.